
யூகிமுனி பரிபூரணம் 200

வைத்தியக் கும்மி1000



தாமரை நூலகம், சென்னை - 600 026.

யூகி முனிவர்

பரிபூரணம்-200 வைத்தியகும்மி-1000

தத்துவ ஞானம்-105

பதிப்பாசிரியர்:

ஆர்.சி. மோகன்

தாமரை நூலகம்

7. என்.ஜி.ஓ. காலனி., 3ம் தெரு

வடபழனி சென்னை-600 026

தொலைபேசி எண்:044 23620249

தாமரை வெளியீடு எண்: 114
முதல் பதிப்பு : ஏப்ரல் 1994
இரண்டாம் பதிப்பு : சூலை 2009
மூன்றாம் பதிப்பு : பிப்ரவரி 2015
உரிமை பெற்றது

நூல் பற்றி:

நூலின் பெயர் : யூகிமுனிவர் பரிபூரணம் 400 வைத்தியகும்மி 1000
பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்
வெளியிட்டோர் : தாமரை நூலகம் சென்னை-26
பதிப்பு ஆண்டு : பிப்ரவரி 2015
உரிமை : பதிப்பகத்துக்கு
நூல் வடிவம் : கிரவுன்
அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ
மொத்த பக்கங்கள் : 269
விலை : ரூ. 85

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட் சென்னை-34

யூகிமுனிவர்

சித்தர்களைப் பற்றி ஏதோ ஓரளவாவது தெரிந்து கொள்வதற்கு உதவும் நூல்கள் அகஸ்தியர் பன்னீராயிரம் என்னும் பெருநூல் காவியமும், போகர் ஏழாயிரமும் தான்.

பதினெண் சித்தர்கள் என்று பொதுப் படையாகக் கூறினால் கூட, சித்தர்களைப் பற்றிய தொகுப்புகள் ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபடுகின்றன. சில தொகுதிகளில் அகஸ்தியர், திருமூலர், போகர் முதலியவர்களின் பெயர்கள் கூட விடப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அதிலிருந்து பெயர்களைத் தொகுத்தவர்கள் தங்கள் மனதில் முக்கியமானவர்கள் என்று கருதியவர்களை மட்டும் சேர்த்துக் கொண்டார்கள் என்று எண்ண இடமேற்படுகிறது.

யூகிமுனிவரின் பெயர் பல தொகுப்புகளில் இடம் பெறாவிட்டால்கூட அவர் சித்தர்களிலே மிக முக்கியமான ஒருவர் என்பதைப் பின்வரும் எடுத்துக் காட்டுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்..

யூகிமுனிவரைப் பற்றிய அகஸ்தியர் தமது பெருநூல் காவியத்தில் (12000)

தாமான யின்னமொரு மர்மங் கூர்வேன்
　　தகைமையுள்ள புலத்தியனே தம்பிரானே
சாமானிய மானதொரு சித்தரப்பா
　　தாக்குடைய யூகிமுனி சித்துதாரு

கோமானாஞ் சித்தர்களுக்கு உகந்த பாலன்
கொற்றவனே சாத்திரத்தி லுகந்த யூகி
போமேதான் மாணாக்கர் பதினான்காகும்
பொங்கமுடன் தளபதிகள் ஆறுபேரே.

என்று கூறுகிறார்.

யூகி முனிவருக்குப் பதினான்கு மாணாக்கர்கள் இருந்தார்கள் என்றும் அவர்களுக்கு தளபதிகள் (லீடர்களைப் போன்றவர்கள்) ஆறு பேர் என்றும் கூறுகிறார்.

இதன் மூலம் யூகிமுனிவருக்குச் சித்தர்களிடையே உள்ள ஸ்தானத்தை சந்தேகத்துக் கிடமின்றி அகஸ்திய மாமுனிவர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

யூகிமுனிவர், நாம் வெளியிட்டிருக்கும் இந்த நூல்களில் தாம் அசுவினி தேவர்களின் சீடர் என்று கூறிக் கொள்கிறார்.

பாருமே சிவன்தானும் உமைக்குச் சொல்ல
பதிவாக உமையாளும் சந்தோஷிக்கு
காருமே நந்திக்குச் சொன்னபோது
கருத்துள்ள நந்தியுமே மனமகிழ்ந்து
சாருமே தன்வந்திரிக்கு உரைத்தாரையா
சரியாகத் தன்வந்திரி பார்த்துத்தேறி
சேருமே அசுவினிக்குச் செப்பத்தானும்
தீவிரமாய்ச் சொல்லிவிட்டார் உண்மைதானே. பரிபூர-2

தானென்ற வடமொழியில் சொன்னநூலை
சமர்த்தான அசுவினியும் கண்டுதேறி
வேனென்ற வெகுகாலம் குகையினுள்ளே
வெளியிடா திந்நூலை வைத்துக் கொண்டு
தேனென்ற அசுவினியும் சிந்தைகூர்ந்து
தெளிவான மதியூகி என்றே தேர்ந்து
வானென்ற யிந்நூலின் விபரமெல்லாம்
வழுத்தினா ரெந்தனுக் குறுதிதானே. பரிபூர-3

மூடியே வைத்து வெகுகாலம் பார்த்து
முக்கியமான நூலென்று சொல்லி
தேடிவந்த சித்தர் யாவருக்கு மிதை
செப்பாமல் நூலில்லை யென்றுசொல்லி
தேசம் புகழவே எந்தனுக்கு இதை
சிறப்பாய்ச் சொல்லிட வேணுமென்று
பாசமுடனே வரிசையதாகவே
பண்புடன் சொன்னதை தான்கேட்டு கும்மி-5-6

யூகிமுனிவர் பரிபூரணம் இரு நூறிலும் கும்மி ஆயிரத்திலும் இவ்வாறு கூறுகிறார். அகஸ்திய மாமுனிவர் தமது பன்னீராயிரத்தில் அசுவினி தேவர்களையே தமது குருமார்களென்று குறிப்பிட்டிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஆனால்,

யூகிமுனிவர் தமது பிடிவாதம் 1000 என்னும் நூலில் நந்தி தன்வந்திரிக்குக் கூற தன்வந்திரி அகீத்தியர்க்குப் பயின்று சொல்ல, அகத்தியரும் புலத்தியர்க்கு பாரியாய்ச் சொல்லிடவே புலத்தியர் தாம் தேரையர்க்குப் பயின்றிட்டார்கள். காரியாய்த் தேரருமே கேட்டுத் தேறி கனிவாக யூகிமுனி தனக்குச் சொன்னார்-என்று கூறுகிறார்.

இதிலிருந்து சித்தர்கள் ஒரு நிலையை அடைந்த பிறகு சம காலத்தவர்களாகிய மற்ற சித்தர்களை அண்டி, அவர்களுக்குத் தொண்டு செய்து, காத்திருந்து அவர்களிடமிருந்து மேலும் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டார்கள் என்று அறியக் கிடக்கிறது. யூகிமுனிவர் அகத்தியரிடமும் நெடுங்காலம் தொண்டு செய்து கை பாகம் செய்பாகம் முதலியவற்றை அறிந்ததாகக் கூறுகிறார். யூகிமுனிவர் நாடு முழுவதும் கால்நடையாகவே சுற்றி வலம் வந்து பல முனிவர்களையும் கண்டு

அவர்களுக்குத்தொண்டு செய்து அவர்களுடைய அன்பைப் பெற்றுப் பல விஷயங்களையும் கற்றுக் கொண்டார் என்று நினைக்க இடமுண்டாகிறது.

யூகிமுனிவரைப் பற்றிப் போகர்

யூகிமுனிவரைப் பற்றி அதிகமான விவரங்களைத் தருபவர் போக முனிவரே. யூகி தன்வந்திரிக்குப் பேரன் என்று குறிப்பதிலிருந்து தன்வந்தரியை ஆசிரியராகக் கொண்ட அஸ்வினி தேவர்களிடம் பயின்றவர் யூகி என்பதை போக முனிவர் தெளிவுபடுத்துகிறார்.

தகைமையுள்ள தன்வந்தரிக் குற்ற பேரன்
கோனான சிங்களவ குலத்துதித்த
கொம்பனையாள் கானீனன் பெற்ற பிள்ளை
தேனான திராவிடத்திற் சொன்னாற்போல
தீர்க்கமுடன் வடமொழியில் சொல்லாச்சு

இதிலிருந்து யூகிமுனிவரின் தாய் சிங்களப் பெண் என்பதும் யூகி காதலால் பிறந்த பிள்ளை என்பதும் தெரிய வருகிறது. மேலும்,

சீரான யூகிமுனி பிறந்த வண்ணம்
சிறப்புடனே சொல்லுகிறேன் திறமை மெத்த
நேரான ஆவணியாம் திங்களப்பா
நெடிதான பூசமது மூன்றாம் காலாம்.

(போகர் ஆறாவது கண்டம், 944)

யூகிமுனிவர் வெகு காலம் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்ததாகவும் பிற்காலத்தில் சமதக்கினி முனிவருக்கும் திரணாக்கிய முனிவருக்கும் குருவாக விளங்கினார் என்றும் மலைவளம் காண விரும்பி நாடு முழுவதும் சுற்றி வருகையில் வராககிரி (பன்றிமலை) யின் நடுவில் இருந்த காடுகளில் சுற்றி

வரும்போது சமாதியில் அமர விருப்பங் கொண்டு சமாதி அமைக்கத் தொடங்கும் பொழுது அருகில் பூமி நடுங்குவது போன்ற பலத்த ஓசை கேட்டு திடுக்கிட்டு நின்றதாகவும் அப்போது சம்பார முனிவர் என்பவர் பூமிக்குள்ளிருந்து வெளியே வந்ததாகவும் கூறுகிறார். சம்பாரமுனிவரும் யூகிமுனிவருக்கு மெய்யுணர்வு கற்பித்தார் என்றும் கூறுகிறார்.

யூகிமுனிவர் செய்த நூல்

இவ்வாறு பல வகைகளிலும் தமது அறிவைப் பெருக்கிக் கொண்ட யூகிமுனிவர் பல அரிய பெரிய நூல்களைச் செய்துள்ளார். யூகிமுனிவர் வாதகாண்டம் முதல் காண்டம் ஆயிரம் பாடல்கள், இரண்டாவது காண்டம் ஆயிரம் பாடல்கள், வைத்திய உலா ஆயிரம் பாடல்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இந்நூலில் இடம் பெற்றுள்ள வாத வைத்தியக்கும்மி ஆயிரமும் பரிபூரணம் - 200ம் யூகிமுனிவரின் சிறந்த நூல்களில் இடம் பெறும். இவை தவிர,

யூகிமுனிவர் பிடிவாதம் 1000 (இதனை மதுரைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.)

வாதாங்க தீட்சை விதி 300
வாத வைத்திய விளக்கம் 200
மதி வெண்பா 100
வைத்திய சிந்தாமணி 800
வைத்திய சார சங்கிரகம்
சிங்கி இருப்பு 100
ஆனந்தக் களிப்பு 1000 (இந்நூல் கிடைக்கவில்லை)

இவை தவிர இதே தொகுப்பில் இடம் அவற்றுள்ள தத்துவ ஞானம் நூற்றைந்து என்ற நூல் (இதுவரை மற்றவர்களுக்கு கிடைக்காதது.) முதலான நூல்களையும் யூகிமுனிவர்

இயற்றியிருக்கிறார். இதிலிருந்து அதிகமான பாடல்கள் இயற்றியுள்ள சித்தர்களில் யூகிமுனிவரையும் ஒருவராகக் கொள்ளலாம்.

வாத வைத்திய நூல்களில் யூகிமுனிவர் தமக்கென்று ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறார் என்று திண்ணமாகக் கூறலாம். அரிய விஷயங்களை மிகவும் எளிய முறையில் புரியும்படியாகச் சொல்வதில் யூகிமுனிவர் நிகரற்றவர் என்பதற்கு இந்த வைத்தியக் கும்மியே சான்றாகும்.

இப்படிப்பட்ட அரிய நூலின் மூலப் பிரதியொன்றை கொடுத்து உதவியவர் மயிலை டாக்டர் S. ஜெயராமன் அவர்கள். அவரைப் பற்றி தனியாகக் குறிப்பு ஒன்று இன்னூலில் இடம் பெற்றுள்ளது. இன்னும் எத்தனையோ நூல்கள் வெளிவர வேண்டியுள்ளன. சென்ற நூற்றாண்டில் அச்சடிக்கப்பட்டு இன்று கிடைத்தற்கரிய நிலையில் உள்ளவை தவிர சுவடிகளாகவும் ஏராளமான நூல்கள் உள்ளன. இந்த நூல்கள் தமிழ் கூறும் நல் உலகத்திற்கு கிடைக்கச் செய்யும் பணியில் தாமரை நூலகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

முதற்கண் நூல்கள் சுவடிகள் யாவும் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும். கிடைத்தால்தான் அவற்றைப் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ள பல்கலைக்கழகங்களாலும் ஆய்வாளர்களாலும் முடியும். பழைய நூல்கள் சுவடிகளை வைத்திருப்பவர்கள் தமிழ் கூறும் நல்உலகத்திற்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமையாகக் கருதி அவற்றைக் கொடுத்து உதவினால் மிகவும் கடமைப் பட்டவர்களாவோம்.

எஸ்.பி. ராமச்சந்திரன்

அறிமுகம்



டாக்டர் எஸ். ஜெயராமன்

டாக்டர் எஸ். ஜெயராமன் அவர்கள் சித்த வைத்தியத்திற் கென்றே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்றே கூறவேண்டும். இல்லையேல் பல பட்டங்களைப் பெற்று பன்மொழிப் புலவராகவும் திகழும் இவர் சித்த வைத்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டு அதற்கே தன் முழுநேரத்தையும் அர்ப்பணித்துக் கொண்டிருக்க முடியுமா?

நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூருக்கு அருகிலுள்ள உடன்குடி என்னும் கிராமத்தில் *14-10-1951* இவர் பிறந்து B.A ஆங்கில இலக்கிய B.Com. M.A Hindi, ஓவிய நுண்கலையில் டிப்ளமா, யாவும் கற்றுள்ளதுடன்சோதிடம் ரேகை சாஸ்திரம், எண் கணித சோதிடம் முதலியவைகளிலும் திறமை பெற்றுள்ளார். தமிழ் தவிர ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் ஒரளவு சமஸ்கிருதமும் அறிந்தவர். ஆனால் இவருடைய உள்ளத்தை ஈர்த்தது என்னவோ சித்த மருத்துவம் தான்.

அதற்கு பரம்பரையாக வந்த சித்த மருத்துவக் குடும்பத்தில் பிறந்ததும் காரணமாக இருக்கலாம். இவருடைய நுண் அறிவு ஆராய்ச்சியில் ஈடுபடத் தூண்டியதால் சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் மைசூர் கல்கத்தாவிலுள்ள சுவடிகள் நூலகங்களிலும் 2500-க்கு மேற்பட்ட சுவடிகளை ஆராய்ந்துள்ளார்.

பெரும்பாலும் நாடிப்பரீட்சையில் மூலமாகவே நோயை அறிய வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவர். நோய்க்கு மருந்து கொடுப்பது என்றில்லாமல் நோயின் காரணத்தை அறிந்து அதை உடம்பிலிருந்து அறவே கிள்ளி எறிய வேண்டும் என்ற அளவிற்குத் தீவிரமான வைத்தியர்.

முப்பு, குரு மருந்துகள், பற்பம், களங்கு, செந்தூரம், சுண்ணம், செயநீர், திராவகம் என்ற எல்லா முறைகளையும் தாமே செய்து பார்த்து அனுபவம் பெற்றவர். சித்தவைத்தியத்தில் மட்டுமன்றி அல்லோபதி (ஆங்கில முறை) யுனானி (கிரேக்க முறை) முதலியவற்றிலும் அனுபவம் உள்ளவர். சித்தர் வாத வைத்தியக் கலைக்களஞ்சியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பது இரவது பேரவா.

புற்று நோய் பற்றியும், முதுமைக் கால நோய்களுக்கு மருத்துவம் பற்றியும் தொலைக்காட்சியில் இருமுறை பேட்டியளித்துள்ளார். லையன்ஸ் கிளப்பிலும், பெண்கள் சங்கக்கூட்டததிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். புற்று நோயாளிகளுக்கு இலவசமாகக் கூட சிகிச்சை செய்கிறார்.

நாற்பத்து மூன்று வயதான தீவிரமான இந்த சித்து மருத்துவரின் இலட்சியம் சித்த மருத்துவத்தின் பெருமையை உலகம் அறிய வேண்டும். தீராத நோய்க்களுக்கு சிகிச்சை பெற மேலைநாட்டவர்களும் சித்த மருத்துவர்களை அணுகிப் பயனடைய வேண்டும். தமிழின் பெருமையும் தமிழ் மருத்துவத்தின் சிறப்பும் உலகெல்லாம் ஒளிவீச வேண்டும் என்பதே.

பொருளடக்கம்

யூகிமாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய பரிபூரணம் 200

பக்கம் எண்

யூகிமுனிவர் கும்மி 1000

17

உ

பரமபதி துணை

மகா மகத்துவந் தங்கிய யூகிமா முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

பரிபூரணம் 200

காப்பு

ஆதிகுரு நாதனுட பாதம் போற்றி
அடுத்து நின்ற கணேசனுட பாதம் போற்றி
நீதியாய் முருகனுட பாதம் போற்றி
நிலையான நீலகண்டன் பாதம் போற்றி
சோதிமய மானஉமை பாதம் போற்றி
சொல்லுகிறேன் வாதபூ ரணத்தை நூலாய்
கோதிலா யிருநூறு நன்றாய்ச் சொன்னேன்
கூர்ந்துபா ரிந்நூலைக் கூர்ந்துபாரே.

பாருமே சிவன்தானும் உமைக்குச் சொல்ல
பதிவாக உமையாளுஞ் சந்தோஷித்து
காருமே நந்திக்குச் சொன்னபோது
கருத்துள்ள நந்தியுமே மனமகிழ்ந்து
சாருமே தன்வந்திரிக் குரைத்தா ரையா
சரியாகத் தன்வந்திரி பார்த்துத்தேறி
சேருமே அசுவனிக்குச் செப்பத்தானும்
தீவிரமாய்ச் சொல்லிவிட்டா ருண்மைதானே.

தானென்ற வடமொழியிற் சொன்ன நூலை
சமர்த்தான அசுவனியுங் கண்டுதேறி
வேனென்ற வெகுகாலங் குகையினுள்ளே
வெளியிடா திந்நூலை வைத்துக்கொண்டு

தேனென்ற அசுவனியுஞ் சிந்தைகூர்ந்து
தெளிவான மதியூகி யென்றே சேர்ந்து
வா னென்ற யிந்நூலின் விபரமெல்லாம்
வழுத்தினா ரெந்தனுக் குறுதிதானே. 3

உறுதியா யிந்நூலின் மர்மங்கண்டு
உற்றுணர்ந்து வெகுகாலம் பதனமாக
வருதியாய் வைத்திருந்து சந்தோசித்து
வையத்தோ ரெல்லாருந தெரியவேண்டி
சுருதிவட மொழியைத்தென் மொழியதாக
சொல்லினேன் பெருநூலா யனந்தங்கோடி
பிருதியாய் நானுமே பார்த்துத்தேறி
பிசகாமல் சூஸ்திரத்தைப் பாடினேனே.

பாடினதோர் வாதபரி பூரணத்தைப்
பதிவாக நானூறாய்ப் பாகமாக
கூடினதோர் செந்தமிழாய்ப் பாடித்தானே
குணமாக அதைச்சுருக்கிப் பின்புநானும்
சூடினதோர் பூரணமா யிருநூறாக
சூஸ்திரமாய்க் கருமான மாகத்தானே
மூடினதோர் மூட்டுவெல்லா மிதிலே சொன்னேன்
முடிவாக இருநூறு தன்னைப்பாரே. 5

பாருமே தயிலமொடு காரமார்க்கம்
பதிவாக அயந்தனத்தின் சாயமேறும்
காருமே யிதினுடைய மார்க்கமெல்லாம்
கட்டுகின்ற பாசாணத்தின் வித்தைமார்க்கம்
நாருமே நவலோகம் பழுக்குமார்க்கம்
நாடியே பொன்னதனிற் சாயம்மேறும்
சாருமே யிதுவெல்லாம் பூரணத்தில்
சாற்றுகிறேன் யிருதுநூற்றைச் சார்ந்துபாரே. 6

சாரவே முன்னூறில் அயத்தின்போக்கு
சார்ந்துமே பச்சையிலே யரைக்கச்சொன்னேன்
கூரவே ...ாயமது பிடிக்கமாட்டா
குணமாகப் பொன்சேரப் புடமிறங்கா
வாரவே சாஸ்திரங்க ளெல்லாம் பொய்யாம்
வடிவாகப் பெருநூலைப் பார்த்து பார்த்து
கா... அயச் செம்பைச் செய்து செய்து
...ாணவே சாயமில்லாப் போனதாமே.

ஆமேதான் சாஸ்திரமாஞ் சூஸ்திரத்தை
அடவாகப் பார்த்தாலே பாகமாகும்
நாமேதான் சாயமது மிகவு மேறும்
நலமாகத் தங்கமுமாம் நடத்தைபாரு
காமேதான் பெருநூலும் சாஸ்திரமும்
கனிந்துமே பார்த்திடவே கருத்துட் சேர்க்க
தாமேதான் வசியமுமாம் வாதமாகும்
தாட்டிகமாய் ஞானவழி யடுக்கும்பாரே. 8

அடுக்குமே வாதபரி பூரணத்தில்
அடைவாகச் சவுக்கார வெடிசுண்ணத்தை
வடுக்குமே விரித்துமிகச் சொன்னேனப்பா
வடிவாக அதைக்குருக்கி யிதிலேதானே
குடுக்கவே சவுக்கார மெளிதாய்த்தானே
குணமாக இந்நூலில் கூர்ந்துகேளு
தெடுக்கவே பூனிரு சேருரெண்டு
திடமாகக் கல்வத்தி லிட்டுக்கேளு. 9

பூனீர்ச்சுண்ணம்

இட்டுமே சீனமது இடையே சேர்த்து
இதமாக இதையரைக்க உ...திகேளு
நட்டுமே வெடியுப்புச் செயநீ... ரும்
நலமாக யெண்சாம மாட்டிப்பாரு

வட்டுமே வில்லைசெய்து காயப்போடு
வாக அஞ்சுசுண்ணத் துள்ளேயிட்டு
படடுமய பத்தெருவிற் புடத்தைப்போடு
பதிவாக ஆறவிட்டு யெடுத்திடாயே. 10

எடுத்துப்பார் தும்பைமலர் போலேயாகும்
இதமாகக் கல்வத்தி லிட்டுக்கேளு
அடுத்துமே வீரமது பாதிசேர்த்து
அடைவாக வெடியுப்பு நீராலாட்டி
கடுத்துமே வில்லைதட்டிக் காயப்போட்டு
கனிவாக முன்போலே புடமுமிட்டு
விடுத்துமே பார்த்திடவே வழலைச சுண்ணம்
விதமாகச் சவுக்கார மாகுந்தானே. 11

ஆகுமே வழலையது சுண்ணந்தானும்
அணைத்தாக்கால் துருசதுவுஞ் சுண்ணமாச்சு
ஏகுமே உபரசங்கள் சுண்ணமாகும்
இதமாக நவலோகஞ் சுண்ணமாகும்
பாகுபெறச் சவுக்காரச் சுண்ணத்தாலே
பதிலாக வாதசித்தி பூதசித்தி
நாகுமே யிதுவெல்லாஞ் சவுக்காரத்தால்
நலமாக யெட்டெட்டுஞ் சித்தியாமே. 12

சித்தியது யேதென்றால் சொல்லக்கேளு
திறமாக முன்னேதான் சவுக்காரத்தை
புத்தியாய் சூஸ்திரமாய்ச் செய்துகொண்டு
புகலரிய வாதசித்தி புகலக்கேளு
நத்தியே வினையங்க ளில்லையட்
நாதாந்தப் பேரொளியி னடபட, [illegible]
பத்தியாய்ச் செய்திடவே சித்தி சித்தி
பாகமதைப் பார்த்திடவே பண்புமாமே. 13

சவுக்காரத் தண்ணீர்

ஆமேதான் சவுக்காரத் தண்ணீராலே
ஆடலாங் கட்டுவகை யரையக்கேளு
நாமேதான் சவுக்காரம் பலமும்நாலு
நலமாகப் பீங்கானி லிட்டுப்பின்பு
வாமேதான் நல்லெண்ணை படியும்நாலு
வடிவாக யிட்டுப்பின் வண்மைகேளு
தாமேதான் சுண்ணாம்புக் கல்லைப்பா
தாட்டிகமாம் நீற்றிவிடு தண்மைதானே. 14

தண்மையாய்த் தண்ணீரு சேருரெண்டு
தாட்டிகமாய் விட்டுநீ தெளிவிருத்து
உண்மையாய் நல்லெண்ணெய் தனிலேவிட்டு
உருதியாய்ப் பாலாக முறிந்துபோகும்
வண்மையாய்ப் பால்போலே யிருக்கும்பாரு
வடிவாக மத்திட்டுக் கடைந்துபாரு
கண்மையாய் வெண்ணெய்தனை வழித்துப்பின்பு
கனிவாகச் சரக்குகளைக் கட்டக்கேளே. 15

லிங்கக்கட்டு

கட்டவே லிங்கமது கருதக்கேளு
கனிவாக லிங்கமது பலமும்நாலு
முட்டவே கம்பியாய் வாங்கிவந்து
முனிவாகச் சவுக்கார வெண்ணெய்தன்னை
வட்டவே லிங்கமது மேலேபூசி
வரமாகக் கற்பூர தீபந்தன்னில்
முட்டவே வாட்டிப்பார் லிங்கந்தானும்
முனையாக யிருகியே கட்டும்பாரே. 16

கட்டுமே ‹. ‚கட‹ு‹, நெருப்பில் வைத்து
        கா. ‚ன நெருப்பூத லிங்கஓடாய்
வட்டுப்போ லிருக்குமந்த லிங்கந்தன்னை
        வடிவாக மெழுகாகும் வண்மைபாரு
நட்டுமே சிகாரமது களஞ்சியொன்று
        நலமாகப் பரித்தகடு களஞ்சிஒன்று
முட்டமே யிதுரெண்டும் அரைக்கவெண்ணை
        முனிவாகக் களஞ்சியது புனுகுசேரே. 17

சேர்த்துமே அரைத்திட்டு லிங்கமேலே
        சிறப்பாகப் பூசியே கரியோட்டில்தான்
பார்த்துமே வாட்டிடவே வன்னிதானும்
        பரிவாக மெழுகாகும் மெழுகைத்தானும்
நார்த்துநீ நவலோகந் தனிலேயீய
        நலமாக மாத்தென்ன பத்துமாகும்
வார்த்துமே புடமதுதா னிறங்கும்பாரு
        வளமாக மண்டலந்தா னுண்டுபாரே. 18

உண்டுபார் நரைதிரைக ளற்றுப்போகும்
        உற்றுமே பாஷாண மெல்லாந்தானும்
கண்டுபார் காரமுதற் சாரமெல்லாம்
        கட்டாக யிப்படியே கட்டிப்பாரு
முண்டு நீ சொல்லாதே யிப்படிக்கு
        முனிவாகக் கட்டியே மெழுகுபண்ணு
வண்டுபோ லலையாதே சவுக்காரத்தை
        வடிவாக வைத்திடவே சித்தியாகும். 19

வெடியுப்புச் சுண்ணம்

ஆமேதா னின்னமொரு சுண்ணமார்க்கம்
        அடைவாகச் சொல்லுகிறே னறிவுள்ளோர்க்கு
நாமேதான் வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
        நலமாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு

வாமேதான் பழம்புளியும் பலந்தான் பத்து
வடிவாக இதுரெண்டு மிடித்துநைய
சாமேதான் வில்லைகளைக் காயவைத்து
சரியாகப் புதுச்சட்டி அடுப்பிலேத்தே 20

செயநீர்

ஏத்தியே யெரியிட்டு ஒவ்வொன்றிய
இதமாகப் பற்றியே யெரிந்துபோகும்
நாத்தியே கடுஞ்சுண்ண மாகும்பாரு
நலமாகப் பனியில்வைக்கச் செயநீராகும்
வாத்தியே இந்நீரில் சீனந்தன்னை
வடிவாகப் பலமொன்று செயநீரிட்டால்
பாத்தியே பொரிந்துமே சுண்ணமாகும்
பரிவாகச் சீனமது சுண்ணந்தானே. 21

சீனச் சுண்ணம்

தானென்ற சுண்ணமது பலமுமொன்று
தாட்டிகமாய் நல்லெண்ணெய் படிதானொன்று
வானென்ற யிதுரெண்டும் ஒன்றாய்த்தானும்
வடிவாகக் கலக்கிடவே தயிருபோலாம்
நானென்ற தயிரதுவைக் கடையவெண்ணை
நலமாக வெண்ணைதனை வழித்துக்கொண்டு
கானென்ற தாளகத்தின் மேலேதானே
கனிவாகத் தடவியே வாட்டிடாயே. 22

தாளகக் கட்டு

வாட்டியே சூடனுட தீயிற்றானும்
வடிவாக இருசாமம் வாட்டிப்பின்பு
நாட்டியே பார்த்திடவே தாளகந்தான்
நலமாக உருகியே கட்டிப்போகும்

மூட்டியே மெழுகாகுஞ் சிவந்து நிற்கும்
முனிவாகக் காரீய மிடையேதாக்கு
தாட்டிகமாய் நொறுங்குமது வங்கந்தானும்
தடையறவே யெடுத்துநீ தன்மைகேளே. 23

தன்மையாய் நொறுங்கியதோர் காரீயத்தில்
தாட்டிகமாய்த் தாளகத்தை ஒக்கச்சேர்த்து
வண்மையா யரைத்துநீ புடத்தைப்போட்டு
வடிவாகக் களங்காக யிருக்கும்பாரு
உண்மையாய்ச் செம்புதனில் நூற்றுக்கொன்று
உறுதியாய்க் கொடுத்துருக்கு பத்துமாத்து
பெண்மையாய்ப் புடமதுதா னிறங்கும்பாரு
பேசாதே இதைவிற்றுச் செலவுசெய்யே. 24

செய்துமே யிப்படிக்கு யெல்லாந்தானும்
செயமாகப் பாஷாண மெல்லாங்கட்டும்
பைதுமே சவுக்காரச் சுண்ணந்தானும்
பதிவாக வெடியுப்புச் சுண்ணத்தாலே
நைதுமே எல்லாருங் கட்டிப்போகும்
நலமாகப் பெரு நூலில் விரித்துச்சொன்னேன்
கைதுமே வழலையைத்தான் சொல்லவில்லை
கனிவாகப் பூரணத்திற் சொன்னேன்பாரே. 25

வழலை அறிய

பாருநீ வழலையது யேதென்றாக்கால்
பதிவாக நல்லெண்ணெய் யாச்சுபாரு
கோருமே பூநீரு காரமாச்சு
குணமாக யிதுரெண்டுஞ் சேர்ந்தபோது

வாருமே வழலையென்ற பேருமாச்சு
வடிவாகக் கட்டினமு முருக்கினமுமாச்சு
கூருமே யிப்படிக்கு யிரண்டுஞ்சேரு
குணமாகக் களங்குசெம்பு தயிலமாச்சே. 26

சவுக்காரச் சுண்ணம்

ஆச்சேதான் சுண்ணத்துக் காதிகேளு
அடைவான சவுக்காரங் காய்ச்சும்போது
வாச்சேதான் நல்லெண்ணெய் விட்டுத்தானே
வடிவாகக் கழற்றினால் பூநீரெண்ணெய்
பாச்சேதான் கழன்றுபோம் பூநீர்தன்னில்
பதிவாக யெண்ணெய்கக்கிச் சீனத்தாலே
தாச்சேதான் காரமது யிறங்கும்பாரு
நலமான சவுக்காரச் சுண்ணமாமே. 27

சுண்ணமென்ற துரைதோரும் வெல்லும்பாரு
சூட்சமுடன் சகலசரக் கதுவும் நீறும்
கண்ணமது கோலாமே விட்டயெண்ணெய்
கணக்காக வாங்கிடவே நீலம்நீறும்
பெண்ணரசு யிருந்தாலே பிள்ளையாகும்
புத்தியுட னிப்படிக்குப் பெருமையாக
தன்னிகராய் வைத்திடவே சகலசித்தி
தாட்டிகமா யறிந்திடவே சித்தனாமே. 28

சித்தனா யிருநூறு பூரணத்தில்
செப்பினேன் நூல்களெல்லாஞ் சுருக்கமாக
முத்தியா யுலகத்தோர் பிழைக்கவென்று
முனிவாகச் சொல்லிவிட்டேன் முனிந்துபாரு
வித்தாலே விளைந்ததொரு மரத்தைப்போல
வேராகும் தூராகும் விரும்பி நில்லு
புத்தியாம் ரசவாதி யோகவாதி
புகலறிய அவர்களுக்குப் புத்திசொல்லே. 29

சாரக் கட்டு

சொல்லவே சாரத்தின் கட்டுச்சொல்வேன்
சுகமாக நாகமது கண்விட்டாடும்
மெல்லவே வெடியுப்புச் சுண்ணத்தோடே
மேன் மையாய்ச் சீனத்தை யிடையாய்சேரு
கல்லவே அரைத்துநுது கடுமைச்சுண்ணம்
காரணமாய் நல்லெண்ணெய் சேருஒன்றில்
வல்லவே பலமொன்று கூடச்சேரு
வடிவாகப் பால்போலே முறியும்பாரே. 30

முறியுமே அதைக்கடைய வெண்ணையாகும்
முனிவாக வெண்ணைதனை யெடுத்துமைந்தா
அறியவே சாரத்தின் மேலேபூசி
அடைவாக வாட்டிடவே யெண்ணெய்கக்கும்
நெறியவே அதட்டியே வாட்டிப்பின்பு
நிலையாக மேல்கவசஞ் சொல்லக்கேளு
வடியவே சீனத்தை வெடியுப்பாலே
வரவாக நீராலே அரைத்துஊதே. 31

சீனச் சுண்ணம்

ஊதவே சீனமது சுண்ணமாகும்
உற்றுமே அரைத்திட்டுச் சாரமேலே
காதலாய்க் கவசமது கட்டிநீயும்
கனிவாகப் புடம்போடு சாரச்சுண்ணம்
வாதையது படவேண்டாஞ் சாரச்சுண்ணம்
வடிவாகப் பெரியபுடம் போட்டெடுக்க
நாதமாம் நாகமதை உருக்கிக்கொள்ளு
நலமாகச் சாரத்தை மேலேதூவே. 32

தூவவே நாகமது கண்விட்டாடும்
துடியாக வெள்ளிமணி போலவாகும்
நாவவே செம்புதா னெட்டுரெண்டு
நலமாகச் சேர்க்கவே தங்கமாகும்
காவலா யிருப்பவர்க்குச் சொல்லுவாய் நீ
கனிவாக ஞானவிதி கனிந்துபாரு
தாவியே திரியாதே வழலைதன்னை
தாட்டிகமாய்ச் சொல்லாதே சார்ந்துபாரே. 33

பாருநீ வழலையது திலகமென்று
பரிவாக யெண்ணெயது பெயருமாகும்
தூருமே சொல்லாதே சுண்ணத்தோடே
துடியாகச் சேர்த்துவிடப் பாலுமாகும்
வாருமே சரக்கெல்லாங் கெஞ்சிக்கட்டும்
வடிவாகப் பெருநூலில் சொல்லவில்லை
சாருமே பார்த்தறியச் சித்திசித்தி
சாரித்து யெல்லாமுஞ் செய்திடாயே. 34

கெவுரிக்கட்டு

செய்திடவே கெவுரியது கட்டுமார்க்கம்
செயமாகப் பொன்னாகச் சொல்லக்கேளு
பைதிடவே கெவுரியது பலமுமொன்று
பதிவாகப் பழச்சாற்றில் சுத்திசெய்து
நைதிடவே வழலையென்ற சுண்ணங்கேளு
நலமாக வெடியுப்புச் சுண்ணம்நேராய்
கைதிடவே திலகமது யிடையேசேர்த்து
கனிவாகக் கடைந்துபார் வெண்ணையாமே. 35

ஆமேதான் வெண்ணைதனை வழித்துத்தானே
அடைவாகக் கெவுரிக்கு அங்கிபூட்டி
நாமேதான் கரியோட்டில் குமுறவாட்டு
நலமாக வாட்டிடவே கட்டிப்போகும்
பாமேதான் கட்டியதோர் கெவுரிதானும்
பதிவாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
சாமேதான் அரப்பொடியும் பலமும்பத்து
சரியாகக் கல்வத்தி லிட்டிடாயே. 36

அயச்செம்பு

இட்டுநீ வழலையென்ற பாலாலாட்டி
இதமாகக் குகையிலிட்டு உருக்கிப்பாரு
பட்டுமே வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
பரிவாக ஆடினதோர் மணியைத்தானும்
கட்டுமே செம்புதா னிடையேசேரு
கனிவாக உருக்கிஉடை வெட்டையாகும்
முட்டுமே காரமது யிடையேசேர்த்து
முனிவாகப் பழச்சாற்றா லாட்டிடாயே. 37

ஆட்டியே வில்லைதட்டி ரவியிற்போடு
அடைவாகப் பெரியபுடம் போட்டுத்திரு
நாட்டியே யெடுத்துப்பின் காரங்கூட்டி
நலமாக அரைத்ததனை முன்போல்போடு
மூட்டியே குகையிலிட்டு உருக்கினாக்கால்
முனிவாகச் சூரியன்போற் செம்புமாகும்
தேட்டியே இப்படிக்கு ஐந்துதானும்
திரமாகப் போடவே செம்புமாமே. 38

செம்பெடுத்து வெள்ளிதனி லெட்டுரெண்டும்
சேர்த்துமே உருக்கிப்பார் மாத்துயெட்டு
வம்பாகச் சொல்லவில்லை வழலைப்போக்கு
வடிவாகப் புடமிறங்கும் வண்ணம்பாரு
தம்பிரான் செயலாகும் வழலைதன்னை
சாற்றிடவே கைபாக மாகவைத்து
நம்பியே பார்த்திடவே யெல்லாஞ்சித்தி
நலமாகும் யெல்லாமும் நடத்தைகாணே. 39

அயச்செம்பு செந்தூரம்

காணவே செம்புதனைச் செந்தூரிக்க
கருவாகச் சொல்லுகிறேன் கருணைபாரு
தோணவே அயச்செம்பு பலமுமொன்று
துடியாகத் தங்கமது பலமுமொன்று
ஊணவே சேர்த்துருக்கித் தகடுகட்டி
உத்துமே தகடுக்கு முக்கால்கெந்தி
வாணவே வீரமது காலுஞ்சேர்த்து
வடிவாக வழலையென்ற பாலாலாட்டே. 40

ஆட்டியே மையாக நேகவாட்டி
அடைவாகத் தகட்டின்மே லப்பிக்காய
வாட்டியே புடமொன்று போட்டுத்திரு
வடிவாக நொறுங்குமட்டும் புடமும்போடு
நாட்டியே கரிபோலே தூளுமாகும்
நலமாகத் தூளெடுத்து வெள்ளீயத்தில்
கூட்டியே உருக்கிப்பார் தங்கமாகும்
குணமாக யிதைவித்துச் செலவுசெய்யே. 41

செய்துநீ வுண்டுடுத்திச் சீவனத்தைச்
சிறப்பாகச் செய்துநீ யோகம்பாரு
பைதுமே சுழிமுனையில் பரிந்துநில்லு
பதியாக உண்டுடுத்தி வழியைத்தேடு
கைதுமே அந்திசந்தி பணமவ்வீதம்
கனிவாக உண்டுவர மண்டலத்தில்
நைதுமே நரைதிரைக ளற்றுப்போகும்
நலமாகச் சித்திதரும் நன்மையாமே. 42

ஆமேதான் லிங்கமொடு பூரம்சூதம்
அடைவாகத் தாளகமும் பாசாணங்கள்
நாமேதான் வழலையென்ற யெண்ணெய்தன்னை
நலமாகத் தடவியே வாட்டிவாட்டி
பாமேதான் புடம்வைத்து நவலோகத்[illegible]
பதிவாகக் குடுத்திடவே பாக[illegible]
தாமேதான் நவலோகம் வெள்ளி[illegible]
தாட்டிகமாய்க் கொடுத்திட[illegible] தங்க[illegible] 43

தங்கமாம் வழலையென்ற யெண்ணெய்தானும்
தாட்டிகமாய் வெடியுப்பு சுண்ணந்தானும்
பங்கமாய்ச் சேராதால் பலனுமில்லை
பதிவான ஞானவிதி பதிவுமில்லை
சங்கமாய் சித்தரவர் மறைந்தாரையா
சரியாகப் பூரணத்தில் சார்புந்தோணும்
துங்கமாய்ச் சொல்லிவிட்டே னுலகமீதில்
துடியாகச் சகலசித்தும் சுருக்கிலாமே. 44

நாதவிந்து அறிய

சுருக்காகப் பூனீரு சுண்ணம்பண்ணு
 [illegible]பமாகப் பின்னே தான் வழலைசேரு
நெருக்காகச் சேர்க்கவே பாலுமாகும்
 நேர்மையா யிதின்பேரு சத்திநாதம்
பெருக்காகச் சுக்கிலசுரோணிதமுமாச்சு
 பேராகப் பூனீரு சேர்ந்ததாலே
குருக்கிடையுங் கருக்கிடையு மா[illegible]தப்பா
 குருவாகுங் கோசபீ சந்தானாமே. 45

ஆமேதா னிதைவிட்டுச் சித்தரெல்லாம்
 ஆண்மையாய் மூலிகையி லிருக்குதென்றும்
காமேதான் வழலையென்று மறைத்ததாலே
 கருக்குருவு மறியாமற் கேட்டாரப்பா
நாமேதான் பெருநூலைப் பார்த்துப்பின்பு
 நலமாகச் சூஸ்திரமு மிகவும்பார்த்து
தாமேதான் செய்தாக்கா லெல்லாமாகும்
 சவுக்கார வழலையது சேரச்சித்தே. 46

சித்தாவ தேதென்றால் சொல்லக்கேளு
 சிறப்பாக பாஷாணங் காரசாரம்
முத்தாக யிதுகளிலே யெண்ணெய்யுண்டு
 முனிவாகக் காரமதி லெண்ணெய்யூத்து
நத்தாகி வாட்டிடவே பாசாணங்கள்
 நலமாகக் கட்டியே லோகமீதில்
நத்தியே பாய்ந்ததினால் தங்கமாச்சு
 நாட்டிலே வழலைதனை விட்டாற்கேளே. 47

விட்டகுறை யாலேதான் வாதம்வந்து
விருப்பமாய் லெபிக்குமது வழலையில்லா
சிட்டர்களே வாதமது லபிக்கமாட்டார
சிறப்பாகச் சரக்குகளைச் சேர்த்தரைத்தால்
முட்டாளே சத்தாகும் சத்தைத்தானும்
முனிவாகப் பிரித்துசெம்பு எடுத்துவெள்ளி
நட்டாகக் கொடுத்திடவே மாத்துப்போலாம்
நலமில்லை புடமிறங்கா நடத்தைதானே. 48

நடத்தைதா னேதென்றால் சொல்லக்கேளு
நலமான நாதத்தால் கோடிவித்தை
திடத்தையாம் யெண்ணெய்யினால் கோடிவித்தை
தீர்க்கமாம் சவுக்கார மில்லாப்போனால்
விடத்தையாம் வழலையினா லொன்றுமில்லை
விதமாகச் சத்திசிவஞ் சேர்ந்ததாலே
புடத்தையாம் புடமிறங்கும் பொன்னுமாகும்
பேருலகில் சாயமாம் வாதந்தானே. 49

அயச்செம்பு

வாதந்தான் அயச்செம்பு சொல்லக்கேளு
வடிவான அயத்தினுட பெருமைமெத்த
நீதமாய்ச் சொல்லுகிறேன் உற்றுக்கேளு
நிலையாக அயமதுவுந் தெரியாதாலே
நாதமாங் கெந்தியது உடனேசேர்த்து
நலமாக உருக்கிடவே சத்துமாகும்
பாதமாஞ் சத்ததுவும் பளிங்கிபோலாம்
பாலகன்போ லிருக்குமது பாரிலோர்க்கு
வாதமாஞ் செய்யவகை யறியாமற்றான்
வடிவாகச் சொல்லுவா ருலகிற்றானே. 50

தானென்ற உலகத்தி லயத்தின்செம்பு
தாட்டிகமாய்ச் சொல்லுகிறேன் உற்றுக்கேளு
வானென்ற வழலைதொட்டுச் செம்பெடுத்தால்
வர்ணமுமாம் புடமிறங்கும் மார்க்கஞ்சொன்னேன்
கானென்ற வழலையது தெரியாதாலே
கனிவாகத் தங்கமில்லை கண்டுகொள்ளு
தேனென்ற நாதாக்க ளாடும்வித்தை
செப்புகிறே னுலகுதனிற் றிறமிதாமே. 51

திறமாக வழலையது சொல்லக்கேளு
திடமாகத் தைலமது வழலையாச்சு
அறமாகச் செவ்வல்லிக் கிழங்குச்சாரு
ஆண்மையா யிடித்துமே பூச்சாறுவிட்டு
திறமாகப் புளித்துமே திரினாள் வைத்து
திட்டமாய் வடிகட்டிப் பின்புகேளு
உறமாகப் படியொன்றில் வெங்காரந்தான்
உற்றுநீ அரைச்சேரு பொரித்திடாயே. 52

பொரித்திடவே புதுச்சட்டி அடுப்பில்வைத்து
பிசகாதே யெரியிடவே பொரிந்துசுண்ணம்
நரித்திடவே பொரிகாரச் சுண்ணந்தன்னை
நலமாகக் கல்வத்தி லிட்டுத்தானே
விரித்திட்டுப் பொடியாக்கிச் சாத்திலிட்டு
விதமாக அடுப்பேற்றிப் பொங்காமற்றான்
கரித்திட்டுக் காய்ச்சியே கொஞ்சந்தானே
ககனமான வழலையது படியுமொன்றே. 53

ஒன்றாக விட்டுமே திரிநாள் வைத்து
உறுதியாய் அயச்சட்டி தன்னிலேதான்
கன்றாகக் காய்ச்சியே அகப்பையாலே
கனிவாகக் கொஞ்சமாய் விட்டுக்காய்ச்சி

நன்றாகத் தைலமென்ற பதமாய்க்காய்ச்சி
நலமாகத் தைலத்தை எடுத்துநீயும்
நின்றாக அரைபொடியும் பலமும்நாலு
நிலையாகத் தைலத்தில் பிசறிவையே. 54

வைத்துமே திரிநாளுஞ் சென்றபின்பு
வலையான குகைவிட்டு உருக்கிப்பாரு
தைத்துமே கரடாக உருகுமப்பா
தாட்டிகமாய்க் கரடெடுத்து தைலந்தன்னில்
பைத்தும தைப் பிரட்டியே உருக்கித்திரு
பகரறிய வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
நைத்துநீ அயத்திலே சாயமேரும்
நலமாக யின்னம்வகை நடத்தைகேளே. 55

செம்புச் சுத்தி

கேளுமே செம்பதுவுந் தகடுவாங்கி
கெடியாகக் கரியுப்பு இரண்டுவாங்கி
ஆளுமே செங்கல்மாச் சேருஒன்று
அடைவாக யிதுயிரண்டும் பொடியாய்ப்பண்ணி
காளுமே செம்பதுவை யுள்ளே வைத்து
கனிவாகப் பெரியபுடம் போட்டெடுக்க
தூளுமே செம்பதுவு மிறந்துபோகும்
துடிபாக அயச்சத்திற் சரியாய்ச் சேரே. 56

சரியாகச் சேர்த்துநீ தைலந்தன்னில்
தாட்டிகமாய்க் கொதியிட்டு வற்றக்காய்ச்சி
வரியாகக் குகையிலிட்டு உலையிற்றானே
வடிவாகக் குமுறவே உருக்கினாக்கால்
திரிவாக வெள்ளிமனரி போலேயாகும்
திட்டமா யதையெடுத்துக் கல்வமிட்டு
பிரிவாக வெங்காரம் பாதிசேர்த்து
பிசகாதே செவ்வல்லிக் கிழங்குச்சாரே. 57

சாத்திலே யெண்சாம மாட்டிப்பின்பு
சரியாக வில்லைதட்டிக் காயப்போடு
பாத்திலே பெரியபுடம் போட்டெடுத்து
பதிவாகக் கல்வத்தி லிட்டுத்தானே
நாத்திசையுந் தான்மெய்க்கக் காரங்கூட்டி
நலமாகக் கிழங்குச்சார் தன்னைவிட்டு
போத்தியே யிருசாம மறைத்துவில்லை
பொலிவாகக் கட்டியே காயப்போடே,

போடவே பெரியபுடம் போட்டெடுத்து
பிசகாமல் குகையிலிட்டு உருக்கித்தீரு
நாடவே வெள்ளிமணி போலத்தானே
நலமாக அடியில்நிற்கு மேலேதானே
ஊடவே கருப்பாக ஒதுங்கிப்போகும்
உறுதியா யிரும்பதுவும் களிம்புபோகும்
தேடவே வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
திறமாக யிருக்குமது திறமிதாமே. 59

வங்கச்செம்பு

ஆமேதான் மிச்சத்தைத் தூரவைத்து
அடைவாகக் காரீயஞ் சேருஒன்று
நாமேதா னிதைஉருக்கிச் சூதந்தானும்
நலமாகப் பாய்ச்சிவிடு பாதிதானும்
காமேதான் புட்டாக நொறுங்கிப்போகும்
கனிவாக யிடைசமனா யைந்தாய்காய்ச்சல்
தாமேதான் சேர்த்துநீ சாமமாட்டி
சரியாக வில்லைபண்ணிக் காயப்போடே. 60

போடவே கற்றாலைழ நீரினாலே
பொலிவாகப் பெரியபுடம் போட்டெடுத்து
நாடவே மஞ்சள் நிறம் வங்கம்நிற்கும்
நலமாகப் பின்னும்நீ கல்வத்திட்டு
கூடவே கற்றாழை நீரினாலே
குணமாக இருசாமம் அரைத்துவில்லை
பாடவே காயவைத்துப் புடத்தைப்போடு
பதிவாக வில்லையது சிவந்துபோமே. 61

போகுமே முன்னெடுத்த அயத்தின்சத்தில்
பேசாதே யிடைசமனாய்ச் சேர்த்தரைத்து
வாகுபெறச் செவ்வல்லிப் பூச்சாறுவிட்டு
வடிவாக அரைத்துநீ வில்லைதட்டி
தாகுபெறக் கதிரிலிடு புடத்தைப்போடு
சமுசயங்க ளெண்ணாதே குகையிலிட்டு
பாகுபெற உருக்கிடவே யீயந்தீய்ந்து
பதிவாகச் செம்பாகும் பாரிலோர்க்கே. 62

பாரிலே தங்கம்போற் செம்பேயாகும்
பதிவான அயச்செம்பு இதுதானப்பா
ஊரிலே வாதிக்குச் சொல்லிடாதே
உத்துநீ யிதைவைத்துச் சீவனங்கள்
கூறியே பண்ணிவிடு ஞானந்தன்னை
குணமாக உண்டுடுத்துப் பின்புதானும்
தேறியே ஞானவழி யடுத்துக்கூட்டு
சிலம்பொலிபார் ஞானத்தைச் செய்திடாயே. 63

செய்திடவே முன்வைத்த அயத்தின்செம்பை
சிறப்பாக வெள்ளிதனில் பத்துரெண்டு
பைதிடவே கொடுத்துருக்கு யேழுமாத்து
பதிவாகப் புடமிறங்கும் பாரிலோர்க்கு

கைதிடவே பெருநூலிற் சொல்லவில்லை
        கனிவாகக் கைபாக மிந்த நூலில்
வைதிடவே பூரணந்தா னிரண்டுநூறில்
        வடிவாகச் சொல்லிவிட்டேன் வண்மைதானே. 64

களங்கு

தானென்ற அயச்செம்பு பலமும் நாலு
        தாட்டிகமாய்த் தங்கமொன்று நாகமொன்று
வானென்ற அயச்செம்பை உருக்கிக்கொண்டு
        வடிவாக யதைச்சேர்க்கக் களங்கமாகும்
நானென்ற நவலோகம் நூற்றுக்கொன்று
        நலமாக யிட்டிடவே தங்கமாகும்
கானென்ற உங்களுக்குச் சொன்னேனையா
        கனிவாகப் பார்த்திடவே கனகமாமே, 65

களங்கு செந்தூரம்

ஆமேதான் களங்குதனைச் செந்தூரிக்க
        அடைவாகச் சொல்லுகிறே னையாகேளு
வாமேதான் களங்குக்கு நாலிலொன்று
        வடிவாகத் தாளகத்தை ஒக்கச்சேர்த்து
நாமேதான் கல்வத்தி லிட்டு ஆட்டி
        நலமாக யிருசாமஞ் சென்றபின்பு
காமேதான் வில்லைதட்டிக் காயப்போடு
        கனிவாகக் காய்ந்தபின்பு சொல்லக்கேளே. 66

சொல்லவே குக்குடத்தில் சிவந்துபோகும்
        சுயமான நவலோகம் நூற்றுக்கொன்று
மெல்லவே கொடுத்திடவே யெட்டுமாத்து
        மேன்மைபெற புடமிறங்கும் மேன்மைநல்லாம்

கல்லவே அந்திசந்தி பணமவ்வீதம்
கனிவாக உண்டுவரக் கருணைகேளு
நல்லவே கல்தூணாம் வழலைப்போக்கு
நலமாகக் கைப்போடு உப்புத்தள்ளே. 67

தள்ளிடுவாய் கூட்டுவது யென்னவென்றால்
தாட்டிகமாய் நெய்யோடு பாலுமாகும்
கள்ளியே மோராகும் சர்க்கரையுமாகும்
கனிவாக இதுவெல்லாங் கூட்டிக்கொள்ளு
துள்ளியே தவசுமது உறத்து நிற்கும்
துடியான யுகாந்தவரை தேகநிற்கும்
மெள்ளவே சொல்லிவிட்டேன் வழலைப்போக்கு
மேன்மையா யிதைவைத்து விரும்பிடாயே. 68

விரும்பிடவே சவுக்கார மொன்றுகேளு
வேதாந்தச் சித்தரவர் மறைத்தசொல்லை
நரும்படவே சொல்கிறேன் நன்மையாக
நலமாக இதையறிந்து செய்துகொள்ளு
துரும்புமுதல் பொன்னாகும் வேகமெத்த
துடியான வழலைதனைச் சொல்லக்கேளு
கரும்புபோற் சொல்லுகிறேன் சவுக்காரத்தை
கனிவாகச் சொல்லுவது காதல்கேளே. 69

காதலாய்ப் பூனீரு பதக்குவாரி
கண்டித்துப் புதுச்சட்டி தன்னிலிட்டு
வாதையா யமுரிபடி யெட்டுவிட்டு
வடிவாகச் சுக்கானீர் படியும் ரெண்டு
சாதையாக யெல்லாமு மொன்றாய்ச்சேர்த்து
சரியாக கல்சட்டி தன்னிலூற்றி
பாதையாய் மூன்றானாள் தெளிவைவாங்கி
பதிவாகக் காய்ச்சிடவே பரிந்துகேளே. 70

பரிந்துமே குணமாகக் காய்ச்சிப்பின்பு
　　பதிவாகச் சாம்பல்தனில் துணிமேலிட்டு
வரிந்துமே குளம்பதுவை மேலேயிட்டு
　　வடிவாக உண்டையது பண்ணித்தானே
கரிந்துமே கதிரிலிட்டுக் காயப்போடு
　　கருவாக அஞ்சுசுண்ணக் குகையிலிட்டு
பரிந்துமே பத்தெருவிற் புடத்தைப்போடு
　　பாங்கான சவுக்காரங் கடுமைதானே. 71

வழலைச்சுண்ணம்

தானென்ற சவுக்கார மிதுவேயாச்சு
　　தாட்டிகமாய் வழலையது சேரக்கேளு
ஊணென்ற நல்லெண்ணெய் படியொன்றுக்குள்
　　உற்றுமே சவுக்காரஞ் சேருபோடு
வானென்று கலக்கியே திரிநாள்வைக்க
　　வடிவாகப் பாலாகும் பாலைத்தானும்
ஆணென்று விட்டயெண்ணெய் கக்கக்கேளு
　　அடைவாகச் சீனமது சேருவாங்கே. 72

வாங்கியே புதுச்சட்டி அடுப்பிலிட்டு
　　வடிவாக யெரித்திடவே பொரிந்துபோகும்
தாங்கியே பொரிந்ததொரு சீனந்தன்னை
　　தாட்டிகமா யதனிடைக்குச் சூடன்சேரு
பாங்கியே யிரண்டுமொன்றாய்க் கல்வத்திட்டு
　　பதிவான சவுக்காரம் பாலாயாட்டி
தேங்கியே யிருசாமம் சுவர ஆட்டி
　　திடமாக வில்லைதட்டி உலரப்போடே 73

போடவே ஐந்துசுண்ணம் மேலேகட்டி
பொலிவாகப் பத்தெருவில் புடத்தைப்போடு
ஆடவே யெடுத்துப்பார் கடுமையாக
அடைவாக வழலையது சுண்ணமாச்சு
நாடவே வழலையென்ற சுண்ணந்தன்னை
நாதாக்கள் மறைத்ததுவை வெளியிற்சொன்னேன்
ஊடவே சகலமெல்லாங் கட்டிப்போகும்
உறவாக யிருக்குமது தங்கந்தானே. 74

துருசு சுண்ணம்

ஆமேதான் தங்கமது ஆகும்நேர்மை
அடைவாகச் சொல்லுகிறே னப்பாகேளு
வாமேதான் துருசதுவும் பலமும்பத்து
வடிவாகச் சவுக்காரம் மேலேகட்டு
நாமேதான் கதிர்படவே காயப்போடு
நலமாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
காமேதா னெடுத்துப்பார் வெண்ணெயாகும்
கனிவாகத் துருசதுவுஞ் சுண்ணமாமே. 75

சுண்ணமாந் துருச துவை யெடுத்துக்கொண்டு
சுருக்காக நல்லெண்ணெய் படியிற்போட்டு
சுண்ணமாம் யெண்ணெயது முறிந்துநல்லாய்க்
கனிவாகப் பாலாகுங் கண்டுகொள்ளு
இன்னிலத்தில் காரத்தில் முறிந்துதானால்
இதமாகச் சகலசரக் கதனைக்கட்டும்
முன்னமே மெழுகாகும் நவலோகத்தில்
முக்கியமாய்த் தங்கமது ஆகும்பாரே. 76

லிங்கக் கட்டு

ஆகுமே லிங்கமது பலமுமொன்றில்
அடைவான பாலிலே துவைத்துவாட்ட
ஏகுமே பாலதுவும் உள்ளேசென்று
இதமாகக் கட்டியது யிருகிப்போகும்
பாகுபெறச் சாமமது குமுறவாட்டப்
பதிவாக லிங்கமது உருகித்தானே
தாகுபெற யிருக்குமது நவலோகத்தில்
தாட்டிகமாய் நூற்றுக்கு ஒன்றுதாக்கே. 77

தாக்கிடவே மாத்ததுவும் பத்துமாகும்
சமுசயங்க ளெண்ணாதே புடமிறங்கும்
வாக்கிடவே யிதைவிற்றுச் சீவனத்தை
வடிவாகச் செய்துநீ யோகம்பாரு
நோக்கிடவே காயசித்தி உடனேயாகும்
நொடிக்குள்ளே சகலமுந்தான் சித்தியாமே
பாக்கிடவே முளைக்குமது காயுங்காய்க்கும்
பதிவாக யிதைப்போலே பரிந்துகாணே. 78

வீரமணி

காணவே வீரமது பலமுமொன்றில்
கனிவாகச் சவுக்காரங் கடைந்தபாலால்
தோணவே தடவியே வாட்டித்தீரு
துடியாக வீரமது மணியுமாகும்
ஆணவே நவலோகம் நூற்றுக்கொன்று
அடைவாக யிட்டுருக்க மாத்துக்கேளு
பாணவே பத்தாகும் மாத்தைவிற்று
பதிவாகச் சிலவுக்கு வைத்துக்கொள்ளே. 79

கொள்ளவே தாளகமும் பலமும்பத்து
குடியாகச் சவுக்கார வழலைதன்னில்
மெள்ளவே தோய்த்துநீ வாட்டுவாட்டு
மேன்மையா யிப்படிக்குக் குமுறவாட்டு
துள்ளவே தாளகமுஞ் சிவந்துபோகும்
துடியாக வோடாது கரியில்நிற்கும்
கள்ளவே நவலோகம் நூற்றுக்கொன்று
கனிவாக யிட்டிடவே தங்கமாமே. 80

கெந்தக மெழுகு

தங்கமாந் தாளகத்தின் தங்கம்போல
தாட்டிகமா யில்லையடா தன்மைசொன்னேன்
துங்கமாய்க் கெந்தகமும் பலமுமொன்றில்
துடியாகச் சவுக்காரந் தெளிந்தபாலால்
பங்கமா மேலேதான் துவாளையிட்டு
பதிவாகக் கற்பூர தீபந்தன்னில்
வங்கவே மாட்டிடவே மெழுகுமாகும்
வடிவாக நவலோகம் நூற்றுக்கொன்றே. 81

ஒன்றாக விட்டுருக்கிப் பார்க்கும்போது
உறவாகத் தங்கமது நேர்மைமெத்த
கன்றாகப் புடத்துக்கு யிறங்கிப்போகும்
காரணமாய்க் கருமறைத்தார் சித்தர்மெத்த
நன்றாகச் சொல்லிவிட்டேன் அயத்தின்போக்கு
நலமாகக் கெந்தியுடன் சேர்ந்ததாலே
வன்றாக யெல்லாமுஞ் சித்திசித்தி
வடிவாக அறிந்திடவே வடிவைக்கேளே. 82

காந்தச் செம்பு

கேளென்ற காந்தத்தின் செம்புசொல்வேன்
கெடியாகக் காந்தமது சேருவொன்று
நாளென்று துடைத்துநீ கல்வத்திட்டு
நலமாகப் பழச்சாறு விட்டரைத்து
காளென்ற புடமிட்டு யெடுத்துக்கொண்டு
கனிவாக வழலையது சொல்லக்கேளு
தானென்ற வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
தன்மைபெறப் பலம்பத்து புளியும்பத்தே. 83

வெடியுப்புச் சுண்ணம்

பத்தாக இதுயிரண்டு முரலிலிட்டு
பதிவாக நையயிடி வில்லைதட்டு
முத்தாகப் புதுச்சட்டி அடுப்பிலிட்டு
முனவாக ஒவ்வொன்றாய்க் கொடுத்துவாநீ
நந்தாகப் பற்றியே யெரிந்துபோகும்
நலமாகக் கடுஞ்சுண்ணம் வெடியுப்புத்தான்
வித்தாக யிந்தயிடை சீனந்தன்னை
விதமாகப் பொரித்துமே மேன்மைகேளே. 84

கேளுமே யிடைசமனாய்ச் சீனந்தன்னை
கெடியாகப் பொரித்துநீ சேர்த்தரைத்து
நாளுமே வில்லைதட்டிக் காயப்போடு
நலமாக ஐந்துசுண்ணத் துள்ளேயிட்டு
வாளுமே புடம்போடப் பூப்போலாகும்
வடிவாகக் கடுஞ்சுண்ணம் வெடியுப்புத்தான்
பாளுமே போகாது யின்னங்கேளு
பதிவாக வழலையது பண்புகேளே. 85

பண்பாகக் கோழியது ரெத்தம்வாங்கி
பதிவாகச் செரொன்றில் உப்புச்சுண்ணம்
தண்பாகப் பலமொன்று நிறுத்துக்கொண்டு
தாட்டிகமாய்க் கலந்திடவே கரைந்துபோதும்
உண்பாக நல்லெண்ணெய் படியுமொன்று
உறுதியாக யிரண்டுமொன்றாய்ச் சேர்த்துப்பாரு
கண்பார்வை யாகவே தயிர்போலாகும்
கனிவாகக் கடைந்துநீ காய்ச்சிடாயே. 86

காய்ச்சிடவே யெண்ணெய்பத மாகக்காய்ச்சி
கனிவாக வெங்காரம் பலமுமொன்று
வாய்ச்சிடவே கெந்தியது பலமுமொன்று
வடிவாக இதுயிரண்டும் பொடித்துக்கொண்டு
நாய்ச்சிடவே தைலத்திற் போட்டுக்காய்ச்சி
நலமாகக் காந்தத்திற் பிசறிக்கொண்டு
பாய்ச்சிடவே குகையிலிட்டு உருக்கிப்பாரு
பதிவாக மணிமணியா யிறங்கும்பாரே. 87

பாருமே உருகினதோர் காந்தந் தன்னை
பதிவாகத் தூரவைத்துப் பின்புகேளு
வாருமே செம்பதுவுஞ் சேருவொன்று
வடிவாக உப்புக்குள் புடத்தைவைக்க
காருமே செத்ததுவுங் கருப்புமாகும்
கனிவாகக் காந்தத்திற் சமனாய்ச்சேரு
நாருமே முன்தைலந் தன்னிலிட்டு
நலமாகக் காய்ச்சிமெள்ள வறுத்திடாயே. 88

வருத்துநீ வொட்டவே யெடுத்துத்தானும்
வடிவாகப் பெரியபுடம் போட்டெடுத்து
நருத்துமே குகையிலிட்டு உருக்கிப்பாரு
நலமாக வெள்ளி பொன்போ லுருகியாடும்

பருத்துமே வெங்காரங் கூடச்சேர்த்து
பதிவாக உருக்கிடவே ஐந்துதானும்
குருத்துமே யிரும்பதுவுங் கனிந்துபோகும்
குணமாக வெள்ளியது சத்துத்தானே. 89

சத்தெடுத்து வைத்துநீ சொல்லக்கேளு
சரியாக யீயமது சேருவொன்று
பத்தெடுத்துக் கல்வத்தில் நையத்தட்டி
பதிவாகப் பிச்சுமே பொடியதாக்கி
முத்துமே காற்றாழை நீரினாலே
முனிவாக அரைக்கவே சொல்லக்கேளு
புத்தியாய் மிருதாரு சிங்கிதானும்
புனிதமா யிடைசமனாய்ச் சேர்த்துக்கொள்ளே. 90

சேர்த்துநீ காற்றாழம் பாலாலாட்டி
சிறப்பாக வில்லைதட்டிக் காயப்போடு
பார்த்துமே காய்ந்தபின்பு புடத்தைப்போடு
பதிவாக யெடுத்திடவே சிவந்துகாணும்
நாத்துமே முன்சக்தி இடையேசேர்த்து
நலமாகக் கல்வத்தி லிட்டுக்கேளு
மூத்துமே காரமது யிடையே சேர்த்து
முனிவாக உருக்கிடவே செம்புமாமே. 91

ஆமேதான் செம்பெடுத்து வெள்ளிதன்னில்
அடைவாக யிருபதுக் கொன்றுதாக்கு
தாமேதான் தாக்கிடவே வெள்ளிதானும்
தாட்டிகமாய்ப் பழுக்குமது யேழுமாத்து
நாமேதான் சொல்லிவிட்டோ மிரு நூறுக்குள்
நடத்தையெல்லாம் வாசியோ கத்தைப்பாரு
பூமேதான் சொல்லிவிட்டே னுலகத்தோர்க்கு
பேராசை யாகவேண்டாம் காந்தம்பாரே. 92

காந்தமது யெளிதல்ல அயமுந்தானும்
கருணைபெறச் சித்துமிக உண்டுபாரு
நாந்தமாம் வழலையது சுண்ணந்தன்னை
நலமாகச் சேர்த்தாலே யெல்லாஞ்சித்தி
பாந்தமாம் வழலையது சேராப்போனால்
பதிவாகச் சித்தியில்லை யெல்லாம்பொய்யாம்
வாந்தமா முன்னூலாம் பெரு நூல் தன்னில்
வகையாகப் பாடவில்லை வழலைதானே. 93

வழலையது காயசித்தி யேதென்றாக்கால்
வடிவான மனிதருக்கு யெண்ணெய்தேய்த்து
நிழலையாய் முழுகினால் சித்திமெத்த
நிலையில்லாச் சாஸ்திரத்தில் பெருநூல்தன்னில்
கழலையாம் பிண்டமது யெடுக்கச்சொன்னேன்
கனிவாகக் காயசித்தி எண்ணெயாச்சு
தழலையாங் கடந்தவர்க்குத் தெரியுமப்பா
தாட்டிகவான் செய்யுமிது தண்மைதானே. 94

தானென்ற வழலையது தெரியாதாலே
தாட்டிகமாய் வழலையது வெடியுப்பென்றும்
வானென்ற பிண்டமது வழலையென்றும்
வடிவான அமுரிகளம் வழலையென்றும்
ரினென்ற சவுக்காரம் வழலையென்றும்
செப்பினார் பெருநூலிற் திறமையாக
ஊனென்று சொல்லிவிட்டே னொருத்தர்கண்டால்
உறவாகத் தங்கமது செய்வார்தானே. 95

செய்யாமல் பெருநூலில் மறைத்தேனப்பா
செய்தாக்கால் வயிரவருங் கோபஞ்செய்வார்
பையிலே யிருந்தபணம் போலேதானே
பருவமா யவிழ்த்தாக்கால் தெரியுமப்பா

வையகத்தோ ரிம்மர்மம் தெரியாதாலே
வாடிமனம் கெட்டலைந்து போனாரப்பா
மெய்யினால் சல்லடையிற் சலித்தாலல்லோ
மேன்மையாய்த் தெரியுமது மேன்மைகேளே. 96

அப்பிரகச் செந்தூரம்

கேளுமே காயத்துக் குறுதியாக
கெடியான அப்பிரகச் செந்தூரங்கேள்
ஆளுமே காயசித்தி உடனேயாகும்
அடைவாகக் கைபாக மறிந்தாற்சித்தி
நாளுமே பூரணந்தா னிரண்டுநூறில்
நலமாகச் சொல்லிவிட்டே னிதனை வைத்து
காளுமே உண்டுவரச் சித்தியாகும்
கையையுரை வாசரவர் கற்பமாமே. 97

ஆமேதான் அப்பிரகம் பலந்தான்பத்து
அடைவாகப் பாதியாஞ் சவளைதானும்
நாமேதா னிரண்டையுந்தான் சேர்த்தரைத்து
நலமாகப் பார்க்கையிலே வெண்ணெயாகும்
காமேதான் முச்சாமங் கனிய ஆட்டி
கதரிவிடு காய்ந்தபின்பு கிடத்திலிட்டு
வாமேதான் பதங்கமது யேறிப்போகும்
வடிவாகப் பதங்கத்தை தள்ளிடாயே. 98

தள்ளியே அப்பிரகந் தனையெடுத்து
தாட்டிகமாய் முன்புகைநீர் விட்டு ஆட்டி
துள்ளியே வில்லைகட்டிப் புடத்தைப்போடு
துப்பறவாய்ப் பெரியபுடம் போட்டுடெத்து
கள்ளியே கல்வத்தி லிட்டுக்கேளு
கனிவாகத் தாய்சொன்னாள் சாரைவார்த்து
மெள்ளவே யிருசாம மரைத்துப்போடு
மெதுவாகக் கதிரிலிடு மேன்மைதானே. 99

தானேதா னரைத்துநீ புடத்தைப்போடு
தாட்டிகமாய் ஆலம்பழ நிறமாகும்
வானேதா னதையெடுத்துத் தூரவைத்து
வடிவாகச் செந்தூர வயணங்கேளு
நானேதான் பொன்னிச்சி பலமுமொன்று
நலமாக வளகிலுப்பு பலமும்நாலு
கானேதான் பாணிவிட்டு அரைக்கவெண்ணெய்
கனிவாகப் பொன்னிச்சி மேலேகட்டே. 100

செந்தூரம்

[illegible]ட்டியே கரியோட்டில் குமுறவாட்டி
கனமாக உருகுபத மாகவாட்டி
நட்டியே புகையாமல் குமுறவாட்டி
நலமாகப் பாணிதனி லெடுத்துப்போட
துட்டியே செந்தூர முருக்கம்பூவாம்
துடியாக யெடுத்துநீ தூரவைத்து
குட்டியே சிவந்தஅப்பி ரேகமொன்று
குணமாகத் தாளகச்செந் தூரமொன்றே. 101

ஒன்றாக நாலுக்கு ஒன்றுசேர்த்து
உறவாகப் பாணிவிட்டு நன்றாயாட்டி
கன்றாக உண்டையது கனமாய்ப்பண்ணி
கனமாக கதிரிலிட்டுக் காய்ந்தபின்பு
நன்றாக வளையலுப்பைக் கவசங்கட்டி
நல்லகரி யோட்டிலே வாட்டிப்பாரு
மன்றாகச் செவ்வல்லிப் பூப்போலாகும்
மயமான செந்தூர மாகுந்தானே. 102

ஆகுமே செந்தூரந் தளுக்குப்போலாம்
அடைவாகத் தளுக்கென்று நினைத்திடாதே
ஏழுமே சகலநோ யெல்லாந்திரும்
இதமாக அமுர்தசர்க் கரையாய்த்தோற்றும்
பாகுபெற யிதைப்பெலன் படுத்தக்கேளு
பதிவாக வங்கசெந் தூரஞ்சேர்ந்தால்
தாகுபெற நரைதிரைக ளற்றுப்போகும்
தாட்டிகமா யமனுண்ட கற்பமாமே. 103

கற்பமாம் வகையின்செந் தூரங்கேளு
கனிவாகக் காரீயம் பலமோநாலு
அற்பமென்று யெண்ணாதே பொட்டிலுப்பு
அதில்ரெட்டி ஆவரைப் பஞ்சாங்கந்தான்
நற்பமாம் பொடித்துநீ வைத்துக்கொண்டு
நலமாக அயச்சட்டி அடுப்பிலேற்றி
உற்பனமாய்க் காரீய மிட்டுருக்கி
உறவாக வெடியுப்புப் போட்டிடாயே. 104

போட்டு நீ பனிரெண்டு சாமந்தானும்
பொலிவாக வறுத்திடவே சிவந்துகாணும்
நாட்டிலுள்ளோ ரறியாமல் வங்கந்தன்னை
நலமாகச் செந்தூரஞ் செய்யாதாலே
காட்டுமே காயமது உறுதியில்லை
கனிவாக அப்பிரகந் தெரியாதாலே
ஏட்டுகளை யென்னவென்று சொல்வாரப்பா
இதமாக வங்கசெந் தூரந்தானே. 105

தானென்ற வங்கசெந் தூரந்தன்னைத்
தாட்டிகமாய்க் கரண்டிதனில் வைத்துருக்க
வானென்ற யீயமது உருகியாடும்
வடிவாகச் சத்துருதா னறியாதாலே

கானென்ற சத்துருதான் வங்கத்துக்குக்
கனிவாக அயந்தானும் கருணைபாரு
தேனென்ற வங்கமது பலமுமொன்று
திறமாக அரப்பொடியும் பலந்தானொன்றே. 106

ஒன்றாக யிதுரெண்டுங் கல்வத்திட்டு
உறவாக அரைத்துநீ பூனீராலே
நன்றாக வில்லைதட்டிக் கதிரிலிட்டு
நலமாகப் பெரியபுடம் போட்டெடுக்க
கன்றாகச் சிவந்ததுவு மிருக்கும் பாரு
கனிவாகவே சிவந்து நின்றாற்கேளு
வன்றாக அரைத்துநீ பின்புபோடு
வடிவாக முருக்கம்பூ வாகும்பாரே. 107

ஆகுமே யிரும்பதுவுஞ் சேர்ந்தபோது
அடைவாக யீயமது யிறந்துபோச்சு
பாகுபெறச் செந்தூரந் தனையெடுத்து
பதறாதே அந்திசந்தி மண்டலத்தில்
நாகுபெற உண்டுபார் சர்க்கரையிற்தானும்
நலமாயப் ரேகபஸ்பஞ் சேர்த்துக்கொள்ளு
தாகுபெற சகலநோய் தீர்த்துபோகும்
த்திட்டிகமாய் நோய்தனக்கு ஆணியாமே. 108

சந்திரச கற்பூரம்

ஆணியாய் குட்டநோ யெல்லாந்தீர
அடைவாகச் சத்திரச கற்பூரந்தான்
ஊணியே செய்திடவே குட்டமெல்லாம்
உருவில்லா தோடிவிடும் உண்மைதானே
நாணியே வச்சிரமா மப்ரேகந்தான்
நலமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
காணியே சகரமது பாணிசேர்த்து
கனிவாக யிருசாம மரைத்திடாயே. 109

அரைத்திடவே பாணிவிட்டு மைப்போற்தானே
அடைவாக வில்லைதட்டிக் காயப்போடு
நரைத்திடவே கிடத்திலிட்டு மேலேமூடி
நலமாகச் சாமமொன்று யெரிக்கயேறும்
பரைத்திடவே மேலேதா னேறி நின்ற
பரிவான பதங்கத்தை அடி தன்னோடே
வரைத்திடவே சேர்த்துஅரை யிருசாமந்தான்
வடிவாக முன் போலே யெரித்திடாயே. 110

எரித்திடவே அடியில் நின்ற தகையெடுத்து
இதமாக அரைத்துநீ புடத்தைப்போடு
விரைத்திடவே வெண்ணீராய்ப் பொருமிப்போகும்
விதமாகப் பலமதுதான் பலமும் நாலு
கரைத்திடவே முன்செய்த ரசப்பதங்கம்
கனிவாகப் பலம்நாலு கூடச்சேர்த்து
நரைத்திடவே வெண்கருவு தெளிந்தநீரால்
நலமாக முச்சாம மரைத்திடாயே. 111

அரைத்துநீ வில்லைதட்டிக் காயவைத்து
அடைவாக வில்லைதனை உப்பிலிட்டு
பரைத்துமே மூடிநீ நாலுசாமம்
பதிவாக யெரித்திடவே பதங்கமேரும்
கரைத்துமே யெடுத்துநீ அந்திசந்தி
கனிவாக உண்டிடவே மேகரோகம்
வரைத்துமே குட்டமுதல் யெட்டும்போகும்
வளமாகப் பத்தியமா யுண்டுதேறே. 112

தேறவே சத்திரச கற்பூரந்தான்
திடமாக இதன் பெருமை சொல்லப்போகா
ஊறவே மேனிகளில் மேகரோகம்
உடனான மேகசலம் யிருபத்தொன்று

கூறவே ஓடிவருங் குணத்தைக்கேளு
குணமாக யிதன்பெருமை குணமுமெத்த
முறமா யிருக்காதே முனைந்துபாரு
முத்திதருஞ் சத்திதரு முனைந்துநில்லை. 113

நில்லாதே ஒருவரிடஞ் சொல்லவேண்டாம்
நிமிஷத்தில் அவிழ்தங்கள் செய்துகொண்டு
எல்லாமும் பிணிபலவுந் தீர்த்துக்கொண்டு
ஏழைமதி போகாதே இன்பமாக
கல்லாமல் கற்றாலே யெல்லாஞ்சித்தி
கணக்கறிந்து கைபாக மாகச்செய்து
பொல்லாமை யில்லாமல் நல்லோருக்குப்
புகழாகப் பண்டிதங்கள் மிகவும்பாரே. 114

சீனரச கற்பூரம்

பாருமே சீனரச கற்பூரந்தான்
பண்பாகப் பெருநூலில் பெருக்கச்சொன்னேன்
வாருமே பூரணந்தா னிரண்டுநூறில்
வடிவாகச் சூதமது வோடாமற்தான்
காருமே சுருக்கமாய்ச் சொல்வேனப்பா
கைமுறையுங் குருமுறையுங் கண்டுபாரு
நாருமே நூல்முறையைப் படித்துப்பாரு
நாதாந்தப் பேரொளிவு நடத்தைபாரே. 115

நடத்தையாஞ் சீனரச கற்பூரத்தை
நன்றாக வகைவிபரஞ் சொல்லக்கேளு
திடத்தையாய்ப் பெருநூலில் ரசபதங்கம்
செயமாகச் சொல்லிவிட்டே னதையெடுத்து
நடத்தையாய் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
தாட்டிமாய்க் கல்வத்தி லிட்டுக்கேளு
விடத்தையாய்ச் சீனமது நன்றாயூதி
விதமாகப் பதங்கமிடை சேர்த்துக்கொள்ளே. 116

கொள்ளவே யிதனையே அரைக்கக்கேளு
கூரான வெண்கருவு சேருவொன்று
துள்ளவே காட்டெருமைப் பாலிற்தானும்
துடியாகக் களஞ்சதுவும் ரெண்டுசொட்டு
விள்ளவே விட்டுவைக்க முறிந்துபோகும்
விதமாக யின்னீரால் மைப்போலாக
கள்ளமா யிருசாம மரைத்துநீயும்
கனிவாக வில்லைபண்ணிக் கதிரிலிட்டே.

இட்டுமே நன்றாகக் காய்ந்தபின்பு
இதமாக வில்லைதனை யெடுத்துத்தானே
முட்டுமே உப்புதனிற் சமாதிவைத்து
முனிவாக யிருசாம மெரித்துத்திரு
நட்டுமே ஓடாது ரசப்பதங்கம்
நலமாகக் கபளித்து உள்ளே நிற்கும்
வட்டுமே யிருக்குமது வில்லைதானும்
வடிவாகத் தும்பைமல ராகும்பாரே. *118*

ஆகுமே யிதையெடுத்து நெருப்பிலிட்டால்
அடைவாகப் புகையாது யிருந்துபோகும்
ஏகுமே செம்புதனில் யேழுமாத்து
ஏழைமதி போகாதே குட்டமெல்லாம்
வாகுபெறப் பதினெட்டுந் தீர்ந்துபோகும்
வடிவான சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறும்
தாகுபெறத் தீர்ந்துவிடும் பத்தியந்தான்
தாட்டிகமாய்ப் பெருநூலிற் சொன்னேன்பாரே.

பாருநீ பெருநூலிற் பத்தியந்தான்
பதிவாகச் சொல்லிவிட்டேன் பாரிலோர்க்கு
ஏறுமே உழுதாலே வெள்ளாண்மையாகும்
இதமாகப் பிணிபலவுந் தீர்த்துக்கொண்டு

கூறுமே குலமாகச் சொல்லிப்போட்டேன்
குணமாக யின்னூலைக் கூர்ந்துபாரு
தேருமே யிருக்க அயங் காரமாகும்
திறமாகச் சித்திதருஞ் சணத்திலாமே. 120

வெடியுப்புச் சுண்ணம்

ஆமேதான் வெடியுப்புச் சுண்ணங்கேளு
ஆகாகா சரக்கெல்லாங் கட்டிப்போகும்
நாமேதான் பாசாண மெல்லாங் கட்டும்
நலமாக லிங்கம்பா சாணமெல்லாம்
வாமேதான் கட்டியே மெழுகுமாகும்
வடிவான வழலைதனைச் சேர்த்ததாலே
காமேதான் சகலசரக் கெல்லாங்கட்டும்
கட்டியதோர் சரக்கெல்லாந் தங்கமாமே. 121

தங்கமாம் வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
தாட்டிகமாய்ப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
துங்கமாம் பழம்புளியும் பலமும்ஐந்து
துடியாக யிதுரெண்டும் உரலிலிட்டு
பங்கமா யிடித்துநீ மையதாக
பதிவாக வில்லையாய் அகலைப்போல
உங்கமாய் வழலை தட்டிப் புதுச்சட்டிதன்னை
உறுதியாய் அடுப்புதனி லெரித்திடாயே. 122

எரித்திடவே புகைந்துமே பற்றிப்போகும்
இதமாக அடிதனிலே நின்றதானால்
மரித்துமே சங்கதுபோற் சுண்ணமாகும்
மயமாக உருகியே யிருக்குமப்பா
கரித்துநீ கத்தியினால் சுரண்டிவாங்கி
காரியமாய் நின்றயிடை சீனந்தன்னை
பிரித்துநீ கரியில்வைத்து ஊதிநன்றாய்ப்
பிசகாமல் சுண்ணத்தி லிடையேசேரே. 123

சேர்த்துமே பழச்சாறு கொஞ்சங்குத்தி
சிறப்பாக அரைத்துநீ வில்லை தட்டி
பார்த்துமே கரியில்வைத்து ஊதிப்போட
பதிவாக முறட்டுத்தா யூதவேண்டாம்
நார்த்துமே கைபாக மாகஊத
நலமாகச் சுண்ணாம்பாய் நல்லதாகும்
வார்த்துநீ பனியில்வைக்கச் செயநீராகும்
வடிவாகச் செயநீரை யிருத்துக்கொள்ளே. 124

கொள்ளவே செயனீரு சேருவொன்று
குணமாகத் திலகமது சேருஒன்று
துள்ளவே யிடித்துநீ பிழிந்துபார்க்க
துடியாகப் பால்போலே யிருக்குமப்பா
தள்ளவே திலதப்பால் சேருவிட்டு
தாட்டிகமாய்க் கலக்கவே தலர்போலாகும்
வெள்ளவே பாலதனில் லிங்கம்பூரம்
மேன்மையாந் தாளகமுஞ் சிலையுந்தானே. 125

தானென்ற வெண்ணெயொடு சிங்கிதானும்
தாட்டிகமாய்க் கெந்தியொடு யெல்லாங்கட்டும்
வானென்று துவைத்துமே வாட்டக்கட்டும்
வடிவாக வழலையது சேர்ந்ததாலே
ஞானென்ற கற்பூர தீபந்தன்னில்
நலமாக வாட்டையிலே கட்டிப்போகும்
பானென்ற நவலோகந் தன்னிலீய
பதிவாகத் தங்கமாம் பரிசுதானே. 126

பரிசாகுஞ் சரக்கெல்லாம் நீறிப்போகும்
பண்பாகக் கைபாக வரிசைபாரு
உரிசையாய்ச் சொல்லாதே உற்றுப்பாரு
உண்மையாய் சத்யமிது உப்புமாச்சு

நரிசையாய் உப்பைவிட்ட் வாதிகெட்டான்
நலமாகத் தங்கமதைச் செய்யமாட்டான்
பெரிதான வாதமதைச் செய்யமாட்டான்
பேணியே உப்பைநீ முன்னேபாரே. 127

பாரென்று யிருநூறில் சொன்னமார்க்கம்
படிப்படியாக கப்பெறலாம் பாகம்மெத்த
காரென்று குருபதத்தில் தொண்டுபண்ணு
கடுமையாய் உப்பைநீ காய்ச்சிதேரு
ஊரென்ற வழலையது சேர்ந்ததாலே
உறுதியா யெல்லாமுஞ் சித்திசித்தி
வானென்ற வாசியினால் சஞ்சரித்து
வடிவாகப் பார்த்திடவே வண்மையாமே. 128

ஆமேதான் நாகத்தின் சுண்ணத்தாலே
ஆடலாங் கோடியது ஆகும்பாரு
நாமேதான் கட்டாகு மெழுகுமாகும்
நலமாக உலகத்திற் கட்டுமார்க்கம்
ஊமேதான் உருபொருளாய்க் கட்டுமார்க்கம்
உறுதியாய்க் கனிந்துநீ சொல்லக்கேளு
தாமென்ற உப்பாலே யெல்லாமாச்சு
தாட்டிகமாய் நாகமது கட்டக்கேளே. 129

நாகக்கட்டு

கட்டவே நாகமென்ற சவுக்காரந்தான்
கனமாக வெடியுப்புப் பலமோபத்து
நட்டவே புளியதுவும் பலமுமைந்து
நலமாக இரண்டுமொன்றா யிடித்துநீயும்
துட்டவே புதுச்சட்டி அடுப்பிலிட்டு
துடியாக ஒவ்வொன்றா யீய்ந்துபாரு
முட்டவே வெந்துருகிச் சுண்ணமாகும்
முனிவாக வெடியுப்புச் சுண்ணமாச்சே. 130

ஆச்சப்பா வெடியுப்புச் சுண்ணமொன்று
அடைவாகச் சீனத்தைப் பொரித்துஊதி
நாச்சப்பா இதுரெண்டு மிடையே சேர்த்து
நலமாகப் பழச்சாரு விட்டரைத்து
தாச்சப்பா வில்லைதட்டி ரவியுலர்த்தி
தாட்டிகமாய்ச் சிறுபுடமாய் வைத்துநீயும்
காச்சப்பா யெடுத்துப்பார் கடுமையாகும்
கனிவான வெடியுப்பு கடுமைதானே. 131

கடுமையாய் வெடியுப்புச் சுண்ணமொன்று
கனிவாக யிலுப்பையெண்ணெய் சேருஒன்று
நடுமையாய் முன்னம் வெடியுப்புச் சுண்ணம்
நலமாகப் பலம்ரெண்டு போட்டுவைக்க
வடுமையாய்ப் பார்த்திடவே தயிருமாகும்
வடிவாகக் கரண்டிதனில் நாகம்வைத்து
படுமையா யுருக்கியே திறத்தைக்கேளு
பதிவாக இருபத்தி ரெண்டுசாயே. 132

ரெண்டுதான் சாய்த்திடவே நாகந்தானும்
நிலைக்கவே கட்டியது மணியுமாகும்
குண்டுபோல் வயிரம்போ லிருக்கும்பாரு
குணமான வழலையென்ற இலுப்பைநெய்யால்
பண்டுபோ லிருகியே புகையடங்கி
பதிவாகத் தீரமா யிருக்குமார்க்கம்
வண்டுபோல் நாகமது கட்டிற்றானால்
வளமான நவலோக மெல்லாந்தானே. 133

தானேதான் பழுத்துவிடும் நாகந்தன்னைத்
தாட்டிகமாய் முன்சொன்ன இடங்களெல்லாம்
வானேதான் களங்கோடு செந்தூரங்கள்
வடிவாக யிதுகளிலே சேர்த்துக்கொள்ளு

நானென்ற யிந்நாகம் நீற்றக்கேளு
நலமாக நாகமது பலமும்பத்து
வானென்ற கரண்டிதனி லுருக்கிக்கொண்டு
வடிவாக நாகமிடை சூதஞ்சேரே. 134

சூதமுத லிடைசேர்த்துப் பொடியாய்ச் செய்து
சிறப்பாக வெடியுப்பு யிடையேசேர்த்து
பாதமுதல் எலுமிச்சம் பழச்சாராட்டி
பதமாக வில்லை தட்டிக் காயப்போடு
நாதமுதல் காய்ந்தபின்பு குக்குடத்தில்
நலமாக வைத்திடவே நாகம் நீறும்
பாதையிது வெகுபோக்கு நவலோகத்தில்
பாய்ச்சிடவே யேமமாம் பார்த்துத்தேறே. 135

தேறவே அந்திசந்தி பணமவ்வீதம்
திறமாக உண்டுவரத் தீரும்நோய்கள்
கூறவே கசரோகம் பித்தவெட்டை
குணமாகப் பித்தமுதல் தாகசோகம்
ஏறவே ஈளையொடு ரத்தகாசம்
இதமாக நாகத்தைக் கண்டபோது
மாறவே யிருந்தஊர் தன்னைவிட்டு
மாயமா யோடிவிடும் வண்மைதானே. 136

தானென்ற நாகம்போற் தங்கமாகும்
தாட்டிகமா யிதுபோலே தங்கம்வைத்து
வானென்று கட்டியே நீற்றிக்கொள்ளு
வடிவாகத் தங்கச்சித்தி காயசித்தி
ஊனென்ற உறவாகுத் தங்கமாகும்
உறுதியாய் வழலைதனை யறியாதாலே
கானென்ற சித்தியில்லை யென்றுசொல்வார்
கசடர்கள்கா ணறியாமல் கலங்குவாரே. 137

வாருமே தங்கத்தை வைத்துநன்றாய்
வடிவாக உண்டிடவே வறுமைநீங்கும்
கூறுமே வறுமையெல்லாம் நீங்கிப்போனால்
குணமாக யென்னைநீ நினைக்கவேண்டாம்
பாருமே யென்னைநீ நினைத்தாயானால்
பதினாறு உலகுதனில் குடியிருப்பாய்
ஏறுமே உழுதவனே வாதியாகும்
இதமாகச் சித்திதரும் வழலையாமே. 138

வழலையாம் அறியாத வாதிமார்கள்
வலமான பிண்டமது வென்றுசொல்லி
தழலையாம் நெருப்பதுவு மென்றுசொல்லி
தாட்டிகமா யலைவார்கள் மதிகெட்டோர்கள்
நிழலையது வழலையாம் பிண்டமென்று
நீனிலத்தி லலைவார்கள் பிரட்டுவாதி
கழலையாம் யெச்சியென்று துப்பித்துப்பி
காரணமா யுப்புத்தான் காய்ச்சுவாரே 139

காய்ச்சுவார் உப்பதுவும் நிசமதாகும்
காரணமாய் நல்லெண்ணெய் சேராதாலே
வாய்ச்சுவார் பொய்யாகு மென்றுசொல்வார்
வடிவாக நல்லெண்ணெய் தெரியாதாலே
பேச்சுமிகப் பேசிடுவார் பெரியோர்போல
பின்னுமுன்னு மறியாமற் பிரட்டிப்பேசி
கூச்சுவார் கட்டில்லை யென்றுசொல்லி
குணமாக அலைவார்கள் வாதிதானே. 140

தானென்ற உலகத்தில் வாதம்பொய்யோ
தாட்டிகமாம் ஞானமது பொய்யோ அல்ல
ஊனென்ற காயசித்தி பொய்யேயென்பார்
உற்றுமே அலைவார்கள் உலகநீதி

கானென்ற வழலையில்லாப் போனதாலே
கனிவாக உற்றுணர்ந்த வாதிமார்கள்
நானென்ற ஆறுதல் மேகிப்பின்பு
நாடியே பார்த்தாக்கா லெல்லாமாமே. 141

நாகபற்பம்

ஆமப்பா நாகபற்பம் வயித்தியோர்க்கு
அடைவாகச் சொல்லுகிறோ மப்பாகேளு
நாமேதா நாகமது பலமுமொன்று
நலமாகக் கரண்டிதனி லிட்டுருக்கு
வாமேதான் மிளகதுவும் பலமும்நாலு
வடிவாகப் பொடியாக்கி வைத்துக்கொண்டு
சாமேதா நாகமது உருகும்போது
சரியாகப் பொடிபோட்டுக் கிண்டிடாயே. 142

கிண்டிடவே நாகமது பொரிந்துபோகும்
கிருபையுள்ள பொரியதனை ஊதிப்போடு
கண்டிடவே நாகமது சுண்ணமாகும்
கனிவாகச் சுக்கோடு மிளகுதானும்
பண்டிடவே திப்பிலியு மேலமோடு
பதிவாகச் சீரகமும் வகைக்கொன்றேதான்
துண்டிடவே நிறுத்துநீ துணையாய்க்கொண்டு
துப்புறவாய் நாகபற்பம் பலமும்போடே. 143

போடவே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
போக்கான கல்வத்தி லிட்டரைத்து
நாடவே புளியம்விரைப் பிரமாணந்தான்
நலமாக அந்திசந்தி கொள்ளும்போது
நீடவே காசமந் தாரகாசம்
நிலையான வலிகுன்மம் பொருமலுப்பல்
கூடவே வாயின்வேக் காடுதீரும்
குடிபோகும் மந்தார காசமாமே. 144

காசமொடு பித்தமூல மாண்டுபோகும்
கனமான வியாதியெல்லாங் காணாதோடும்
நாசமாம் வலிகுன்மம் நாடாதோடும்
நாட்டிலே சொல்லாதே பண்டிதத்தை
பாசமாய்ச் செய்துநீ உண்டுடுத்திப்
பதிவாக வாதவிதி பரிந்துபாரு
நாசமாந் தேகமது கற்றூணாகும்
நாதாந்த சாரத்தை நாட்டிப்பாரே. 145

நாட்டியே நாகபற்ப முடனே வைத்து
நலமாகப் பண்டிதத்தை முன்னேபார்த்து
வாட்டியே உண்டுடுத்திச் சீவனத்தை
வடிவாகச் செய்துநீ மௌனமாக
கூட்டியே உபரசத்திற் செம்பெடுத்து
குணமாக மதிதனிலே கொடுத்துப்பாரு
மூட்டியே வெள்ளியது பழுத்துப்போகும்
முனிவாகக் காயமது சித்தியாச்சே. 146

கல்லுப்புச் சுண்ணம்

சித்தியாங் கல்லுப்புச் சுண்ணங்கேளு
சிறப்பாக வெகுசுருக்கு முன்னேபாரு
நத்தியேக டல்நுரையும் பலமீரெட்டு
நலமாக உவர்மண்ணு சுக்கானேரே
புத்தியாய்ப் பாணிவிட்டு கரைத்திருத்து
புனிதமாய்த் தெளிந்தநீர் தன்னிலேதான்
சத்தியாய்க் கடல்நுரையைப் போட்டுநீயும்
தாட்டிகமாய்க் காய்ச்சிடவே கட்டிப்போமே. 147

கட்டியே கடல்நுரையைக் கரியில்வைத்து
கனிவாக ஊதிடவே கடுமையாகும்
முட்டியே ஊதியெடு சுண்ணம்நேரே
முனிவாகக் கல்லுப்பைச் சேர்த்தரைத்து

நாட்டியே வில்லைதட்டிக் காயப்போடு
நலமாக உலைதனிலே வைத்துஊத
தூட்டியே கல்லுப்புக் கடுமையாகும்
துடியான கல்லுப்புச் சுண்ணந்தானே. 148

தானென்ற சுண்ணத்தால் வேதைகோடி
சமுசயங்க ளெண்ணாதே வழலைசேர்க்கும்
வானென்ற பாகமதைச் செப்பக்கேளு
வடிவாக வாழையது சுட்டசாம்பல்
நானென்ற சேர்நிறுத்து பீங்கானிட்டு
நலமாகப் பாணியது சேருவிட்டு
ஊனென்ற வெண்கருவு நாலுமுட்டை
உருவாகக் கருவதனை ஊற்றித்தானே. 149

தானேதா னூற்றியே கோழியெச்சம்
தாட்டிகமாய் வெண்மலத்தைக் கூடப்போடு
வானேதான் கல்லுப்புச் சுண்ணமிட்டு
வடிவாகக் கலக்கியே தெளிவிருத்து
[illegible]னதான் நல்லெண்ணெய் சேருஒன்று
நாட்டியே யிதுதனிலே ஊற்றிப்பாரு
க[illegible]ன்ற பால்போலே யிருக்குமப்பா
[illegible]ிவாகக் கடைந்திடவே வெண்ணெயாமே. 150

ஆமேதான் வெண்ணெய்தனை யெடுத்துக்கொண்டு
அடைவாக அத்தெளிவில் லிங்கம்பூரம்
நாமேதான் தோய்த்துமே கற்பூரத்தில்
நலமாக வாட்டிடவே சரக்கெல்லாந்தான்
காமேதான் கட்டியே மெழுகுமாகும்
கனிவாக நவலோகந் தன்னிலீய
தாமேதான் மாத்ததுவும் பத்துமாகும்
தாட்டிகமாய்க் காவிக்கு யிறங்கும்[illegible]

இறங்குமே உப்புக்குங் காவிக்குந்தான்
இதமாக ஓடாது ஒளிந்திடாது
நறங்குமே யிதைவிற்றுச் செலவுசெய்து
நலமாக உண்டுடுத்தி வாசியோகம்
உறங்குநீ பார்த்துநீ சுழியிலேறு
உத்துநீ சித்துமிக வருகுமப்பா
பறங்குமே ஒருவருடன் பேசவேண்டாம்
படிப்படியா யேறுகிற பலனைக்கேளே 152

தாளகச் சுண்ணம்

பலனாகத் தாளகத்தின் சுண்ணங்கேளு
பதிவாகக் காரமது தெளிந்தநீரில்
கலனாகச் சீனத்தைத் தோய்த்துப்போடு
கனிவாகப் பெரியபுடம் போட்டெடுக்க
வலனாகச் சீனமது பொருமிடாது
வடிவாகக் கடுஞ்சுண்ணம் சீனச்சுண்ணம்
நலனாகத் தாளகத்தை நீரில்தோய்த்து
நாட்டியே ரவியிலிடு தினந்தானேழே 153

ஏழாகத் தோய்த்துமே தாளகத்தில்
இதமாகச் சீனமென்ற சுண்ணந்தன்னை
வாழாக வலுவாகக் கவசம்போடு
வடிவாகக் கதிரிலிடு பின்புதானும்
தாழாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
தாட்டிகமா யெடுத்துப்பார் தாளகந்தான்
நானாக நீறிவிடுஞ் சுண்ணமாகும்
நாடியே நவலோகம் பத்துக்கொன்றே 154

ஒன்றாக யிட்டுருக்கிப் பார்க்கும்போது
உறவாகத் தங்கமது ஆகும்நேர்மை
நன்றாக அந்திசந்தி பணமவ்வீதம்
நலமாக உண்டுவர் நாட்டிலோர்க்கு

கன்றாகச் சயரேகம் கெற்பரோகம்
கனிவாகச் சயகாச மோடிப்போகும்
வன்றாகக் கசப்போடு புளிப்புத்தள்ளி
வளமாக உண்டுவரக் கற்பமாமே 155

ஆமேதான் காயசித்தி உடனேயாகும்
அன்பாக யெட்டெட்டுஞ் சித்தியாகும்
நாமேதான் சொல்லிவிட்டே னுலகத்தோர்க்கு
நாடியே பார்த்திடவே நல்லசித்தி
பாமேதான் சொல்லிவிட்டேன் பகர்ந்துகேளு
பாரினிலே மானிடர்க்கு வறுமைநீங்கும்
வாமேதான் சரக்கெல்லாம் நீறிப்போகும்
வாலையது பூசையது மருவிப்பாரே. 156

துருசுநீறு

மருகவே முன்கடைந்த வெண்ணைதன்னை
வடிவாகத் தானெடுத்துத் துருசுமேலே
தருகவே நீலன்மேல் தடவிவாட்டு
தாட்டிகமாய்க் குமுறவே வாட்டிவாட்டி
திருகவே கவசமது கனமாய்க்கட்டி
தினமாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
துருவவே யெடுத்துப்பார் கண்டர்தானும்
துப்புறவாய் நீறியது சுண்ணமாச்சே. 157

சுண்ணமாய்த் துருசுதுவும் நீறிப்போனால்
சூட்சமாய்ச் செயமாகும் யெல்லாங்கட்டும்
நன்னயமாய் விராலியிலை சேறெடுத்து
நயமாக யிடித்துநீ துருசுச்சுண்ணம்
கன்னலாய்ப் போட்டுநீ பிழிந்துபாரு
கனிவாகத் தண்ணீராய் முறிந்துபோகும்
இன்னிலத்தில் கரண்டிதனில் சூதம்விட்டு
எரிதீயில் நன்றாகக் காய்ச்சிடாயே. 158

காய்ச்சிடவே சூதமது விரைத்துப்போகும்
கனிவாக இட்டிலிபோல் வெண்ணையாகும்
நாய்ச்சிடவே சூதத்தை உருட்டிமெள்ள
நலமாகக் குளிர்ந்ததண் ணீரில்போட்டு
ஏய்த்திடவே ஏழுநாள் கழித்தபின்பு
இதமாக ஊமத்தங் காயிற்குள்ளே
சாய்த்திடவே உள்வைத்து மேலேகட்டி
சரியாகப் புடம்போடச் சார்வுதானே. 159

சார்வாகப் புடம்போட்டு யெடுத்துத்தானே
தாரணியில் யெழுகுளிகை பண்ணி நீயும்
வார்வாகத் தமரிட்டுப் பட்டுதன்னில்
வடிவாகக் கோர்த்திட்டு கையில்வைத்து
நீர்வாகப் பூசிக்கச் சித்தி சித்தி
நிலையாக யெட்டெட்டுஞ் சித்தியாகும்
பார்வாக வசியமொடு குளிகையாகும்
பதிவான சிவபதியாம் பண்புதாமே. 160

ஆமேதான் சூதத்தைக் கட்டினோர்க்கு
ஆதிசிவ னாகுமிவ னப்பாகேளு
தாமேதான் சூதமிது சிவனுடையவிந்து
தப்பாமல் கட்டிடவே தன்மைமெத்த
நாமேதான் சொல்லிவிட்டோம் பிறப்புமுத்தி
நலமாகச் சித்திதருஞ் சூதத்தாலே
பாமேதான் பரகெதிக்கு வித்துண்டாகும்
பதிலாக ஞானவழி யடுத்தவாறே. 161

மூலிகை வழலை

வாறுகேள் மூலிகையில் வழலைமார்க்கம்
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மைபாரு
கூறுகேள் நாயுருவி கட்டுவாங்கி
குணமாகச் சுட்டுமே சாம்பலாக்கி

நீறுகேள் சாம்பலது படியுமொன்று
நிலயாகத் தண்ணீரு படியும் நாலு
மாறுகேள் ரெண்டுமொன்றாய்க் கரைத்துக்கொண்டு
வடிவாக நல்லெண்ணெய் படியும்வாரே. 162

வாத்துமே மத்தாலே கடைந்தபோது
வடிவாகப் பாலாகும் பாலிலேதான்
நாத்துள்ளே சவுக்காரச் சுண்ணமிட்டு
நலமாகக் கடைந்துநீர் தெளிவிருத்து
ஊத்துகேள் உறவாக வைத்துக் கொண்டு
உறுதியாய் அயச்செம்பு வந்திடத்தில்
நாத்துகேள் விட்டுமே காய்ச்சுநன்றாய்
நலமாக வர்ணமது யேறும்பாரே 163

ஏறுமே நவலோகந் தன்னிலேதான்
இதமாகச் சாயமது பிடித்துக்கொள்ளும்
கூறுகேள் உப்புக்குங் காவிக்குந்தான்
குணமாக இறங்குமது கூர்ந்துபாரு .
தூறுகள் தான் சொல்லாதே யிருநூறுபாரு
துடியாக நானூறு தேர்ந்துபாரு
தாறுகேள் சகலசித்து மாடலாகும்.
சமுசயங்க ளில்லையடா சார்ந்துபாரே. 164

சார்ந்துபார் வெள்ளைநூல் தனக்குத்தானும்
சாலியனுஞ் சாயமது போட்டானப்பா
கூர்ந்துபார் வாதிக்குச் சாயந்தானும்
குறிப்பாக வழலையென்ற எண்ணெயாச்சு
நேர்ந்துபார் சாயவகை தெரியாதாலே
நிட்டூரஞ் சொல்லாதே கைபாகத்தை
ஆர்ந்துபார் ஆராய்ந்தாற் செயமுமாகும்
ஆராய நூல்மார்க மறியலாமே. 165

ஆமேதான் கெண்டையில் சாயமேறும்
ஆண்மை யொக்கும் வாதமது அறிந்துபாரு
வாமேதான் சத்துருவுந் தெரியாதாலே
வடிவாக மித்துருவு மறியாதாலே
தாமேதான் சாஸ்திரத்தை அறிந்துசுட்டு
தவித்துமே சூஸ்திரத்தைக் கண்டால்வாதம்
நாமேதான் செயமாகும் நடத்தைபாரு
நன்றாகக் கெவுனவழி நடத்தைதானே. 166

தானென்ற வாதமது யெளிதிலாகும்
தாட்டிகமாய் நூல்மர்மம் தெரிந்து கொண்டால்
ஊனென்ற சோத்துக்கு யிடமுமாகும்
உறுதியாய் ஞானவழி யடுக்குங்கண்டாய்
வானென்ற வாதமது வந்துதானால்
வடிவான ஞானசித்தி வந்துகூடும்
தேனென்ற சிவசொத்தை வறுமைபோலே
திடமாக உண்டிடவே தீர்க்கமாமே. 167

ஆமேதான் முன்வைத்த வழலைதன்னை
அடைவாகச் சரக்கதனைத் துவைத்துவாட்ட
நாமேதான் கட்டாகு மெழுகுமாகும்
நலமாகுங் காயசித்தி உடனேயாகும்
வாமேதான் செம்புதனில் பழுத்துப்போகும்
வடிவாக நல்லசித்தி மார்க்கமெத்த
பூமேதான் பூதலத்தில் சொன்னேனையா
புவியோர்க்கும் யெளியவர்க்கும் பொருளுமாமே. 168

பொருளாக விட்டகுறை யதனினாலே
பெருமையாம் வாதசித்தி வைத்தியமாகும்
திருவாகச் செல்வமுண்டாம் சாயமாகும்
தேசத்தி லலையாதே தேகசித்தி

குருவாகும் மெய்ப்பொருளாங் குணமுமாகும்
குலமாகப் பண்டிதர்க்கு சிரோமணியாகும்
உருவாக உளவரிந்தோன் வாதியாகும்
உலகுதனி லறியாதார் மடையராச்சே. 169

மடையர்தான் மெத்தஉண்டு உலுத்தமாண்பர்
மாய்கைதனில் பெண்ணாசை யாகநின்றால்
உடையர்தான் உடைந்துமே சரீரங்கெட்டு
உற்றுமே பெண்ணாசை யானதாலே
விடையாகப் புவிதனிலே மெலிந்துபோனார்
வெற்றிபெற பூமிசை தன்னியத்தில்
அடையாகப் பெண்மீதி லாசைகொண்டு
அடைவாக உலகத்தில் வாதிமாரே 170

வாதிதா னென்றுசொல்லி வாய்ப்பேச்சாலே
வடிவாக அவ்வேடம் பூண்டுகொண்டு
சோதனையா யோனிதனக் காசைகொண்டு
சூட்சமாய் வேடத்துக் கிசையாதாலே
நீதிபெறச் சொல்லியே உலகமீதில்
நிச்சயமாய் வாதசித்தி சொல்வாரய்யா
ஆதியாய் அரனையே துதியேசெய்து
அடைவாக வீதிதனில் புலம்புவாரே. 171

பலம்பாம லிருக்கவென்றால் சொல்லக்கேளு
புகலரிய பரிபூரணம் யிருநூறும்பார்
குலம்பாம லதைச்சுருக்கிப் பூரணத்தை
குணமாகப் பாடினேன் மார்க்கந்தன்னை
தலமடா அதைக்குறுக்கி நுணுக்கமாக
தாட்டிகமாய் நூறுதனில் வழலைமார்க்கம்
பெல ்பாடாய்ப் பிரித்துநான் சொன்னேனப்பா
பெருக்கமா யிருக்குமது வாதந்தானே. 172

வாதந்தான் வழலைதனைக் கண்டபோதே
வானகத்தில் வந்துவிடும் வேதைமார்க்கம்
பூதந்தான் யேவலது செய்யும்பாரு
புகழான ஞானவிதி அடுத்துக்கூடும்
பாதந்தான் பண்டிதங்கள் மிகவும்வந்து
பலகாலும் யேவல்செய்யும் பரிந்துகேளு
நாதவொலி சிலம்பொலியி னாட்டமாகும்
நாடியே சுழிமுனையில் நடப்புமாமே. 173

கெந்தகத் தைலம்

நடப்பாகக் கெந்தகத்தின் தைலஞ்சொல்வேன்
நலமாக கெந்தியது பலமும்பத்து
விடத்தையாம் வெடியுப்பு பலமுமைந்து
விதமாக வீரமது களஞ்சியொன்று
திடத்தையாஞ் சாரமது களஞ்சியொன்று
திடமாக யிவையெல்லாம் பொடித்துக்கொண்டு
முடத்தையாம் நல்லெண்ணெய் சேருரெண்டு
முனிவாகக் குமுறயெரி தைலமாமே, 174

தயிலத்தைக் காசிடை தான் சர்க்கரையிற்கொள்ள
சளிபோகும் பெருவயிறு யீளைரோகம்
பயிலமாம் வலிகுன்மங் குட்டரோகம்
பதிவாக வல்லமையும் பதிவுமாகும்
தியிலமா மகோதரமும் யீளைரோகம்
திடமாக உட்பொருளும் நீந்துபோகும்
கயிலமா மேகரோ கத்தின்போக்கும்
கனிவாகத் தீருமெனக் கருணைபாரே. 175

பாருமே சொன்னதொரு தைலம்வைத்து
பதிவாகப் பண்டிதத்தை முன்னேசெய்து
காருமே உண்டுடுத்திப் பொருளைக்காணு
கனிவாகச் சரக்கெல்லாங் கட்டித்தீரு

சாருமே ஞானமுதல் யோகம்பாரு
சரியாக யோகமிது சனித்தலாகும்
ஏறுமே உழுததுபோல் பண்டிதத்தை
இனமாகப் பார்த்திடவே இன்பமாமே. 176

இன்பமாம் பரிபூரணம் நானூறுதன்னில்
இதமாக வெள்ளிவித்தை யொன்றுசொன்னேன்
வன்பமா யதைக்குறுக்கிப் பூரணத்தில்
வடிவாக வெள்ளிவித்தை கைபாகத்தால்
துன்பந்தா னில்லாமற் சொல்வேனையா
சூத்திரமு மிதைக்குறுக்கி நூறதாக
நன்பாகச் சொல்லிவிட்ட நூலைப்பாரு
நாடியே பார்த்திடவும் வெள்ளியாமே. 177

வெள்ளி வித்தை

ஆமேதான் வெள்ளியுமே சொல்லக்கேளு
அடைவாகச் சூதமது பலமும்நாலு
காமேதான் வெள்ளையென்ற பாசாணந்தான்
கனிவாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
வாமேதான் கல்வத்தி லிட்டுத்தானும்
வளமாக இருசாம மரைத்துக்கட்டு
தாமேதான் யெருக்கம்பால் தன்னாலாட்டி
தனிவாக வில்லைதட்டிக் காயப்போடே. 178

போடவே கிடத்திலிட்டு மேலேமூடி
பொலிவாகச் சீலைமண் வலுவாய்ச்செய்து
ஆடவே யிருசாம மெரித்துப்பாரு
அடைவாக உயரவே யேறிநிற்கும்
ஊடவே வெண்ணெயாய்ப் பதங்கமாகும்
உற்றுநீ பதங்கத்தை வழித்துக்கல்வம்
நாடவே விட்டரைத்து யெருக்கம்பாலால்
நலமாக வில்லைதட்டிக் காயப்போடே. 179

போட்டுமே உப்புக்குள் சமாதிவைத்து
பொலிவாக இருசாமம் யெரிபிரித்து
காட்டுமே யெடுத்துப்பார் வில்லைகாணும்
கனமாக ஓடாது ஒளிந்திடாது
முட்டுமே திரிமுட்டு ஒருவருக்கும்
முனிவாகச் சொல்லவே வேண்டாமப்பா
கூட்டுமே வெள்ளீயம் நூற்றுக்கொன்று
குணமாகக் கொடுத்திடவும் வெள்ளியாமே. 180

ஆமேதான் வெள்ளீயம் நீரைவாங்கும்
அடைவாக வெள்ளியது பத்துமாத்து
நாமேதான் காரீயந் தன்னைக்குத்தி
நலமாக ஊதினா லோடிடாது
வாமேதா னிந்தயிரு நூறுதன்னில்
வடிவாக வெள்ளிவித்தை கைபாகத்தை
தாமேதான் சொல்லிவிட்டேன் உற்றுப்பார்த்து
தாட்டிகமாய்ச் செய்திடவே தருணமாமே. 181

தருணமாம் அயச்செம்பை முன்னேவைத்து
தன்மைபட யிதைவிற்றுச் செலவுசெய்து
வருணமாம் வழலையென்ற சவுக்காரத்தை
வடிவாக வைத்திடவே அனேகசித்தி
உருணமாஞ் சித்திதரும் யெல்லாஞ்சித்தி
உத்துணர்ந்து பாராதார் உலுத்தமாடு
கருணமா யெட்டெட்டுஞ் சித்தியாகும்
காதலுடன் காமத்தைத் தள்ளிப்போடே. 182

தள்ளுவது பெண்ணைத்தான் தள்ளிநீயும்
தாட்டிகமாய்ச் சுழினைதனில் மனதுவைத்து
உள்ளுவது ஒருவருடன் பேசாமற்றான்
உற்றுமே நாதவொலி தீர்க்கமாக

விள்ளுவது மனம்நினைத்தால் வாதியாகும்
வேதாந்தம் பார்த்ிடவே அலேகஞ்சித்தி
எள்ளளவும் பிசகாது யிருநூறுதன்னில்
இன்பபரி பூரணத்தை இசைந்துபாரே. 183

பாரப்பா வழலையில்லா வாதம்பொய்யாம்
பதிவான சவுக்கார மில்லாக்காரம்
வரப்பா சாரமில்லை வடிவுமில்லை
வழியாக வடிவுமிது பொய்யேயாகும்
நேரப்பா பெருநூலில் நீட்டிச்சொன்னேன்
நிச்சயமா யிந்நூலில் திறந்து சொன்னேன்
கோரப்பா பதினெட்டுச் சித்தர்காணும்
கொட்டினேன் மறப்பையெல்லாங் கூர்ந்துபாரே. 184

கூர்ந்துநீ பார்த்திடவே வாதசித்தி
குவலையத்தில் பொன்சித்தி யோகஞ்சித்தி
ஆர்ந்துமே அரக்கில் நின்ற சாயம்போல
ஆராய்ந்தால் பலனுண்டு வாதமாகும்
தேர்ந்துமே சரக்கிலே பஞ்சநாதம்
சேர்ந்துமே வழலையென்ற யெண்ணெய்சேரில்
ஊர்ந்துமே யெல்லாமுஞ் சித்தியாகும்
எளிதாக சாஸ்திரத்திற் பொய்யென்பாரே. 185

வழலை மார்க்கம்

பொய்போக இன்னமொரு வழலைமார்க்கம்
புகலுகிறே னுலகத்தில் வாதிமார்க்கு
மெய்யாகச் சொல்லுகிறேன் உற்றுக்கேளு
மேன்மைபெற மேனியிலை சுட்டசாம்பல்
வையகத்தில் சேருரெண்டு நிறுத்துக்கொண்டு
வடிவாக அமுரிபடி நாலதாகும்
பையவே யிதுரெண்டுங் கலக்கிக் கொண்டு
பதிவாக மூன்றாநாள் தெளிவைவாங்கே. 186

வாங்கியே நல்லெண்ணெய் படியிலிட்டு
வடிவாகப் பாலாக முறியுமட்டும்
தாங்கியே விட்டுமே பாலதாக்கி
தாட்டிகமாய்ப் பூநீரு சேருஒன்று
ஓங்கியே கல்வத்தி லிட்டுஆட்டு
உறவாக வில்லைதட்டிக் காயப்போடு
தூங்கியே பத்தெருவில் புடத்தைப்போடு
துடியான சவுக்காரச் சுண்ணமாமே. 187

ஆச்சப்பா சவுக்காரச் சுண்ணமாச்சு
அடைவாகக் கல்வத்தி லிட்டுத்தானே
வாச்சப்பா சவுக்காரச் சுண்ணம்நாலு
வடிவாக வீரமொன்று கூடக்கூட்டி
நாச்சப்பா அரைத்துநீ துருசுமேலே
நலமாகக் கட்டியே புடத்தைப்போடு
காச்சப்பா துருசதுவுஞ் சுண்ணமாகும்
கனிவாக சுண்ணாம்பு கண்டுபாரே. 188

கண்டுபார் விராலியிலை பிடுங்கிவந்து
கனிவாகச் சுண்ணமதை விட்டுநல்லாய்
பண்டுபார் பிழிந்திடவே தண்ணீராகும்
பதிவாகக் கெவுரிக்குச் சுருக்குப்போடு
கண்டுபார் கெவுரியது கட்டிப்போகும்
கனிவாக அரைபொடியி லிடையேசேரு
கண்டுபார் அரைத்துநீ குகையிலிட்டு
நலமாக உருக்கிடவே மணியுமாகும். 189

மணியெடுத்துக் காரத்தை விட்டரைத்து
மயமாக உருக்கியே பின்புகேளு
துணியாகத் தாம்பூரத் தகடடித்து
தாட்டிகமாய் உப்புக்குள் புடத்தைவைக்க

கனியாக நொறுங்கியே கனியுமாகும்
காரணமாய் அயமிடைக்குச் சேர்த்தரைத்து
இனிவாக உருக்கிடவே உருகிநிற்கும்
இதமான வெங்காரங் கூட்டிக்கொள்ளே. 190

கூட்டியே உருக்கி நீ வைத்துக்கொள்ளு
குணமாகக் காரீய வெட்டைகேளு
நாட்டியே மிருதாரு சேருஒன்று
நலமாகப் பொடியாக்கித் துருசுநேராம்
வாட்டியே அமுரிவிட்டு அரைத்துக்கொண்டு
வடிவாக வில்லைகட்டிக் கதிரிலிட்டு
மாட்டியே புடம்போட்டு யெடுத்துத்தானே
மயமாக முன்னயத்தி லிடையேசேரே. 191

சேர்த்துநீ அரைத்துருட்டி அமுரிவிட்டு
சிறப்பாக வில்லைகட்டிப் புடத்தைப்போடு
பார்த்துமே யெடுத்துநீ காரங்கூட்டி
பதிவாக உருக்கிடவே செம்புமாகும்
நாத்துநீ தங்கம்போற் செம்புமாகும்
நலமாக யிச்செம்பில் வேதைகோடி
வார்த்துமே வெள்ளிதா னெட்டுக்கொன்று
வடிவாகச் சேர்த்துருக்க மாற்றுயேழே. 192

ஏழான மாத்ததுவும் விற்றுநீயும்
இதமாகப் புடமிறங்கும் இன்பமாகும்
வாழாகும் வழியாகும் வேதைகோடி
வலுவாகத் தங்கமது மருவிப்பாரு
தாளாகும் அயச்செம்பில் வேதை கோடி
தனித்தனியே செம்புக்குள் வேதைகோடி
பாழாகப் போகாது வேதைமார்க்கம்
பதிலாகப் பார்த்திடுவீர் பாரிற்றானே. 193

தானென்ற உலகத்தில் வாதம்பொய்யோ
தனித்துநின்ற சவுக்காரச் சுண்ணம்பொய்யோ
வானென்ற வழலையென்ற யெண்ணெய்பொய்யோ
வடிவாக வெடியுப்புச் சுண்ணம்பொய்யோ
நானென்ற கைபாக நூல்கள் பொய்யோ
நலமாகக் கைபாகந் தெரிந்ததானால்
ஊனென்ற சகலசித்து பொய்யோஅல்ல
உற்றுநீ பாகமது உறுதிபாரே. 194

பாருநீ சாஸ்திரங்க ளெல்லாம்பார்த்து
பதிவாக நூலினுட மர்மங்கண்டு
காருமே சூஸ்திரநூல் முன்னூறும்பார்
கனிவாகப் பரியதுதான் பூரணத்தை
சாருநீ நானூறும் பார்த்துப்பின்பு
சரியாக வினையமதைச் சார்ந்துபார்த்து
கோருநீ யிதைக்குறுக்கி நூறுபார்த்தால்
குணமாக எல்லாமுங் குணமுமாமே. 195

குணமாகயின் னூலைப் பார்க்கும்போது
கூடியே வழலையதில் மறைத்ததெல்லாம்
துணமாகத் தெரியுமது அயத்தின்போக்கு
துப்புறவாய்ச் செம்புமுத லெல்லாமாகும்
உணவாக வெள்ளியது பழுத்துப்போகும்
உறுதியாம் ரசவாதங் கண்டுகொள்வான்
மணமாகும் பொருளாகும் வாதப்போக்கு
வந்துமே நிலைக்குமது ஞானந்தானே. 196

ஞானத்துக் காதியது வழலைமார்க்கம்
நலமாக வழலையது செய்யப்போனால்
மோனமது வாகவிந்து சொன்னேனப்பா
முத்திபெற வித்தில்லை மோனமில்லை

கானகத்தி லலையாதே ஆண்டியாக
கனிவாகத் திரியாதே காலன்போலே
வானத்தி லிருந்துமே வழலைமார்க்கம்
வடிவாகச் செய்திடவே வண்மையாமே. 197

ஆமேதான் கைபாக முன்னே கண்டு
ஆடலாங் கோடியென்ற வித்தையப்பா
வாமேதான் வாதிக்குப் புத்திவேணும்
வடிவாகக் கைபாக வரிசைவேணும்
நாமேதான் சொல்லிவிட்டேன் சூஸ்திரத்தில்
நலமாகப் பார்த்துநீ நாடிப்பாரு
வாமேதான் வடிவுடைய சாஸ்த்திரத்தை
வண்மையாய் யோதியறி வகையுண்டாமே. 198

ஓதியே நூலரவங் கண்டுகொண்டால்
உற்றுமே வாதம்வரும் உறுதியாகும்
வாதிதா னோகாமல் வாதஞ்சுட்டு
வடிவாகக் கரிசுட்டுக் காசில்லாமல்
நாதியா யறியவில்லை யென்றுசொல்லி
நாதாக்கள் வாதத்தைக் காணாமூடர்
சேதிமிகக் கேட்டுமே சுட்டோர்கோடி
சிறப்பாக அலக்கழிவார் சூட்சமாமே. 199

ஆமேதான் சிவன்தானும் உமைக்குச்சொல்ல
அறிந்துமே அம்மையுந்தான் மனமகிழ்ந்து
நாமேதான் அம்மையுமே கருணைகூர்ந்து
நலமாக நந்திக்கு உரைக்கவேதான்
காமேதான் நந்தியவர் பார்த்துத்தேறி
கனிவாகத் தன்வந் திரிக்குச்சொல்ல
வாமேதான் தன்வந்திரி சிந்தைகூர்ந்து
வடிவாக அசுவனிக்குச் சொன்னார்பாரே. 200

சொன்னதொரு அசுவனியும் மனமகிழ்ந்து
சுகமாகக் கைபாகம் கண்டுதேறி
நன்னயமாய் வெகுகாலம் குகையிலேதான்
நலமாக மறைத்துவைத்து எடுத்துமேதான்
இன்னிலத்தில் அசுவனியு மின்பமாக
இதமாக எந்தனுக்குச் சொன்னநூலை
கன்னல்போல் நானுமே சந்தோஷித்து
கனிவாக உலகத்திற் சொன்னேன்தானே.

தானென்ற சாஸ்த்திரத்தைப் பிரட்டிப்பார்த்து
சரியான வழலையது செந்தூரமாக
ஊனென்ற யிந்தநூல் பூரணத்தில்
உற்றுமே சொல்லிவிட்டேன் வழலைப்போக்கு
தானென்ற அயக்களங்கு செந்தூரங்கள்
நலமான கைபாக நடத்தையாக
வானென்று சொல்லிவிட்டேன் வகையைப்பாரு
வாதபூ ரணமும்யிரு நூறுமுற்றே.

யூகிமாமுனிவர் பரிபூரணம் 200
முற்றிற்று

உ

பரமபதி துணை

மகா மகத்துவம் பொருந்திய

யூகிமுனிவர் கும்மி 1000

கும்மிச் சந்தம் காப்பு

ஆதி கணபதி பாதமே தான்துதித்
தாறுமு கவன் பதங்காப்பாம்
பாதி மதியணி யீசனுந் தானிதை
பண்பா யுமைக்கு மொழிந்திடவே. 1

நீதிய தாக உமைநந்திக் குச்சொல்ல
நிர்ணய மாகவே தான்கேட்டு
கோதில்லா மலிதை நந்திதன் வந்திரிக்கு
கூறினார் பாரடி ஞானப்பெண்ணே. 2

பிரித்துத் தேறி சரிபார்த்து யாதோர்
பேதமில்லாததன் வந்திரியும்
பரி ட்சை செய்து சிலவருடம் பார்த்து
பண்பா யசுவனிக் கேயுரைக்க. 3

வ ணசுவனி சாஸ்திரந் தன்னையும்
வரிசை யாக விடாமலேதான்
நேசமுட னவர் வாதங்கள் செய்துமே
நேர்மை யுடனதை மூடிவைத்து. 4

மூடியே வைத்து வெகுகாலம் பார்த்து
முக்கிய மானநூ லென்றுசொல்லி
தேடிவந்த சித்தர் யாவருக்கு மிதை
செப்பாமல் நூலில்லை யென்றுசொல்லி 5

தேசம் புகழவே எந்தனுக்கு இதை
சிறப்பாய்ச் சொல்லிட வேணுமென்று
பாச முடனே வரிசைய தாகவே
பண்புடன் சொன்னதைத் தான்கேட்டு. 6

பத்தி யுடனேநான் சித்தம் மகிழ்ந்துமே
பாங்கா யுலகோருக் குத்தெரிய
சித்த மகிழ்வாகக் கும்மி யடித்துமே
செப்பினேன் கங்கணங் கட்டிக்கொண்டு. 7

கட்டினார் நானாதி தேவருங் கூடவே
கலக்க மில்லாமற் சேர்ந்திருந்து
திட்டமுடன் செய்யும் பாகத்தைப் பார்த்துமே
தேரிய வர்களுந் தான்போனார். 8

நூல் வரலாறு

கொட்டினேன் ஈராறு ஆயிரம் சொச்சம்
கொள்கையாம் வாதம் அறுநூறு
அட்டவணை கொண்டு பார்த்துடன் தேறியே
அன்புடனே வா நூல்பார்த்தே 9

திட்டம தாகவே சோதித்துத் தீர்க்கமாய்
செகத்தினி லுள்ளதோர் மானிடர்க்கு
நட்டணை யாகவே முப்பூக் குருவுடன்
நாணய மான களங்கமுடன். 10

வங்க மெழுகுபின் தங்கம தாகவே
மான வேதைதேர்ந்த கைபாகம்
தங்க மிறங்கிர பாகங்களும்புடந்
தானே எரிக்கிற நேரங்களும் 11

இங்கித மாகக் குருக்கியே குப்பியில்
எரித்தெடுக்கிற பாகங்களும்
அங்கங்கே செந்தூர மெல்லாந் திரட்டியே
அன்புடன் சொல்கிறேன் கேளுங்கடி. 12

பொட்டலையுப்பு அதிபதியாம் காரம்
பூரான சீனமுந் தேவியராம்
கட்டளையாய் ரெண்டு பேருமே சேர்ந்தாலே
காரிய மாகுமே ஞானப்பெண்ணே. 13

இரசம் உப்பாக

காரிய மான திராகவத் தால்ரசங்
கட்டி எழுந்துமே நிற்குமது
பாரியாய் கல்லுப்பு லிட்டுளிக்கவே
பாகம தாகுமே ஞானப்பெண்ணே. 14

பாகம தான சவுக்காரம் அதை
பத்தியே சோதி ரசவாதி
ஏகமாய்ச் சொர்ணந் தான்விளையும் அதை
இன்பமாய்ப் பாரடி ஞானப்பெண்ணே. 15

கல்லுப்பு

பத்து எட்டுமுழத் துள்ளிருக்கும் நல்ல
பாரான கல்லை எடுத்துவந்து
சுத்தி மரக்கரி தான்போட் டுக்கல்லை
சுருக்கா யூதி எடுத்திடவே. 16

நாலுபடி நீரு சட்டிதனிற் போட்டு
நன்னயமான திராவகமும்
காலால் படியெட்டு தானிட்டு வைத்துமே
காரணமாய் மண்ட லந்தனிலே. 17

மேலாக வேயுப்பு பூக்குமதைஎடு
மேதினியில் ரச வாதிகளே
சீலம தாக எடுத்திடு முப்பதை
தினமும் ரவியில்வை வாதிகளே. 18

வத்தியே திராவக மானாலே யிடு
வாகாய் புகைநீரை விட்டுவைக்க
சித்தியாக உப்பு தான்விளையு மதை
சீக்கிரமாக எடுத்து வைத்து 19

இரச உப்பு

விந்துசேரு ஒன்று தானெடுத்துப் புகை
வீரியமான நீர் தன்னைவிட்டு
சிந்தையுடன் ரவி தானிடவே உப்பு
சீக்கிர மாகவே தான்விளையும் 20

விளைந்த உப்பை யெடுத்துப்பின்பு புகை
மேலான நீரையும் விட்டுவைக்க
விளைந்திடும் உப்பை எடுத்து வைத்திடு
வித்தகரே ரச வாதிகளே. 21

சுண்ணம்

சுக்கா னுப்பு ஒருபலந் தானெடு
சுத்த ரசஉப் பொருபலந்தான்
சிக்கயிரண் டையுந் தானரைத்து உண்டையாய்
சீக்கிரஞ் செய்புகை நீர்தனிலே. 22

அரைக்க உண்டை ரவிதனி லிட்டிடு
அன்பான நாகத்தின் மல்லியிலை
அரைத்துப் பாண்டத்தில் நெல்லைப் பரப்பியே
அப்பனே பக்குவ நீரைத்தெளி. 23

தெளித்து மல்லி யிலைபரப்பி மேலே
தீரமா யுண்டை யதனை வைத்து
அளித்து மேலிலை இட்டுமே நெல்லையும்
அன்பாகப் போட்டுச் சலந்தெளித்து. 24

அவிபு டந்தா னெரியிட் டெடுத்திடு
ஆதி ரவிதனில் காயவைத்து
தவியா சீனத்தை சொல்லுகி றேன்வாதி
தாட்டீக வானே நீ கண்டுகொள்ளே 25

சீனச்சுண்ணம்

சீனம் உலைதனில் வைத்தூதி யெடு
சீக்கிர மாக மலர்ந்து விடும்
தானே கடுஞ்சுண்ண மாகுமதை யெடு
தப்பாம லுண்டை யதுமேலே 26

ஆன கவசங் கொடுத்து ரவிதனில்
ஆதரவாகவே காயவைத்து
ஊனமில் லாமலே காடைப் புடம்போடு
உற்ற குருவாகுந் தானெடுத்து. 27

முப்பொழு துமதை பூசையில் வைத்துநீ
முத்தி பெறச்சிவ பூசைபண்ணி
குப்பிதனிலே பதனமுஞ் செய்திடு
குருவிது தானே ஞானப்பெண்ணே. 28

சீக்கிரமான சவுக்கார மாச்சுது
சித்தியான சரக் கத்தனையும்
பாக்கிய மாய்க்கும்மி தன்னிலே சொன்னது
பாரமில்லை ரெம்ப வேதையுமாம். 29

துருசுச் சுண்ணம்

வேதைய தாக ஒருசேதி நல்ல
வெற்றிபெறவே நான் சொல்லுகிறேன்
பாதைய தாகவே தொட்டுத் துருசுமேல்
பற்றியே மேலே கவசமிட்டு. 30

இட்டுக் கவசம் ரவியினிற் காயவே
எடுத்துக் காடைப் புடம்போடு
பட்டுமே நீறியே சுண்ணம தாகவே
பக்தி யிருந்திடும் சித்தியதாய் 31

இருந்த சுண்ணத்தைத் தொட்டுத் தெரித்திட
இன்பம தாக இரசங்கள் கட்டும்
வருந்தி மூலிகை தன்னிலிட்டுப் புளி
வாகான சாரு தழையில்வரும். 32

சாருவரும் நீரில் தாளகத்தை யிட்டு
சாற்றவே கட்டிக் கரியில் நின்று
வாருதி போலே உருகிநிற்கும் அதை
வந்திடுஞ் செம்பு தனிளிடவே 33

நின்றிடும் மாத்தது எட்டரையாம் வர்ணம்
நேருங் காவிக்கு நிலைத்திடுங் காண்
நன்றாக விற்றுச் சிலவுசெய்து நீயும்
ஞானங்கள் பார்த்து இருந்திடுவாய். 34

தாரத்தின் வேத வெகுவேதை யிதில்
தாக்கவே சித்தியாம் பார்வேதை
பாரமில்லை பார் வெகுசுளுவு இதை
பற்றியே நின்றிடு வாதிகளே 35

வாதிக்குப்புத்தி வரவேணுமிதில்
வாகாயவசர மாகாது
சேதியைக் கேட்டுமே சுட்டதினா லென்ன
சேதப்படும் பணம் போய்விடுமே. 36

கனத்தைக் கொண்டு சிலவழித்தால் தனம்
தக்கப்படி யிதில் காணவேணும்
அனத்தமாகக் குறைந்துபோனாலது
ஆற்றாமை யாமடி ஞானப்பெண்ணே. 37

போகாமலே சவுக் காரமும் வைத்தெடு
பொன்னான துருசியை வைத்திடு நீ
வாகான கைபாகம் செய்தெடுத்தால் பணம்
வலுமை யாகவே வந்திடுங்காண் 38

நீத்தின மான முறையிது தான் நல்ல
நேராம் வழலை யிதுகாணும்
பார்த்து எடுத்துக்கை பாகமாய்ச் செய்துமே
பத்தியாய் பார்த்திடும் வாதிகளே! 39

துருசு செந்தூரம்

துருசு செந்தூரம் சொல்லுகிறேன் வேதை
துப்பர வாகவே தான்கேளு
பரிச வேதைக ளாகுமதுநொடி
பாகமாய்ச் செய்தால் முடிந்துவிடும். 40

சூத்தனொருபலந் தானெடுத்து யிதில்
சூறவே கெந்திமுக் காலுமிட்டு
பாத்துமே சூட னரைநிறுத்து யிதிற்
பாகமாய் வீரனுங் கால்கூட்டி 41

நேர்த்திய தாகவே சாமமெட்டு அரை
நேரம் படமெழு காகிவிடும்
பார்த்திப னேமேலே அங்கிபூட்டி ரவி
பாகமாய்ச் செய்து உலர்த்திடவே 42

சுக்காநீ ரொன்று உப்புக்கல்லுங் கூட்டி
சுத்தியிடித்துமே லங்கியிட்டு
மிக்கவே மண்ணிடு காயவைத்துப் புடம்
மேன்மைய தாக முழப்புடமாம். 43

எடுத்துப் பார்க்க கருத்திருக்கு மிடை
இன்பமாய்க் காரம் பொரித்தெடுத்து
அடுத் துருக்கச் சிவப்பாகு மிதில்
ஆனந்த மாகுமே ஞானப்பெண்ணே

புகைநீர் தன்னா லறைத்தெடுத்துவரும்
போக்கொடு பீங்கான் நெருப்பிலிட்டு
துகையாய் சிவக்க யெரித்தே வாங்கிடு
தொக்கச் சிவப்பது வாகிவிடும். 45

ஆக்கின செந்தூரம் வேறேவைத்து யிதில்
ஆனவன்னி ரசந் தானெடுத்து
பாக்கிய மாகவே திராவகத்தைவிட்டு
பத்தியுட னெட்டு நாள்தனிலே 46

பாகம தாகவே உப்பாகுமெடு
பதன மாகவே குப்பியில்வை
வேகம தாகவே இந்த உப்புதனில்
வேதையு மாகவே சொல்லுகிறேன். 47

உப்புபலம்நாலு செங்கல்பொடி யொன்று
உண்மைய தாக இடிவெதுப்பு
தப்பித மில்லாமல் ரெண்டு விரலிட்டு
தானே குப்பியை அமிழ்த்திவைத்து 48

சந்தெல்லாம் மூடியே குப்பிவாய் மூடாமல்
சாற்றவே மேல்சட்டி தான்மூடி
பந்தன மாகவே சீலைமண் ணேழுமே
பத்தியாய் செய்து அடுப்பேற்றி. 49

எரிப்பின் பாகங் குறையாமல் நல்ல
இன்பமாய் ஈராறு சாமமெரி
தப்பாம லேயெரி நிறமஞ்சள் போலாகும்
தாக்கியெடுத்து மயிர்க்குச்சியால்

புகைநீர் விட்டு அரை வறுத்துயெடு
போக்கோடேகுப்பி யரையடைத்து
துகை பனிரெண்டு சாம மெரித்திடு
துப்பர வாக அடியில் நிற்கும். 51

அடியில் நின்றிடுஞ் செக்கச் சிவப்பாகும்
ஆனதோர் செந்தூரந் தன்னையெடு
படியாய் முன்னுள்ள செந்தூரத் தையிதில்
பாய்ச்சி யரைத்து இடைக்கிடையே. 52

ப்ர்த்து யெடுத்து அரைவறுத்துநல்ல
பாகமாய்க் குப்பி தனிலரையாய்
சேர்த்து அடைத்துமே வாயை மூடிக்குப்பி
சேதப் படாம லெரித்தெடுக்க. 53

நேர்த்திய தாகவே பன்னிரெண்டுசாமம்
நேர்மைய தாகக் காடாக்கினியாய்
பார்த்து எடுக்கப் பவள நிறம்போல
பற்றியே நின்று அடியில் நிற்கும். 54

வேதைய தாகவே சொல்லுகிறேன்முனி
வேதத்தை சொன்னா ருலகுதனில்
பாதையு மாகவே நாலுக்கொன்று தங்கம்
பாச்சியே நாக மதற்கிடையாய் 55

சேர்த்து உருக்கிட புட்டாகு மிதை
சேர்த்துநீ முன்ரச செந்தூரத்தை
பார்த்துத் திராவகம் விட்டரைத்தே வெகு
பாகமாய்க் காய்ச்சிநீ மேரடைத்து. 56

நேர்த்தியதாக எரித்தெடுக்கக் குரு
நேரான தங்கமாம் ஞானப்பெண்ணே
சீர்த்திய தான குருவதைக் குப்பியில்
சிந்தை மகிழ்ந்து பதனஞ்செய்து. 57

செம்பை உருக்கியே நூறிலொன்று கொடு
சின்மய மாகவே எட்டரையாம்
வம்புசெய்யாமலே செம்பொன் திராவகம்
வாகாக வந்து நிலைத்திடுமே. 58,

குடவ னூறு தனிலிடவே பாரு
கொஞ்சுங் கிளிமூக்கு தன்னிறமாம்
திடம தாக ஒடித்துமதி தனில்
திட்டமாய் நூறு தனிலிடவே

வடிவதானதோர் காஞ்சன மாமிதை
வைத்துச் சிலவுகள் செய்து கொள்ளு
துடிய தான சுழிமுனை தன்னிலே
துப்பர வாக மதியேற்று 60

ஏற்றியே நின்றுமே காயசித்தி பண்ணு
இன்பம தாகச்செந் தூரமுண்ண
போற்றியே நோயும் பறந்தோடிப் போகும்
புத்தியுள்ள சிறு பாலகன்போல். 61

சி. ்நிய தாகவே யசுவனியுஞ்சொன்ன
்சேதியைக் கேளும் உலகோரே
ப. . ; தாகவே தானுரைக்க இதை
பார்த்து உலகத்தோர் திட்டமதாய். 62

சந்தேக மில்லாமல் தங்கங்கள் வந்திடும்
சத்திபூசை பண்ணும் சித்தமதாய்
சிந்தை மகிழ்வுட னங்கசுத்தி செய்வாய்
சீரான பொய்வாதி சங்கதிகேள் 63

பொய்வாதி

சாராயங் கள்ளுகள் கொண்டுவந்து நிலந்
தானே மெழுகி யுதனில்வைத்து
பூராய்கோழி யறுத்துச் சமைத்துடன்
புத்தியோ டாட்டுக் கறிசமைத்து. 64

திட்டமாய் தோசை பணியாரம்வடை
சீரான எள்ளுப் பயருடனே
சட்டம தாகவே முன்னே வைத்துவாதி
சாக்கிர மாக உருச்செபித்து. 65

நாற்பத்தி முக்கோண முங்கீறி அதில்
நாலுசிலைக ளுருப்போட்டு
காற்ப தரமென்று மந்திரங்கள் சொல்லி
காதலாம் பெண்ணை நடுவில்வைத்து. 66

பட்டுடுத் திப்பணி தான்பூண்டு அவள்
பக்திகள் தானே மிகவும்பண்ணி
கட்டுமெட் டாகவே கும்பிட்டுப் பாத்திரம்
கண்டுஎடுத்துமே தொண்டுசெய்து. 67

தெண்டம்பண் ணிச்சபை எல்லோர்க் குங்கள்ளு
தெரிய வாங்கியே வாயில்வைத்து
கண்டபடியாகத் தான்குடித்து வெறி
காண ஒருவ ரொருவரைத்தான் 68

மயிர் பிடித்து வழக்குகள்செய்துமே
வாகான பெண்ணைப் பிடித்திழுத்து
தயிரிய மாகவே நாக்குத் தடுமாறி
தர்க்க மிட்டுமிக சண்டை செய்வார். 69

கெட்டுமே போகாமல் செந்தூரந்தன்னை
கேட்டுமே செய்து திடமாக
பட்டுமே செய்து முடித்தாலோசெல்வம்
பாக்கிய முண்டாகும் ஞானப்பெண்ணே. 70

பாக்கிய மெப்படி தான்வருகும் மனம்
பத்தியே செந்தூரம் வைத்தாலே
நோக்கி ஞானமும் வாசியுந் தான்வரும்
நுண்ணிமை யாமடி ஞானப்பெண்ணே. 71

நுண்ணிமை யான தொருகளங்க மதை
நோக்கியே பார்க்கவே சொல்லுகிறேன்
தண்ணிபோ லேதானே வந்திடுமாந் தங்கம்
தாட்டீக முண்டாகும் ஞானப்பெண்ணே, 72

சொன்ன களங்கு வெகுசுளுவு அதைச்
சோதித்துப் பார்த்தா லல்லோதெரியும்
நன்னய மாகவே சொல்லுகி றேனிதை
நாடியே பார்த்துத் தெளிந்திடவே 73

காரீயக் களங்கு

கும்பிட்டுச் செய்யவே சித்தியாகுங் குரு
கொண்டு தருகிறேன் பார்மீதில்
நம்பியே காரீய மோர்பல மாமதை
நையத் தகடாகத் தட்டிக்கொண்டு. 74

கெட்டிய தாகக் கெவுரி ஒருபலம்
கீர்த்தியாய் ரெண்டையும் சேர்த்தரைத்து
பட்டுப்போ லேயதைத் தானிரு சாமமும்
பார்த்து அரைத்து உருட்டிக்கொண்டு. 75

சட்டமுடன் குகை தன்னி லயமிடு
சாற்றவே தான்பொடி தானாக
இட்டமுடன் அழல் தான்சிவக்க ஊது
இன்பமாய்க் காரி கொடுத்திடவே. 76

பம்பரம் போலவே ஆடி இழுத்திடும்
பக்குவ மான மணியாகும்
சம்பிரம தாகவே தட்டி அரைத்துமே
சாற்றும் வெங்காரி பொரித்தெடுத்து. 77

சிந்தைய தாகவே செவ்வல்லிப் பூச்சாரு
திட்டமாய் விட்டு அரையுங்கடி
நிந்தையாம் வெங்காரி நாலிலொன்றுசேரு
நிச்சய மாக அரைத்துருக்கு. 78

வெள்ளி மணிபோலே தானுருகு மிது
விந்தைய தாக எடுத்துவைத்து
துள்ளி அயத்துரை தான்போக யெடு
துப்பரவாக அடித்தெடுத்து. 79

செம்பு சுத்தி

சொன்ன படிபோல தானுருக்கி யின்னஞ்
சொல்கிறேன் கேளுங்காண் வாதிகளே
மின்னவே செம்பு பலமெடுத் துத்தட்டி
மிக்க வெடியுப்புச் சீனமுடன் 80

நாடி வகைக்கு ஒருபல மாகவே
நன்னய மாக யிரண்டையுமே
தேடியே கத்தநீர் விட்டரைத்து யெடு
சீக்கிரம் பீங்கானில் தான்வழித்து. 81

ஓங்காரமாகப் பதனம் பண்ணிக்கொண்டு
உண்மைய தாக அதனையுமே
பாங்காக எட்டுநாள் வைத்து எடுத்திடு
பத்திய தாகவே முத்தியினால் 82

தெளி விருத்துமே வைத்துக்கொண்டு அதில்
தீர்க்கமாய்ச் செம்பைக் கரியில்வைத்து
அமுக ஊதிதை வைத்து யெடுத்திடு
அன்பாக வேதா னுடையுமட்டும் 83

செத்துஞ் சாகாமலே தானெடுத்துப்பாரு
சித்தியதாக முறித்திடுநீ
பத்திய தாகவே ரெண்டிடை தானிரு
பாங்காய்க் களங்கொன்று தானிறுத்து. 84

முத்திய தாக உருக்கிடத் தான்குகை
முத்தி யெடுத்துட னாரவைத்து
சத்திய மாகவே சொல்லுகிறேன் வெள்ளி
தானே எடுத்துப் புடமிடவே 85

நொறுக்கு வெள்ளி

வெள்ளியதை ஊதி எடுத்துக் கொள்ளு நல்ல
வித்தகமான தகடடித்து
துள்ளியே சாம்பல் பலம் நாலுயெடு
துப்பர வாகவே உப்பதொன்று 86

அரைத்து வில்லை ரவிதனிற் காயவே
அன்பாய் புடமிட் டெடுத்துக்கொண்டு
வரைத்து அஞ்சு புடம்போட வெள்ளிநீர்
வாகாக வாங்கியே தானிருக்கும். 87

இருக்கும் வெள்ளியைத் தானெடுத்துச் சாயம்
இன்பமாய் போட விதங்கேளு
பருக்க வேகெந்தி சுத்தியைச் சொல்கிறேன்
பக்குவ மாய்ரச வாதிகளே 88

கெந்தகச் சுத்தி

கெந்தி ஒருசேரு வாங்கிக்கெள்ளு அதை
கெட்டித் திராவகம் விட்டரைத்து
சுந்தரமாக அரைத்துக் காயவைத்து
சுகப்பிர்ம தாக அதையெடுத்து. 89

பந்தன மாகவே வைத்துக்கொண்டு அதை
பண்புடன் செய்யும் விதிகேளு
சுந்தர மாகவே பண்ணாடையிலிதை
சுத்திப் பரத்தியே பாலுமிட்டு. 90

மேலே புடமிடத் தானிறங்கும்மணி
மெத்தெனப்பாலி லடியிலேதான்
சாலவே அஞ்சு புடமிட் டெடுத்திடு
சாதுரிய மணி தானாகும். 91

பொன்போ லாக மணியாகு மிதில்
போற் கொந்தியி லீயம்போகும்
துன்ப மில்லாமலே செம்பாகுமெடு
துப்பர வாக யிருக்குமிதில். 92

மதியுந் தான்பல மொன்றெடுத்துக் கெந்தி
மத்தியே தான்பலம் முக்காலாம்
விதிய தாய்வீரங் காலுமே கூட்டிடில்
வித்தகப் பாணியி னாலரைத்து 93

பூங்கி யிடுமதி மேலேதானதை
ஆன புடமிட் டெடுக்கவே தான்
இங்கித மாகக் கருத்துச் சுருங்கிடும்
இன்பம தாய்ப்பத மாயெடுத்து. 94

வெண்கா ரியிடை தான்சேர்த்துக் காரி
வித்தக மாக உருக்கிடவே
தங்காமலே வெள்ளி தும்பை மலர்ந்திடும்
தாக்கவே கேளும் ரசவாதி.

எட்டுக்கு ரெண்டு களங்கிட வேதையாம்
இன்பமா யூதி யெடுத்திடவே
பட்டுநூல் சிப்பத்தைப் போலாகுமிதில்
பாங்கான தங்க மிடைசேரு.

சட் டமாய் ரெண்டையுஞ் சேர்த்துருக்கப் பரி
தானது மாத்துமே பத்தாகும்
துட்டருடன் சொல்ல வேண்டாங்காணிது
சூக்கும மாகவே தானிருக்கும்.

இப்படிச் செய்ய அறியாமல்வாதி
ஏங்கித் தவித்துமே நின்றலைந்து
கைப்பணம் போச்சுது என்றுரைத்தால் காணி
காட்சி யாகுமோ ஞானப்பெண்ணே. 98

பொன்னென்று சொன்னாலே தோணாது அது
போக்கோடே செய்தாற் பலனாகும்
மாண்ணாச்சுதே யென்று சொன்னாலேயது
மார்க்கம தல்லவே ஞானப்பெண்ணே. 99

பெண்ணர சான துரைத்தன மாமது
பொன்னைக் கண்டாலுமே உண்டாகும்
தன்னை யறிந்தாலே தான்வருகுந் தங்கம்
தாட்சியு மில்லையே ஞானப்பெண்ணே. 100

உண்டா னால்பெருஞ் செல்வமது அதை
உற்றுமே பார்த்தால் களங்கமறும்
கண்டேனென் றுண்மையாய் பொய்கள் சொன்னாலது
காணுமே கண்ணிலே மாண்பருக்கே. 101

சித்திய தாக அயமதனை நல்லாய்ச்
சீர்தூக்கிப் பார்த்தாலல் லோதெரியும்
முத்திய தாகவே யெல்லாம் விளைந்திடும்
முக்கிய மாமிது வாதிகளே. 102

சூதத்தைக் கட்ட வகையறியான் வாதி
சுட்டுப் புகைத்துமே தான் திரிவான்
ஏதுக்குத் தான்புகைத் தூதுகிறான் வாதி
இன்பம தாகுமோ ஞானப்பெண்ணே. 103

ஞானம் வந்ததென்று சொல்வார்கள் வாதி
நாட்டிலே பிச்சை எடுத்து உண்டார்
பானங்கள் பண்ணி மயக்கத்தாலே கெட்டு
பக்தியில் லாம லலைந்திடுவார் 104

கஞ்சா வுண்டையைத் தின்றிடு வாரவர்
காதிற் செம்புக்குழை பூண்டுடுவார்
சஞ்சாரம்போலே அலைந்திடுவார்சிலர்
தாட்டீக மாய்ச்சுட் டலைவார்கள். 105

இந்தப் படியாக யசுவனி தேவரும்
இன்பமாய் கைபாகம் சொன்னபின்பு
விந்தைய தாகவே இன்னங்குரு சொல்வேன்
வித்தகரே ரச வாதிகளே. 106

வங்கச் செந்தூரம்

அந்தர மாகவே காரிபலமொன்று
அண்டத் திராவகம் விட்டரைத்து
முந்த ரவிதனில் காயவைத்து அதை
முட்டக் கெசப்புடம் வைத்தெடு நீ. 107

வைத்து எடுத்துப் புடமைந்திலே நிறம்
வாகாய் முருக்கதின் பூப்போலே
சித்தம தாக யிருந்திடுமே செல்வம்
சீக்கிரமாக நிலைத்திடுமே. 108

இல்லம் நிலைக்கவே தான்பாரு நல்ல
ஈயத்தைக் கண்டு மனமகிழ
வல்லான தங்கங்க ளாகுமது ரச
வாதிக் கறிவித்தேன் கேளுங்கடி. 109

இரசக் கெந்திச் செந்தூரம்

பச்சை ரசமெட்டு தானெடுத்து யிதில்
பாய்ச்சவே கெந்தி பலமிரண்டு
உச்சித மாக உருக்கக் கரிபோலாம்
உண்மையாய்த் தாரம் பலமதொன்று. 110

நிச்சய மாகவே தான்வாங்கி அதை
நேர்மை யுடனேநீ தானெடுத்து
தற்செய லாகப் பொடித்துமே குப்பியில்
தானே அரைவாசி போட்டிடுவாய். 111

உப்பு நாலுபடி தானரை பட்டாக
உண்மையாய்ச் சட்டி யிருவிரலாம்
தப்பித மில்லாமல் குப்பிய தின்மேலே
தானே பதித்தின்னஞ் சொல்லுவன்கேள். 112

சந்துவாய் தன்னிலே உப்புப்பொடியிட்டு
சாதக மாய்வாய் திறந்துவைத்து
விந்தையாய் மேல்மூடிச் சட்டிவரம்பினில்
வேண்டியே சீலை உளுந்துமண்ணும். 113

திண்ணமாய்ச் செய்து அடுப்பேற்றிளி
திட்டமாய் நூறு கடிகையுமே
நன்னய மாகவே எரித்துஎடுத்திடு
நன்றாகப் பொன்போலத் தானிருக்கும். 114

அண்ணலார்பாதங் கெதியெனவே சொல்லி
அன்புடன்தானே பிரித்தெடுக்க
எண்ணம தாகமல் லாத்திஎடுத்திடு
ஒன்பமாய்ச் செந்தூரம் போற்காணும். 115

செந்தூரந் தன்னை யெடுத்துமுன் காரீயச்
செந்தூ ரம்மிடை சேர்த்தரைக்க
சுந்தர மான புகைநீராலரை
சூட்சமாய்த் தான்வரும் குப்பியிடு. 116

கல்லால் மூடி யதைஎரிக்க நிறம்
கண்டால் சிவப்பாகத் தானிருக்கும்
மெல்ல ரவிதனில் நூறினி லொன்றிட
மேன்மை யுள்ளதங்க மாகுமது. 117

சொர்ணமி தாகுமென் றேயெடுக்க யிதின்
சூட்சத்தைச் சொல்கிறேன் கேளுங்கடி
வர்ணக் கிளிமூக்கு தங்கம தாகுமே
வாகாய் மதியெட்டுக் கொன்றிடவே. 118

பாரி வரியதோர் யேகமாகுமிது
பார்த்து வரிசி சமைக்கவுயே
சோரது போறதங்க மாயிந்த வேதைதான்
சோதித்தால் வாதி செயப்படுவான். 119

ரசத்தை வாதித்தால் தங்கமாகுமிது
நாகத்தைக் கட்டினால் வேதையாகும்
பிசக தாகவே செய்துகொண்டாலது
பேதப் படுமடி ஞானப்பெண்ணே. 120

செம்புக் கட்டு

செம்பு ஒருசுத்தி சொல்லுகி றேனதைச்
சோதித்துப் பார்த்தாலல் லோதெரியும்
நம்புத லாகக் கரும்பொன் னொருபலம்
நாட்டிய வீர மதனில்ரெட்டி. 121

வல்லமையாக அரைக்கத் திராவகம்
வண்ணமையா யெட்டுநாள் ஆட்டிப்பின்பு
சொல்லவே உண்டையாய் செய்துரவிதனில்
சுத்தமாய் மேலங்கி தான்கேளு. 122

சுக்கா நீற்றைப் படிநாலுஅதைச்
சுத்தம தாகப் புகைத்தெரித்து
மிக்காகச் சட்டிமே லேமூடி யெரி
மீசுர மாகவே சீலைசுத்தி. 123

தப்பித மில்லாமல் மண்சீலைசெய்து
தாக்கி எரித்து எடுத்துக்கொள்ளு
முப்படித் தானே இடைநிறுக்க யிடை
முட்டோடே போகா துருதிகண்டு. 124

சொல்லிய தானதி ராகவத்தைவிட்டு
சூட்டி யரைத்துமே உண்டைசெய்து
நல்லாக இப்படி ஐந்துதர மெரி
நாணய மாக அயவீரம். 125

வல்லாளன் செம்பு தனையுருக்கிப் பத்து
வாட்டிக் கொடுக்கவே கட்டிப்போகும்
சல்லாப மாகவே கட்டியிருப்பதை
சார்ந்து செய்யவகை கேளுங்கடி. 126

நொறுக்குவெள்ளி பலமதஞ்சுக் கொன்று
நுண்ணிக் கொடுத்துமே ஊதியெடு
பெருக்கப் பச்சையாய் தோணுமதுமதி
பின்பாகச் சொல்கிறேன் கேளுங்கடி. 127

தங்கமி டைக்கிடை தான்சேர்த் துக்கட்டி
தானே புடம்போடத் தானிறங்கும்
பொங்கம தாகப் பரியாகும்நல்ல
புதுமை கேள்டி ஞானப்பெண்ணே. 128

புதுமை யாகவே ஒட்டுவித்தை யிது
புல்லறி வாகவே செய்துகொள்ளு
சதிராக வேதா னவசரத்திற் செய்து
சாஸ்திரம் பொய்யென்று சொல்வார்கள். 129

சொல்லுவான் கர்மி உலுத்த னவனிடம்
தோசி யுடன் நூலைக் காட்டாதே
வெல்லுவான் போலே இருந்தாக் காற்கும்மி
விருப்ப மாய்க்கொடு வென்றுசொன்னார். 130

சொன்னசொல் தப்புவி டாமலுமேயிரு
சோதிக்கமூன்று தரம்பாரு
முன்னமே சொன்னேநா னென்பெருநூலிதை
முந்தியே பாருமே வாதிகளே. 131

வாதிக ளென்றுநீ பேர்படைத் துரச
வாத்த்தைப் பண்ணி யறியாமல்
சேதியைக் கேட்டுமே சுட்டலைந்து கெட்டு
செத்து அலைந்தாரே ஞானப்பெண்ணே. 132

வாதங்கள் செய்ய அலைவார்கள் ரச
வாதமி ருக்கு மிடமறியார்
பேதமை யாகப் புலம்பித் தவித்துமே
பித்தர்கள் பேயாய்த் திரிவார்கள். 133

கடல் நுரைச் சுண்ணம்

ஆதர வாகத் திரியவே தானொரு
அன்பாக உப்புச்சுண் ணங்கள் சொல்வேன்
சேதம்வ ராமற் கடல்நுரை ஊதியே
சீக்கிரமாக எடுத்துவைத்தே. 134

கடல் நுரைச்செயநீர்

சாரமி டைக்கிடை தான் சேர்த்து அதில்
சாகவே நெட்டி யடங்கமட்டும்
பாரம தாக அரைத்திட வேநீராம்
பக்குவ மாகப் பனியில்வைக்க. 135

கற்பூரச் சுண்ணம்

தண்ணீர் பலபலெ னக்கசி யுமிதில்
தாக்கப் பொடித்து வீரம்பூரம்
கண்ணிய மாக அரைத்துமே மூன்றா நாள்
காதலி யேரவி யிற்போடு. 136

போட்டு எடுத்துக் கிளிஞ்சிநீர் தன்னிலே
போக்கோடே வைத்து எரித்திடவே
மூட்டுமுச் சாமமு மொன்றா னாலதை
முக்கிய மாக எடுத்திடுவாய் 137

எடுக்க வேபூரஞ் சுண்ணம தாமதில்
இன்பமாய்த் தங்கங் கடுஞ்சுண்ணமாம்
அடுக்கச் சார மிடைஅரைக்க வது
அன்பாக நீராகுங் கேளுங்கடி. 138

வெங்கல நிமிளைச் சுண்ணம்

வெங்கல நிமிளை பலமொன் றெடுத்து
விட்டரை வில்லை ரவியில்வைத்து
துங்கம தாகக் கரியினில் வைத்துமே
துப்புர வாகவே ஊதியெடு. 139

ஊதிடச் சுண்ணம் வலுவாகுங் காரம்
உத்ததோர் க்ண்டர்மே லப்பிவைக்க
வாதியே வீரிட்டுச் சுண்ணம தாய்வேகும்
வந்திடுஞ் சார மிடை சேர்த்து. 140

துருசுச் சுண்ணச் செயநீர்

பாகமாய் வைக்கச் சலமாகுமிதைப்
பார்த்தேசூ தத்தினில் விட்டரைக்க
வேகங் கடுவேகஞ் சொல்லப் போகாதிது
வித்தக மாகவே தானுரைத்தார். 141

சூதச் செயநீ ரெடுத்துக்கொண்டு வெகு
சுத்தமா யொன்பது பாஷாணம்
ஆதர வாக அரைத்துக் கரிதனில்
அன்பாக ஊதிடச் சுண்ணமதாம், 142

சுண்ணம தாமெல்லாஞ் சுண்ணமா கும்வெகு
சூட்சச் சரக்கெல்லாம் நீறிவிடும்
நன்னய மாகவே யிந்தப்பாகஞ் செய்து
நாடிக் கண்டறி ஞானப்பெண்ணே. 143

தங்க முதல்செம்பு நீறிவிடும் வங்கம்
தாளக மெல்லாம் கடுஞ்சுண்ணமாம்
இங்கித மாக உபரசங்க ளெல்லாம்
இன்பமாய் நீறியே வேதைமிகும். 144

உப்பு யிருபத்து ஐந்தும் நீறிடும்
உண்மையாய்க் கல்லொடு மண்முதலாய்
தப்பித மில்லாமல் நீறிவிடு மதில்
தனித் தனிவேதை யாகுமடி. 145

வேதை யாகுமிது வைத்து எடுத்திடு
வீரக் கொடிகட்டி யாடிப்பாரு
சாதக மாகவே பாகமே தப்பினால்
சாற்றிட ஒன்றுமே தானுமில்லை. 146

இந்தப் படியா யசுவனி தேவரும்
இன்பமாய்க் கைபாகம் சொல்லினார்காண்
சிந்தை யுடனுல கத்திலே யாவரும்
சிறப்ப தாகவே வாழ்ந்திருக்க. 147

நாக வேதை

ஆகவே நாகத்தின் வேதைகள் சொல்கிறேன்
அன்பாக இப்பாக வித்தைகளை
தாகமாய்ச் சொல்கிறேன் முப்பூக் குருவையும்
தப்பாமல் வாதிகள் கேட்டிடுவீர் 148

முப்பூ விபரம்

முப்பூ வென்ப திதுகா ணுமிதை
முத்திய தாகவே சத்தியமாய்
அப்புவி நீரை யறிந்தாலேவாதம்
ஆகுமே பாரடி ஞானப்பெண்ணே. 149

நாக மென்றதோர் சரக்கு உப்புநல்ல
நாதாந்த வீரமுந் தானும்உப்பு
போக மான ரசமும் உப்புயிது
போக்கோடே இம்மூன்றுஞ் சேர்ந்தாலே. 150

சத்திய மாகவே முப்பூக் குருவாகும்
சத்தி சரக்கெல்லாங் கட்டிவிடும்
முத்திய தாகவே வேதை யாகுமிது
முக்கிய மாகுமே ஞானப்பெண்ணே. 151

வேதைய தாகவே நாகமென்றுரசம்
வித்தக மாகவே சூதமொன்று
பாதைய தாக உருக்கியே சேர்க்கிற
பக்குவத் தைக்கேளு ஞானப்பெண்ணே. 152

பக்குவ மாகிய யேதுவினிற் குகை
பத்திர மாகவே நாகமிட்டு
சிக்கி உருக்கையில் பாத்திர மாகவே
சீக்கிர மாக ரசத்தைவிடு. 153

விட்டால் ரசஞ்சீறும் ஒட்டாமல் தான்மூடு
வித்தக மானதோ ரோடுகொண்டு
கட்டளை யாகவே புட்டுபோ லாகிவிடும்
கண்டுநீ தேரடி ஞானப்பெண்ணே. 154

சேராத தைக்கையால் பிட்டுமே பார்க்கையில்
சோதியான கருப் பேறிநிற்கும்
பாராத நல்ல பாகமிது வெகு
பக்குவ மானது ஞானப்பெண்ணே. 155

வீரமும் ரெண்டிடை தான்சேர்த்து அரை
வித்தக மான செலமாகும்
காரணமாகப் பனிதனில் வைக்கவே
காரிய மாமடி ஞானப்பெண்ணே. 156

சித்தியாய் மூன்றுமே உப்பாச்சு யிதில்
சீக்கிர மாய்க்குப்பி தன்னிலிடு
பத்திய தாய்ச்சரக் கத்தனை யுமிதில்
பாய்ச்சவே கட்டிக் கரியில் நிற்கும். 157

நாகச் செயநீர்

நாகச் செயநீரை சொல்லவொண் ணாதிதில்
நல்லதோர் தங்கமு மாகுமடி
பாகமா கச்சர கத்தனையு மிதில்
பாய்ச்சிச் சுருக்கிடக் கட்டுமடி. 158

கட்டவே லிங்கத்தைச் சொல்லுகி றேன் நல்ல
காரணமான செயநீரில்
பட்டுமே நால்சாமந் தன்னில் சுருக்கிடு
பாகமாய்ச் சொல்கிறேன் கேளுங்கடி. 159

சுருக்குத் தாக்கியே வைத்துக்கொண்டு மேலே
சுத்தமானகவ சத்தைச் சொல்வேன்
பருக்க ரேக்குத் தகடுகத்தி யிதில்
பத்தவே தோய்த்துச் சூடன் தீயில் 160

நருக்கி வாட்டிடத் தானிழுக்கு மிதில்
நல்ல குருவாகுந் தானெடுத்து
உருக்கமாகப் பதனம்பண் ணிக்கொள்ள
உற்ற குருவாகும் ஞானப்பெண்ணே 161

நல்ல ரவிதனைத் தானுருக் கிப்பத்து
நாட்டிக் கொடுத்திட வேகருக்கும்
செல்ல மதிதனி லெட்டிலொன்று யிதை
சேரத் தங்கமாம் ஞானப்பெண்ணே 162

சாரக்கட்டு

சாரங் கட்ட வழி கேளுவேதை
சாற்றுகிறே நல்ல திதுசுளுவு
பாரமல்ல திது நாடியே பார்த்திடு
பத்து வயதாகும் ஞானப்பெண்ணே. 163

சோரச் செயநீரில் சாரத்தைத் தோய்த்திட
சுத்த ரவிதனில் போட்டெடுக்க
திரமான சுக்கா நீர்தனில் கட்டியே
தீநடு வில்வைத் தெரித்திடுநீ. 164

வாரமா கத்தீயை தானெரிக் கச்செத்து
வாகா யிருந்திடும் வாதிகளே
இப்படிப் போலவே ஐந்துதரமெரி
ஏற்றமுள்ள நவச் சாரங்கட்டும் 165

அட்டியில் லாமலே நாகத்தி லிட்டிட
அதுவே மணியாகக் கட்டிவைக்கும்
கட்டின நாகமுந் தங்கமுஞ் சேர்ந்தாலே
கனத்த வேதை களாகிவிடும். 166

வேதைகள் செய்யவே பாரமில்லை யிந்த
வேதையாஞ் சாரத்தின் போக்குமெத்த
பாதையாங் கைபாக மிப்படிச் செய்திடு
பாக்கிய முண்டாகும் ஞானப்பெண்ணே. 167

உப்புக் கட்டு

கல்லுப்பு வேதையைச் சொல்லு கிறேன் நல்ல
கல்லுப்பைச் சுக்கான்றன் நீரிலெரி
வெல்லு முனியுப்பு நீர்களுஞ் சேர்த்திடு
விந்தைய தாகச் சிவந்திருக்கும். 168

அந்தநல் லுப்பை யெடுத்துமே நாகத்தில்
அன்பாகச் செயநீரு தன்னில் துவை
இந்த விதமாய்ச் செயநீரை உட்கொள்ளும்
இன்பம் பெறச்சுக்கான் தன்னிலெரி. 169

வித்தமாகவே ஐந்து தரமெரி
வித்தக ரேரச வாதிகளே
புத்திய தாகவே தானே ரவிசெம்பில்
புத்தியு டன்குடு தங்கமதாம். 170

பாரை யுப்புவெகு வேதையு மாம்நல்ல
 பக்குவ மாகவே கட்டியெடு
காரம தாகவே தானிருக் கும்உப்பு
 காவிக்கு உப்பு நிலைத்துவிடும் 171

உப்பை யறிந்தாலே வாதிக ளேமனத்
 துப்பை யறிந்துமே செய்து கொள்ளு
முப்பூ நாகரசம் வீரமும் பாடி
 முன்னிலை தங்கமாம் ஞானப்பெண்ணே. 172

பச்சை நாகமெனச் சொல்லாதே ரசம்
 பாய்ச்சவே வேதைகள் மெத்தஉண்டு
இச்சையாய் வீரமுங் கூடவே சேர்ந்தாலே
 இன்பமாய் ஊற்றுப்போல் நீராமே. 173

நீரான நீரை எடுத்துக்கொண்டு இதில்
 நிர்ணய மாய்ச்சரக் கத்தனையும்
சோரவே யாட்டிச் சுருக்கிடு நீயுமே
 சுத்தமான தங்கம் ஞானப்பெண்ணே 174

தங்கம் விளைந்ததைக் காணீரே நல்ல
 தங்கச் செயநீரைக் கண்டாக்கால்
இங்கித மாகவே வாதம் நிலைத்திடும்
 இன்பம தாகவே தோழிப்பெண்ணே. 175

பொன்னையே செய்ய நினைவெடுத்து ரதிப்
 பெண்ணையே கண்டுமே யிச்சித்தாக்கால்
சொன்னதோர் வாதமும் பொய்யாச்சுது
 சூட்சம தாகுமே ஞானப்பெண்ணே 176

துருசு குரு

சுடலை யாடி யொருபலந் தானிதில்
 சுத்திக்கெந் திபலம் முக்காலாம்
நடலைப் பண்ணை யரைப்பலந் தான்வீதம்
 நாட்டியே வீரமும் காற்பலந்தான் 177

இப்படி மூன்றையும் ஒன்றாகப் பாணி
இச்சைய தாய்நீரை விட்டரைத்து
சொற்படி சாமமும் நாலாக அதை
சுத்தி அரைத்திடு வாதிகளே 178

அரைத்த உண்டை ரவிதனி லிட்டெடு
ஆண்மையாய்ச் சொன்ன கவசமிடு
புரைத்த பத்தெரு தானே புடமிடு
போக்கோடே தானே கருப்பாகும் 179

கருத்தத் துருசிலே காரமிடை பாதி
காதலாய்ச் சேர்த்து அரைத்துருட்டி
வருத்தமில் லாமல் ரவியில் வைத்திடு
வாகாகக் காய்ந்திடும் ஞானப்பெண்ணே 180

புடத்தைப் போட்டு எடுத்துருக்கு நல்ல
போக்கோடே சேர்ந்து சிவப்பாகும்
திடம தாகவே நாகச் செயநீரால்
சீக்கிரமாக அரைவறுத்து 181

நட்டணை யாகவே குப்பியி லிட்டுமே
நானா விறகினால் தீயெரிக்க
கட்டளையாகவே செக்கச் சிவப்பாகும்
காணும் நவலோகத் திலீய 182

சித்தர் புகழவே மாத்துமே ஏழரை
சின்மயமான குருவாகும்
பத்தமுடனே அதையெடுத்து வெகு
பாங்காக வைத்திடு ஞானப்பெண்ணே 183

துருசு வந்த யிடத்தினிலே-செய்ய
துப்பரவாகச் சிவந்துவிடும்
பரிசு மாகவே பார்த்து உழைத்தாலே
பலிக்கும் பாரடி ஞானப்பெண்ணே. 184

துருசுக்குரு

துருசு தான்பலம் ஒன்றெடுத்து நாகத்
துய்யச் செயநீரில் தான்துவைத்து
பருச மாகவே எட்டுநாள் போட்டிடு
பாகமாய்ச் சொல்கிறேன் கேளுங்கடி. 185

எடுத்துப் பூநீறு தன்னில் நடுவிலே
இட்டுப் பனிரெண்டு சாமமெரி
அடுத்தெடுத்துமே பார்வையிடச் செம்பு
ஐம்பது வாகுமே ஞானப்பெண்ணே 186

நாக முருக்கிற செந்தூர மிடை
நாட்டவே தான்குரு வாகுமடி
பாகமாய்த் தானே நொறுக்கு வெள்ளிதனில்
பத்துக்கு ரெண்டு கொடுத்திடவே 187

யோகம தாகவே ஆறு வயதாகும்
உண்மை யிதுரச வாதிகளே
பாகம தாகக் கடையிலே விற்றிடு
பலன் கிடைக்குமே ஞானப்பெண்ணே 188

பொய் வாதி

வாதஞ் செய்கிறே னென்றுசொல்லிப் பணம்
வாகாகத் தானே செலவுசெய்து
பேதக மாகவே பித்தலாட்டம்பண்ணி
பிதற்றித் திரிவா ருலகுதன்னில் 189

நாகச் செயநீரை தானறி யார்வாதி
நம்பித் திரிந்து இலைபிடுங்கி
போகமா னகுரு வெடுத்துச் சுட்டுமே
போக்கோடே பாவத்துக் காளாகி 190

நாதத்தில் வாத மிருக்குதென் றேசொல்லி
நாடியே பெண்ணைத் துடர்ந்துசென்று
போதம தாகவே நாதம் பிடித்துமே
பொல்லாத புத்தியாய்த் தானலைந்து. 191

வாதைப்பட்டு அதைத் தான் முறித்துக் கொண்டு
வாகாய்ச் சரக்கில் சுருக்குமிட
போதை மயக்கத்தால் கெட்டலைந்து பின்பு
போக்கோடே செம்பில் கொடுத்தெடுக்க 192

கரியதாக எடுத்தெரிந்து கெட்டு
கள்ளரைப் போல முழிமுழித்து
துரியமாகவே ஞானம்வந் தால்வாதம்
தும்பரவாக வருகுமென்று 193

காயாஷம் பூண்டுமே பிச்சை எடுத்துண்டு
கனக்கவே யொன்று மில்லாமல்
ஆயாச மாக அலைந்துபல் காட்டி
அலைந்து திரியாமல் வாதிகளே. 194

பாரமில் லாமலே நாகச் செயநீரை
பத்தியாய் வைத்து எடுத்துக் கொண்டு
தேறவே வாதங்கள் பார்த்துமே தேறியே
சித்தர் மரபினிற் சேர்த்துகொண்டு 195

கெவுனக் குளிகையும் பண்ணிக்கொண்டு சில
கெவுன மாக நடக்கையிலே
அவனைப் போல இருந்திடவே அருள்
ஆனந்த மாமடி ஞானப்பெண்ணே 196

ஞானம் வருமுன்னே பார்த்தெடு வாதத்தை
ஞானப்பிர காசமாய்த் தோன்றுமடி
வானவர் நாடெல்லா முன்னதாகும் நிசம்
வல்லமை யாகுமே ஞானப்பெண்ணே 197

வெடியுப்பு வேதை

பொட்டளை வேதையை சொல்லுகிறேன் புத்தி
போக்கோடே செய்து அறிவில் நில்லு
கட்டளை யாகவே ஐந்துகாய்ச்சலுப்பு
காரிய மாகப் பலமெடுத்து 198

சட்டமாய் நாகச் செயநீரில் தோய்த்து
சத்தி ரவியெட்டு நாள்போடு
திட்டம தாக எடுத்துமே சொல்கிறேன்
சீக்கிர மாயானைத் தந்தமதை 199

முட்டென ராவியே குண்டுமணிப்பசை
மூர்க்கமாய்ப் போட்டுக் குழப்பிமேலே
கட்டளையாய்வெடி யுப்புக் கம்பிமேலே
கட்டிக் கவசம் ரவியிலிடு. 200

வட்டம தாயுமிப் புடத்தி லிட்டிடு
வாகா யெடுக்கச் சிவப்பாகும்
திட்டம தாக அதையெடுத்துப் பின்பு
சீராக வேபாரு ஞானப்பெண்ணே. 201

விந்தையு டன்செம்பு பத்துக் கொன் றிடவே
வேதையென்ன மாத்துப் பத்தாகும்
சிந்தைய தாகவே வாசியோ கஞ்செய்து
சீக்கிர மாகவே வாழ்ந்திருப்பீர் 202

உப்பினா லேகண்ட வர்ணத்துக் குப்புடம்
உப்பிலே தானே புடம்போடு
தப்பித மில்லா தகுவனியுஞ் சொன்ன
தன்மையி தாமடி ஞானப்பெண்ணே. 203

செந்தூரம் செய்துமே காயசித்திபண்ணு
சித்தியாய்க் காயம் வலுத்துவிடும்
முந்தி யிரதச்செந் தூரமுஞ் செய்துமே
முக்கியமாக நரம்பிருகும் 204

ஏமனுக் காளாகப் போகா மலிரு
இன்பமாய்ச் செந்தூரம் பண்ணியுண்ணு
கவனமாகவே பத்திய தாயுண்டு
காலத்தைத் தான்கழி ஞானப்பெண்ணே. 205

பச்சையில் வேதை யொருகோடி நல்ல
பத்துப் புடத்தி லிருகோடி
இச்சைப் பாடாயது யெப்படி யாகுமோ
என் றெண்ணிக் கொண்டு திரியாதே. 206

பெண்ணர சாளுக் கழகேது நாமும்
பேணிப்பொன் னிட்டா லழகுவரும்
இன்னிலந் தன்னிலே பொன்னுமே உண்டானால்
இனிய செல்வமாம் ஞானப்பெண்ணே. 207

சவுக்காரச் செய நீர்கள்சொன் னேனிதில்
சற்றுமே சோதித்துப் பார்த்துக்கொள்ளு
மவுனம தாகவே பார்த்துக் கொண்டால்வாசி
வாதயோ கம்வரும் ஞானப்பெண்ணே. 208

நாகக் கட்டு

யோகமுண் டாகவே நாகக்கட்டுச் சொல்வேன்
உற்றுமே கேள்ரச வாதிகளே
நாக மொருபலந் தானெடுத்து யிதை
நாடி யிலுப்பைநெய் யில்சாய்ந்து 209

பாதக மில்லா யிருபத் தொருதரம்
பத்தியே சாய்த்திடக் கண்ணடங்கும்
சேதம் வராமலே தானெடுத்து அதை
செய்ய முறைகேளு ஞானப்பெண்ணே. 210

அடங்கும் நாகம் பலமுருக்கிச் சூதம்
அன்பாக வேயிடை தான்சேர்த்து
துடர்ந்த சாரப் பொடிதனை விட்டுமே
தூவியே தங்கமும் நாலிலொன்று. 211

சேர்த்து உருக்கிற தன்முகத்தில் சாரம்
சேர்த்துமே போட்டு உடைத்துக் கொண்டு
பார்த்துமே வீரத்தை யெட்டிலொன்றுசேரு
பத்தித் திராவகம் விட்டரைத்து. 212

அரைத்து மேஉமி தன்னில் வறுத்திடு
அன்பாகக் காசு தனிலிடவே
வரைத்து மேபனி ரெண்டு சாமமெரி
வாகான செந்தூர மாகுமடி 213

செந்தூரந் தன்னை ரவிதனி லிட்டிடு
சித்திர மாக இருபத்தொன்றில்
சிந்தைய தாகவே ஏழரை மாற்றாகும்
சித்தம் நிலைக்குமே ஞானப்பெண்ணே. 214

புத்திகள்

சித்தம் நிலைத்துமெய் ஞானம் பார்த்துச்சிவ
யோகத்தைப் பார்த்து நிலையில்நில்லு
பத்தியே நீங்களும் முத்தி பெற்றுவாழ
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 215

ஞானந்தா னென்ன லெகுவாமோ பொய்
ஞானிக்கு வாதங்கள் வாராது
பானமென் றெண்ணியே கள்ளுக் குடித்தாக்கா
பாகம தாகுமோ ஞானப்பெண்ணே. 216

பாகம தாகவே வாதம் வருமென்று
பற்றறச் சாராயங் கட்குடித்தால்
மோகம தாகவே பூரித்துக் கும்பித்தால்
மோசங்கள் தான்வரும் ஞானப்பெண்ணே. 217

ரசத்தைக் கட்ட மனதுகந்து கஞ்சா
நன்றாய்க் குடித்து மனமகிழ்ந்து
பிசகாய்க் குடித்து இரும லதுமிஞ்சி
பேசித் திரிவாரே ஞானப்பெண்ணே. 218

ஞானத்தைப் பார்த்து மனமகிழ்ந்து யிவர்
நாடியே பிச்சை யிரந்துவுண்டு
மோனம் படித்திடில் வந்திடு மோயிதில்
முத்தி நிலைக்குமோ ஞானப்பெண்ணே. 219

சூதுசெய் தாலு முடியாது நல்ல
சுத்த வெளியாகத் தான் போவாய்
வாதுகள் கூறாமல் வாதத்தைப் பார்த்தாக்கால்
வந்து லபிக்குங்காண் வாதிகளே. 220

வாதிக ளென்றுமே பேராகி ரசம்
வாதைப்பட் டுச்சுட்டு ஓடிப்போக
நீதியாய் வாதங்கள் பொய்யென்று சொன்னாக்க
நேர்மைய தாகுமே ஞானப்பெண்ணே.

உவமானங்கள்

நெல்லுப் பயிர்கள் விளையவே தான் தண்ணீர்
நிச்சய மாகவே பாய்ச்சுகிறீர்
புல்லுமே சேர்த்து விளைந்தது போலவே
புத்தியுமான ரசவாதம் 222

நெல்லுக் கிறைத்தநீர் போலாச்சு யிது
நேரான வாதமுந் தானாகும்
புல்லுக் கிறைத்தநீர் போலாகும் பாரு
புத்தியில் லாததோர் வாதிகளே 223

வாதிக ளென்றுமே பேர்படைத்து ரச
வாதத்தைச் சுட்டுக் கரியாக்கி
நீதியில் லாமலே பொய்கள் சொன்னால்கரு
நிலைக்கு மோசொல்லும் ஞானப்பெண்ணே. 224

வாதிகள் பிரட்டு

காந்தக் கிண்ணமுஞ் செய்தோமென் பார்வது
காந்த முருக்கினே னென்று சொல்லி
பாந்த மாகவே பணம்பறிப் பாரவர்
பக்கிரி யல்லவோ ஞானப்பெண்ணே 225

பக்கிரி சொல்லையும் நம்பாதே மனப்
பாஷாணந் தன்னை நினையாதே
துக்குரி யாகவே கட்ட ரசவாதி
தோசி வாதிகளை நம்பாதே. 226

சாஸ்திரந் தன்னையும் நம்புங்கடி வாலை
சாமி யகுவனி சொல்லை நம்பு
ஏத்திர மென்று நீ பொய்ஞானி சொல்லையும்
இன்ப மாகநம்ப வேண்டாங்காண் 227

நம்புவது கும்மி யின்பேச்சு யிதில்
நன்மை யுண்டுபலன் தான் கிடைக்கும்
வெம்பித் திரிந்து கருவேதை காணாதோர்
மேன்மை யுமில்லையாம் ஞானப்பெண்ணே. 228

சித்தர் சாஸ்திரம்

இராம தேவர்கரு வித்தையொன்றே சொன்னார்
நாட்டம தாகக் கருமறைத்தார்
அராமா வென்றுக்கும் மிப்பாட அருள்
ஆனந்த மாகுமே ஞானப்பெண்ணே 229

போக ரொருகடைக் காண்டஞ் சொன்னாரதில்
போக்காகச் சொல்லிக் கருமறைத்தார்
வாகாக வேயிதை ஆராய்ந் தாலிதில்
வாதம் நிலைக்குமே ஞானப்பெண்ணே. 230

சாஸ்திரஞ் சித்தர் மறைத்துச் சொன்னாரிதில்
சாதனமான உலகுதன்னில்
பார்த்துநான் சொன்னதோ ரிக்கும்மியைப் பார்த்தால்
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 231

தங்கமு நீராகச் சொல்லுகி றேனிதை
தாக்கியே சோதித்து நீபாரு
பொங்கம தாகவே தங்கமும் நீறினால்
போக்கோடு எல்லாமுந் தங்கமதாம் 232

நாகம் பலமொன்று தானெடுத்த யிதில்
நன்மையாய்ச் சூத மிடைகொடுக்க
பாகம தாகவே எட்டி முழுங்கிடும்
பண்பாய் வீரமு மவ்விடைசேர் 233

யோச[illegible] தாகத் திராவகத் தாலரை
[illegible]க்க வழித்துமே சொல்லுகிறேன்
[illegible]த்தங்கத் தகட்டின் மேலங்கி
[illegible]ன்பாய்க் கவசமுந் தான்கொடுத்து 234

ப[illegible]ங்கள் நீக்க ரவியில் வைத்துவெகு
பதன மாயெடு வாதிகளே
வாசம தாகப் புடம்போட யிதின்
வலுமை கேளடி ஞானப்பெண்ணே. 235

போட்டு எடுக்கவே தங்கம் நீறாமிதை
போக்கோடு செம்பிலே தான்கொடுக்க
வாட்டுமே செம்பொன்னு மாகுமடியிதில்
வலுமையாகுமே ஞானப்பெண்ணே. 236

துருசுக் குரு

ஞானமும் பார்க்கவே சொல்லுகி றேன்நல்ல
நாகம் பலமொன்று தானெடுத்து
தானே சூதமது ஒன்றுமே சேர்த்திட்டுத்
தாக்க யிடைவீரந் தான்போடு 237

நீல கண்ட னதுக்கிடையாம்சேரு
நேரா யெருக்கம்பால் விட்டரைத்து
தாலம தாக ரவிதனில் காயவே
தாக்கியே அண்டோடு சுண்ணம் பண்ணி. 238

பண்ணியே மென்மேலு மிட்டுக் கனம்ரெம்ப
பாகமா கப்புடந் தான்போட
எண்ணம தாகக் குருவாகு மிதை
இன்பமாய் பொன்னாகக் கேளுங்கடி 239

செம்பு உருக்கி இருபத்தொன் றிலிதை
சேர்த்து உருக்கவே தங்கமாகும்
வம்புசெய் யாமலே செம்பொன்னு மாகுமே
வாதம் நிலைக்குமே ஞானப்பெண்ணே. 240

வாதம் நிலைக்கவே வாலைரச மதின்
வகையைச் சொல்கிறேன் நீகேளு
பேதமில் லாச்சுத்தி சொல்லுகி றேனிதில்
பேதக மில்லையே ஞானப்பெண்ணே. 241

இரசசுத்தி முறை

ஆகவே சூதம் பலமுமொன்று அதில்
அன்பாகக் கல்லுப்பு ரெண்டுங்கூட்டி
பாகமாய்க் கற்றாழம் பாலா லரைத்திடு
பண்பாகச் சுத்தியாம் ஞானப்பெண்ணே. 242

சுத்தியான ரசங் கரண்டி தன்னிலே
சுத்தமாக விட்டுப் பின்கேளு
பத்திய தாகவே அண்டோடு பலம்
பன்னை பலமொன்று தானிருத்து 243

சித்திர மாகவே கண்டர் பலமொன்று
சீக்கிர மாகவே சாரமொன்று
முத்தியே சீனமுஞ் சுண்ணம் பண்ணியிதில்
முத்தி பெறவேவெங் காரச்சுண்ணம் 244

கண்ட படியே யிடைநிறு வப்படி
காரிய மானதோ ரப்பிரகம்
துன்டம தாய்வீர மொக்க யிடைசேர்த்து
துப்பர வாக அரைத்தெடு நீ 245

கண்ட பாணியரை வெண்மைய தாகிடும்
காரிய மாகவே காயவைத்து
உண்ட புகைநீர்விட் டெல்லாஞ் சாமமரை
உற்றபோக் கோடே தெளிவிருத்து 246

பவங்கள்போக்கிடும் நீரினி லேயொரு
பக்குவங் கேளடி ஞானப்பெண்ணே
கவன மாகவே பூரம்போட்டு யிதில்
காரண காகக் கரண்டியிலே 247

சுருக்கு யிட்டிட வாலையாகு மிதில்
சுத்த மாகரசம் ஓடாமல்
பெருக்க வாலை ரசத்தைப் புடமிட
பேசவே கேளடி ஞானப்பெண்ணே 248

மத்தங் காயிலே உட்செலுத்திப்புடம்
வாகாக நூறு புடமிட
சித்தம தாகவே கட்டி நிற்கும் வேரை
சித்திபெற முத்தி உண்டாகும். 249

கெவுனக் குளிகைகள் தானாகு மிதில்
கேட்ட பொருளெல்லாஞ் சித்தியாகும்
மவுன சித்தியு மாகுமடி யிதில்
வாகாய் வசியமு முண்டாகும். 250

ஆகுமே சூதத்தைத் தானெடுத்துக் கட்ட
ஆதியான சரக் கத்தனையும்
ஆகுமே முன்னே சுருக்கிட்டுக் கட்டியே
அன்பாகத் தான்புடம் போட்டெடுக்க. 251

எடுக்க வே:சாக் கத்தனையுங் கரி
இன்பம தாக உருகிநிற்கும்
அடுக்க ஏழரை மாத்தாகு மிதில்
அத்வைத மாகுமே ஞானப்பெண்ணே. 252

வாதி கரிச்சுட வேண்டாங் காணிதில்
வல்லமை யாகவே பாவம்வரும்
சேதப் படப்பணம் போகிவிடு மிதில்
சேதியில்லை புத்தி ஞானப்பெண்ணே. 253

சுட்டால் வாதமு முண்டாகு மிதில்
சுத்த இருதய மில்லாமல்
கெட்டால் வாதம் நிலைக்குமோ சொல்லடி
கேள்வியைக் கேட்டால் பெலமாகும். 254

மூலிகை தன்னில் ரசங்கட்டிட வாதி
முக்கிய மாக இலைபிடிங்கி
போலிய தாகவே கட்டிப் பார்த்துஓடி
போச்சுதே என்று நினைவுகொண்டு 255

ஆயாசப் பட்டு அலைந்துமே சுற்றியே
ஆடித் திரிவா ருலகினிலே
காயாச மான பெரியோர் மூலிரசங்
கட்டுவதைச் சொல்வேன் முத்திபெற 256

ஆதிய தான மலைதனில் பாஷாணம்
அன்பாய் விளைவுகள் மெத்தஉண்டு
சோதிபோல் மூலிகை தான்முளைக்கும் அதை
துப்பர வாகப் பிடுங்கிவந்தே 257

பாதி மதியணி யீசனருளாலே
பாக்கியங் கள்தானும் பெற்றிடலாம்
நீதிய தாகச் சரக்கைச் சுருக்கிடு
நேர்மைய தாய்க்கட்டும் வேதையைக்கேள். 258

உப்பு வெளியிலே மூலி பிடிங்கியே
உண்மை யத்தாய்ரசங் கட்டச்சொன்னால்
தப்பிதம் வந்திடுங் கட்டாக மாட்டாது
தாரணி யில்ரச வாதிகளே. 259

வேதைய தாக இருந்திடுங் காண் நல்ல
வேதையு மாகவே கண்டிடுங்காண்
பாதையும் ரெம்பவு மாகுங்கா ணுமிதை
பற்றியே கொண்டாலே வாதம்வரும். 260

தங்கம் விளைந்திடும் பூமியிலே மேலே
தான் மண்ணைத் தானே யெடுத்துவந்து
இங்கித மாக ரவியி லுருக்கிட
இருந்தாலுந் தங்கமாம் ஞானப்பெண்ணே. 261

நேத்திரங் கண்கள் படைத்திருக்க விதி
நேத்திரங் கண்கள் தெரியாட்டால்
பார்த்தாலுந் தோணலை என்றுசொன்னாலது
பாதக மாமடி ஞானப்பெண்ணே. 262

பாதை நடந்து வழிகடந் தால்மனப்
பாதையும் செவ்வைய தாய்க்காணும்
போதை யாகவே திரிந்தாக் காலிவர்
பொய்க்குரு வல்லவோ ஞானப்பெண்ணே. 263

கட்டினால் பொன்னுண்டு மெய்ச்சரக் குகளை
கட்டாவிட் டாற்பல னென்னவுண்டு
கொட்டினால் தேளா மெனநினைப் பாரவர்
கொட்டா விட்டால்பிள்ளைப் பூச்சியென்பார். 264

திட்டம தாகவே நீதா னும்வெகு
சிறப்பாய்ச் செய்திடப் பாருங்கடி
நட்டணை யாகவே பார்த்தாக் கால்வாதம்
நாடியே வந்திடும் ஞானப்பெண்ணே. 265

அப்பிரேகச் செந்தூரம்

அப்பிர கஞ்சத்தி நாதமடி வாதி
ஆரறி யப்போறார் லோகத்திலே
[illegible]த மில்லாமல் சத்தி நாதமிதை
தப்பாமற் பார்த்து செயப்படுத்து. 266

வேதைகள் ரெம்பவு மாகுமது வேதை
விந்தைய தாகவே வந்திடுங்காண்
பாதைகள் செவ்வையா யாகுமது தெய்வ
பக்தி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 267

அப்பிர கம்பலம் ரெண்டெடுத்து யிதில்
ஆன தோர்வீர மிடைசரியாய்
முப்பொழு தாகவே பாணியி னாலரை
முத்திபெற வெண்ணெய் யாகுமடி. 268

வெண்ணெய் யெடுத்துமே வில்லையாகதட்டி
வெண்டி ரவிதனிற் காயவைத்து
உண்ணவே தான்புடம் காட்டமா கப்போட்டு
உண்மையாய்த் தான்பார் பவளநிறம் 269

பவள மானதில் சீனச்சுண் ணமிடை
பாகமாய்ச் சேர்த்து அரைத்துது
தவள மாகவே நீறி யிருந்திடும்
தானே வேதைகள் மெத்தவுண்டு 270

நீறின அப்பிரகந் தானே யெடுத்ததை
நீறிடத் தாரமே லங்கியிட்டு
பாரிய தாகக் கொடுத்துப் புடமிட்டுப்
பார்த்து எடுத்திடும் பெண்ணரசே. 271

அரசே தாளகம் நீறிவிடு மிதில்
ஆதியா னசெம்பு நீறிலொன்று
உரச மாகக் கொடுத்து எடுக்கவெ
உண்மையாய்த் தங்கமு மாகுமடி. 272

தாரத்தைப் போலவே சொர்ணமில்லை யிதில்
தாளகத்தைப்போல வர்ணமில்லை
நேரொத்த சீஷனும் பார்த்தாக் கால்வாதம்
நிலைத்துப் போமடி ஞானப்பெண்ணே. 273

நிலைக்க ஓர்சேதி சொல்லுகி றேன்பணம்
நேர்மைய தாக விளைவாகும்
வலைக்கு ளகப்பட்ட மான்போ லேரச
வாதம தாமடி ஞானப்பெண்ணே. 274

தாம்பிரச் செந்தூரம்

அப்பிரக நவ நீதம்பண்ணி ரவி
ஆன பதத்தி லிடையீய
தப்பித மில்லாமல் உடைந்து போகுமே
தானே சிவப்பாகும் ஞானப்பெண்ணே. 275

சிவப்பா கரவி தான்சிவக்கு மதில்
சிவப்புப் புகைநீரை விட்டரைத்து
உவப்பா கப்புடம் வைத்தெடுக்க நல்ல
உருகிச் செந்தூர மாகுமடி 276

செந்தூ ரஞ்சூதச் செந்தூரம் அதை
சேர்த்து இடைக்கிடை விட்டரைத்து
பிந்தா மல்புகை நீரையிட் டேயரை
பேதம தாக்கி விடுங்காணும். 277

இரசச் செந்தூரம்

விட்டுமே லிங்கமும் பூத்த ரசத்தோடே
வேதனை யாக அரைவருத்து
திட்டுமே காசியின் மேரி லடைத்தெரி
தீர்க்கமாய்ச் செந்தூர மாகுமடி. 278

செந்தூரந் தன்னிறம் முருக்கம் பூப்போலே
சிவப்ப தாக யிருந்துவிடும்
நந்தூரஞ் செம்பினில் நூற்றுக்கு ஒன்றிடு
நாடி மிகத்தங்க மாகுமடி 279

தங்கத்தைக் கண்டு மகிழா தேநீ
தனிப்பல் லாக்கினி லேறாதே
இங்கித மாகவே வாசியோ கம்பாரு
என்று மிருப்பாயே ஞானப்பெண்ணே. 280

ஞான மென்றுதா னலைவார் கள்சூத
ரசவாத வித்தையைக் கண்டுகொள்ளார்
பான மென்றுதா னலைந்தோர்கள் யிந்த
பான மெப்படிக் காண்பாரோ. 281

இப்படி யொன்றுஞ் சுடாதிருந் தால்வாதம்
எப்படி வந்துனக் குண்டாகும்
தப்பித மில்லாமற் சுட்டுச் சோதிக்கவே
தானே நிலைக்குமே வாதங்களும் 282

முப்பூ

முப்பூ வென்பது நாகரசம் யிதில்
முடிவு வீரங்கூ டச்சேர்ந்தால்
அப்புச் செயநீரு மாகுமடி யிதி
லான சரக்கெல்லாங் கட்டுமடி. 283

கோணியி ரைக்கநீ ருண்டாகுமிதில்
 கெட்டியாய் நாதம் விலகிலிடும்
பாணி யிறைக்காது போனாக்கால் வாதம்
 பதி நிலைக்குமோ ஞானப்பெண்ணே. 284

சாவியால் பூட்டுத் திறக்கறி யாவாதி
 சாவியைக் கையிலே வைத்துக்கொண்டு
செவியு மாகிய கையுநோ குதென்றால்
 சீர்த்திய தாகுமோ ஞானப்பெண்ணே. 285

அப்பிரகச் செந்தூரம் பண்ணிக்கொள்ளு யிதில்
 ஆன ரசங்கட்டும் வேதையுமாம்
தப்பித மில்லாமற் சொன்ன படிபோலத்
 தாட்டீக மாகவே சோதித்தெடு 286

சோதித்துப் பார்க்கத் தெரியு மதுவாதம்
 சொன்ன முறைப்படி மூன்றுதரம்
வாதித்துப் பார்த்தாலல் லோதெரியும்நல்ல
 வழியு மாகுமே ஞானப்பெண்ணே. 2

வழி நிலைத்து ரசவாதம்வந்தால்
 வாயாலே வாதத்தைச் சொல்லாதே
பழிய தாகுமே வாயினால் சொல்லிவிட்டால்
 பற்றி யிழுப்பாரே ஞானப்பெண்ணே 288

தோஷங்க ளென்று தெரியா மல்வாதி
 சுட்டு அவரசப் பட்டுழன்று
மோசப் பட்டுச்சில வாதிகளும்பெண்ணை
 மோகமாய்க் கூடி யனுபவிப்பார் 289

தாகமாய் வாதத்தைப் பார்த்தால் முடியுமோ
சற்றே யுற்றுப்பாரு தோழிப்பெண்ணே
பாகமாய்ப் பெண்டுடன் கூடியிருந்தாக்கால்
பாக்கியம் வாய்க்குமோ ஞானப்பெண்ணே. 290

கண்டுமே கும்பிடு வாருல கோர்நல்ல
காணிகாட் சிகள் நிலையாதே
கண்டுதெரிசனம் பண்ணிக்கொண்டால்காணி
காட்சிய தாகுமே ஞானப்பெண்ணே. 291

காணி தேடினால் நெல்விளையும் காணி
காதலாய்ப் போச்சுதென் றாலுனக்கு
பேணு வாருனக் கெள்ளளவு மில்லை
பேசப் படாதடி ஞானப்பெண்ணே 292

காலா காலந் தன்னைப்பார்த்து நல்ல
காரிய மாகக் குருமுடித்து
நாலா காலமுந் தான்தெரிந் தலிதில்
நன்மைப் பொருளாகும் ஞானப்பெண்ணே. 293

நிசஞ்சொன் னாலுமே சம்மதி யார்வாதி
நேரான பொய்களைச் சொன்னாக்கால்
கசம தாகவே நம்புவான் பாரடி
காரிய மான வுலகுதனில் 294

கவனக் குளிகையும் தாரேனென் பாருசிக்
காந்தத்தைக் கிண்ணமுஞ் செய்தேனென்பார்
அவனும் நம்பியே பார்ப்பான்காணிது
ஆதிப் பிரட்டடி ஞானப்பெண்ணே 295

பிரட் டுருட்டிதனில் செல்லாமல் நீயும்
பேணியே செந்தூரம் பண்ணிக்கொள்ளு
திருட்டு மார்க்கமாய்ப் போகா மல்ரசம்
சிக்கப் பவளமாய்ச் செய்துகொள்ளு 296

பவள நிறத்தைத் தேனிலே உண்டிட
பாதி மதியணிந் தார்போல
கவன மாகவே பேதிக்க வேயதற்
கானகற்பங்கள் மிகவும்முண்ணு 297

கற்பத்தைச் சாப்பிடு முன்பாகப்பேதி
காரிய மாகக் கொடுக்கவேணும்
அற்பமி தென்று நினையா தேபேதி
அன்புடன் சொல்கிறேன் கேளுங்கடி 298

அகஸ்தியர் குழம்பு

பேதிக் குழம்பதை அகத்தீசர் நன்றாய்
பேதமில் லாமலே சொல்லிவைத்தார்
போதினைக் கைப்பாகம் சொல்கிறேன் நல்
புதுமை யாமடி ஞானப்பெண்ணே. 299

ஆனந்த மான பெருங்காய மதில்
அத்வைத மாகிய ரோகணியும்
தானந்த யிந்துப்பி ரதமுடன்காரம்
தா்ர மனோசிலை திப்பிலியும் 300

வானந்த மான கருஞ்சீர கமுடன்
வாகாகச் சுக்கு முடன்சேர்த்து
மோனந்த மாயிடை ஒன்றுக்கு ஒன்றதாய்
முந்திய பச்சைய தாய்நிறுத்து 301

நிறுத்த யிடைக்கிடை தான்வர ளங்கரி
நிச்சய மாகக் கருக்கிக்கொண்டு
கருத்த முன்சரக் கத்தனை யும்போட்டு
காதவா யாவின்மோர் விட்டரைத்து 302

அரைத்தருந்த ரவின் பித்தமெடுபடும்
அன்பாக வாந்தியும் பண்ணாது
நிரைத்த சாமமி ரண்டுமே தானரை
நிட்சயமாகக் கொடுக்கவுங் கேள். 303

குழம்பு அனுப்பானம்

அனுப்பா னத்தையுஞ் சொல்லுகி றேனுயர்
ஆனசுக் குக்கியா ழத்திலிட
ம‌ வா னரோக மறுபத்தி னாலுமே
ாகாக ஒடியொ ழிந்திடுங்காண் 304

கடுக்காய் வெண்ணீரில் தானிட வுங்கேளு
காச மிருமலுந் தான்போகும்
அடுக்க மிளகு கியாழத்தி லிட்டிட
அலுத்துபோகும் வெகு சுரமே. 305

நெய்யினி லிட்டிட மூலம் பதினைந்தும்
நேர்மைய தாக ஒழிந்தோடும்
கையில் மிளகுக் கியாழத்தி லிட்டிட
கரிய மகோதர உப்பிசமும் 306

வையகந் தன்னிலே நில்லாம லோடிடும்
வண்மையு மாகு மடிமயிலே
செய்யவே இம்முறை கைப்பாக மாகவே
செய்து முடித்தால் வியாதியறும். 307

இஞ்சி பிழிந்து அதனிலிட்டாற் கேளு
இன்பமாய்ச் சன்னி முறிந்துவிடும்
அஞ்சித் திரிந்தாலே பச்சைபச் சையென்ற
தாகுங் குழம்பு வலுவ...மே.. .08

கரங்கு வேப்பெண்ணை தன்னிலே இட்டிட
கண்ட சன்னியோடும் ஞானப்பெண்ணே
சிரங்கு புண்புரை தன்னில் தடவிட
சீக்கிர மாகவே ஆறிவிடும். 309

வெள்ளை மிளகுக் கியாழத்தி லிட்டிட
விட்ட குறைவலி குன்மம்போகும்
தெள்ளுதமிழ்கலை சோதித் தகத்தீசர்
தீர்க்கமாய்க் கைபாகங் காட்டினர்காண் 310

அள்ளல்க ளெல்லாமுந் தீர்ந்துவிடும்வெகு
ஆண்மைக ளுண்டாகும் மோனமிகும்
உள்ளதோ ரானந்தக் கும்மி யிதுதனில்
உற்றது சொன்னேனே ஞானப்பெண்ணே 311

இந்தக் குழம்பு தனைக்கொடுத் தேவாய்வு
இன்பமாய்ப் போக்கிச் சீரந்தன்னில்
சிந்தைய தாக அயக்கற்ப முண்டிட
செல்வமுங் காயம் நிலைக்குமடி 312

நிலைக்க வேஅய கற்பஞ்சொல் வேனிதை
நிர்ணய மாகவே உண்டுதேறு
வலைக்கு ளகப்பட்ட மானைப்போ லேநோய்
மறுகி யோடுமே ஞானப்பெண்ணே. 313

அயக்காந்தச் செந்தூரம்

மறுகியோட அயமொரு சேரெடு
வாகாகக் காந்தமு மவ்விடைக்கு
தருகத் திராவகம் விட்டரைத்து வில்லை
தான் செய்து யிட்டு ரவிதனிலே 314

இட்டு எடுத்துப் பெரும்புட மாகவே
இன்பமாய் ஐந்து புடம்போடு
பட்டுநூல் போலச் சிவந்து இருக்குமே
பாகமி தாமடி ஞானப்பெண்ணே. 315

பாகம தாகவே செந்தூ ரந்தனில்
பாய்ச்ச யிடைக்கிடை லிங்கந்தன்னை
யோகம தாகத் திராவகம் விட்டரை
உற்றதோர் வில்லை ரவிதனிலே _o

காயவைத் துப்புடம் லெகுவ தாய்ப்போடு
காரண மாகக்கை பாகமதாய்
உபாயம தாகப் புடமது தீர்ந்திடும்
உண்மைய தாமடி ஞானப்பெண்ணே. 317

வெண்ணெய்யும் நெய்தனி லுண்டிடவேதேனும்
மிக்காக வல்ல வலியுங்குன்மம்
உண்ணவே மண்டலம் மேகவெடி முதல்
உத்த வாதமென்ப தேகிடுமே 318

சூலை பதினெட்டும் தான்போ கும்வெகு
சுத்தமாய்ப் பித்தமுந் தான்போகும்
ஆலைக் கரும்புபோல் பாண்டுகளும்வெகு
ஆதியுமாகிய வெட்டை முதல் 319

சற்பம்போல் சீறிடும் வாயு முதல்குத்தும்
தானே யோடிடுங் கற்பமுண்டால்
கற்பமுஞ் சாப்பிடு முன்னே ஒருமாதம்
காயம் வலுக்குமே ஞானப்பெண்ணே. 320

நேர்த்தியாய்ச் சூதச்செந் தூரமுண்ணு நல்ல
நேயம தாய்ரத்த முண்டாகும்
பார்த்திபன் போலவே வாழ்ந்திட லாம்நல்ல
பக்குவ மாமடி ஞானப்பெண்ணே.

உண்ணவே மண்டலந் தன்னிலே காயமும்
உரத்த நல்ல உறுதியதாம்
நன்னய மாகவே சாவுகள் போச்சுது
நன்றாய் வலுத்தது தேகமடி

தேகம் வலுக்கும்உப் பெண்ணெய்யும் விட்டிடு
செப்பும்வேப் பெண்ணெய்யுந் தள்ளிவிடு
பாகமா கச்சூதச் செந்தூரந் தன்னையும்
பக்தி விசுவாசத் தோடேதினம்.

தின்றிடத் தேகம் வலுவாகு மின்னல்
தீர்க்கம தாயிடி தான்விலகும்
மண்ணுள்ள போதேதான் வந்த கெடுதிகள்
மாயங்க ளாகவே தான் விலகும்.

விந்துகள் மேலேறும் கீழேபோ காதிது
வித்தக ரான அகத்தீசர்
தந்திடுங் கைபாகத் தின்வரி சையிது
சத்திய மாக யெனக்குரைத்தார். 325

சொன்னதோர் பாகத்தை நம்பியே நான்செய்து
சூட்சமாய்க் கைபாகம் நான்தேர்ந்தேன்
முன்னே தானென்பேரை சித்தர னேகம்பேர்
முக்கிய மாகவே வாழ்த்தினார்கள். 326

சொன்ன சொல்லுப்படி வைத்து எடுத்திட
சூட்சம காயமும் சித்தியதாம்
நன்னய மாகவே வாதமுஞ் சித்தியாம்
நானிலத் தோர்களு மெச்சுவார்கள் 327

பொன்னையே கண்டாலும், சித்திமுத் தி ாகும்
பூதலத் திலுள்ள சித்தர்களும்
சின்னம தாகவே வாதிகள் சொல்வார்கள்
சித்தி பெறவாதந் தான்பாரு 328

நாகக் கட்டு

நாகத்தைக் கட்டவே சொல்லுகி றேன்பாரு
நாடியே சேரது ஒன்றெடுத்து
பாகம தாக யிலுப்பையா மெண்ணெய்யில்
பற்றி யிருபத்தொ ருநாளந்தான் 329

சாய்த்து எடுக்கவே கண்ணடங்கு மப்பால்
சாற்றவே சொல்லுகிறேன் கேளுங்கடி
பார்த்துப் பிடித்திட வேநுணலை யதைப்
பற்றி யரைக்கூடை கொண்டுவந்து 330

நேர்த்திய தாக இடைசாரம் நல்ல
நேர்மைய தாக நிறுத்தெடுத்து
காத்திர மாகவே சேர்த்துயிடித்திடு
காதலாய்ப் பானையி லிட்டிடவே 331

குழித் தயில மிறக்கிடவே இது
கோடி கவராகும் வேதையுமாம்
வழிய தாய்த்தேவர் தானுரைக்கவாதி
வாகாகக் கேட்டு மனமகிழ்ந்து 332

சிந்தைய தாகவே சொர்த்தைக் கட்டிட
சீக்கிர மாகவே சொல்லுகிறேன்
வி தைய தான தயிலஞ் சுருக்கிட
மெல்லன நாகமங் கண்ணடங்கும் 333

பாகம தாகவே அண்டச் சுண்ணங்கட்டி
பத்து எருவிலே தான்போடு
யோகம தாகவே வெள்ளிபோ லாகுமே
உற்றே எடுத்திடை தங்கஞ்சேரு 334

தோகைய ரேபுட்டுப் போலே யிருந்திடும்
தொக்க ரவிதனில் நூறிலொன்று
ஆகம தாகக் கொடுத்திட வேதங்கம்
ஆதியே யெட்டரை யாணிக்கொக்கும் 335

இந்தப் படியாக நான்ஆதி தேவர்க்கு
இன்பமாய்ச் சித்தருக் குமுரைத்தேன்
சிந்தை கலங்காதே உப்புக்குங் காவிக்கும்
சீக்கிர மாக நிலைத்திடுமே. 336

நிலைக்க வேபொன்னைக் கண்டவு டனதை
நேராக வைத்துச் செலவுசெய்து
கலைக்கை யாகவே வைத்துக்கொண் டாலது
காணி காட்சியாமோ ஞானப்பெண்ணே. 337

ஆற்றங் கரையிலே கட்டுச்சா தந்தன்னை
அவிழ்த்து வைத்துக்கை காலலம்ப
நேர்த்திய தாக வயிரவன் கண்டுமே
நேராய்ச்சாப் பிட்ட கதைபோல 338

நாகச் செயநீரை பார்த்துக் கடிநல்ல
நாகத்தைக் கட்டு திரமாக
பாகமாய்த் தானே குருவா குமடி
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 339

பதி நிலைக்க ஒருசே திநல்ல
பாகம தாகு முடலுயிற்போல்
விதியை நாடி யிருந்தாக் கால்நல்ல
வித்தக மாமடி ஞானப்பெண்ணே. 340

பாஷாண்டி வேடம்

ஆமே உலகத்தில் பாஷாண்டி வேடம்
ஆனதோர் காவிகள் வேடம்பூண்டு
தாமே சரக்கெல்லாம் ஆராய்ந்து சுட்டு
தாவி மனதுகள் நொந்துமேதான். 341

போமே யிதுகளில் சீவனங்கள் பண்ணப்
பூமியில் காவிவே டம்பூண்டு
தாமேதா னெட்டுப்பேர் பத்துப்பேர் கூடியே
தக்கதோர் யோசனை பண்ணிக்கொண்டு 342

சாத்திரந் தன்னிலே சித்தர் மறைத்தார்கள்
சாற்றுவேன் சுண் ண மிகவும்செய்து
பாத்திர மாகப் பனியிலே வைத்துமே
பாகமாய் மூலி தழைபிடுங்கி 343

ஏற்றுமே உப்பிலே விட்டரைத் துச்சுண்ணம்
இன்பம தாகக் கடுங்காரம்
நேற்றுமே யிப்படிச் செய்யவில்லையென்று
நேர்த்தியாய் யோசனை செய்து கொண்டு 344

சீர்த்தியாய் லிங்கத்தில் பாஷா ணந்தன்னில்
சிறப்ப தாகச் சுருக்கிடவே
நேர்த்திய தாய்ச்செம்பு தன்னில் கொடுத்துமே
நேராக நான்குமாத் தாச்சுதென்று 345

பொய்வாதிகள் செய்கை

பாகம தாகப் பலித்த தென்றுவெகு
பக்தி யுடனேகா ரீயமிட்டு
போகமா கக்கொடுத் தூதியே பார்த்துமே
பொல்லாக் கசடுகள் தான்விலகி 346

ஆவியும் போகவே ஊதி யெடுத்துமே
அன்பாகக் கல்லி லுரைத்துப் பார்த்து
னை யாகப் புலம்பியே சொல்கிற
பாதகர் கர்மத்தைச் சொல்லுகிறேன்.

வாலையைப் பூஜைகள் பண்ணா திருந்ததால்
வாகான சித்தியு மில்லையென்று
சோலையிலே ரொம்பக் காத்திருந் தேன்சில
சுந்தரி பூசை விருப்பமதாய் 3.

ஆலைய மான வனங்களில் சென்றுயான்
அட்ட வணைகொண்டு சுட்டுவந்தேன்
வேலைகள் செய்தது மட்டுமில் லையென்று
வீசுவார் பாரடி ஞானப்பெண்ணே. 349

கட்ட களங்குகள் மட்டுமில் லையென்று
சொல்லி யிருக்கிற வேளையிலே
அட்ட வணைகொண்டு சுட்டுப்பார்த் தேனென்று
ஆவி பதறி யொருவன்சொல்ல 350

சொல்லியே நிற்கையில் குரும்ப வாதியும்
சொற்பெரிய வெள்ளி தானெடுத்து
கவலைய தாகவே பத்துக்கொன்று தங்கம்
காட்டியே மெள்ள உருக்கிக்கொண்டு. 351

உருக்கிப் பார்த்துக் கடைதனில் காட்டிட
உள்ளே யிழுக்குந் திராவகத்தில்
செருக்கிப் போட்டிட போட்ட தங்கம்நிற்க
செத்துமே மூஞ்சி கருப்பேறி 352

அலுத்துப் போகவே ஆயாச முடன்
அன்பா யிருக்கிற வேளையிலே
வலுத்தா வாதிகள் எண்ணமுற் றுச்சொல்லும்
வாகாகத் தங்கம் மிகவுஞ்செய்வேன் 353

குரும்ப் வாதிகள் கூடிவந்து நின்று
கூப்பிட்டுத் தங்கம் செய் வேனெனவே
நரும்பூ கெந் தகம் லிங்கம்வாங் கச்சொல்லி
நன்மைய தாகவே பொய்கள் சொல்லி 354

புடங்கள் போட்டிட ஓடியே போகவே
போக்கோடே நல்ல பணம்பிடுங்கி
அடம தாகவே நாங்க ளனைவரும்
அன்பாகப் பார்த்து மனமகிழ்ந்தோம் 355

என்றுசொல் லிவாதி யேய்த்துப் பணமதை
இன்பம தாகவே வாங்கியே தான்
சென்று மறைந்து ஒளிந்து திரிந்ததின்
சேதியைக் கேளடி ஞானப்பெண்ணே 356

அன்றுமே கண்டு பிடித்து அவர்களை
அடித்துத் தள்ளி விரட்டுகையில்
நின்று அழுதிடும் வாதிக ளேயிந்த
நேருள்ள கும்மியைத் தான்பாரு 357

திட்டம தாகக் கடைதலை சோதித்து
திடம தாயொரு மட்டஞ்செய்து
பட்டபா டெல்லாமும் போகா மல்ரசம்
பார்த்துச் செய்துகொள் ஞானப்பெண்ணே 358

இந்தப் படியா யசுவனி தேவரும்
இன் பமாய் மானிடர்க் கேயருள
சந்தேக மில்லாமல் சோதித்துக் கும்மியில்
சாற்றுவேன் கேளடி தோழிப்பெண்ணெ 359

பெண்ணே ஒருசேதி சொல்லுகி றேனொரு
பின்னொன்று மாத்துமே அஞ்சாக
பண்ண உனக்கொரு பாகங் களுமதை
பார்த்து எடுத்துக்கொள் ஞானப்பெண்ணே 360

கெந்தகச் செம்பு

தன்மைய தாகவே செம்பு ஒருபலந்
தானே யுருக்கு முகந்தனிலே
உண்மையாய்க் கெந்தகம் சுத்திசெய்து யிதை
உருதி யாகக் கொடுத்திடவே 361

கருப்ப தாகவே வெட்டையா குமிதில்
காரண மானதோர் வெங்காரம்
பெருக்க வேயிடை சேர்த்து உருக்கிடு
பேர்பெரிய மணி தானாகும் 362

மணியெ டுத்துமே அப்பாலே வைத்திடு
மன்னவ னேரச வாதிகளே
தனிய தாகவே செம்புத் தகடதில்
தக்க வெடியுப்பு தான்பலமே 363

வத்தனி யாகவே சீனம் பலமொன்று
வாகாகக் குண்டு மணியுரைத்து
கத்தநீர் தன்னிலே சேர்த்துக் குழப்பியே
காரண மாகநா ளெட்டினிலே 364

சித்திய தாகவே காய்ச்சியே தோய்த்திடு
சிறப்பாய் வெட்டைய தாகுமடி
சித்தமா யிச்செம்பு ரெண்டிலே ஒன்றிடு
சித்தங்கள் வைத்து உருக்கியெடு 365

பக்குவ வெங்காரம் தன்னைக்கொடுத்துமே
பக்குவ மாக உருக்கியெடு
பக்குவ மான களங்கதை யூதியே
பக்குவ மாக நொருக்குவெள்ளி 366

கக்கிச மில்லாமல் தானெடுத் துவைநீ
காரியஞ் சொல்கிறேன் ஞானப்பெண்ணே
சிக்கவே ஐந்துக்கு ஒன்றுமே சேர்த்திடு
சித்தியாம் சாம்பலில் தானுது 367

ஊதி யெடுக்கவே மாத்தது ஐந்தாகும்
உற்றதோர் தங்க மிடைசேர்த்து
கோதியே உப்புக்குங் காவிக் கிரங்கிடும்
கொற்றவ ரேரச வாதிகளே 368

முட்டடந் தகடா யடித்துக்கொண்டு புடம்
வைக்கிற பாகத்தைத் தான்கேளு
திட்டம தாக அதையெடுத்து நன்றாய்
சேர்க்கிற பாகம்பார் ஞானப்பெண்ணே 369

புட விபரம்

சட்டம தாகவே காவிபலம் நாலு
சாற்றுவேன் கல்லுப்பு மூன்றுபலம்
இட்டமாய் வெங்காரம் தான் பொரித்து யெடு
இன்பம தாகப் பலமுமொன்று 370

திட்டமாய் லிங்கமுந் தான்பலம் ஒன்றுமே
சிறப்ப தாயரை கல்வமதில்
நட்டணை யாகவே பாணியில் தானரை
நல்லாய் ரவிதனில் காயவைத்து 371

பெரியதாகப் புடம்போட்டுயெடு
பேரான தூளா யுதிர்த்துக் கொண்டு
வரிய தாகவே மட்டத்தை வைத்துமே
வாகாகத் தன்புடம் மூன்றிலேதான் 372

சரிய தாகவே தங்க மிறங்கிடும்
சத்திய மாகவே சித்திபெற
பரிய தாகவே மாற்றுத் தங்கமாகும்
பத்தி யதாய்விசு வாசமிகும் 373

விசுவா சத்துடன் பார்த்தாக் கால்நல்ல
வீரிய மாகவே தங்கமுமாம்
பசுபா சம்போலே பார்த்து யெடுத்திடு
பக்தியு டன்களங் காம்பாரு 374

செம்பைக் குகைதனில் வைத்தூ திநற்
செயலாக நன்றாய்க் கிண்டிவிட்டு
தம்பம தாகப் பதமா யுருக்கிடு
தப்பித மில்லாமல் பாருங்கடி 375

இங்கித மாக உருக்குமே தப்பினால்
ஏந்திழையே ரசம் வாங்காது
தங்கிகய நின்றிடும் கிட்டணைப் போலவே
தானே எடுத்து எரியாதே 376

உருக்க வேநிறந் தானாய் மணியாச்சு
உற்றுமே மெள்ளக் குறித்துவிடு
பெருக்க வேஉயிர் தானுடல் போலவே
பேதக மில்லாமல் பாருங்கடி 377

பாருமே வெள்ளியைப் பக்குவமாய்ப்போடு
பாதையாய்ச் செய்வாய் யிதமாக
சேருமே சேர்ந்தாலே தங்கம் விளைந்திடும்
தேசிக ரேரச வாதிகளே 378

கரும்பொன் னாகவே சொல்லுகி றேன்வேதை
காரண மாகிய வாதிகளே
இரும்பு செம்பாமோ என்றுசொல் வார்செக
ஈன ரசவாதி மார்களுமே 379

துரும்பு துணான வாரது போலிதில்
சூட்டினால் வாதம் மிகவுமுண்டு
அரும்பு போல யிருந்தால் வாசமும்
ஆகுமோ சொல்லடி ஞானப்பெண்ணே 380

சிக்கும் பெரிய அயந்தா னொன்றிதில்
சேர்க்கவே செம்புமே நாலாகும்
மிக்க யிரண்டையுஞ் சேர்த்து உருக்கிடு
மிகவு நன்றாய்க் குகைதனிலே 381

உருக்கி யாடிடும் போதினி லேகேளு
உற்பன மாய்க்கெந்தி தான்கொடுத்து
பருக்க வேயிதில் பத்தியாய் வெங்காரம்
பாகம தாயிடை ரெட்டியிட்டு 382

பத்திய தாக உருக்கிட வேசெம்பை
பாகம தாயெடு தட்டிக்கொள்ளு
சித்தம தாகவே செய்யும் வரிசையை
சிறப்பாய்ச் சொல்கிறேன் கேளுங்கடி 383

பத்தரே நான்சொன்ன பாகத்தைக் கேளுங்கள்
பாகமான வெடி ஐந்துகாய்ச்சல்
வித்தக ரேசீன மவ்விடை சேர்த்திடு
வேசரி யான கழுதைக்கத்தம். 384

பத்திய தாக எடுத்துக் குழப்பியே
பாகமாய் யெட்டுநாள் வைத்திருக்க
தத்துவ மாய்ச்செம்பை வெட்டையாய்க் கட்டிடும்
சாற்றில் வைத்து எடுத்துக்கொள்ளு. 385

எடுத்து வெள்ளியி லெட்டுக்கு ஒன்றிடு
இன்பமாய்த் தங்க மிடைசேரு
படுத்த மாத்தது எட்டரையாகுமே
பாகமாய்த் தான்புடம் போடுதற்கு. 386

திடம தாய்நீ யிருந்துகொண்டு குரு
சேதிகளையு மன திற்கொண்டு
புடம்போ டத்தங்கந் தானிறங்கும் பாகம்
போக்கோடே சொல்கிறேன் ஞானப்பெண்ணே. 387

வளையல் மண்ணுமே நாலுபல மிதில்
வாகான வெங்காரந் தானுமொன்று
களைய தாகவே வீரமொன்று யிதைக்
காரிய மாகவே பாணியிட்டு 388

அரைத்து மேபுடந் தானுமொன்று போட்டு
ஆனதோர் மட்டத்தை வைத்திடுநீ
பரைத்து மேபுடம் மூன்றுமே நீபோடு
பாகம தாய்த்தங்க மாகுமடி. 389

தங்கமிறங்கிடுஞ் சோதியொளியாகும்
தாக்கான வாதம் யெளிதாகும்
இங்கிதமாகவே அயச்செம் பின்வேதை
ஏற்றமா னதங்கம் பெண்ணரசே. 390

ஆகுமே தங்கமும் வேதையாக இன்னம்
அடைவாக ஒரு வேதையைக் கேள்
பாகமாம் பித்தளை பலமு மொன்றுமே
பரிவ தாக உருகையிலே. 391

உருக்கிற போது சுத்தித்த கெந்தியும்
உண்மையா யந்த யெடைகொடுத்து
திருக் கெடுத்து உடைத்துப் பாருமே
சீக்கிர மாக உடைந்துவிடும். 392

உடைத்த களங்கை அப்பாலே வைத்து
உண்மை யாகச்செம்பு சுத்தியைக்கேள்
அடைந்த பொட்டிலுஞ் சீனமும் சேர்த்துமே
ஆகவே ரெண்டை தான்சேர்த்து. 393

சேர்த்துக் கழுதை கத்தநீர் விட்டுமே
சீக்கிர மெட்டுநாள் வைத்தெடுத்து
பார்த்து எடுசெம்பு வெட்டையா குமட்டும்
பண்பாகக் காய்ச்சித் துவைத்திடு நீ. 394

துவைத்துப் பக்குவ மாகஎடுத்துமே
துப்பர வாம்ரவி ரெண்டுக்கொன்று
சுவைத்து மேகுடு தானுருக் கியெடு
சுக்கிலம் போலே களங்காகும். 395

களங்கம் நொறுக்கியே வெள்ளி ஐந்திலொன்று
காதலாய்த் தானே உருக்கியெடு
வளங்க மாகவே தங்கமிடை சேர்த்து
வாகாக வேதான் தகடுதட்டி. 396

தட்டிப் புடமதில் தானே யிறங்கிய
தாகவே சொல்கிறேன் கேளுங்கடி
சிட்டர் தொழும்பூமி தன்னில் தமுக்கது
சின்மய மாக அடியுங்கடி 397

வாருங்கா ணும்ரச வாதிக ளேஒரு
வாகாகி யபுடந் தான்கேளு
சேருங்கா ணும்சாம்பல் நாலாகு மிதில்
சேர்க்கும் பொரிகாரம் ரெண்டாகும். 398

ரெண்டுடன் வகுத்த உப்பது மூன்றுமே
நோய்க் கடல்நுரை ஒன்றுவிட்டு
கண்டுமே தானரை பாணியாய் வில்லைசெய்
கட்டியே தானே புடமிடு நீ 399

இட்டபு டத்தெடு தானுதித்தே மட்டம்
இன்பம தாகத் தக்டுவைத்து
மட்டம தாகவே ஐந்து புடந்தனில்
வாகான தங்க மிறங்கிடுமே 400

இறங்கிர மட்டும் யிந்தயினம் போலே
இங்கித மாகவே பார்த்தெடுத்து
நிறங்க ளுண்டாகுந் தங்க மிறங்கிடும்
நேராகப் பாரடி ஞானப்பெண்ணே 401

பார்த்து யெடுக்க வகையறி யாமலே
பற்றியே யோசனை பண்ணிக்கொண்டு
சாத்திர நூலெல்லாம் பொய்யா குமென்று
சத்தியம் ரெம்ப மிகவுஞ்செய்து 402

கைபா கங்களும் தான்குறைந் தேகெட்டு
கத்திப் பதறியே சித்தமுடன்
கைபா கமில்லை யென்றுசொல்லி வாதி
கண்டு கிலேசங்கள் பட்டுக்கொண்டு 403

போகாமற் கும்மியைத் தான்பாரு யிதில்
போக்கோ டேயொரு தன்குருவை
ஏகா மற்குரு தான்முடிந் தாலது
எத்தேச காலமும் வாழ்வான்காண் 404

வாழலாமென்று மனந்தொடுத்து மட்டும்
வாகான செம்பிலே தானுழைத்தால்
தாழா மல்நல்ல யோகங்கள் வந்திடும்
தானே உழைத்திடும் வாதிகளே. 405

வாதங்கள் செய்ய அறியா மல்நல்ல
வாகானமூலி தழைபிடுங்கி
சேதப் படச்செய்து சரக்கு ஓடிட
சீக்கிர மாகவே கெட்டலைந்தால் 406

கெட்டலைந்துதானே போகாமல்நல்ல
கீர்த்தியாந் திராவகந் தன்னைச் சொல்வேன்
நட்டணை யாகவே சோதித் தெடுத்தாக்கால்
ஞாயம் நிலைக்குமே ஞானப்பெண்ணே. 407

பெண்ணரசேநாகத் திராவகத் தையிதில்
பேச்சினில் தாக்கவே சொல்லுகிறேன்
நன்னய் மாகவே வேதைக ளாகிடும்
நாடியே தர்ன்மிகைச் சொல்லுகிறேன். 408

சொன்ன மொழிதவ றாமலே பார்த்தாக்கால்
சோதியா னதொரு வேதைகளாம்
நன்னய மாகவே சொல்லுகி றேனிதை
நாடியே பாரடி ஞானப்பெண்ணே. 409

சித்தருக் குள்ளாகச் சொல்லமாட் டார்சிவ
சித்தர் ரிஷிகளும் பேசமாட்டார்
முத்திய தாகவே கும்மித னில்சொன்ன
முறைமை பாருங்காண் வாதிகளே. 410

வாதிகட்குள்ளா யிருக்கவே ஞுமிதில்
வாகா நாகத் திராவகத்தை
நீதிய தாகவே வைத்து எ்டுத்தாக்கால்
நிர்ணய மாகுமே ஞானப்பெண்ணே. 411

நாகச்செயநீர்

படையரசனில் பத்துப் பலமெடு
பாங்கான சீனமு மெட்டாகும்
தடைபடாமலே திராவகத்தைவாங்கி
தப்பாமல் முன்னீரைத் தான்கேளு. 412

தள்ளியே பின்னீரை வாங்கிக்கொள் ளுமிதை
தாக்கான கப்பி தனிலடைத்து
துள்ளியே நாகம் பலம்நாலு யிதில்
துப்பர வாக ரசமிரண்டும். 413

சேர்த்து உருக்கி உடைத்துமே பார்த்திடு
சேர்ந்துமே தானே கருப்பாகு
பார்த்துமே ரெண்டிடை வீரமுஞ்சேர்த்தரை
பக்குவ மாகவே நீராகும் 414

ஆகவே நீரை யெடுத்துக் கொண்டுமுன்னே
அன்பான பொட்டலை நீரைவிட்டு
யோகம தாகவே நாதவிந்து போல
உண்மை உடலுயிர் போலாகும். 415

ஊதி யெடுத்துமே சக்கர வாலையில்
ஊத்தியே தான்விடு மேல்மூடு
வாதிக ளேசீலை மண்ணுஞ்செய்தேயரை
வளம தாகவே தானிறங்கும் 416

இறக்க வேநீரு தான்வரு குமிதில்
இன்பமா கச்சரக் கத்தனையும்
சிறக்க வேதைக ளாகுமடி செய்ய
சித்தியா கச்சொல்வேன் கேளுங்கடி 417

லிங்கஞ் சுருக்கிட தான்மெழு காமிதில்
நேரான வேதைகள் மெத்தவுண்டு
தங்கம தாகவே பாகம தாய்ச்செய்து
தற்பர மாகவே வேலைசெய்வாய் 418

துதைத் தானே சுருக்கிட வேவேதை
ரனே நவலோகத் துண்டாகும்
பாரமில்லாமலே தானிருக்கு மிது
பாகம தாமடி ஞானப்பெண்ணே 419

வீரத்தைத் தானே சுருக்கிட வேவீரம்
வித்தக மாக மெழுகாகும்
காரத்தை யிட்டுமே செம்புதனிலிடு
காரண மாகவே பத்தாகும் 420

செந்தூரஞ் செய்யவே வேதையுங் கோடியாம்
சிட்டர் புகழ்ரசம் விட்டரைக்க
வந்ததுமே தங்கமா மார்க்கத்தை செய்திடு
வாகாய்ப் பலித்திடுந் தோழிப்பெண்ணே

துருசைத் தோய்த்து ரவிதனி லிட்டிடு
தோற்றமாய்ச் செக்கச் சிவப்பாகும்
வரிசையாகவே தங்கத்தி லிட்டிட
வாகான தங்கமும் செம்பாகும் 422

உப்பு இருபதுந் தோய்த்துமே போட்டிடு
உள்ளது மாத்துமே பத்தாகும்
அப்பு சிலந்தனில் வேதைகள் கோடியாம்
ஆகவே செய்திடு ஞானப்பெண்ணே

வருண மான யினஞ்சேர்ந் தால்வர்ண
மாகும்வே றுப்பினில் வேதையில்லை
தருண மாகவே நாகச் செயநீரை
தாக்கியே வைத்துமே பூசைசெய்து 424

பூசை செய்திடு செயநீரை வாதிகாள்
புத்தியாய் வைத்தால் பலனாகும்
ஆசையா கத்திரிந் தாலென்ன வாகுமோ
அன்பான ஆதிச் செயநீராம். 425

செயநீரை வைக்கவே சலவைக் கல்லிலே
சீக்கிரமாக அரைத்துவிடு
பயமில் லாமலே நாகச்செயநீரால்
பாகம தாமடி ஞானப்பெண்ணே 426

சித்தர் மறைந்த கருவிதுதானிற்
சித்தியு முத்திச் செயநீராம்
புத்திய தாகவே சோரச் செயநீரை
புக்கியே பாரடி ஞானப்பெண்ணே 427

உழைத்துப் பார்த்தாலல் லோதெரி யுமிது
உழைக்கா மற்போனாலோ வென்னபலன்
அழைத்துப் பார்த்தாக்கால் வந்துசே ரும்வாதம்
அன்பான ஞானம் வருகுமடி 428

வாதிக்குப் புத்தி வரவே ணும்நல்ல
வாகான சோரச் செயநீரால்
சோதித் தறிந்தாக்கால் எல்லாமுந் தான்வரும்
தொந்தமாய்ப் பாரடி ஞானப்பெண்ணே 429

தொந்தப்பட் டாலெல்லாந் தான்தெரி யுமிதிற்
சொர்ணம் விளைந்திடும் வாதிகளே
தந்திர மாகவே செய்தால் பலனென்ன
தாட்டீக மில்லையே ஞானப்பெண்ணே 430

சுந்தர மாக அசுவனி தேவரும்
சுத்த யிருதய மாகச்சொன்னார்
விந்தையாய் வாதிகள் செய்யமாட்டாரவர்
வித்தக ரல்லவோ ஞானப்பெண்ணே 431

அடிமரத்தி லிருந்து பிடித்துமே
அன்பாக மேலேறித் தான்வரலாம்
முடிய நாகச் செயநீரைச் சோதித்தால்
முத்தி தருமடி ஞானப்பெண்ணே 432

பித்தந்தீர மருந்து

செந்தூரந் தின்றிட பித்தமு மேலானால்
சீக்கிர மாய்ப்பஞ்ச தாரையது
சிந்தாமல் நாலுமே தானிறுத்துயிதிற்
சித்திய தாக அதிமதுரம் 433

இஞ்சியுந் திப்பிலி தானாறு யிதில்
இதமாய் முந்திரிப் பலமுமொன்று
அஞ்சும் பொடியாக்கித் தான்வறுத்து நல்ல
ஆவின்பா லிற்கொள்ளப் பித்தம்போகும் 434

போகுமே பித்தமும் நாற்பத்தி ரெண்டுமே
பொல்லாத தேகக் கனல் காந்தல்
ஆகுமே சூடு இளைப்பைந்து ரோகமும்
அன்பாக வாயினி லூரலுடன் 435

ஏகியே போகுமே காயமழியவில்லை
இன்பமாய்த் தாகமுந் தான்போகும்
ஆகியே நானாதி தேவர்க் கருளின
அன்பான பித்தமே சாந்தியடி 436

இந்தப் படியாய் அசுவனி தேவரும்
இன்பம தாயுல கத்தில்வந்து
சந்தேகமில்லாம லுலகத் தாருக்கு
சாற்றினார் வாதம் நிலைக்கவேதான் 437

நிலைக்க வேயொரு சேதிசொல் வேனினி
நேராய்க் கரும்பொன்னு மாவதற்கு
துலக்க மாகவே சொல்லுகி றேனயம்
சுத்தம தாய்ப்பலந் தானாலு 438

அயக் களங்கு

நாலு பலம்பொடி தானெடுத்து யிதில்
நாட்டிடு கெந்தியும் முக்காலாம்
நாலுவீ ரம்பலம் பன்னையுந் தானரை
நாட்டியே எல்லா மரைத்தெடுக்க 439

அரைக்க திராவகம் விட்டரைத்து சாமம்
ஆறுமே தானரை வில்லைக் கட்டி
பறைக்க ரவிதன்னி லிட்டிட வேச்சுண்ணம்
பதமாக மேலே சீலைசெய்து 440

செய்து கெசபுடந் தான்போட்டுஎடு
சீக்கிர மாகவே பார்க்கையிலே
பைய்து அயநீறு தான்போகிவிடும்
பக்குவமாக யிருந்துவிடும் 441

கருப்ப தாக யிருந்துவி டுமிதின்
காரிய மாமெத்த வேதைவரும்
திருத்த மாக யெடுத்துவைத்து யின்னம்
சிறப்பாய்ச் சொல்கிறேன் வாலைப்பெண்ணே 442

வர்ணக் கிளிமூக்கு செம்பை எடுத்திடு
வாகாய்த் தகடாகச் செய்துகொண்டு
சொர்ணம் விளைந்திட வெடியுஞ் சீனமும்
துப்பர வாக யிடைசேர்த்து 443

கேசரி கத்தநீர் விட்டரைத்து யெட்டு
கெட்டியாய் நாளது வைத்துக்கொண்டு
பாசம தாகவே தோய்த்து எடுத்திடு
பக்தியாய்ப் பாகமாய்ச் சித்தமதாய் 444

வம்புசெய் யாமலே இன்பம தாகவே
வகையாய்ப் பாகம் வலுவாக
தெம்புட னேவெட்டை யாகுமட்டுஞ்செய்து
தீரமாய் எடுத்துப் பார்த்திடவே 445

முக்கால் வெட்டையாகு மட்டுஞ்செய் தேயெடு
முத்திபெற யினிச் சொல்லுகிறேன்
சிக்கவே பாணியை முன்னயந் தன்னிலே
சிறப்ப தாகவே விட்டரைத்து 446

நம்பியே முன்ரவி யின்தகட்டில்பூசி
நன்மையா கயிடை தான்பூசி
கெம்பிக் கெசபுடம் வைத்தெடுக்க நல்ல
கீர்த்தியு மாமடி ஞானப்பெண்ணே 447

கீர்த்தியாகவே செம்புகட்டி நல்ல
கெட்டியான தங்கம் செம்பாகும்
பார்த்திப னேயெடுத் தேமதி பத்திலே
பாகமா யொன்று கொடுத்திடவே 448

கொடுக்க ஏழரை மாத்தா குமினி
கோடிக் கவராகும் பார்த்திடுநீ
தொடுத்த தெல்லாஞ் செயமா குமிதில்
சூக்ஷம தாகிடும் ஞானப்பெண்ணே 449

துரும்பு தூணான வாறுபோலே அயம்
சூட்டவே நல்ல முறையிதுகாண்
அரும்பு போலவே தானெட்டி னால்வாதம்
அதில் நிலைக்குமே ஞானப்பெண்ணே 450

இரும்பு நீரை எடுத்தாக் கால்வாதம்
இன்பம தாக நிலைத்திடுங்காண்
நரும்புஞ் செம்புநீர் தானெடுக்க வாதம்
நாடியே வந்திடும் ஞானப்பெண்ணே 451

செம்பு நிலைத்தாலே தான்புடத்தில் வலு
தீர்க்கமாய்த் தானு முருவாகும்
வம்புசெய் யாமலே செம்பொன்னைப் பார்த்திடு
வழி நிலைக்குமே ஞானப்பெண்ணே 452

சுத்த அயமது செய்பாகம் வாதி
சூட்சமாய்க் கேட்டு அலைந்தரிந்து
பித்தலாட் டங்களாய்ப் பார்க்கவே ஒன்றில்லை
பேணி நிலையாது ஞானப்பெண்ணே 453

செம்பு இரும்புமே சேர்ந்தா லேநயம்
சீக்கிர மாகவே பொன்னாகும்
வம்பு செய்தாலு முனக்குப் பலனென்ன
வகை யறிவாயே ஞானப் பெண்ணே 454

அயத்தை ஈயம தாக்கியே யென்றுமே
அலைந்து கெட்ட ரசவாதி
செய அயத்தொடு காரீயம் சேர்த்தாலே
செல்வம் நிலைக்குமே ஞானப்பெண்ணே 455

சிந்தும் அயம்ஈயம் ரெண்டும் வெட்டையானால்
செய்யடா தங்கமு மாகிவிடும்
முந்தவே சொன்னது சித்தர்கள் நல்ல
முத்தி நிலைக்குமே ஞானப் பெண்ணே

அயமுருக்க அலைவார்கள் தக்க
அயத்தில் மூலிகை சேர்த்துக்கொண்டால்
நயம தாக உருகா துயிது
நாடியே பார்த்திடு ஞானப்பெண்ணே

கிட்டமாய் போகும் எடுத்தெரிந்து யின்னம்
கீர்த்தியாய் உப்பி உருகுமென்று
நட்டணை யாகவே சொன்னாரே அயம்
நாடி யிருக்குமே ஞானப்பெண்ணே 458

அயம் உருக்க

அயம்உருக்க வகைகேளு நல்ல
ஆதார மாகவே சொல்லுகிறேன்
நயம தாகப் பலமொன்று தானெடு
நாடியே பாரடி ஞானப்பெண்ணே 459

கெவுரி பலமொன் றெடுத்துமே பாணியில்
கீர்த்திய தாக அரைத்துருட்டி
சவுரிய மாக உருக்கி யெடுத்திட
தானேஉருகி மணியாகும் 460

மணி யுடைந்துமே காரங்கள் கூடியே
வாகாகஐந்து தரமுருக்கி
தனிய தாகவே வெண்மணி போலவே
தானே யுருகுமே வாதிகளே 461

உருக்கி யெடுத்த மணியை வைத்து அப்பால்
உண்மையைச் சொல்கிறேன் கேளுங்கடி
நருக்கி யேசெம்பு நால்நிறுத்து யிடை
நல்ல வெடியுப்பு ஐந்துகாய்ச்சல் 462

காய்ச்சல்வெடியுப்பு தானெடுத்துச் சீனம்
காரியமாக யிடைசேர்த்து
பாய்ச்சவே கத்தக நீரை விட்டே அரை
பக்குவமாகக் குழம்புசெய்து 463

தோய்ச்சிடச் செப்புமே வெட்டையாகு மட்டும்
தொல்லுலகில்ரச வாதிகளே
காய்ச்சிச் செயமது வாகத் துவைத்துமே
கனகமாக எடுத்துக்கொள்ளு 464

பேதித்துச் செய்யாமல் நூற்படிசெய்திடு
பேதாபே தங்களும் வாராது
நீதிய தாகவே வெட்டையான செம்பில்
நேராய்க் களங்கமு மொன்றுசேரு 465

குகையில்விட்டு மேதானுருக்கு யிதில்
கோலாற் கிண்டி யெடுத்தூத்து
தகையதாக எடுத்து உடைத்துமே
தாட்டீகமாக நொருக்குவெள்ளி 466

கொடுக்க அஞ்சிலே ஒன்றுமே இட்டிட
கூறிய தங்கமும் நாலிலொன்று
திடுக்கிட் டேகவே சேர்த்துஎடுத்திடு
சித்தியா லேதான் விளைந்ததங்கம் 467

உப்புக்குங் காவிக்கு மோடாதுநல்ல
உண்மைய தாக யிருந்திடுங்காண்
தப்பித மில்லாமல் சேர்த்துமே சோதித்து
தாரணி யோர்க்கறி வித்தேன்காண் 468

இந்தப் படியாக யசுவனிதேவரும்
இன்பமாய்க் கைபாகந் தானுஞ்சொன்னார்
அந்தப் படியேதான் தேவாதிதேவரும்
அன்புடன் கேட்டு அடிபணிந்து 469

வாதிப்பிரட்டர் செய்கை

அய முருக்கிற பாகங்களைச் சொல்ல
அன்பா யுலகத்து வாதிகளும்
பயமில்லாமலே மூலிகை யிற்போட்டு
பக்தியாய்த் தானே உருக்கையிலே 470

நயமில் லாமலே கிட்டமாய்ப் போகவே
நாடி யெடுத்து யெரிந்துபோட்டு
செயமில்லை யென்று கூக்குர லிட்டாக்கால்
செப்புவ தென்னடி ஞானப்பெண்ணே 471

துருத்தி சாவட்டை யாச்சுதென்று சொல்லி
துக்கப் பட்டந்த மனிதரிடம்
வருத்திச் சொல்லியே அங்கலாய்த்து வாதி
வல்லமை யாக உலகுதனில் 472

சொல்லித் திரிந்து மயக்கமுண் டாகிய
சூட்சத்தைத் தானே யறியாமல்
கல்லைக் கண்டநாயும் ஓடிக் குதித்தாப்போல்
கலக்கப் பட்டுமே தான் திரிவார் 473

கலக்கப் பட்டுத் திரியாம லயங்
காரணமாக உருக்கியெடு
துலக்க மாகவே உள்மூல வாசியை
தூக்கித் திரிந்துமே பாருங்கடி 474

பார்க்கவே முன்னால் அயம்பாரு பின்னே
பக்குவமாய்ச் செம்பு ஊரலெடு
சேர்க்கவே செய மாகுமடி நலஞ்
சிக்குமடி வாதங் கைக்குள்ளேதான் 475

தோணா தென்று இருக்காதே செம்பு
சுத்தியைப்பார்த்து நிலைக்கப்பண்ணு
சாணான் கடை பொருளாகும்அருள்
தாண்டிக் கும்மி யடியுங்கடி 476

செம்பி லொருவேதை சொல்லுகி றேன்வாசி
சீக்கிரமாக யிருகிவிடும்
நம்பியே செந்தூர மானாக் கால்ரச
வாதம் நிலைக்குமே ஞானப்பெண்ணே. 477

தாம்பிரச் செந்தூரம்

ரவி யொருபலந் தானெடுத்துப் புளி
நல்ல இலைபோல் தகடடித்து
கவியக் கெந்தியைத் தானரைத்துப் பாணி
கட்டியே தான்புடந் திட்டமதாய் 478

புடங்கள் போட நொறுங்கிக் கருப்பாகும்
புத்திய தாகவே தானெடுத்து
திடம தாகவே நாலிலொன்று தாரம்
திட்டமாய்ச் சேர்த்து அரைத்துருட்டி 479

இடைபோகாமல் புடமிட் டெடுத்திட
இன்பமா யோர்சேதி தான்கேளு
அடைவதாகப் புடமிட் டெடுத்திடு
அன்பாய்க் களங்காகும் வாதிகளே 480

வாதிக ளேயிடை வெங்காரங் கூட்டியே
வாகாய்த் திராவகம் விட்டரைத்து
சோதி பெறப்புடந் தான்போட்டுச் செக
சோதி முருக்கம்பூப் போலாகும் 481

ஆகுமே செந்தூரம் நவலோ கத்திடு
அன்பாக மாத்துமே பத்தாகும்
யோகமாய்த் தேனிலே உண்டிட வேவாசி
உள்ளே சுழித்திடும் வாதிகளே 482

மண்டலந் தன்னிலே நோய்கள் யாவும்போகும்
மாயமாய்க் காயமுங் கல்தூணாம்
கண்ட பேரிடஞ் சொல்லவேண்டாம் நல்ல
காரண மாகுமே ஞானப்பெண்ணே 483

காயம் வலுத்திடும் வாதிகளேமனங்
காரண மாகவே ஞானம்வரும்
அபாயமொன்று யிருக்காதே செம்பை
அடைவாய்ப் பாரடி ஞானப்பெண்ணே 484

சொற்பமாய் வாதமு முண்டாகுமிந்தச்
சோதியைக் கண்டு தெரிசிக்கலாம்
அற்பம தென்று யிருந்தாக் காலருள்
ஆனந்த மாகுமே ஞானப்பெண்ணே 485

ஆனந்த மான பரஞ்சோதி யிதில்
அத்வைத மான நிலந்தனிலே
தானந்தமாகவே நாட்டிக்கொண்டாலது
தாட்சியொன் றில்லையே ஞானப்பெண்ணே 486

காசிக்குப் போக நினைவெடுத்துப்பாதி
காரிய மாக வழியில்நின்றால்
தோசியைப் போலவே காசி கண்டேனென்றால்
சுத்தப்பொய் யல்லவோ ஞானப்பெண்ணே. 487

வெள்ளி பழுக்க

வெள்ளி பழுக்கவே சொல்லுகிறேன்நல்ல
வேதைகளே நன்றாய்ப் பார்த்துக்கொள்ளும்
துள்ளித் திரியாதே கைபாக மாகவே
துப்பர வாகநீ செய்துகொள்ளு 488

வல்லமால் தேவிலிங் கந்துருசு கெந்தி
வாகான கார மிடைசரியாய்
துல்லப மாக வகையொன்றுமே காலாய்
துப்பர வாக அரைபழச்சார் 489

அரைக்கத் தான்வகை விராக னிடையொன்று
அன்பாய்த் தங்கங்கால் விராகனிடை
அரைத்துத் தானதை வில்லைதட்டி ரவி
ஆன முகந்தனில் வைத்திடவே 490

எடுத்துச் சாமமும் நாலரைத்துப் புடம்
இன்பமாய்ப் பத்தெரு விற்போடு
தடுத்தெடுக்கக் கரித்தூள் போலாகும்
தாக்கவே சொல்கிறேன் கேளுங்கடி 491

கேளுமே செம்பைத் தகடடித்து வெட்டி
கெட்டியாய்ச் சீன மிடைசேர்த்து
தானுமே கத்தநீர் விட்டரைத்தே யெட்டு
தாக்கான நாளதை வைத்திடவே 492

ஊரியிருக்குங் குளம்பு தனில்செம்பை
உத்துமே வெட்டைய தாகுமட்டும்
தேறியு மேசெம்பைத் தோய்த்து எடுத்திடு
சித்தமுடனே குகையிலிட்டு 493

ஆறிடா மலிதை நன்றாய் உருக்கியே
அன்புட னேரெண்டுக் கொன்றிடவே
நீறின பாகமுஞ் சொல்லிவிட் டேனிதை
நேர்மையாய்க் கேளடி ஞானப்பெண்ணே 494

கொடுக்க முன் தங்கம் சேர்த்துக் கருப்பிடு
கோதைய ரேரச வாதிகளே
அடுக் கடுத்துமே பார்வையிட் டால்செம்பு
ஆதியாய்க் கட்டி யிருந்திடுங்காண் 495

கட்டின செம்பெடுத் தப்பாலே வைத்து
காரிய மாக நொறுக்குவெள்ளி
திட்டமுடன்பத் துருக்கியே செம்பொன்று
தீர்க்கம தாகக் கொடுத்திடவே 496

கொடுக்கவெள்ளியுந் தான்பழுத்து மாத்து
கூடியசீக்கிரந் தங்கமாகும்
அடுக்கஉப்புக்கா விக்கு போகாதென்று
அன்பானதேவ ரருளிச்செய்தார் 497

சத்தியமா மிது வேதைக ளாகிடும்
சத்த சாகரமுந் தானாகும்
புத்திய தாகவே பார்த்தாக் கால்தங்கம்
பூர்த்தியாய் வந்து விளைந்துவிடும் 498

சித்தம்வைத் தாலல்லோ வந்து விளைந்திடும்
சீக்கிரமாக ரசவாதம்
பத்துமுடனே யிருந்து சரக்கதை
பக்குவஞ் செய்வதை விட்டுவிட்டு 499

வாதமென்று சொல்லி வாதக் கரிச்சுட்டால்
வாய்க்குமோ இவ்வேதை யாகுமோதான்
பாதைகள் கண்டு நடந்தா லேவழி
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே 500

பதிநிலைக்கவே யிக்கருவைச் செய்து
பாகமாய்த் தானே நீ வாழ்ந்திடுங்காண்
சதியா யிருந்தாக்கால் வாதம் வருகுமோ
சத்திய மாகக்கேள் பெண்ணரசே 501

செம்புக் களங்கு

பெண்ணர சேயொரு களங்கு சொல்கிறேன்
பேதமை யில்லாமல் தான்கேளு
பண்ணவே செம்பு பலமது ஒன்றுமே
பக்குவ மாகக்கா ரீயங்காலாம் 502

அண்ணலே ரெண்டுமே சேர்த்து உருக்கவே
ஆண்மையாய்க் கெந்தி யிடைக்கிடையாம்
எண்ணம தாகக் கொடுத்திட வெட்டையாம்
இன்பமாய் வெங்காரம் தன்னிடையை 503

சொன்ன படிபோலத் தான்பொரித்து யிதில்
சூளவே சேர்த்து உருக்கியேதான்
நன்னய மாக ஒருமணி யாயெடு
நாடியேஅப்பாலே வைத்துக்கொண்டு 504

பின்னை யொருசெம்பு சொல்லுகி றேன் நல்ல
பேதமை யில்லாமற் கேளுங்கடி
சொன்னய மாகவே ஐந்து காய்ச்சலுப்பு
சுருக்க தாக எடுத்துக்கொண்டு 505

காதலா கச்சீன மவ்விடை சேர்த்துமே
கத்தக நீர்விட் டரைத்தெடுத்து
பேதக மில்லாக் குழம்பது வாகியே
பின்னை யெட்டுத்தினம் வைத்தெடுத்து 506

சாதக மாகவே செம்பைப் பழுக்கவே
சத்திய மாகத் துவைத்துவிடு
வாத மாகச்செம்பு ரெண்டுக்கு ஒன்றிடு
வண்மையி லாக்களங் கொன்றுசேரு 507

சாதியா கச்சேரு நொறுக்கு வெள்ளியில்
சத்திய மாகவே யெட்டிலொன்று
பாதிமதியை யணிந்த சிவன்சொன்ன
பக்குவ மான முறையிதுகாண் 508

காயக மாகவே மாத்துமே ஆறாகும்
தாட்டீக மானதோர் வேதையிது
மாயமில் லாமலே தங்கமி றங்கிடும்
மாயங்க ளெல்லா மொழிந்திடுமே 509

இந்தப் படியா யசுவனி தேவரும்
இன்பமாய் நானாதி தேவருக்கு
சிந்தை மகிழ்ந்துமே சொல்லிய கைபாகம்
சித்தமாய்ச் சொன்னேன் முறையோடே 510

சுந்தர மாகவே நானாதி தேவரும்
சுத்த யிருதயந் தான்மகிழ்ந்து
முந்தியே தானுல கத்திலே சென்றுமே
முத்திகள் பெற்றிட மானிடர்க்கு 511

இப்படி யாகக்கும் மிதனில் சொல்லியும்
இன மறியாத வாதிகளும்
தப்பியே யின்னொரு பாகமாகச் செய்து
தவித்து மேமனம் புண்ணாகி 512

மண்டபந் தனினிலே சித்திர மெழுதி
வாகான நாய்போலச் செய்துவைக்க
கண்டுமே நாயோடி ஊளையிட்டாற்போல
காரண மானதோர் வாதிபுத்தி. 513

பண்டோர்கள் பாகமாய்ச் செய்துகண்டு நூலில்
பாகமாய்க் கும்மி படித்திருக்க
வண்ட அருதலி யழுத வாறுபோல்
வண்மையாய்க் கூவி யழுதாக்கால் 514

சென்றநற் காலங்க ளெப்படி யாகுமோ
சீக்கிரஞ் சொல்லடி ஞானப்பெண்ணே
நன்றுநற் காலத்தில் நல்லபுத்தி வந்தால்
நாட்டம தாகவே செய்திடுவான். 515

கல்விமான் கண்டு பிடிப்பார்க ளிதில்
கல்வியில் லாதவன் கண்டறியான்
கொல்லி மலைக்குத்தான் போனாலுங்குரு
கொண்டு தருவாரோ ஞானப்பெண்ணே. 516

அல்லல் படாமலே வாதிக ளேயிதை
ஆராய்ந் தெடுத்தாற் பலனாகும்
சொல்லப் படாமலே பேரின்பந் தான்வரும்
சுத்த யிருதயம் ஞானப்பெண்ணே.

கெந்தக மார்க்கத்தைத் தானறியார் வாதி
கேட்டபேர்க்கெல்லாம் மனமகிழ்ச்சி
உந்தி உடலெங்குந் தான்குளிரு மிதை
உற்றுக் கேளடி ஞானப்பெண்ணே. 518

அந்திவண் ணன்மகிழ்ந் தாடும்வித் தையிதை
அரனும் பார்த்து மகிழ்ந்தாரே
முந்திய வாதியே தான்பாருயிதை
முத்தியான கெந்திச் செம்பாகும் 519

சிந்தை மகிழவே அம்பல மாச்சுது
சித்தி பெற்றரச வாதமடி
வந்திப்ப தென்பது வாதமடி யிதை
வாகாகக் கண்டுபார் ஞானப்பெண்ணே. 520

செம்புக் குரு

இன்னமொன்று செம்பு குருவின் பாகமும்
இன்பமாய்ச் சொல்கிறேன் வாதிகளே
நன்னய மாகவே செம்பு நாலுயிடை
நாகரீகமாகக் கெந்தியுந்தான் 521

மன்னவ னேகிரா சமிட்டுடைத்துநல்
மாதவ ரேரச வாதிகளே
பின்னம் வராம லெடுத்ததை வைத்துநீ
பேதம் வராமலே அப்போது 522

மாதவ ரேதாரம் அவ்விடை சேர்த்துமே
வாகாய்த் திராவகம் விட்டரைத்து
சாதனை யாகவே அரைத்து வில்லையாய்
சாமமெட் டுப்புட மேலெகுவாய். 523

போட்டெடுக் கக்குரு தானாகு மின்னம்
போக்கது சொல்கிறேன் வாதிகளே
நாட்டிலே சொல்லாதே செம்பெடுத்துத் தட்டி
நன்னய மாகவே பொட்டளையும் 524

சீனமு மவ்விடை சேர்த்துக் கொண்டுயிதில்
சீக்கிர மானதோர் கத்தநீரால்
ஆனதோர் எட்டுநாள் விட்டுவைத் தேயெடு
ஆகவே செம்பையும் தான்தோய்த்து 525

காண வரிசையாய் வெட்டையாகு மட்டும்
காத்திர மாகத் துவைத்தெடுத்து
வானவர் போற்றவே செம்புரெண் டுக்கொன்று
வண்மையாய்ச் சேர்த்து உருக்கிடவே 526

உருக்கு முகந்தனி லேகொடுத் துநல்ல
உண்மைய தாக உருக்கியெடு
திருக் கெடுத்துமே நொறுக்கு வெள்ளியில்
திட்டமா யெட்டுக்கு ஒன்றிடவே 527

எடுக்க மாத்துமே ஏழாகு மிதை
ஏழையாம் வாதிகள் செய்துகொள்வார்
அடுக்கக் கும்மியில் பார்த்து மகிழ்ந்திடு
அன்பாக யோசனை யாகுமடி 528

வாசிக் கடுவாளம் போட்டிருக்க யிதில்
வாசியைப் பின்னே யிழுத்துவிடு
தேசிகர் ஓங்கார பீட மதுண்டு
தேறிக் கும்மி யடியுங்கடி 529

ஓங்கார வட்டச் சுழிமுனை யில்வாசி
உற்றுமே பார்த்து யிருக்கையிலே
நீங்காம லென்னேரம் வாசியை மாட்டியே
நிட்சய மாகவே யிழுத்துக் கொள்வாய். 530

இழுத்துக் கொள்ளவே காயசித் தாமதில்
எந்தெந்த காலத்தி லுமிருப்பாய்
அழுத்தி நின்றாலே காயம் நிலைக்குமே
அத்வைத மாகுமே ஞானப்பெண்ணே. 531

களங்கம்

ஞானங்களாக ஒருகளங் கமதை
நாட்டினால் தங்கம் நிலையாகும்
பானங்கள் போலவே சோதித்துப் பார்த்துமே
பத்தியாய் நின்றிடும் ஞானப்பெண்ணே. 532

பத்தியும் நிற்கவே செம்புநா லுக்கொன்று
பாய்ச்சியே தங்கமு மவ்விடையே
சித்திய தாகவே நாக மிடைபோடு
சீக்கிரம் நாலும் உருக்கியெடு 533

செங்கல் வரையாகத் தோண்டிக் கொண்டு அதில்
சீக்கிர மாக உருக்கிவிட
மங்கள மாகவே பாய்த்து இருக்குமே
வாகா யெடுத்துப் பார் தோழிப்பெண்ணே. 534

பொட்டளை சீனம் யிடைசேர்த்து நல்ல
போக்கோடே கத்தநீர் விட்டரைத்து
திட்டம தாகவே யெட்டு நாள் போட்டுமே
தீர்க்கம தாகக் குழம்பிறுத்து 535

பாய்ந்த செம்பதைக் காய்ச்சித் துவைத்திடு
பாங்காகப் போட்டுமே பத்துத்தரம்
தோயாப் பாகமாய்த் தானெடுத்துக் கொள்ளு
தொல்லுல கில்ரச வாதிகளே. 536

வாதிக ளேகுகை யிட்டுருக்க நல்ல
வாகாய்க் களங்கமும் தானிடைக்கு
சேதி யானதோர் வன்னிகற்பம் மீசம்
சுப்பிரமாய் தானிடை சேர்த்துக் கொள்வாய் 537

சேர்த்துமே பாணி யதனா லரைத்து நீ
செப்பமாய்த் தூளாகப் பண்ணிக்கொண்டு
பார்த்துமே கொடுக்க வெட்டையாகும் நல்ல
பாகத்தைக் கேளடி ஞானப்பெண்ணே. 538

தெம்புடன் வெட்டையாய்ப் போகுமடி யிதில்
சேர்த்துக் கொடுத்து யெடுத்துருக்கி
அன்புட னாகவே வெட்டை கொடுக்கிற
ஆதியாம் பாகத்தைக் கேளுங்கடி 539

பாகம தாகவே செம்பெடுத்துத் தட்டி
பாகம் வெடிசீனம் சரிசேர்த்து
தாமத மாகவே கத்தநீர் விட்டுமே
தாக்கி யிருத்துமே கேளுங்கடி 540

ரவியைக் கரியில் வைத்தூதி நல்ல
நன்மைய தாகவே தோய்த்தெடுத்து
கவிய வெட்[illegible]குமட்டும் துவை
கண்டுமே கொ[illegible]னப்பெண்ணே 541

கண்டு கொண்டு தூ!வைத் தெடுத்துமே நல்ல
காரணமா:கி:' ' செம்புரெண்டும்
வண்டு களங்கொன்று சேர்த்து உருக்கியே
வாகாகத் தானே உருக்கிக் கொள்வாய் 542

கொள்வாய் நொருக்கு மதியெட்டி லேரெண்டு
கொடுத்திட நல்ல தங்கமாகும்
துள்ளியே தானே திரியாதே உப்பு
துப்புரவாகப் புடமிறங்கும். 543

இந்தத் களங்கத்தை செந்தூரிக் கச்சொல்வேன்
இன்பமாய்க் கேளடி ஞானப்பெண்ணே
சுந்தர மாகவே இரசச் செந்தூரம்
துப்பர வாக யிடைசேர்த்து 544

சந்தேக மில்லாமல் செந்தூரந் தன்னிலே
தக்கத் திராவகந் தானெடுத்து
விந்தைய தாகத் திராவகத் தைவிட்டு
வீரியமாக அரைத்தெடுநீ 545

அரைத்துக் குப்பியில் தானடைத் துக்காசி
அன்பாகத் தான்வைத் தெரித்திடவே
நிறையச் செந்தூர மாயிருக் குமிது
நிச்சய மாகவே ஞானப்பெண்ணே. 546

நூற்றுக்கு ஒன்றிடு லோகம் பழுத்திடும்
நுண்ணிமை யாக யிருந்திடுமே
பார்த்து யெடுத்திடு வாதிக ளேயிதை
பதி நிலைத்திட ஞானப்பெண்ணே. . 547

பெண்ணுடன் உப்புப் புளியுந்தள்ளு யிதில்
பேரான செந்தூரங் குன்றியுண்ணு
நன்னய மாகவே தேகம் வலுத்திடும்
நாடியே மண்டலம் உண்டிடவே 548

மண்டல முண்டிட நோய்மூன்றும் போகும்
வாகா யிருந்திடும் தேகங்களும்
கண்டதோர் பேருடன் சொல்லாதே நல்ல
கருணையாகவே ஞானப்பெண்ணே. 549

செந்தூரந் தன்னையே லோகத்திற் பாய்ச்சிட
சித்தமாய்ச் சொல்கிறேன் கேளுங்கடி
நந்தூரம் போலவே போகாதே யிதில்
நாடிச் செய்யவகை தான்கேளு. 550

செம்புவெட் டையாகி வந்தாக்காலது
சித்தமா கத்தங்க மாகிவிடும்
வம்புசெய் யாமலே செம்புவெட்டையாக்கி
வைக்கவே பாரடி ஞானப்பெண்ணே. 551

வைக்க ஒருசேதி சொல்லுகி றேன்நல்ல
வாகான நாகத் தயிலமுடன்
சிக்கவே கைபாக மாகவே சொல்கிறேன்
சிக்குமே பாரடி ஞானப்பெண்ணே. 552

களங்க முறை

கெந்தகந் தார மிடைசேர்த் துப்பொடி
கீர்த்திய தாக அயக்கரண்டி
சிந்தைய தாகவே யிட்டுருக் கிவெகு
சீக்கிர மாக ரசத்தைவிடு. 553

சுந்தர மான குகையிலே நிற்கின்ற
சூத்திர மான ரசந்தானும்
பிந்தாமல் தானிடை வைத்துடன் கிண்டவே
பித்தாகத் தான்கரி யாகுமடி 554

துருசு தான்பொடி விந்து யிடை சேரு
துப்புர வாகவே கிண்டிடவே
வரிசை யாகவே சுத்தக் கருப்பாகும்
வாகாப் பாரடி தோழியரே. 555

கருத்த தென்று மயங்காதே யிதில்
காட்டவே தங்கமாம் வாதிகளே
சிருத்த வீரம் அரைவாசி கூட்டியே
சுத்தமாய் லிங்கம் அரைவாசி 556

பருத்த பரிரேக்கு காலுமே விட்டரை
பக்குவமாக உருக்குயெல்லாம்
நிருத்துப் பார்க்க யிடைசம னாகியே
நிட்சயமாக யிருந்துவிடும் 557

இருக்குமிந்தச் சரக்கைத் தைலமாய்
இன்பமாய் வைக்க முறைகேளு
திருக்கில் லாமலே கோழியி னண்டத்தை
தீவிர மாகவே தான்வாங்கி. 558

அடுக்க அண்டத்தின் மஞ்சள் கருவைநீ
அன்பாக ரெட்டிப் புடைத்துவிடு
உடைத் தெடுத்துமே குப்பி தனிலிட்டு
யூகமாகப் பூமி புதைந்திடவே 559

தடுத்த மண்டலம் விட்டு எடுத்திடு
தாயம தாகத் தைலமதாம்
எடுத்தத் தைலங் கலசத்தி லிட்டுமே
இன்பம தாக எடுத்துவைத்து 560

தைலந் தன்னிலே வேதைகள் கோடியாம்
தாக்க நவலோகந் தான்பழுக்கும்
தைலம் வெள்ளி தகட்டினில் பூசியே
தாக்கிடத் தங்கம் நிலைத்திடுங்காண். 561

இந்தத் தைலஞ் சுருக்கிடவே கட்டும்
இன்பமா கச்சரக் கத்தனையும்
சிந்தைய தாக அசுவனி சொன்னது
சீக்கிர மாகவே தான்பாரு. 562

தார ஈயம்

தாரத்தை யீயம தாக்கிற பாகத்தை
தந்திர மாகவே சொல்லுகிறேன்
நேரொத்த சீஷனும் செய்திடுவான் தங்கம்
நிட்சய மாகுமே ஞானப்பெண்ணே. 563

லிங்கம் பலமொன்று தானெடுத்து யிதில்
நேராய்ப் பழச்சார் சுருக்கிடவே
அங்கம தாகிய கெந்தி உருக்கிடு
ஆனதோர் லிங்கம் பிரட்டியெடு 564

துங்கம தாக யிருகிடுங் காண்லிங்கந்
துப்புரவாக யெடுத் துவைத்து
பங்கம் வராம லெடுத்துக் கலசத்தில்
பக்குவ மாகவை ஞானப்பெண்ணே. 565

எடுத்து வீரம் பலமொன்று தான்நிறு
இன்பமாய்க்கெந்தி உருக்கிடவே
அடுத்துப் போட்டுப் பிரட்டிட வேவீரம்
அன்பா யிறுகியே தானுமது 566

விடுத் திருக்கு மிதுவீர லிங்கமும்
விட்ட திதுரெண்டுந் தான்சேர்த்து
கடுத்த தாரமு ரெண்டிடை சேர்த்துமே
காரணமான திராவகத்தால் 567

அரைத்துச் சாமமும் ரெண்டு அரைத்துமே
அன்பாக உண்டையாய்ப் பண்ணிக்கொண்டு
கரைத்து நல்லெண்ணெய் தான்கரண்டியிட்டு
காதலா யுண்டை கொடுத்திடவே 568

பரைத்து நால்சரக் கத்தனையும் கட்டி
பாகமாய் நின்றாடும் போதினிலே
நிரைத்த துப்புக்க ளோடிவிடு மிந்த
நிலைமை கண்டறி ஞானப்பெண்ணே. 569

ரவியைத் தானே தகடுதட்டி யிதை
நன்றாய் வெடிசீனந் தான்குழப்பி
பவிய மாகவே கத்தநீர் விட்டுமே
பாங்காக நாளெட்டு தானும்வைத்து 570

வெட்டையாய்த் தானே யெடுத்துக்கொண்டு நல்ல
வேதையாம் பாகத்தைச் சொல்லுகிறேன்
திட்டம தாகவே செம்புவெட்டை ரெண்டு
தீபர மானதோ ரீயம்ரெண்டும் . 571

நட்டணையாகவே சேர்த்துருக்கி யெடு
நாதாந்தச் செம்புமே கட்டிநிற்கும்
கட்டின செம்பை யெடுத்துமே சொல்கிறேன்
காரணமான நொறுக்குவெள்ளி 572

திட்டம தாயெட்டுக் கொன்றுமே சேர்த்திடு
தீரமான தங்கம் நட்டமில்லை
பட்ட மரத்திலே பாலது வந்தாப்போல்
பாக்கிய முண்டாகும் ஞானப்பெண்ணே. 573

ஏகமு மாகுமே சந்தேக மில்லாமல்
இயக்க மில்லாதோர் பாகமுமாம்
தாமமும் யோகமும் தானாகு மிதில்
தாட்சியு மில்லையே ஞானப்பெண்ணே. 574

மால்தேவி போலவே கண்டதில்லை யிதில்
வாகான தங்க மிகவாகும்
ஆல்காத் தகிளி போலாகுமிதில்
அத்வைத மாகுமே ஞானப்பெண்ணே. 575

அத்வைத மான பரஞ்சோதி யிதில்
அத்வைத மானது தங்கவித்தை
சற்றேநீ கைபாக மாகச்செய் தாலது
சத்திய மாகுமே ஞானப்பெண்ணே. 576

சத்தி சரக்கான தாளக மானதை
தப்பாமல் வாதிகள் வைத்தெடுத்தால்
புத்தியி னாலேதான் தங்கமாகும் நல்ல
புதுமை யாகுமே ஞானப்பெண்ணே. 577

ஞானத்தில் வாதம் நிலையாகு மிதில்
ஞான மிதுவெனத் தானாகும்
பானத்தாற் கெட்டுத் திரியாதே தெய்வம்
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 578

வேதைக்குப் பாஷாணம் நிலையில்லை நல்ல
வேதைக்குக் கட்ட முறையுமில்லை
பாதைக்கு முத்தியுந் தானுமில்லை நல்ல
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 579

ஒன்றான மாத்துமே பத்தாகும் நல்ல
உறுதி யான வடகிரந்தம்
நன்றாகத் தானே ஒளிக்கவில்லையிது
நாடிப் பெரியோரைக் கேட்டுக் கொள்வாய் 580

கேட்டுப் பணிந்துமே மானத பூசைசெய்
கீர்த்தி யாகஉல கத்திற்சொல்வார்
பாட்டுப் படிசெய்தாற் பாகம தாகவே
பத்தியு டன்செய்யெல் லாமுடியும் 581

நாட்டிலே வாதிகள் கேட்டுக் கும்மி சொல்ல
நாணய மான களங்கமுடன்
தேட்டுடன் செந்தூரம் பாகம தாகவே
தீர்க்கமாய்க் கும்மி தனிலுரைத்தேன். 582

சுண்ண வகைகளும் பாகங்களும் சொன்னேன்
சுத்தமாய் மந்திரி போற்பாரு
நன்னய மாகவே சொல்லிவிட்டே னின்று
நாகரீ கமாகப் பாருங்கடி. 583

பாருங்கடி கையின் பாகத்தைப் பாரு நீ
பக்குவ மாய்க்கும்மி தன்னிலேதான்
சேருங்கடி யிந்தச் செந்தூரப் பாகத்தில்
சேர்த்திடு நாகச் செயநீரில் 584

ஞானக்கும்மி பத்து நூறையும் பாரடி
ஞானமும் நாதம் நிலைத்துவிடும்
பானமா யானந்த மாங்கலிப் பாவையும்
பார்த்துமே செய்வார்கள் தோழிப்பெண்ணே. 585

ஆனந்தக் கலிப்பா ஆயிரம் பாரு

வாத வசியமுந் தானாகும் மணி
மந்திரக் கர்மங்க ளெட்டுவரும்
சேதப் படாமலே ஆனந்த மாகவே
சேர்த்துக் கும்மிதனைப் பார்வையிட்டு. 586

இட்டுமே நீலனைச் சுண்ணம்பண்ணியிதில்
இன்பம தாகவே சொல்லுகிறேன்
பட்டுமே பார்த்திடு வங்கச் செயநீரை
பலன் கிடைக்குமே ஞானப்பெண்ணே. 587

வங்கச் செயநீர்

வெள்ளி ஈயம்பலம் ஒன்றெடுத்து யிதில்
வித்தக மாகக் குகையிலிட்டு
துள்ளி யுருக்கையில் ரசத்தை விட்டிட
துப்புர வாகவே மூடியெடு. 588

பாகம தாக உருக்கியே ஊதிட
பக்குவ மாகவே ஓடாமல்
பாகம தாயெடு புட்டுப்போ லாகுமே
பண்பாகப் பாகத்தைக் கேளுங்கடி. 589

பாகத்தை சொல்கிறேன் கேளுங்கடி யிதில்
பக்குவ மான யிடைவீரம்
யோகம தாகவே விட்டரைத் தால்சாமம்
உற்றதைத் தான்புகை நீராலே 590

நீரினால் விட்டரை மண்டலம் வைத்தெடு
நிச்சய மாகவே ஊரல்கக்கும்
பாரிலே தானிரு வாதிகளே யினி
பக்குவ மானதைச் சொல்லுகிறேன் 591

நீல கண்ட னொருபலந் தானிதை
நிச்சயமாகத் துவைத்துவைத்து
கால மாய்ரவியி லெட்டுநாள் போட்டிடு
காரிய மாகவே ஞானப்பெண்ணே. 592

அண்டத்தைச் சுண்ணமாய் ஊதிடநீறுமே
அன்பான சீனத்தை ஊதியெடு
கண்டதி துரெண்டுஞ் சேர்த்தரை வெண்கரு
காதலாய் வில்லை ரவியிலிடு. 593

கொண்டு எடுத்துப் பதனமாய் வைத்தாக்கால்
கூறுவேன் கேளடி ஞானப்பெண்ணே
பண்டிடை யூதிடக் கடுமை யாகுமே
பாக்கிய மானதோர் கைபாகம். 594

சொல்லுவே னாலுக்கு வீரமும் ஒன்றுமே
சுத்தரைத் துப்புகை நீரினாலே
வெல்லவே முன்நீல கண்டன்மே லிட்டிடு
வித்தக ரே ரச வாதிகளே. 595

வாதிக ளிட்டிடுங் காடைப் புடமிட்டு
வண்மைய தாக எடுத்திடவே
நீதிய தாகவே சுண்ணமா கும்வாதம்
நிலைக்கு மாமடி தோழியரே 596

நிலைக்க வேநீலச் சுண்ணம்நா லொன்றிடு
நேரான வீரத்தைக் கூட்டிக்கொண்டு
மலைக்கத் தாரத்தின் மேலப்பி வைத்திடு
வாகான காடைப் புடமிடுநீ 597

புடமி டத்தாரம் நீறிவிடு மிதில்
போக்கோடே செய்யவே தான்கேளு
அடைவ தாகவே நீறின தாரத்தில்
அன்பாக வீரமும் நாலிலொன்று 598

ஒன்றுமே யிட்டிடு தான்புகை நீரினால்
உண்மையாய் விட்டரைத் துக்கேளு
நன்றுமே நீலன்மேற் கவசங் கட்டியே
நாட்டம தாய்ப்புடம் போட்டெடுக்க 599

எடுக்க நீறியே தானே குருவாகும்
இன்ப ரசமது கட்டிவைக்கும்
கடிக்க நீயதைச் சொல்லா தேவெகு
காரிய மாகுமே ஞானப்பெண்ணே. 600

அடுக்க லோகமுந் தங்கமும் நீறிடும்
ஆகாதோர் மண்ணொடு கல்முதலாய்
படுக்க நீறியே தான்குரு வாகுமே
பத்தி முத்தியாகும் ஞானப்பெண்ணே. 601

முத்தியாய்த் தாளகம் நீறிவிடு மிதில்
முத்திபெற்ற சித்தி தானாகும்
பத்திய தாகவே உப்பிரு பத்தஞ்சும்
பண்புடன் நீறிக் குருவாகும் 602

நீறியே தானே யிருந்துவிடும்நல்ல
நீதியான ரச வாதமடி
பாரில் அதிகதூரம் கெவுனக் குளிகை
பாய்ச்சிடும் வேதை பதையாமல் 603

இந்தப் படியா யசுவனி தேவரும்
இன்பமாய் நீலனைச் சொன்னாரே
அந்தப் படிசித்தர் தேவருங் கண்டுமே
ஆலயங்கள் கட்டி வைத்தாரே 604

வைத்துமே சந்தோஷப் பட்டேயுலகத்தில்
வாகாகச் சொன்னதைக் கேளுங்கடி
உற்றுமே பார்த்து முறைகளைக் கும்மியா
யுடன் பாடிசொன்னேன் ஞானப்பெண்ணே. 605

வாதிக ளென்றுமே பேரெடுத் தால்ரசம்
வாதித்துச் செந்தூரஞ் செய்யவேணும்
நீதிய தாகவே உண்ணவே ணும்காயம்
நிலைக்கச் செய்து யிருக்கவேணும் 606

மாத்து முதலான பார்வை வேணும் நல்ல
வாகான ஞானத்தைப் பார்க்கவேணும்
நேத்திய தாய்நிஷ்டை பண்ணவே ணும்நல்ல
நேரான வாதமாம் ஞானப்பெண்ணே. 607

அண்டத் தைலம்

அண்டத் தைலங்கள் சொல்லுகிறே னிப்போ
ஆனந்த மாகக்கேள் வாதிகளே
வண்டத் தனமாகச் செய்யாதே மனம்
வைத்துமே செய்து நிலைக்கப்பண்ணு. 608

கோழி யண்டமும் தான்வாங் கியதில்
கோழி மஞ்சள்கரு நாலுஞ்சேரு
பாழிலே போகாமல் சார்மு நாலுசேர்
பத்தவே சேர்த்து யிடித்தெடுத்து 609

இடித்துப் பானை தனிலடைத்து யிதை
இன்பம தாய்க்குழித் தைலம் வாங்கி
படித்துத் தயில மாகயிற க்கியே
பத்தவே சீஷா தனிலடைத்து 610

நாகச் சுத்தி

அடைத்து நாகத்தை யிலுப்பை யெண்ணையில்
அன்பாக வேயிரு பத்தோர்தரம்
படைத் துருக்கியே சாய்த்து யெடுத்திட
பத்தவே கண்ணு மடங்குமடி 611

நாகக் கட்டு

அடங்கும் நாக மெடுத்து உருக்கியே
அன்பாக அண்டத் தைலமதை
இடம் கொடுக்கவே உருக்கிச் சாய்த்திட
இன்பமாய்க் கட்டுமே வாதிகளே. 612

கட்டி மணியாகு மெடுத்துருக்கவே
கரியிலேநின்று ஆடுமடி
திட்ட முடனிடை போகாதிருந்திடும்
தீர்க்கம தாய்நாகங் கட்டுமடி 613

பட்டபா டும்வெட்டி யாகாது நல்ல
பாக்கியந் தரும் வேதைமிகும்
சட்டமு டன்முறை பார்த்துமே தேறிடு
சத்திய மாகவே புத்தியதாய் 614

செம்பு சுத்தி

சத்திய மாக வெடியுடன் சீனமும்
சற்றே சுத்தநீர் தன்னிலிடு
புத்திய தாய்ச்செம்பு தகடடித்துச் செய்யும்
பொருளைக் கேளடி ஞானப்பெண்ணே. 615

பத்திய தாகக் குழப்பியே வைத்தெடு
பாகமாய்க் காய்ச்சித் துவைத்தெடுக்க
நத்தியே தானுடை வெட்டைய தாகுமே
நாதாந்த வெட்டையைத் தானெடுத்து 616

எடுத்துக் குகைவிட் டுருக்கியே நாகமும்
எட்டுக்கு ஒன்று கொடுத்திடவே
அடுத்த மாத்தது பத்தரை யுமாகும்
அன்பாகப் பாருநீ தோழியரே. 617

நாகத்தைப் போலவே வர்ணங் களில்லையே
நாதாந்தப் பேரொளி தானேகண்டு
பாகத்தைக் கண்டு பிடித்தா லேயிது
பத்தியுமாகுமே ஞானப்பெண்ணே. 618

சோரத்தைக் கட்ட வகையறி யார்வாதி
சுட்டுப் புகைத்திட ஓடிப்போகும்
பாரத்தை ஏற்றிச் சுமந்தா லேநல்ல
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 619

கட்டி யெடுத்தாக்காற் பொன்னாகு மிதில்
காரிய மாகுமே வேதைகளும்
பட்டியா கத்தரிந் தாவது சொல்லடி
பாக்கிய மாகுமோ ஞானப்பெண்ணே. 620

பாக்கிய வான்களும் தொட்டாக் கால்ரெம்ப
பாக்கியம் வந்து நிலைத்திடுங்காண்
நோக்கி யிருந்தாக்கால் என்ன பலனாகும்
நுண்ணிமை யாகுமே ஞானப்பெண்ணே. 621

ஞானங்கள் கல்விகள் தான்பேசி வாதி
ஞாயந் தவறியே வாதஞ்சுட்டு
பானத்தைக் கண்டு குடித்தாக் கால்தெய்வ
பதி நிலைக்குமோ ஞானப்பெண்ணே. 622

பதி நிலைக்குமே ஞானம் வந்தாலது
பத்தி தரும் வித்தை முத்தியுண்டாம்
கெதிய தாகத் திரிந்தா லேநல்ல
கீர்த்தியு மாமடி ஞானப்பெண்ணே. 623

நிதிபோ லெண்ணியே கும்மி தனைப்பார்த்து
நேர்மை யுடனேதா னிப்போது
பதியி லேயிதை வைத்துமே பார்த்தாக்கால்
பதம் நிலைக்குமே ஞானப்பெண்ணே. 624

கெந்தகச்செம்பு

பதம் நிலைக்கவே சொல்லுகி றேன்செம்பு
பண்பாகத் தான்குகை யிட்டுருக்கி
அதம் படக்கெந்தி தானிடைக் கித்தாக்க
அன்பாகத் தானே உடைந்துவிடும். 625

உடைந்த சத்தொடு வெங்காரங் கூட்டிட
உள்ள படிக்கி உருக்கிக்கொண்டு
நடந்தக் கெந்தகச் சத்தாகும்பாரு
நாடிக் கும்மி யடியுங்கடி 626

அடித்துப் பார்க்கவே வெட்டையா கும்நல்ல
ஆனதோர் கெந்தக ஈயச் செம்பு
படித்த வேதை கவர்கோடி யிதில்
பற்றியே பாரடி ஞானப்பெண்ணே. 627

சித்தான நாகமும் பத்துருக்கி யிதில்
சித்தியாங் கெந்தகச் செம்பையிடு
முத்தாக வேகமாய்த் தான்களங் காமதில்
முக்கிய மாமடி ஞானப்பெண்ணே. 628

முக்கிய மாகவே செம்பெடுத்து யிதில்
முத்தி வெடியுடன் சீனம்சேர்த்து
தக்கவே கத்தநீர் விட்டரைத்தே யிதில்
தாக்கியே காய்ச்சித் துவைத்தெடுக்க 629

எடுக்க வெட்டையா மிந்தச்செம் பையெடு
இன்பம தாய்வெள்ளி பத்திலொன்று
அடுத்துக் கொடுக்கத் தசமாத் தாமிதை
அறிந்து பாரடி ஞானப்பெண்ணே. 630

விண்டு பராபரை பாதங்கள் போற்றியே
மிகவும் நிட்சய மாயிருந்து
கண்டு மனதை நிறுத்திக் கொள்ளுயிதில்
காரிய மாமடி ஞானப்பெண்ணே 631

அயக் களங்கு

காரிய மாகவே கெந்திச் செம்பையெடு
காரண மாகவே நால்நிறுத்து
பாரிய மாகவே ஒன்று கொடுத்திடு
பக்குவ மாக அயந்தனிலே. 632

அயத்தை நல்லா யுருக்கி யெடுத்துமே
அப்பாலே வைத்துமே சொல்லக்கேளு
நயம் படச்செம்பு தட்டிக்கொண்டு யிதில்
நல்ல வெடியுப்பு சீனமுடன் 633

சீனமுங் கத்தநீர் விட்டரைத் தேயெடு
சீக்கிர மாகக் குளம்புதன்னில்
ஆனமுன் செம்பையுந் தோய்த்தெடுக்க வெட்டை
யாகுமே பாரடி தோழிப்பெண்ணே. 634

ஆடித் திரிந்துமே செம்புநா லுக்கொன்று
அன்பாகக் கெந்திச்செம் புஞ்சேர்த்து
பாடித் திரிந்து உருக்கி யெடுத்துமே
பக்குவ மாகவே சொல்லக்கேளு. 635

சொல்ல நொறுக்கிடும் வெள்ளியெட் டிலொன்று
சேர்த்திட மாத்துமே ஆறாகும்
வல்ல அசுவனி சொன்ன கைபாகத்தை
வகையா யூதி யெடுத்துக்கொண்டு 636

எடுத்து வைத்துமே செலவு செய்துநீ
இன்பமாய் ஞான மிகப்பாரு
அடுத்து கெந்தியைப் போலே கிடையாது
ஆனநிலையது ஞானப்பெண்ணே. 637

எடுக்க யின்ன மொருபாக மது
இன்பம தாகவே சொல்லுகிறேன்
அடுக்கப் பார்த்தாலல் லோதெரி யுமிது
அத்வைத மாமடி ஞானப்பெண்ணே. 338

வாதி யிடத்தினில் தானேசென்று நல்ல
வாகான கெந்தகச் செம்பையெடு
பாதி மதியணிந் தார்போலே யிதில்
பக்குவம் சொல்கிறேன் கேளுங்கடி 639

கருவங்க வெட்டை

காரீயந் தான்குகை தன்னி லுருக்கியே
காரண மாகக் கெவுரியிடை
பாரிய தாகவே வெட்டையா கும்நல்ல
பதிவைக் கேளடி ஞானப்பெண்ணே. 640

காரீய வெட்டையும் ரெண்டிலொன்று யிதில்
காரண மாய்க்கெந்திச் செம்புஒன்று
வாரியாய்ச் சேர்த்து உருக்கிக்கொள்ளு யிதில்
வகைய தாகவே ஞானப்பெண்ணே. 641

வெடியுஞ் சீனமும் சேர்த்துக் கத்தநீர்
வேதைய தாகவே விட்டரைத்து
படியச் செம்பையுங் காய்ச்சித் துவைத்திடு
பக்குவ மாய்வெட்டை யாகுமடி 642

வெட்டையில் நாலொன்று காரிக்கெந்தி செம்பு
வேடிக்கை யாக உருக்கியெடு
திட்டம தாகவே வெள்ளிபத்தி லொன்று
சேர்த்துஊதி யெடுத்திடவே. 643

திட்டம தாகவே மாத்துமே ஐந்தாகும்
திட்டம தாய்ப்புடம் வைத்தெடுக்க
நட்டமில் லாமலே உப்புக்குங் காவிக்கும்
நாடியே நின்றிடும் ஞானப்பெண்ணே. 644

வாதிகள் செய்யு முறையிது தான்நல்ல
வாதத்தை கண்டு மிடித்துக்கொள்வாய்
சேதியை விட்டுமே சுட்டுப் பலனென்ன
செல்வம் நிலைக்குமே ஞானப்பெண்ணே. 645

திட்டம தாகவே வெள்ளிபத் திலொன்று
சேத்துமே ஊதி யெடுத்திடவே
சிட்டம தாகவே மாத்துமே ஐந்தாகும்
சீரானபுடமும் வைத்தெ டுக்க 646

இந்தப் படியாக அசுவனி தேவரும்
இன்பமா யண்ணா மலையிருந்து
அந்தப் படியவர் தானுரைக்க யிது
ஆதர வாமடி ஞானப்பெண்ணே 647

இலிங்கப் பற்பம்

ஆதர வாக ஒருசேதி யிதில்
அன்புடன் லிங்கமும் பற்பஞ்சொல்வேன்
போதர வாகவே லிங்கமுஞ் சேரொன்று
போகமு டன்புகை நீரும்விட்டு 648

வேதைகள் செய்ய மணந்துணிந்து யிந்த
மேதினி தன்னி லிருந்துகொண்டு
சேதப் படாமலே தானரைத்துக் குப்பி
சீக்கிரமாக அடைத்திடுங்காண் 649

அடைத்துக் குப்பி நிறையவிட்டு யிதை
அன்பாக அப்புரம் வைத்துக்கொள்ளு
துடைத்துச் சட்டி எடுத்துவைத்து நன்றாய்
துப்பர வாகவே கல்லுப்பெடு 650

எடுத்துப் புட்டுப்போல் நேக அரைத்திடு
இன்பமாய்க் குப்பியைச் சட்டியிட்டு
நடுத்துக் குப்பிமுக் காலிடவே உப்பு
நாடியே கையா லமுக்கிவைத்து 651

குப்பிவாய் மூடாமல் மேல்சட்டி மூடியே
குணம தாய்ச்சீலை மண்ணுஞ்செய்து
தப்பித மில்லாமல் நூற்றிரெண்டு பத்து
தானே நாழிகை தப்பாமல் 652

எரிக்கப் பதங்கமாய் யேறி யிருந்திடும்
இன்ப மயிர்க்குச்சி தன்னால்வழி
தரிக்கப் பார்க்கவே தும்பை நிறமாகும்
தப்பாமற் தான்வேதை சொல்லுகிறேன் 653

தங்க பற்பம்

சொல்லுவேன் வேதைகள் தங்கரேக்குயெடு
சுத்தமாய் நாலிலொன்று சேர்த்து
வெல்லுவேன் திராவகம் விட்டரைத் துச்சாமம்
வித்தக மாகவே யெட்டரைத்து 654

அரைத்து மெழுக தாகவில் லைசெய்து
அன்பாக ரவியிற் காயவைத்து
பரைத்துச் சீனத்தை ஊதியெடுத்துமே
பக்குவ மாகக் கவசமிட்டு 655

கவச மிட்டுமே குக்குட மிட்டெடு
காரிய மாகவே நீறிவிடும்
அவசி யமாக நீறின ஏமத்தை
அன்பாக நீயு மெடுத்துமேதான் 656

நீறின தங்கத்தை நூற்றிலொன் றூட்டிடு
நேராகத் தங்கம் நிலைத்திடுங்காண்
பாரிலே மானிடர் தேனிற் குழப்பியே
பத்தியாய் மண்டல முண்டிடவே 657

மண்டல முண்டிட வலுக்குந் தேகமும்
மாய்கை யானதெல்லாம் தான்விலகும்
கண்ட திரேகமுங் காயசித்தி யாகும்
கற்பாந்த காலம் நிலைத்திடுங்காண் 658

அண்டர்கள் தேவர்கள் போலா குந்தேகம்
ஆனதோர் காய முறுதியாகும்
பண்டு அசுவனி தேவர்தான் செய்துண்ட
பாக்கிய மானதோர் பற்பமுந்தான் 659

நீதி தெரியாத வாதிக ளுமிதை
நேராக வைக்க முடியாமல்
சோதித் தலைந்து திரிவார்கள் தெய்வச்
சோதி நிலையாதே ஞானப்பெண்ணே 660

செம்புக் கட்டு

பதிநி லைக்கவே சொல்லுகி றேன்ரவி
பாங்கா யொருபலந் தானெடுத்து
விதிய தாகத் தகடுதட் டியெடு
வித்தக மாகவே சொல்லுகிறேன் 661

வெடியுஞ் சீனமு மிடைசேர்த்து யிதை
வித்தக மாகவே கத்தநீரால்
அடிய தாகக் குழப்பியே நாலெட்டு
அன்பாக வேதான் வைத்துக்கொண்டு 662

முடிய தாகவே வெட்டையா குமட்டும்
மூடிக் கரியில் பழுக்கவைத்து
நொடிய முன்குளம் பில்தோய்த்து யெடு
நுண்ணிமை யாகவே சொல்லுகிறேன் 663

சொல்கிறேன் கேள்ரச வாதிகளேகெந்தி
சூட்சம தாய்ப்பலந் தானெடுத்து
வெல்லுகி றேன்சூதங் கெந்தி யிடை சேரு
வித்தக மாய்ரெண்டுந் தானுருகும் 664

உருக்க ரெண்டுங் கரியாகு மிதை
உண்மையாய்ப் புகைநீர் விட்டரைத்து
பெருக்க முன்செம் பிடைசேர்த்து யிதை
பேதமை யாக அரைத்திடுவாய் 665

கருக்க வரைத்தலை வழித் தெடுத்திடு
காரியஞ் சொல்கிறேன் ஞானப்பெண்ணே
நருக்க வேஅங்கி தான்கவ சமிட்டு
நாடியே தான்புடம் போட்டெடுக்க 666

அயச் செம்பு

வைத்தெடுக் கக்கரித் தூளாகுமிதில்
வாகா யரப்பொடி சுத்திசெய்து
சுத்தம தாக எலுமிச்சஞ் சாற்றினில்
துப்பர வாய்மூன்று நாளும் வைத்து 667

வைத்துக் கழுவி உலரவைத்தே யெடு
வாகாக முன்கரி தானிடைக்கு
பத்தியாய்ச் சேர்த்துமே தானுருக்கு அயம்
பாங்கா யுருகி மணியாகும் 668

மணி எடுத்துமே அப்பாலே வைத்து
வாகாய் ரஃவாதி தான்கேளு
துணி கரமாகக் காரி ஒருபலம்
துப்பர வாக உருக்கையிலே 669

கருவங்க வெட்டை

உருகிற போது கெவுரி தானீயம்
உத்தம னேயிடை தான் சரியாய்
தருகக் கொடுக்க வெட்டை யாகுமிது
சற்றே கேளடி ஞானப்பெண்ணே 670

சத்தே முன்னயந் தன்னிடை காரீயம்
சத்தாகத் தான்கொடுத் தேயுருக்க
மெத்தன வேயெல்லாந் தானுருகி நிற்கும்
மேன்மைய தாமடி ஞானப்பெண்ணே 671

நொறுக்கு வெள்ளி

மேன்மைய தாகவே சொல்லுகி றேன்வெள்ளி
வித்தக மாக நொறுக்கியெடு
பான்மைய தாகவே ஊதி யெடுத்துமே
பத்திய தாய்மதி யெட்டிலொன்று 672

தானமா கவேகொ டுத்துச்சாம் பலினில்
தாக்கியே ஊதி யெடுத்திடவே
மானம தாகவே யேழுவய தாகும்
மார்க்கமி தாகுமே ஞானப்பெண்ணே 673

மார்க்கம தாகவே செம்பை முந்திப்பாரு
மாதம் ஒருதரம் செய்துகொள்ளு
ஏற்கவே ஞானமும் யோமும் வாசியும்
இனிமை யாகவே பாருங்கடி 674

உருதி யாகவே திருவண்ணாமலை
உற்ற கருநெல்லி யின்மரத்தில்
அருதி யதாக அடிதனி லிருந்து
ஆதர வாகவே சொல்லினர்காண் 675

சொன்னதோ ராயிரம் சத்திய மாமிது
சூட்சாதி சூட்சமு மாகுமடி
நன்னய மாகவே பாக வரிசையாய்
நாடியே பார்த்து யெடுத்துக்கொள்ளு 676

துருசு சுத்தி

எடுக்க நீலனுந் தான்பலம் நாலுமே
இன்பமாய்ச் சிலையும் மேலேகட்டி
அடுக்க வேசிலை சுண்ணமுஞ் செய்துமே
அன்பாக ரவியிற் காயவைத்து 677

காயவைத் துக்குகை தன்னிலே வெள்ளீயம்
கலக்க வேசேரு நாலதாகும்
மாயமாய்த் தானு முருக்கியே பக்குவ
மாகவே யெட்டுத் தரமூத்தி 678

தாகமாய்த் தோய்ச்சுமே பிரிக்கக் கவசம்
சாடியே கட்டி உடையாமல்
பாகமா யப்புரம் வைத்துச் சொல்லக்கேளு
பண்புடன் தான்வெடி யுப்புப் பத்து 679

ஞாயமாய்ச் சீனமும் ஐந்து பலம்போடு
நாட்டுப் பொடிச்சட்டி தன்னிலேதான்
நேயம தாயதை யடுப்பிலேற்றியே
நேரா யுருக்க வகை கேளு 680

ஆகமா யாகி உருக்கி [illegible] பொங்கும்
அப்பா லுருகி வருகையிலே்
பாகமாய்க் கட்டி அமுத்தியே போட்டுநீ
பக்குவ மாக உருக்கிக் கொள்ளு 681

உரு குருகாத பாகமாய்ப் பார்த்துநீ
உத்தம னேயிரு சாமமெரி
தருகுங் கட்டி சிவந்துமே நின்றிடும்
தாரணி யில்ரச வாதிகளே 682

சிவக்க மாட்டாதே பொன்னாலுந் தான்கேளு
சிவக்கத் திரும்பத் தானெரித்து
தவக்க மில்லாமல் தானெடுத் துவைத்து
தப்பாமல் சொல்கிறேன் வாதிகளே 683

வாதி களேரச வாதிகளே சொல்வேன்
வையகத் தில்சுடும் வாதிகளே
சேதிகள் சொல்லுகிறேன் பாகம தாகவே
சேர்த்திடப் பாகங்கள் சொல்லுகிறேன் 684

வாதைக ளில்லாமல் சூதம் பலம்நாலு
வைத்திடு பீங்கான் ரவிதனிலே
வேதைக்கீ தாகும் சூதந்தா னுமிதை
வெற்றி பெறலாகும் ஞானப்பெண்ணே 685

வெடியுப்புத் திராவகம்

ஆகத் திராவகஞ் சொல்லுகி றேனடி
ஆன வெடியுப்புப் பத்துமாகும்
தாகம தாய்ச்சீனம் தானிரு பத்தஞ்சு
சக்கர வாலைப் பொடித்திடுமே 686

பொடித்துப் போட்டு யெரித்திட வேயது
பொங்காமல் முன்னீரை தள்ளியெடு
அடித்துப் பின்னீரை வேரேவாங் கிச்சூதம்
ஆதர வாகவே விட்டு வைக்க 687

இரச உப்பு

விட்டு ரவிதனில் வைத்திட வேபூக்கும்
வித்தக மாகிய உப்பதெல்லாம்
தட்டி யெடுத்துமே குப்பிதனிலடை
தாக்கவே சொல்கிறேன் கேளுங்கடி 688

குப்பிக்கு சீலைதான் செய்துக்கொண்டேரவி
சூர்மைய தாய்க்காய வைத்தெடுத்து
தப்பித மில்லாமல் குப்பிக்குப் பாதியும்
தானே மருந்திட்டுச் சொல்லக்கேளு 689

அடிக் குப்பிபோல மேற்குப்பி வைத்துநீ
அன்பாக உளுந்தாற் சீலைசெய்து
முடிக்கிக் கவசம் பிசகாமல் நீயும்
முத்தி மணியும் வலுவாக 690

செய்து மேகாய வைத்து யெடுத்தது
சிக்கவே பாகத்தைக் கேளுங்கடி
மெய்யாகச் சக்கர வாலை யடுப்பினில்
மிக்கதோர் சட்டி மணலையிடு 691

பையவே நால்விரல் மணலை யிட்டுமே
பாங்காய்க் குப்பியை வைத்தழுத்தி
துய்யதாய் மணலைச் சுத்தியு மிட்டு
துப்பர வாகவே குப்பிமூடி 692

விருப்ப மாக அடுப்பேத்தி யதை
வேண்டி யெரிக்க வகைகேளு
எரிப்பின் பாக வரிசையைச் சொல்லுவேன்
இன்பம தாகவேகேளுங்கடி 693

கமல மாக யெரித்து யெடுசாமம்
காடாக் கினிசாம மெட்டெரித்து
விமல மாகவே ஆறப்போட் டுப்பிரி
வேகமாய்க் குப்பியை நீசாய்த்து 694

சாய்த்துப் பிரித்துமே தானெடுக்கமேலே
தப்பாம லேறி ரசமிருக்கும்
வாய்த்த தென்று நினைத்திடு நீதானும்
வாகான ரசத்தை யப்போது 695

பார்த்து எடுத்துமே ரசத்தைப் பீங்கானில்
பாங்காக விட்டே ரவியில்வைத்து
சீர்த்தி யுடன்கேளு தோழிய ரேவாதி
சீக்கிர சொர்ப்பனம் போல்பாரு 696

பாருந் திராவகம் விட்டுமே வைக்கவே
பத்தியே மூன்றுநாள் பூக்குமட்டும்
சேருக் கணக்காகக் தானே யெரிக்கவே
சீக்கிர மாய்ரசம் கொஞ்சமெழும் 697

அருத்த மில்லாமல் பீங்கானிலிட்டுமே
அன்பாய்த் திராவகம் விட்டுவைக்க
திருத்த மாகவே பூத்துமே நின்றிடும்
திரும்ப அடியில்செந் தூரம் சேரு 698

சேருமே குப்பியை முன்போலே மூடியே
சீக்கிர மாக யெரித்தெடுக்க
பாருமே செந்தூரம் உள்ளே யிருந்திடும்
பாக்கியம் பெற்றிடும் ஞானப்பெண்ணே 699

தாம்பிரக் கட்டு

எடுக்க எல்லாமும் அடியில் நின்றிடும்
இன்பமாய் முருக்கம் பூவுநிறம்
அடுத்தசெம்பு ஒருபலந் தானெடு
அன்பாய்த் தகடாகத் தட்டிப்பின்பு 700

உலைய தில்வைத்து பழுக்கக் காய்ச்சியே
உண்மை தாய்வெடி சீனமுடன்
நிலைய தாகவே கத்தநீர் விட்டுமே
நேராக யெட்டுநாள் வைத்திடவே 701

காய்ச்சித் துவைத்துநீ வெட்டையா குமட்டும்
காரமாய்க் கட்டி யிருக்குமது
பாய்ச்சிட வேயிந்தச் செந்தூரம் நூற்றொன்றில்
பாகமாய் மாத்துகள் பத்தாகும். 702

பத்துமாத் தாகுமே செந்தூரம் தேனிலே
பாகமாய் யுண்டிடக் காயசித்தி
சித்துக் கரியதோர் கல்தூணா குமென்று
தேசிகன் சொன்ன முறையிதுவே 703

அண்டரண் டங்கள் கிழிந்தா டுமிது
ஆன ரசஉப்புச் செந்தூரந்தான்
கண்ட பேருடனே சொல்லிட வேண்டாங்காண்
காரண மான நரகம்வரும் 704

நரகம் வராமற் செந்தூ ரஞ்செய்து
ரவியைச் சுத்தியும் பண்ணிக்கொண்டு
கரக மாகக் கொடுத்திடத் தங்கமாம்
காரண மாகுமே ஞானப்பெண்ணே 705

வாதிகள் செந்தூரம் செய்தாக் காலிதை
வாகாகச் சொல்வேன் வகைவிபரம்
சேதியைக்கேளுங்கள் சூதத்தில் திராவகம்
செப்பமாய் விட்டுமே ஐந்துநாள்வை 706

மேலாகப் பூத்ததை எடுத்துக்கொண்டுமே
மேன்மை பெறக்குப்பி தன்னிலிடு
சேலாக எரிக்க உச்சிமே லேறுமே
செப்பும் ரசத்தை எடுத்துக்கொண்டு 707

எடுத்த ரசத்தில் திராவகம் விட்டல்லோ
இன்பமா யைந்துநாள் வைக்கவேணும்
அடுத்துப் பூத்த ரசமு மடியிலே
அன்பான செந்தூரங் கூடச்சேர்த்து 708

எரித் தெடுக்கவே யேறியே நின்றாக்கால்
இந்தப் படிமுன்னே செய்யவேணும்
சிரித்து எடுக்க முப்பது நாளிலே
செய்யப்பட்டு ரசந் தான்மடியும் 709

மடிந்த ரசத்தில் தங்க மதுசேர்த்து
வாகாக எரிக்கக் குருவாகும்
அடுத்து ரவியும் பழுக்கும் பாரென்று
அன்பாக எந்தனுக் கேயுரைத்தார் 710

பாகத்தை விட்டு அலையாதே நெல்லுப்
பதரைப் போலப் பறக்காதே
ஆகம சாத்திரந் தன்னையே பார்த்துமே
அன்பாகச் செந்தூரம் செய்யவேணும் 711

கைபா கங்களும் கற்கவேணு மிந்த
காரணச் செந்தூரஞ் செய்யவேணும்
மெய்ப்பா கங்களைக் கண்டா லேசொல்வார்
மேன்மைய தாக யிருக்கவேணும் 712

குடவன் வேதை

செய்து முடிக்கவே குடவன் வேதையும்
தீர்க்கமாய்ச் சொல்கிறேன் வாதிகளே
வையகத் திலுள்ள மானிடர் தங்கட்கு
வண்மையாய்ச் செம்பொன்று சொல்லுகிறேன் 713

சோரச்செம் பைத்தட்டித் தகடாக வைத்து
சொன்ன வெடியுப்புச் சீனம்பண்ண
பாரம தாயிடை ஒட்டிரெட்டி சேர்த்து
பாகமாய்க் கத்தநீர் விட்டரைத்து 714

நேரம தாக்க் கரியூதிக் காய்ச்சியே
நேராகக் காய்ச்சித் துவைத்துயெடு
சாரம தாகிடும் துவைத்த மருந்ததை
சாக்கிரதை யாகக் குகைக்குள்வைத்து 715

எடுத்துக் குகையில் வைத்துருக் கியிடை
இன்பமாய்க் கெந்தகம் வீரம்காலாம்
நடுத்து உருக்கு முகத்தில் கொடுத்திட
நன்னயமாக நொறுங்கிவிடும் 716

நொருக்கித் தூள்பலம் ஒன்றெடுத்து யிதை
நுண்ணிமை யாகவே வைத்துக்கொள்ளு
பருக்க வெள்ளியில் யெட்டுக்கு ஒன்றிடு
பாகம தாகவே ஞானப்பெண்ணே 717

பாகம் தாகக் கொடுத்தூதி யெடு
பக்குவ மாகவே ஆறதாகும்
யோகம தாக விருந்திடுங் காணிது
உற்றுமே பாரடி ஞானப்பெண்ணே 718

உற்றுமே பார்த்து நினைவெடுத் தேயிதில்
ஓங்கார மான யிருப்பிடத்தில்
நத்தியே தானே யிருந்தாக் காலது
நல்ல பதியடி ஞானப்பெண்ணே. 719

நல்ல பதியு மிதுதாண்டி யிதில்
நாலாறு வாசல் வழியைக் கண்டு
சொல்லா திருந்த பொருள்தா னாமிதில்
சொரூப மானது ஞானப்பெண்ணே. 720

சொரூப மானது யென்னவென் றாலது
தோற்றியே வைப்ப தருபமடி
திருவு மாகுமே செல்வம் நிலைத்திடுஞ்
சோதி யாகுமே ஞானப்பெண்ணே. 721

பஞ்ச பூதமும் சேர்ந்தாலே யிது
பத்தி தரும்பொரு ளாகுமடி
வஞ்சக மாகவே தான்திரிந் தால்கோயில்
வழி நிலைக்குமோ ஞானப்பெண்ணே. 722

தோற்றி வைப்ப தொருபொரு ளையிது
தோற்றா திருப்ப தொருபொருளே
போற்றித் திரிந்தாலே வந்துசேரு மிது
பூவையே கேளடி ஞானப்பெண்ணே. 723

சுத்த சல மகிமை

சுத்த சலத்தையும் பாருங்கடி யிதில்
சுத்தி யிருப்பதைக் கேளுங்கடி
முத்தி தருவது சுத்தசல மிது
முடிப்ப தாரடி ஞானப்பெண்ணே. 724

கெந்தக நீறு

நாறும்பூக் கெந்தகம் தன்னாலு மிதை
நாடிச் சுவரப் புகைநீரால்
தேடவே தானரைத் தாவின்நெய் விட்டிடத்
தேற்றியே தானே முறிந்திடுங்காண் 725

முறிந்து தண்ணீர்போ லாகுமடி யிதில்
முத்தி பெறச்சரக் கத்தனையும்
அறிந்துமே அயக் கரண்டி தன்னிலே
அன்பாக வைத்துச் சுருக்கிடவே. 726

சுருக்கிட் டசரக் கத்தனை யுமிதில்
தொந்தப் பட்டுக்கரி நின்றாடும்
வருக்கிட வேதை தானாகு மிதில்
வந்து விளையுமே ஞானப்பெண்ணே. 727

சத்தி பரை நாதங் கெந்தியடி யிதில்
சத்தி சிவசரக் கத்தனையும்
முத்திய தாகக் கரிதனில் நின்றிடும்
முத்தி பெறயேம மாகுமடி. 728

ஏம வித்தையிதி லாகு மிதிலின்னம்
இன்பமாய் ஞான மிகவுமுண்டாம்
ஆமென்று கும்மியாய்ப் பாடினேனே யிதில்
அத்வைத மாகுமே ஞானப்பெண்ணே. 729

துருசு வைப்பு

துருசு வைப்பதுங் காணீரோ மன
துய்யச் செய்நீரைப் பாரீரோ
பருசு தான்கெடத் தானே திரிந்தாக்கால்
பாக்கிய மாகுமோ ஞானப்பெண்ணே. 730

பாக்கிய மாகவே நீலனை வைப்பது
பாரி லுள்ளரச வாதிகளே
தாக்கியே பார்த்தாக்கால் சொர்ணம் விளைந்திடும்
சாற்றுவேன் கேளடி தோழிப்பெண்ணே. 731

சாற்றுவேன் வாதிகாள் கேளுங்க ளேயிதை
தாட்சியில் லாமலே வைத்தெடுத்தால்
போற்றியே சொன்ன பலனாகும் நல்ல
பூதி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 732

பதி நிலைக்கவே சொல்லுகிறேன் செம்பு
பாத்திரம் பண்ணியே தேய்த்தெடுத்து
நிதிய தாகவே சூடன் பலம்நாலு
நேர்த்திய தாக அதனிலிடு. 733

விட்டுப் பழச்சாரும் மோரும்விட் டுயிதில்
வித்தாகச் செம்புமே பாத்திரத்தில்
செட்டுப் படயெட்டு நாள்புதைக்க அதை
சீக்கிர மாகவே யேறிவிடும். 734

ஏறியே நீலன்போ லாகுமடி யிதில்
இன்பமாய்க் கட்டியாய்த் தானிருக்கும்
காரி யெடுத்துமே சுண்ணம் பண்ணக்காணி
காட்சிய தாமடி ஞானப்பெண்ணே. 735

இப்படிச் செய்ய வகையறி யாமலே
இன்பக் கடைதனில் வாங்கிக்கொண்டு
அப்படி யாச்சுது யென்று சொன்னாலது
ஆனந்த மாகுமோ ஞானப்பெண்ணே. 736

பல்பொடி

கடைத் துருசது வாங்கிக்கொண்டு நல்ல
காரண மாக கடுக்காயும்
_யே சேர்த்து இடித்தாக் கால்பல்லுக்
கிசைவ தாகுமே ஞானப்பெண்ணே. 737

ஆறுமே துருசு திராவகத் திற்றோய்க்க
ஆப்பிட்ட நீரை யிழுத்துவிடும்
ஊழமே சுண்ணமுங் கட்டிப் புடமிட
இன்பம தாகவே நீறிவிடும் 738

வாதத்துக் கேற்ற துருசிது தான் நல்ல
வையகத் தோற்குக் கடைத்துருசு
சேதப் படாமலே துருசை வைத்தெடு
செந்தூர மாமடி ஞானப்பெண்ணே. 739

சூடன் துருசானால் வேதைக ளாகுமே
சுத்தக் கடைநீல னென்னபலன்
ஆடகம் நீராது சூதங்கட் டாகுமோ
அன்பாகக் கேளடி ஞானப்பெண்ணே. 740

துருசு வந்த யிடங்களெல் லாமிதை
துப்பர வாய்வைத் தெடுத்துக் கொள்ளு
பரிசு தங்கமும் நீறியே தான்போகும்
பலன் நிலைக்குமோ ஞானப்பெண்ணே. 741

சித்தர்கள் தானு மறைத்து வைத்தாரிது
சித்ரியாந் துருசைத் தான்பாரு
பக்தனென் றாலவன் கண்டுபிடிப்பானே
பக்தருக் குஞ்சித்தி முத்திதரும் 742

வேதைய தாகவே சொல்லுகி றேன்நல்ல
வேதத்தி லுள்ள பொருளிதுதான்
பாதைகள் ரெம்பவு மாகுமடி நல்ல
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 743

பதி நிலைக்கவே சூடச் சுண்ணமிதை
பார்த்தா லல்லோ தெரியுமிது
விதிய துள்ளபேர் கண்டு பிடிப்பார்கள்
வித்தக ரல்லவோ ஞானப்பெண்ணே. 744

நீத்தின மென்பது சொல்லக்கேளு யிதில்
நேரான தாளகஞ் சுண்ணமாகும்
பாத்திப னேயிதைக் கண்டுபி டித்தாலே
பாக்கியம் வந்திடும் ஞானப்பெண்ணே 745

பதி நிலைக்க ஒருசேதி நாகம்
பத்தி யுள்ளசெய நீர்தனிலே
விதி தாகவே சூடனைத் தோய்த்தெடு
வித்தக ரேபத்து நாள்போடு. 746

சூடச் சுண்ணம்

போடவே பின்பெடு சீனத்தை ஊதியே
பூசிய தன்பேரி லங்கியிடு
ஆடவே தான்புடங் காடைதன் னிற்போட
அன்புடன் தானே குருவாகும். 747

குரு வெடுத்துமே தாளகம் மேலிடு
கூட்டவே தாளகம் நீறிவிடும்
துருவ மாகவே வங்கத்தின் மேலங்கி
துப்பர வாயிடு நீறிடுங்காண் 748

நீறின சுண்ணத்தை தாளகம் மேலிடு
நிச்சய மாகவே நீறிவிடும்
ஆறின சுண்ணத்தில் வீரமிட் டுத்தங்கம்
ஆக்கிட வேதைகள் மெத்தவுண்டு 749

ஆறின சுண்ணத்தில் வீரமிடத் தங்கம்
அதிகப் பரிச வேதையுண்டு
தேறியே இந்தப் படியாகத் தேவரும்
சிறப்பாய்க் கைபாகஞ் சொன்னாரே 750

சாரக் கட்டு

சாரக் கட்டைநான் சொல்லுகி றேன்கடை
சாரத்தை வாங்கி யொருபலந்தான்
பாரமில் லாமலே சூடனிடை சேர்த்து
பக்குவ மாக அரைத்துருட்டி 751

அரைப்ப தற்கு யெருக்கம்பா லாலேதான்
அன்பாகத் தானரைத் துண்டைசெய்து
நிறைக்க வேரவி தன்னிலே காயவை
நேராகச் சுண்ணாம்புக் குள்ளேவைத்து 752

எரிக்க வேசாமம் ரெண்டுமே யிட்டிட
இன்பமாக ரெண்டுங் கட்டிப்போகும்
வருக்க நாகச் செயநீரு தன்னிலே
வண்மையாய்த் தோய்த்து ரவியிலிடு. 753

போட்டு எடுத்துமே சீனச்சுண்ண மிட்டு
பூராகத் தான்புடம் போட்டிடுநீ
போட்டு எடுத்துமே சாரமிடைசேர்த்து
போக்கொடு சேர்மன் ரவியிலேவை. 754

வைத்து எடுக்கச் செயநீரு மாகிடும்
வாகாகயின் னீரில் வீரம்பூரம்
பைத்துநீ போட்டுமே கலக்கி வைத்திடு
பாங்கான லிங்கஞ் சுருக்கிடவே 755

சுருக்கு போடவே கட்டி மெழுகாகும்
சுத்த ரவிதனி லிட்டிடவே
நருக்கென்ற மாத்து பத்துமே யாகிடும்
நல்ல முறையிது நாட்ட முற்று. 756

நாட்டவே யிம்முறை அசுவனியும் சொன்னார்
நாடினால் வேதை திடமாகும்
தாட்டீக முண்டாகும் பாடுபட் டாலாகும்
தங்கச் செயநீரை வைத்திடுநீ 757

பாகம தாகச் சரக்கெல்லாங் கட்டிட
பக்குவம் செய்தெடு பார்தனிலே
யோகமுந் தானாகும் ஞானமா கும்நல்ல
யூகமாய்ச் சொன்ன திதுவாகும். 758

செயநீ ரைக்கலி யுகத்தில் சொல்லினர்
செப்பமாய்க் கண்டுகொள் வாதிகளே
இயநீர் வரம்பையும் நோக்கா மலினி
இந்நூலை நன்றா யுழைத்திடுங்காண். 759

உழைக்கத் தோணுஞ் செயநீரு தன்னிலே
உண்மை மதிதனில் வேதையாகும்
அழைக்க வேபிள்ளை வந்தா லேயிது
ஆண்மைபெண் ணாளுக்கு ஆசையுண்டாம் 760

இந்தப் படிக்குரு தானுரைக்க அந்த
எட்டாம் வனந்தன்னில் சென்றனரே
இந்தப் படிதிட்ட மாகவே சொன்னதோர்
இன்பமுள்ள உப்பைத் தான்கேளு 761

கல்லுப்புச் சுண்ணம்

எப்பாரி லுள்ளலோரும் பார்த்திட வேயிதை
இன்பம தாகவே இப்போது
தப்பாமற் கல்லுப்புச் சுண்ணமுஞ் சொல்லுவேன்
தாட்டீக மாய்ரச வாதிகளே 762

கல்லுப்புச் சுண்ணத்தில் வேதை கோடிநல்ல
காரண மான ரசவாதி
மெல்லவே கல்லுப்புச் சேருமே ரெண்டுடன்
வித்தகி யேசொல்லக் கேளுங்கடி 763

சொல்லவே தான்கடல் நுரை யூதியெடு
சுப்பிரமா கயிடை உப்புச்சேரு
நல்லாகச் சேர்த்து அரைத்துமே ஊதிடு
நல்ல கடுஞ்சுண்ண மாகுமடி 764

ஆகுமே சார மிடை சேர்த் துப்பனியில்
அன்பாக வைத்திட நீராகும்
ஏகுமே வீரமும் பூரமும் போட்டுமே
இன்பமாய் வைத்திடு சொல்லுவன்கேள் 765

சொல்லுவேன் பாஷாணம் லிங்க முதலெல்லாம்
சுருக்கி டக்கட்ட தாகுமடி
வெல்லுமே லோகம் நவமதி லிட்டிட
வேதையு மாகுமே ஞானப்பெண்ணே 766

அடுத்துச் செம்பு மதிபழுக் கும்நல்ல
ஆனதோர் வேதைகள் மெத்தவுண்டு
தொடுக்க வேயொரு களங்கஞ் சொல்லுவேன்
தொல்லுல கில்ரச வாதிக ே ர 767

அடுத்த களங்கு நவலோ கஞ்சேர்த்து
ஆனதோர் தங்க மிகவாகும்
விடுத்துச் சொல்லுவேன் கைபாக மாகவே
வேண்டிக் கேளடி ஞானப்பெண்ணே 76

சொல்கிறேன் கேளும் ரசவாதி யிந்த
தொல்லுல கிலுள்ள மானிடற்கு
நல்லதோர் கைபாக வரிசை யாகவே
நாட்டில் நல்லபுடந் தானிறங்கும்

கடல்நுரை உப்புச் சுண்ணம்

இறங்க வேகடல் நுரையை யூதிடு
இன்ப மாயிடை வீரஞ்சேரு
தரங்க ளாகவே செக்கச் சிவப்பாகும்
தாட்டீக மாகவே சொல்லுகிறேன் .0

துருசு குரு

சொல்லுகி றேன்புகை நீருவிட்டுமே
சூத்திரமாக அரைத்தெடுத்து
நல்ல நீலகண்டன் மேலே அங்கியிடு
நாட்டி ரவிதனில் காயவைத்து 771

காயவைத் துமேலே சுண்ணக் கவசமும்
கட்டி ரவிதனில் வைத்தெடுத்து
பாயம தாகவே காடைப் புடமிடு
பாகமா யாரி யெடுத்தபின்பு 772

நீல கண்டனுங் கொக்கு நிறம்போலே
நேர்மைய தாக யிருந்துவிடும்
ஆலம தாகவே நீருகுத்திப் பார்க்க
ஆதியாம் பச்சையுந் தான்வருகும் 773

பச்சையென் றேமனம் பேதிக் [illegible] ன்
பாரமில் லாமலே சொல்லுகிறேன்
இச்சைப் படாமலே எடுத்துச் சொல்கிறேன்
இன்பம தாகவே கேளுங்கடி 774

செவ்வல்லி யிதனை யிட்டுமே கசக்கி
செப்பமாய்த் துருசுச் சுண்ணமிட
அவ்வல்லி தான்பிழிந் தேநீ எடுத்திடு
அருமை யாய்க்குப்பி தனிலடைத்து 775

அயக் களங்கு

அடைத்துச் சொல்கிறேன் கேளுங்கடி நல்ல
அன்பா யரப்பொடி தானும்பத்து
இடைக்கிக் கெவுரி சேர்த்துபூச் சாற்றினில்
இன்பமா யரைத்து நீகேளு 776

செல்லவே மூசை தனிலிட் டுருக்கிடு
சிறப்ப தாசு உருகிவிடும்
மெல்ல எடுத்துமே அப்பாலே வைத்துநீ
மேதினி யோர்ரச வாதிகளே 777

பஞ்சலோகச் சத்து

காரி யொருபலந் தானுருக்கிப் பாதி
காரண மான ரசத்தைவிட்டு
பாரியாய்ப் புட்டாகுந் தானே உடைத்திடு
பாகமாய் முன்னயந் தான்பாதி 778

சேர்த்து அரைசாமம் நாலது வாகவே
செப்பமாய்த் தானே புடம்போடு
பார்த்து உருக்கிடச் சத்தாகு மப்பாலே
பாகமாய் வைத்துப்பின் கேளுங்கடி 779

செம்பு பலமெடுத் தேசத்தலையாமல்
சீக்கிர மாகக் கழுவிக்கொண்டு
நம்புத லாகவே லிங்கம் பலமொன்று
நாடியே பூச்சாரு விட்டரைத்து 780

விட்டு அரைச்சாமம் நாலுட னாகவே
வில்லையை ரவியில் காயவைத்து
கட்டுமெட் டாகவே தான்புடம் போட்டுமே
காரண மாக உருக்கியெடு 781

எடுத்து முன்னயம் செம்புச்சத் திடையில்
இன்பமா யரைத்துப் பூச்சாற்றில்
படுத்து வில்லை புடமிட் டெடுத்திட
பக்குவ மாக உருக்கியெடு 782

உருக்கி யெடுத்து அப்பாலே வைத்துமே
உண்மையைச் சொல்கிறேன் கேளுங்கடி
நருக்கு நாகம் பலமொன் றுருக்கியே
நாடி ரசம்பலங் காலாக 783

காலாகத் தானே உருக்கியே புட்டாக்கி
காரிய மாகவே சொல்லுகிறேன்
பாலாகத் தாளகம் பாதிசேர்த்து அரை
பக்குவ மாய்ப்புடந் தான்போடு 784

நாலா கலையுந் தெரிந்தோர்க ளிந்த
நாட்டினிற் செய்முறை கண்டுகொள்வார்
மேலான முன்னயம் நாகத்திற் பாதியும்
மேன்மையாய்த் தானிடை சேர்த்துக்கொண்டு 785

சேர்த்துமே செவ்வல்லி பூச்சாரு தானரை
செப்பம தாக அரைத்துவில்லை
பார்த்துமே தான்குகை தானேயிட்டு ஊது
பக்குவ மாக உருகிவிடும் 786

உருக்கின சத்தை அப்பாலே வைத்துமே
உண்மையாக யின்னஞ் சொல்லுகிறேன்
தருக்கஞ் செய்யமாற் கேட்டிடு வாயொன்று
தப்பாமற் சொல்கிறேன் ஞானப்பெண்ணே 787

பரியது பலந் தானெடுத்துக் கொண்டு
பக்குவமான தகடாக்கி
தரியக் கல்வத்தில் போட்டு அரைத்திடு
தப்பாமல் வெள்ளைய தாகுமடி 788

அகடு முன்னயம் பாதி உடைத்துமே
ஆதர வாகப் பரித்தகட்டில்
நெகட தாகவே செவ்வல்லிப் பூச்சாரு
நேர்மைய தாக அரைத்துருட்டி 789

விடுத்து நல்ல புடம்போட்டுக் குகை
வீரிய மாக உருக்கியெடு
எடுத்து வைத்துமே ஐந்துமே சேர்க்கிற
இன்ப வரிசைகள் தான்கேளு 790

அடுத்துச் சத்துமே தங்கமொன்று பலம்
அன்பாகக் காரீயச் சத்துஒன்று
தொடுத்த செம்பொன்று நாகமொன்று சத்து
சுருக்கா யுருக்கக் குகையிலிட்டு 791

பஞ்சலோகக் களங்கு

சேர்த்து உருக்கி எடுத்துக்கொண்டு யெல்லாம்
செப்பமாய்ச் சேர்ந்து களங்காகும்
பார்த்து யெடுத்துமே அப்பாலே வைத்துடன்
பாகத்தைச் சொல்கிறேன் கேளுங்கடி 792

பாகமாம் செம்பு பலமெடுத்து நல்ல
பத்த வெடியுடன் சீனஞ்சேரு
ஆகமாய்க் கத்தநீர் சீனஞ்சேரு
அன்பாய்க் குழம்பாகப் பண்ணிக்கொண்டு 793

பாகம தாகவே செம்புக்குத் தோய்த்திட
பக்குவங் கேளடி ஞானப்பெண்ணே
தாகம தாகவே தோய்த்திடத் தோய்த்திட
தாட்டீக மாகவே வெட்டையாகும் 794

வெட்டையாஞ் செம்பையும் யெடுத்துவைத்துயின்னம்
வேண்டியே நொருக்கு வெள்ளியெட்டில்
திட்டமாய்ச் செம்பிலே ரெண்டு களங்கொன்று
சித்திய தாக உருக்கியெடு 795

எடுத்து டைத்துமே வெள்ளியெட்டிலொன்று
இன்பமாய்ச் சேர்த்திடத் தங்கமாகும்
அடுத்த உப்புக்குங் காவிக்கும் போகாது
அன்பான மாத்துமே பத்தாகும் 796

பத்துமே ஞானங்கள் பண்ண வேணுமினி
பத்திய தாக யிருக்கவேணும்
சத்திய மாகவே யோர்நிலையில்நின்று
சதாசிவத் தைக்கண்டு போற்றவேணும் 797

சித்தங் கலங்காமல் முத்திக்கி நேராக
சித்தர்கள் சொன்ன கபடமதாம்
முத்திக்கு வித்தாகி மூலஓங் காரமாய்
முக்கிய மானதோர் ஞானத்திலே 798

நின்று அருந்தவஞ் செய்தாக் கால்வாதம்
நிலைக்கு மென்று அசுவனியும்
நன்றாக யெந்தனுக் கேயுரைத் தாரிதை
நாடிப் பாரடி ஞானப்பெண்ணே 799

கொள்ளவே செந்தூரம் பண்ணவே ஹுமிதில்
கூரான தார மிடைசேர்த்து
மெள்ளவே பூச்சாரு விட்டரைத்துப்புடம்
மேன்மையாய்ப் பத்தில்செந் தூரமாகும் 800

செந்தூர மாகிற மட்டும் புடம்போட்டு
செப்பமாய்த் தேனினில் உண்டிடவே
விந்து நிலைத்திடும் காயமுஞ் சித்தியாம்
வீரமா யுள்ளதோர் தாதிருகும் 801

தாதிரு கும்நோய்கள் தான்போகு மிதில்
தாட்டீக மாக யுகாந்தம்வரை
பாதுகார்த்திடு மின்ன லிடியெல்லாம்
பக்கமும் விட்டு விலகிவிடும் 802

விலகிப் போகும் தவிடு பொடியாகும்
வித்தக மான மலைகளெல்லாம்
கலக்க மில்லால் வெகு பலத்தோடு
காரணமாக யிருப்பான்காண் 803

இந்தப் படியாகப் பார்த்து அசுவனி
இன்பம தய்ச்சொல்லித் தானிருக்க
அந்தப் படிசித்தர் தேவருங் கேட்டுமே
ஆலையந் தேடி நடந்தனரே 804

ஆலையந் தன்னி லிருந்துமே தேவரும்
அன்புடன் நூல்களை யாராய்ந்து
காலம தாகவே குளிகை கள்செய்து
கட்டியே திட்டமாய் நின்றாரே 805

நின்றதைக் கண்டுநான் சொல்லுகி றேனொரு
நிச்சய மானதோர் சேதிகேளு
நன்றுமே யின்ன மொருகளங்கு சொல்வேன்
நாடியே கேளும் உலகோரே 806

நாகச் செயநீர்

நாகம் பலமொன்று தானெடுத்து அரை
நன்மையா யிரதஞ் சேர்த்துருக்கி
பாகமாய்க் கால்வீரம் கூட்டி யரைத்திடு
பத்தியாய் யேழரைச் சாமமட்டும் 807

அரைக்கச் சாமமுந் தண்ணீராகு மிதில்
ஆனதோர் செம்புத் தகடடித்து
பரைக்க வேகரி யோட்டிலே தானே நீ
பழுக்கக் காய்ச்சி யெடுத்துப்பின்பு 808

எடுத்துப் பத்துத் தரம்தோய்க் கச்செம்பு
இன்பமாய்த் தானே களிம்புமற்று
தடுத்துத் தங்கம்போ லாகுமடி யிதை
சற்றே கேளடி ஞானப்பெண்ணே 809

நொருக்குவெள்ளி யெட்டிலொன்று சேரு
நோகாமல் மாத்துமே பத்தாகும்
திருக்கு வாராமற் சேர்த்துருக் கியெடு
தீர்க்கமாய் ஞானம் மிகப்பெருகும் 810

நாகத்தில் வேதையுங் கோடியாகுமிதில்
நல்லதோர் வர்ணம் மிதப்பாகும்
சோகமில் லாமலே பாகங்கள் கண்டிடில்
சுத்த ரசவாதம் பார்த்திடலாம் 811

பாகத்தை விட்டுமே செய்தாக் காலது
பக்குவ மில்லையே ஞானப்பெண்ணே
நாகத்தை விட்டுமே சுட்டலைந்துவெகு
நாதாக்கள் தேடி யலைந்தலைந்து 812

இளமை தன்னிலே வாதங்கள் உ ஈன்வரும்
எங்கும் நிலைக்குமே ஞானப்பெண்ணே
களங்குக ளின்னஞ் சொல்லுகி றேனிதில்
காரிய மானதைப் பாருங்கடி 813

நயம் படவே கரும்பொன்னைத் தேடியே
நாடியே பார்த்திடு ஞானம்வரும்
நயம தாகவே தானிருக்கும் அயம்
நாடினால் மெத்தவுஞ் சித்தியாகும். 814

உபாய மாகவே சொன்னாக்கா லதை
உற்றுக் கேளடி மெய்யாக
அபாய மில்லாமல் கேட்டா லயவெட்டை
ஆங்கார மாகவே தானிருக்கும் 815

மித்துரு சேர்த்தா லுருகுமடி யிது
மேதாவி யாகுமே ஞானப்பெண்ணே
சித்திய தாகவே சொன்னேன் கும்மிதனை
சீராகப் பார்த்திடு ஞானப்பெண்ணே 816

முத்தி அயந்தரும் வாயுக் கருவிது
முன்னின்று பார்த்தாலே தான் தெரியும்
பத்தியாய் நின்றாலே தங்கமாகும் நன்றாய்ப்
பாலிக்குஞ் சொர்ண மயமாகும் 817

இரும்பின் வேதை வெகுவித மாமிதை
எண்ணி நினைந்தாலல் லோதெரியும்
அரும்பு பூத்தாலே வாசமாகு மிது
அத்வைத மாகுமே ஞானப்பெண்ணே 818

இரும் புருக்கினால் வேதையா கும்நல்ல
இன்பம தாகவே சொர்ணம்வரும்
துரும்பு தூணான வாறுபோ லேயிதில்
சொர்ணம் நிலைக்குமே ஞானப்பெண்ணே 819

சொர் ணம் நிலை உருக்கி யெடுயிதில்
துப்பர வாச மவங் காரம்கொடு
வர்ண மிகவுமே உண்டா கும்நல்ல
வலுமை யாகுமே ஞானப்பெண் 820

வலுமையாக இரும்பு உப்புநல்ல
வாகான கெவுரி தானும்உப்பு
பலுக வேரெண்டுஞ் சேர்த்து உருக்கினால்
பதியு மரமடி ஞானப்பெண்ணே 821

பஞ்ச பூதமைந்து சேர்த்தாலே யிதில்
பாக்கிய மாகவே தங்கமாகும்
ஐந்திலே யொன்று சேர்ந்தாக்காலிதில்
ஆரேழு மாத்தாகும் ஞானப்பெண்ணே 822

உப்புக்குங் காவிக்கு மோடாது யிது
உண்மைய தாக யிரும்புவித்தை
தப்பித மில்லாமல் தானாகு மிதில்
தாட்டீக முண்டாகும் பெண்ணரசே 823

தாட்டீக மாகக் களங்கம் பண்ணுயிதில்
தாக்கினால் செந்தூரம் தானாகும்
மாட்டிமை யாகத்தான் செம்பொன்னுமாகவே
வழிய தாகுமே ஞானப்பெண்ணே 824

வழிய தாக ஒருகளங்கு தனை
வாகா யகத்தீசர் தானுரைத்தார்
பழிகள் சொல்லாமல் பார்த்துமே தேறிட
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே 825

தன்வந் திரியொடு தெட்சணா மூர்த்தியும்
க்க மிட்டுயிரு பேருமேதான்
வண்ணமா யெந்தனைத் தானழைத்துச் சொன்ன
வல்லமை யான களங்குகளை 826

களங்கு

களங்கு சொல்கிறேன் கேளுங்கடி யிது
காரண மான வெடியும்பத்து
துளங்க மாகவே சீனமுந் தானெட்டு
சுத்தமா யிடித்து வாலையிடு 827

வாலையிடு முன்னீர் தள்ளிப்போடு பின்னீர்
வாங்கியே குப்பி தனிலடைத்து
ஆலைய மாகவே நீலகண் டன்தனை
அடைவாய்த் தோய்த்து ரவிதனிலே 828

போட்டுமே எட்டு நாள் தானெடுத்து நல்ல
பொன்னான அண்டத்தை ஊதியெடு
ஏட்டுமே லங்கிதான் பூட்டுயிதைத் தானே
இட்டமாய்க் காட்டெரு பத்தினிலே 829

எடுக்க வெள்ளைபோ லேயிருக்கு மிதில்
ஏத்தமாய் நீர்க்குத்த நிலம்வரும்
அடுத்து மேநீசெம் பரத்தம் பூவினில்
ஆட்டியே சாரு பிழிந்தெடுத்து 830

பிழிந்து வைத்துமே சொல்லக்கேளு அயம்
பேராக வேபலம் பத்தெடுத்து
வழிந்து நீவெள்ளைப் பாஷாணம் சேர்த்துமே
வாகா யிடைசேர்த் துருக்கிடவே 831

உருக்க வெள்ளி மணிபோ லாம்நல்ல
உற்றுமே வெங்காரங் கொஞ்சம்சேர்த்து
நறுக்க நல்லா யுடைத்துக் கொண்டுயிதில்
நாடியே சேர்த்திடக் கேளுங்கடி 832

வெள்ளீயம் பலமது ஒன்றெடுத்து யிதை
வேடிக்கையாக உருக்கிக் கொள்ளு
துள்ளியே சூதத்தை நாலிலொன்று சேர்க்க
துப்பர வாகவே புட்டாகும் 833

புட்டாகு மிதிலே தாம்பரத்துதைச் சேர்த்து
புட்டையுங் கூட்டி அரைத்தெடுத்து
பட்டாகும் பூச்சாரு விட்டரைத்துப் புடம்
பாகமாய்ச் செய்யப் புடமுமிட்டு 834

எடுக்க வேகரி தூளது போலாகும்
இன்பமா யிந்திடை முன்னயமும்
கடுக்கச் சேர்த்துமே பூச்சாரு விட்டரை
காரணமாக உருக்கியெடு 835

உருக்கப் பொரிபோலே சத்துமாகு மிதை
உண்மையாய்ப் பாரி லெடுத்துவைத்து
பெருக்க மாகவே வாதி யிடத்திலும்
பேசாமல் வீற்றிரு ஞானப்பெண்ணே 836

காரி ஒருபலந் தானெடுத்து யிதைக்
காரணமாகக் குகையிலிட்டு
பாரிய தாக உருக்கியே சூதத்தை
பாய்ச்சிடு நாலிலொன் றேகொடுத்து 837

கொடுக்கப் புட்டாகுங் கல்வமிட்டு யிதில்
கூறிய கெந்தி பாதிசேர்த்து
அடுக்கப் பூச்சாரு விட்டரைத்து வில்லை
அன்புடன் காடைப் புடமிடு நீ 838

எடுக்க மயில்வர்ண மாயிருக்குமிதில்
இன்பமாய் முன்னயந் தானிடையாம்
படுக்க வேபோட்டு பூச்சாரு விட்டரை
பக்குவமாக உருக்கியெடு 839

உருக்கின சத்தை அப்பாலே வைத்துமே
உண்மை யாகயினிச் சொல்லக்கேளு
கருக் கண்டுகொண்டு வாதம்பாரு யிதில்
காரண மாகுமே ஞானப்பெண்ணே 840

செம்பு பலமொன்று தானெடுத்து யிதிற்
சேரு யிடைவன்னி கெற்பமதில்
நம்பியே பூச்சாரு தானுமே விட்டரை
நாடி யெடுத்து ரவியில் வைத்து 841

அடுத்து ரவிதனில் காயவைத் துப்புடம்
அன்பாகப் போட்டிடு பத்தெருவில்
எடுத்து முன்னயந் தானிடை சேர்த்துமே
இன்பமாய்த் தானரைத் தூதுங்கடி 842

ஊதி உருக்கிடச் சத்தாகு மிது
உண்மையாஞ் சத்தை எடுத்துவைத்து
வாதிக் ளேசொல்லக் கேளுங்கடி யிந்த
வாகான சத்தையும் பாருங்கடி 843

சேதியாய் நாக மொருபலந் தானெடு
சித்தி யுருக்கு முனைதனிலே
வாதைப் படாமலே நாலிலொன்று சூதம்
வாகாக வேகொடு புட்டாகும் 844

புட்டாகுந் தானெடு கல்வமிட் டுயினி
பூரண மாகவே சொல்லுகிறேன்
திட்டமாய்த் தாளகம் பாதிசேர்த்து மிதை
தீரமாய்ப் பூச்சாரு விட்டரைத்து 845

மட்டாகத் தான்புடம் வைத்து எடுத்துமே
மாயமாய்த் தானே கருப்பாகும்
திட்டம தாகவே கருப்பிடை சேர்த்தயம்
தீரம தாக உடைத்தரைத்து 846

விருப்பம தாய்க்குகை யிட்டு உருக்கிடு
மேலான நல்ல மணியாகும்
வருப்ப மணியில் பலமொன்று நீசேரு
வாகாக அயந்தா னொருசேரு 847

தனிய தாகக்கா ரீயம் பலமொன்று
தாக்கவே வெள்ளீயந் தானுமொன்று
பனிய தாகவே நாலுசத் துருக்கப்
பக்குவ மாமடி ஞானப்பெண்ணே. 848

பக்குவ மானதோர் ஏமம் பலமொன்று
பக்குவ மாகத் தகடடித்து
இக்கு வராமலே காவி யெடுத்துமே
இன்பமா கப்பழச் சாருவிட்டு 849

விட்டுமே தகட்டை வெட்டையாய்க் காய்ச்சியே
விருப்ப மாகவே தோய்த்தெடுத்து
கட்டுமெட் டாகவே சூதமிடை சேர்த்து
காரண மாக உருட்டிக்கொண்டு 850

உருட்டி முன்னாலு குகையிலே யிதை
உள்ளே கொடுத்திடத் தான் முழுங்கும்
வருட்டி மிகுத்த களங்கா கும்நல்ல
வல்லமை யாகுமே ஞானப்பெண்ணே. 851

செம்பு பலமொன்று தானெடுத்து யிதை
சீக்கிர மாக வெடிசீனம்
நம்பிக் கழுதையின் கத்த நீர் விட்டரை
நாணய மாகவே தோய்த்தெடுநீ 852

தோய்த் தெடுத்திடு வெட்டையா குமட்டும்
தோகையரே யிதை தானுருக்கி
பாய்த்து செம்பு பலம்நாலுக் கொன்றெடு
பாகமாய்க் களங்கு சேர்த்துருக்கி 853

சேர்த்து உருக்கி மதிவெள்ளி யெட்டிலே
சேர்த்துருக் கிடவே யெட்டரையாம்
பார்த்து யெடுக்கப் பசும்பொன்னு மாகுமே
பத்தி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 854

பதி நிலைக்கவே பாருங்கடி யிதை
பத்தியாய்ச் செய்யப் பலனாகும்
விதியைப் பார்க்க முடியாது யிது
வித்தக மானது ஞானப்பெண்ணே. 855

சத்து அரைப்பது சாமம்நாலு யிதில்
சாகர மாகக் கவசமிட்டு
மித்துரு வாகுமே யிந்தக் களங்கமும்
மேன்மையு மாகவே ஞானப்பெண்ணே. 856

பஞ்சபூ தத்தின் களங்காகும் யிதில்
பஞ்சறிவாலே தான் வேதையாகும்
மிஞ்சா திருந்திடும் உப்புக்குங் காவிக்கும்
மீறுமோ பாரடி ஞானப்பெண்ணே. 857

பட்டம் பறக்கவே சூட்சக் கயரிலே
பாகங்கள் தப்பில் பறவாது
நட்டதோர் நாத்தது தண்ணீரில் லாப்போனால்
நாடிப் பயிராகத் தானிருக்கும். 858

சாவியாய்ப் போகும் பலன்கொடுக் காதுநெல்
தாவித் திரியாதே வாதிகளே
சேவிய பத்தரை மாத்தாகும்
சிறந்த மாகவே யிக்களங்கம் பாரு 859

உபமானங்கள்

மானிடர்க்குப் பூதம் ஐந்தாகு மிதில்
மாறி யொன்றுதான் குறைந்தாலோ
மானிடர் மண்மேல் நிலைக்காம லுயிர்
மாண்டு போவரே ஞானப்பெண்ணே. 860

பூதத்தி லொன்றுமே தப்பினா லேவாதம்
பூதமாகவே பலவிதமாய்
வாதமுங் கெட்டுப் பணம்போகு மிதை
வாகாய் முடிவினில் தான்பாரு 861

பார்க்க மாத்துமே செய்துகொள்ளு மனம்
பதிவ தாக நிலையில்நில்லு
ஏற்கவே தங்கம் நிலைத்திடுங் காணிதில்
எத்தேச காலமும் வாழலாகும் 862

வாழலா மென்று நினைவெடுத் தாலயம்
வரிசை யாகவே பார்த்துக் கொள்ளு
தாழாமல் தங்கம் நிலையா குமிதை
சற்றே கேளடி ஞானப்பெண்ணே. 863

இந்தக் களங்கைச் செந்தூரஞ் செய்யவே
இன்பமாய்க் கைபாகம் சொல்லுகிறேன்
விந்தைய தாகவே ஐந்து புடம்போட
விருப்ப மாகவே செம்பாகும் 864

சிவக்கப் பூச்சாறு விட்டு அரைத்துமே
செக்கச்சிவக்கப் புடம்போடு
தவக்க மில்லாமல் தானெடுத்துப் பார்க்க
தானே சிவப்பாகும் ஞானப்பெண்ணே. 865

எடுத்து வைத்துப்பின் னேகேளு யினி
இன்பமாய்ச் சூதம் பலம்நாலு
அடுத்துக் கெந்தியும் நாலிலொன்று சேரு
அன்பா யுருக்கக் கரியாகும். 866

கருப்பில் தாளகம் தானே பலம்அரை
காரண மாகப்பூச் சாருவிட்டு
பரிய தாகவே குப்பி தனிலடை
பாகமா யெரிப்புத் தானெரிக்க 867

எரிக்க ஏறிச் சிவந்துமே நின்றிடும்
இன்பமாய்த் தானே யெடுத்துக்கொண்டு
தரிக்க வேநவ லோகஞ் சிவப்பினில்
தானே யிடைசேரு தோழிப்பெண்ணே. 868

சேர்த்துத் திராவகம் விட்டுஅரைத்துமே
செவ்வையாய்க் காய்ச்சிக்குப்பி யடைத்து
பார்த்து எடுக்கவே முருக்கம்பூப்போலே
பண்பாக நிற்கும் அடிதனிலே 869

எடுத்து மேயிதை பூசைபண் ணிவைத்து
ஏழமை சொல்லித் திரியாமல்
அடுத்து மேரவி நூற்றுக்கு ஒன்றிடு
ஆணிக்கிப் பத்தரை ஞானப்பெண்ணே. 870

வாதம் விளைந்திடும் பாரீரோ ரச
வாதமுங் கண்டதைக் காணீரோ
சேதப் படாமலே தானுழைத்துப் பார்த்தால்
செயமு மாகுமே ஞானப்பெண்ணே 871

செயம தாகவே பஞ்சபூ தத்தையும்
தீர்க்கமாய்ப் பார்த்து உழைத்துக் கொண்டால்
பயமு மில்லாமல் தானாகும் தெய்வப்
பதமுங் கிட்டுமே ஞானப்பெண்ணே. 872

கொஞ்சம் கொஞ்சமாகச் சுட்டுத் திரிந்தாக்கால்
கோடி பணங்களுந் தான் போகும்
பஞ்ச பூதத்துக்கும் பத்துப் பணம்போட்டால்
பலன் நிலைக்குமே ஞானப்பெண்ணே 873

பலன் நிலைக்க அயம்பாரு நல்ல
பதி நிலைக்க ஞானம்பாரு
அல மலந்து திரியா மல்பஞ்ச
ஆண்மையாம் பூதத்தைப் பாருங்கடி 874

பூதமுந்தானே உயிராச்சு உள்ளே
போக்கோடே தாதுக் கயராச்சு
சீதமுந் தோலுமே கூடிய டைத்திடும்
செய்தியைக் கேளுமே ஞானப் பெண்ணே 875

உடலு யிற்போலே வாதமா குமிதில்
உண்ணுந் தசைபில மாகுமடி
படியில் நின்று வாதம்பார்த் தாலிது
பலிக்கும் ரசவாதம் ஞானப்பெண்ணே 876

உத்ததோர் வாய்ப்பேச்சா லொன்று மில்லையிதில்
ஊதுந் துருத்தியி லொன்றுமில்லை
சுத்த ரசவாத வித்தை யிதனாலே
காயம் நிலைக்குமோ ஞானப்பெண்ணே 877

சாஸ்திரந் தன்னில் மறைத்துவைத்த தெல்லாம்
சாது அசுவனி தானுஞ் சொன்னார்
எத்தியே யெல்லாம் பிரித்தார்க ளிதை
இன்பமாய்ப் பாரடி ஞானப்பெண்ணே 878

உப்பிலே வேதை வெகுகோடி மன
துப்பில் களங்கி லிருகோடி
தப்பித மில்லாமல் பார்த்தே யெடுத்தாக்கால்
தனம் கிடைக்குமே ஞானப்பெண்ணே 879

வடகி ரந்தந் தனைப்பார்த்து யிதை
வல்லப மாகவே சோதித்துத்தான்
அடைவ தாகவே அட்டவணை கொண்டு
அன்பாகச் செய்ததோர் நூலிதுதான் 880

அட்டவணை கொண்டு கும்மியிற் பாடினேன்
அன்பாக வேபார்த்துத் தேருவாய்நீ
நெட்டுரஞ் சொல்லாமல் கைபாகம் பார்த்துமே
நேருள்ள லோகங்கள் பாருங்கடி 881

சுண்ணத் திராவகம்

சுண்ணத் திராவகம் சொல்லக்கேள் வாதிகள்
சூக்ஷ மிதுரொம்ப நேர்த்தியதாம்
நன்னய மாகவே தானிறங்கு மிது
நாடிச் சரக்கெல்லாம் நீற்றி வைக்கும் 882

உப்பு இருபத்தி அஞ்சுமே நீறிடும்
உயர்ந்த வேதைக ளாகுமடி
தப்பித மில்லாமல் சுண்ணத் திராவகம்
தப்பாமல் வைத்துமே பாருங்கடி 883

வாதிக ளேவெடி ஐந்துடன் காய்ச்சலாய்
வாகாய்ப் பலம்பத் தெடுத்துக்கொள்ளு
நீதிய தாகவே சீன மிருபதும்
நேரான ஐந்துமே தானிருத்து 884

நிருத்துச் சட்டியில் போட்டிடு வாலையில்
நேரான முன்னீரைத் தள்ளிவிடு
கருத்துமே பின்னீரை வாங்கிக்கொள்ளு அதை
காரிய மாக அடைத்துவைத்து 885

சொல்லுகி றேன்வெடி ஐந்துடன் காய்ச்சலாய்
சுப்பிரம தாகப் பலமும்பத்து
மெல்லமே சீனமும் பத்துமே சேர்த்துநீ
மேன்மைய தாக யிடிக்கையிலே 886

இடிக்கையி லேஎலு மிச்சம் பழத்தையும்
இன்பமதாய்ப் பழச் சாருடனே
படிக்க வேதோலைப் போட்டு யிடித்துமே
பாகம தாகவே நாலுபலம் 887

அரைத்து வில்லை புதுச்சட்டி யிலிட்டு
அன்பாய்க் கடுமையாய் தானெரித்து
பரைக்க வெள்ளைய தாகுமட்டும் யெரி
பண்பாக நீறிக் கடுஞ்சுண்ணமாம் 888

பூத்து இருக்கும் பதம்பார்த்து யெடு
பூரண மாகப் பீங்கானிடவே
சேத்துத் திராவகம் தானிடை ஊதியே
செப்பம தாக மொளுமொளென்று 889

பொங்கியே நின்றிடும் அப்பா லெடுத்துமே
போக்கோடே வாலை தனிலேயிட்டு
இங்கித மாக யெரித்து யெடுக்கவே
இன்பமாய்த் தண்ணீராய்த் தானிறங்கும் 890

இறங்குந் தண்ணீரு சுண்ணவே கம்போலே
இன்பம தாகக் கொடிய சுண்ணம்
இறங்கும் நீரிலே வீரம்போட்டு வைத்து
இங்கித பச்சைக்கற் பூரம்போட்டு 891

போட்டுமே வைத்திடு பின்புசொல்லக்கேளு
புகழான நீரை யெடுத்துக்கொண்டு
வாட்டுமே லிங்கத்தை சேர்த்தரை சாமமும்
வாகாய்ப் பனிரெண்டு சாமமரை 892

அரைத்து வில்லை ரவிதனி லிட்டெடு
அன்பாக அப்பிரகக் கவசமிட்டு
பரைத்து குக்கிட மாகப் புடம்போடு
பாங்காக நீறி வலுத்திடுங்காண் 893

தாரத்தில் விட்டரை சாமம் பனிரெண்டு
சார்பாக வில்லை ரவியில்வைத்து
நேராகக் காடைப் புடமதைப் போட்டெடு
நேர்மையாய் நீறி யிருந்திடுமே 894

இருந்ததை ரவியில் நூற்றுக்கு ஒன்றிடு
இன்பமாக மாத்துப் பத்தாகும்
நருந்த வாதத்தில் நீற்றின திராவகம்
நன்மையாய் வைத்து யெடுத்தெடுக்க 895

துருசு தான்பலம் ஒன்றெடுத்து நீரில்
துப்பர வாக அரைத்து வைக்க
புரிபு டம்போட நீறிப்போகும் பச்சை
போகாமல் மஞ்சள் சிவந்திடுமே 896

பாரொத்த பிள்ளைபோ லேதா னும்ரசம்
பத்தியாய்க் கட்டிக் கெவுனமாகும்
சாரத்தைச் சுண்ணத் திராவகம் விட்டுமே
சார அரைத்துமே சொல்லக்கேளு 897

நேரமு மாகவே தானரைத்து யெடு
நேர்த்தியுமான கலயந்தனில்
பாரமா யாரிடத் தான்புடம் போடவே
பத்திய தாய்க்கடுஞ் சுண்ணமாகும் 898

சுண்ண மொருகோடி தொந்தங்கள் செய்திடுஞ்
சூட்சமாய்த் தானே குருவாகும்
சுண்ணக்கோ லென்ற கடுஞ்சுண்ணமா மிதை
சுண்டிப் பாரடி ஞானப்பெண்ணே 899

கண்டுபார்த் தாலல்ல வோதெரி யுமிது
காரண மாய்ரச வாதிகளே
மொண்டு குடித்தாலே தாக மடங்கிடும்
முக்கிய மான செயநீரை 900

செயநீ ரென்றுமே சொல்லி ரசவாதி
சிக்க யிலைகளை வாங்கிக் கொண்டு
பயமில் லாமலே உப்புடனே சேர்த்துமே
பத்திய தாக அரைத்துருட்டி 901

தவம தாகப் புடமது போட்டெடு
தானே பனிதனில் வைத்தெடுத்து
அவமாய் நீரது வாச்சுதென் றேசரக்
காதர வாய்சுருக் குக்கொடுத்து 902

கட்டியைப் பார்க்கப் புகைந்தோடி யிதில்
கைபாகந் தப்பிப்போச் சென்று சொல்லி
செட்டியைப் போலே புலம்பி யலைந்துமே
தீர்க்கமா யோசனை செய்துகொண்டு 903

கைப்பாகந் தப்பிப்போச் சின்ன மொருதரம்
காரண மாகவே செய்வ மென்று
மெய்ப்பாகப் பட்டு அலைந்து மதிகெட்ட
வேடத்தைக் கண்டா யுலகுதனில் 904

இப்படிப் போலே அலைந்து திரியாமல்
இன்ப முள்ள புகை நீருவைத்து
தப்பித மில்லாமற் சுண்ணத்தில் விட்டுமே
தாட்டீக மாய்ப்புகை நீரைவாங்கு 905

வாங்கி யெடுத்திட லோகங்கள் நீறிடும்
வல்லமை யாகவே நீறிடுங்காண்
ஓங்கியே தீய்க்குள்ளே நின்றிடுங்காணிது
வண்மையாய் நீற்றி விடுங்காணும் 906

இப்படிப் பார்த்தாலே நீற்றினத் துக்காதி
இன்பம தாகப் பொருமி நீறும்
தப்பிதஞ் செய்யாமல் காலந் தனில்வைத்து
தாக்கியே நீற்றி யெடுத்திடுங்காண் 907

எடுத்திட வேவேதை யாகுமடி யின்னம்
இன்பமாய்க் கைபாகம் தானிதுவாம்
அடுத்திடவேதை யாகுமடி யிது
அத்வைத மாகுமே தோழிப்பெண்ணே. 908

இந்தப் படியா யசுவனி தேவரும்
இன்ப முள்ளபுகை நீருவைத்து
சந்தேக மில்லாமல் கைபாகம் தேறியே
தானே யிருந்தார் மலைதனிலே. 909

சிந்தை மகிழ்வாக யிந்த விபரத்தைத்
தீவிர மாக யெனக்குரைத்தார்
அந்தமாய் தானாதி தேவருஞ் சாஷ்டாங்கம்
அன்பாகப் பண்ணித் தொழுதிடவே. 910

தொழுது கருநெல்லி காடது கண்டுமே
சுற்றியே நெல்லி மரத்தடியில்
பழுதில் லாமலே ஞானக் கும்மிபாடி
பாகமாய்ச் சொல்லினேன் ஞானப்பெண்ணே 911

ஆகவே யோர்துரு சுக்களங் காமிது
அடைவுடன் கேட்டதோர் சித்தர்களே
பாகம தாகவே சொல்லுகிறேனிதை
பத்தியாய் வைத்து எடுத்துக் கொள்வாய். 912

துருசுக் களங்கு

எடுக்க வேநீல கண்டனொரு பலம்
ஏத்தமாய் நாரும்பூ முக்காலாம்
அடுத்த பண்ணை யரைதா னிருத்துமே
அன்பாக வீரனுங் கால்கூட்டி 913

கூட்டியே பாணியில் தானரைத்து மேலே
கூக்குர லில்லாக் கவசமிட்டு
வாட்டியே சுண்ணாம்புச் சீலைசெய்து அதை
வலுவாய்ப் பார்த்துக் கவசங்கட்டி 914

கட்டி எடுத்து முழப்புடம் போடுங்கள்
காவலரே ரச வாதிகளே
சிட்டர் தானு மெடுத்து நிறுக்கவே
சித்தமாய்க காலிடை நிற்குமடி 915

நிற்குங் களங்கதைத் தானெடுத்துப் பின்பு
நிர்ணய மாகவே சொல்லுகிறேன்
கற்கவே தான்பலந் தானிருத்து அயம்
கண்ட யிடைக்கிக் கெவுரிகூட்டி 916

தாட்டிக மாகவே களங்கின் வேதையை
தான்சொல்லக் கேளடி ஞானப்பெண்ணே
கூட்டியே செவ்வல்லிப் பூச்சாரு விட்டுமே
கூட்டி யரைத்து உருக்கிடவே 917

உருக்கிட மணி தானாகு மிதை
உண்மைய தாக நொறுக்கிக் கொண்டு
நெருக்க மாமுன் களங்கிடை சேர்த்துமே
நேராகப் பூச்சாரு விட்டரைத்து 918

அரைத்திட் டுச்சாமம் சென்ற பிறகுமே
ஆகவே தான்குகை தன்னிலிட்டு
பரைத்தி டத்தானு முருக்கி யெடுத்திட
பண்பாகத் தானே உருகிநிற்கும். 919

உருக்கி யெடுத்து நீ காரமிடை கூட்டி
உண்மையாய்த் தானே உருக்கிடவே
பருக்க செவ்வல்லி போலே நிறமாகும்
பண்பாய் ரவிசெம்ப தாகிவிடும். 920

ஆகின செம்பை எடுத்துக் கொண் டேயிதை
அன்பாய் நொறுக்குவெள் ளியெட்டிலே
பாகம தாகக் கொடுத்து உருக்கிடப்
பத்தியாய்ப் பொன்னாகுந் தோழியரே. 921

பொன்னதை வைத்துச் செலவுசெய்து ஞானம்
போக்கோடே பார்த்திடு வாதிகளே
தன்னை யறிந்துமே நின்றிடவே போதந்
தப்பாமல் வந்து நிலைத்திடுங்காண் 922

அயம் உருக்க அலைவார்கள் வாதி
ஆனதோ ருப்பினா லேயுருக்கி
நயமில் லாம லெடுத்து எறிந்துமே
நாடியே பாகமா யில்லையென்று 923

இயல்ப தென்று சிலவாதி கூடி
இன்பமா யுப்புச் செயநீரால்
நயமி தாமென்று செய்துசெய்து பார்த்து
நட்ட மடைந்தாரே ஞானப்பெண்ணே. 924

கல்லல்பட அயந் தானே யுருக்கிட
காரண மாய்க்கரி யாய்ப்போக
சொல்லாம லெடுத்து விட்டுயெறிந்துமே
சோகம தாகத் திரிவார்கள் 925

இப்படி யாக அலைந்து திரியாமல்
இன்பம தாக முடிவினிலே
செப்பிய படியே பார்த்தாக் கால்தோணும்
சித்தியு மாமடி ஞானப்பெண்ணே. 926

அய முருக்கவே வந்த யிடமெல்லாம்
இன்பாய்க் கெவுரி குதிரைப்பல்லு
நயம தாகவே வெள்ளைப் பாஷாணமும்
நாட்டினால் தானே உருகிவிடும் 927

முடுகு மூன்றுக்கு ஒன்றுதான்சேர்த்துநீ
முத்தியாய்ப் பூச்சாரு விட்டரைத்து
கடூர மாக உருக்க மணியாகும்
காரண மென்னடி தோழிப்பெண்ணே 928

சொன்ன படிமுறை செய்யாதே போனால்
சோர்ந்து அயந்தனைப் பாராமல்
நன்னய மாகவே சுண்ணவகை பாரு
நாடியே செந்தூரம் பாருங்கடி. 929

உப்புத் திராவகம் பட்டாலே அயம்
உண்மையாய்க் கிட்டமாய்ப் போகுமடி
அப்பு சிவந்தாலே காரீயம் வெள்ளீயம்
அன்பான செம்புமே நாகமுதல். 930

விட்டரைத் துத்தான் புடம்போ டச்சத்து
மேன்மைய தாக உருகிவிடும்
கட்டளை யாகவே சத்தாகு மிதில்
காரண மாமடி ஞானப்பெண்ணே. 931

காரணமாவது கட்டுவகை அதைக்
காணா ரசவாதி சாஸ்திரத்தை
வாரண வேயுப்புச் செயநீரை வைத்து
வாகாக வைத்துமே நீரிருத்து. 932

சரக்கெல் லாங்கட்டத் தாநினைந்து அதை
தப்பாமல் பாஷாணம் லிங்கமுதல்
நிரக்க வேயுமி யோடதில் வைத்துமே
நேராகத் தானுஞ் சுருக்கிடவே. 933

சுருக்கிட் டுப்போட்டுத் தானெடுத்து யிதில்
சுத்தம தாகவே காரமிட்டு
நறுக்கென் றுபுடந் தானே வைக்க ஓடி
நாடியே தானே புகைந்துவிடும். 934

இப்படி வாதிகள் அலைந்து கெட்டுமே
இன்பமாய்ப் போகாமற் சொல்லக்கேளு
தப்பித மில்லாமற் சொல்லுகிறேன் பாகம்
சாதக மாய்க்கேளும் வாதிகளே 935

கட்டுவ தெப்படி யென்றாலோ பூதம்
காரண மாகவே பாஷாணம்
முட்டிட வேரெண்டை யுஞ்சேர்த் தரைத்து நீ
முக்கிய மான புகைநீரால். 936

சிட்டர் புகழவே தானே சுருக்கிடு
சீக்கிர மாகப் புகையடங்கும்
திட்டம தாகவே செய்துமே கொண்டு நீ
சிறப்பா யிருந்திடு ஞானப்பெண்ணே. 937

காரிய மிடைக்குக் கெந்தியுஞ் சேர்த்தரை
காரண மாகச் சுருக்கிடவே
பரியு மாகவே ஈயம் பிடிக்குமே
பத்தாமல் நின்றிடும் வேதைதனில் 938

வேதைக ளாகவே செம்பு தனிலிடை
வித்தகமான தோர் வன்னி கெற்பம்
பாதக மாகவே சேர்த்தரை திராவகம்
பண்பாக உண்டையாய்ப் பண்ணிக்கொண்டு 939

லிங்கக் கட்டு

நீதிய தாகச் சுருக்கிடக் கட்டுமே
நேரான லிங்கமும் ஓடாது
பாதிய வேலைகள் தானாகுங் குரு
பண்பான தங்கமு மாகுமடி. 940

தாரக் கட்டு

நாகத்தை உடைத்துத் தாரமிடை சேர்த்து
நன்மையாய்த் தானரை திராவகத்தால்
பாகமா யுருட்டிச் சுருக்கிடக் கட்டுமே
பண்பான நாகமுஞ் சத்தாகும் 941

யோகமாய் லோகத்தி லுட்கொண்டு வாங்கிடும்
உண்மையாய் வர்ணம் நிலைத்திடுங்காண்
ஏகமாய் வர்ணம் நிலைத்து யிருந்திடு
மென்றுதான் சொல்கிறேன் தோழியரே. 942

கெவுரிக் கட்டு

நிலைக்கவே வெள்ளீயத் தாளகம் சேர்த்துமே
நேரா யிடைக்கிடை தானரைத்து
மலைக்க வேபுகை நீரில் சுருக்கிட
வாகான கட்டாகுந் தோழியரே. 943

இரும்புக் கெவுரி யிடைசேர்த்து அரை
இன்பமாய் மூலிகைச் சாருவிட்டு
வரும்ப தாக உருக்கியெடுத்தாக்கால்
வாகான கட்டாகும் ஞானப்பெண்ணே. 944

புத்தி

இப்படிக் கட்டாகும் வாதிகளு மிதை
இன்பமாய் விட்டு யிலை பிடுங்கி
தப்பித மாகவே கட்டியே கட்டுமே
தானலை வார்ரச வாதிகளே. 945

அலைந்து திராவகம் வைத்தெடுத்து லிங்கம்
ஆதர வாக ஒருகட்டியாய்
துலைந்து மேபுகை நீரில் சுருக்கிட
சுத்தியேஓடிப் புகைந்திடுமே 946

புகைந்து போகவே வர்ணங்க ளில்லாமல்
போட்டிக ளாக மிகவுஞ்சொல்லி
தகைந்து மேகெட்ட வாதி திரிகிறார்
தாக்கான பாதையைப் பாருங்கடி 947

இப்படிக் கட்டி யலையாமல் ஒன்றை
இன்பமாய் வைத்து அரைத்துக் கட்டு
சொற்படி போலவே பார்த்தாக்கால் வாதம்
தோணுமே வாதங்கள் ஞானப்பெண்ணே 948

சீங்கிலிக் கட்டையைக் கட்டினாலே அது
சீராய் வீட்டை விளக்கிக் கொள்ளும்
பாங்குடன் கட்டாமல் போனாற் பலனென்ன
பதி நிலைக்குமோ ஞானப்பெண்ணே 949

நிலைக்க வேநவ லோகமுஞ் சேர்த்துமே
நேராய்க் களங்கமுஞ் சொல்லுகிறேன்
மலைக்க வேண்டாங்காண் வாதிகளேயிதை
மாவலு வாகவே செய்துகொள்ளு 950

செய்திடத் தங்க மிகவாகு மிதில்
செந்தூரம் பண்ணினால் கோடிவித்தை
உய்திட வேகாய சித்தியாகு மிதில்
உற்றுமே கேளடி ஞானப்பெண்ணே 951

துருசுபற்பம்

துருசு பலம்பத்துத் தானே யெடுத்திதைக்
கட்டிட வெள்ளையாய்க் காரமாகும்
பரிச மாகவே செம்பரத் தம்பூவில்
பாகமாய்ப் போட்டுப் பிழிந்துகொள்ளு 952

பிழிந்த நீரை எடுத்துச் சீசாவினில்
பின்பு தானடைத்துச் சொல்லக்கேளு
அழிந்து போகா தயமொரு சேரெடு
ஆண்மையாய்க் கெவுரி தான்சேரு 953

அயமணி

சேர்த்து யிடைரெண்டுந் தானரைக்கக் கேளு
திட்டமாய்ப் பூச்சாரு விட்டரைத்து
பார்த்து அரைத்து உருக்கிட வேமணி
பாகம தாகத் திரண்டிடுங்காண் 954

திரண்ட மணியை ஐந்து தரந்தனில்
திட்டம தாக நல்லாயுருக்கி
வரண்ட வெள்ளி மணிபோல வேயெடு
வாகாகத் தானுடை தோழியரே 955

வெங்காரஞ் சேர்த்து உருக்காதே யிதில்
வேதனை யாகக் கரியாகும்
சிங்காரமாக உருக்கி யெடுத்திடச்
சித்தமாய்ச் சொல்கிறேன் கேளுங்கடி 956

காந்தச் சத்து

காந்தம் பலமொன்று தானெடுத்து அதில்
காரியமாகக் கெவுரி சேர்த்து
பாந்தமாய்ப் பூச்சாரு விட்டரைத் துப்புடம்
பாகமாய்ப் போட்டு எடுத்திடவே 957

எடுக்கத் தூளாகுங் கேளுங்கடி யிதில்
இன்பமாய் முன்னயந் தானிடைக்கு
அடுத்துச் சேர்த்து உருக்கிட வேமணி
யாக உருகியே வாதிடுங்காண் 958

நின்ற மணியெடு அப்பாலே வைத்துமே
நேராகத் தானினிச் சொல்லக்கேளு
ஒன்றான தாளகச் சத்துமே சொல்கிறேன்
உண்மையாய்ப் பாரடி ஞானப்பெண்ணே 959

தாளகச் சத்து

துத்தம் பலமொன்று தானெடுத்து யிதில்
சூட்சமாய்த் தாளகந் தானிடையாம்
பத்தவே பூச்சாரு விட்டரைத் துப்புடம்
பாகமாய்ப் போட்டு எடுத்திடவே 960

எடுத்து முன்னயந் தானிடைக்குச் சேரு
ஏகமாய்ப் பூச்சாரு விட்டரைத்து
விடுத்துச் சொல்லாம லேவழித்து அதை
மேதினி யோர்க்குத் தெரியாமல் 961

விட்டரைத் தகைக்கு கைதனி லிட்டு நீ
விதங்க ளாக உருக்கியெடு
கட்டளை யாகவே சத்தாகுமிதை
காதலிப் பாகவே வைத்துக்கொள்ளு 962

அப்பிரகச் சத்து

அப்பிர கம்பலம் தானெடுத்து யிதில்
ஆதர வாகவே வீரமிடை
தப்பித மில்லாமல் பூச்சாரு விட்டரை
தானே வெண்ணையாகுங் காயவைத்து 963

முப்பொழு தாகப் புடம்போட்டு யெடு
முன்னயந் தன்னி லிடைசேரு
எப்போதும் வற்றாத செல்வம்வரு மினி
இசைந்து பாரடி ஞானப்பெண்ணே 964

சேர்த்தரை பூச்சாரு விட்டுக் காயவைத்து
செம்மையாய் மூசை தனிலிட்டுமே
பார்த்து உருக்கவே தானுருகுஞ் சத்து
பாகம தாக யிருந்திடுங்காண் 965

இருந்த சத்தையு மப்பாலே வைத்திடு
இன்பமாய்ச் சொல்கிறேன் நீகேளு
அருந்தவஞ் செய்த பேர்களுக்கு எங்க
ளாசான் சொன்னது ஞானப்பெண்ணே 966

செம்புச் சத்து

சொல்கிறேன் செம்பு பலமெடுத்து நல்ல
சோதியாய் ராவி யெடுத்துக் கொண்டு
அல்லிட வேவன்னி கெற்பம் பலமொன்று
அன்பாக எட்டு நாள் தானே அரை 967

அரைக்க மயனம்போ லாகும்பூச் சாருதான்
அன்பாக விட்டு அரைத் தெடுத்து
வரைக்கப் பூசைகள் பண்ணிப் புடமிடு
வாகா யெடுத்து அயமிடைசேர் 968

சேர்த்துமே பூச்சாரு விட்டரைத்துக் காய
செப்பமாய் வைத்து உருக்கியெடு
பார்த்துமே சத்தா யுருகிவிடுமது
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே 969

காரீயச்சத்து

பதி நிலைக்கவே காரீய முமெடு
பாகம தாய்ப்பலந் தானிருத்து
சதிய தாகவே கெவுரி யிடைசேர்த்து
சாத்தி அரைத்துமே வில்லைதட்டி 970

தட்டிப் புடமது தானே போட்டுயெடு
சார்வான முன்னயந் தானிடைக்கு
கட்டி யரைத்திடப் பூச்சாரு விட்டுமே
காரண மாயதைக் காயவைத்து 971

காய வைத்துமூசை தன்னிலே யிட்டிடு
காரணமாக உருக்கியெடு
நேயம தாகப் பொரிபோலே சத்தாகும்
நேர்மைய தாமடி ஞானப்பெண்ணே. 972

நாகச்சத்து

சத்துக ளெடுத்து அப்பாலே வைத்து
சாதக மாய்ப்பலம் சோரனெடு
சித்துக ளாடலாம் நாலுக்கு ஒன்றதாய்
சேர்த்திடு சூதந் தனைக்கேளு 973

பரை யருளால் உருகியே புட்டாகும்
பாகமாய்த் தானுடை கல்வமிட்டு
அரைக்கக் கெந்தகம் தானிடைக்குச் சேர்த்து
ஆண்மையாய்ப் பூச்சாரு விட்டரைத்து 974

துலக்க மாகவே தான்புடம் போட்டெடு
சுத்தமுள் ளரச வாதிகளே
விலக்க முன்னயஞ் சோர னிடைசேர்த்து
வித்தக மானபூச் சாரு விட்டு 975

அரைத்து ரவியினி லேகாய வைத்துநீ
அன்பாகத் தானே உருக்கியெடு
உருக்கி டவுமே சத்தா கும்நல்ல
உண்மை யானசத்தை வேறேவைத்து 976

வெள்ளீயச் சத்து

வெள்ளீ யம்பலம் தானெடுத்து ரசம்
வித்தக மாகவே நாலுக்கொன்று
துள்ளி உருக்கியே புட்டுபோற் செய்திடு
துப்பரவாக மனோசிலையும் 977

சேர்த்துமே தானிடை சேர்த்துக்கொண்டு நல்ல
செப்பமாய்ப் பூச்சாரு விட்டரைத்து
பார்த்துமே வில்லையாய் தான்பிடித்து ரவி
பாகமாய்க் காய உலர வைத்து 978

வைத்துப் புடம்போட்டுத் தானெடுத்து அயம்
வாகா யுருக்கி யிடைசேரு
சித்துக ளாகவே பூச்சாரு விட்டரை
சித்திய தாக அரைத்துருட்டி 979

அரைத்து மூசை தனிலிட்டுருக்கவே
அன்பாகச் சத்தையும் வேறேவைத்து
பரைத்து மேயினி சொல்லுகி றேன்சத்து
பாகமாய்க் கண்டெடு தோழிப்பெண்ணே 980

தங்கச் சத்து

கண்டு எடுக்கவே தங்கம் பலமொன்று
காரணமாகத் தகடுதட்டி
பண்டுமே கல்காவி தான்பழச் சாருடன்
பத்தவே விட்டரைத் தேகுழப்பி 981

சென்றுமே தங்கத் தகட்டையே காய்ச்சியே
செம்மையாய்ப் பத்துத் தரந் துவைத்து
நன்றாகப் பத்துத் தரமுந் துவைத்திட்டு
ரசமும் நாலிலொன் றுசேரு 982

சித்தம தாக அரைத்துருட்டி யெடு
சீக்கிரம் மத்தங்காய்க் குள்ளடைத்து
முத்திய தாகவே ஐந்து புடமிட்டு
முத்தி பெறத்தா னெடுத்துக்கொண்டு 983

எடுத்து மெள்ளசத் தெல்லா முருக்கியே
இன்பமா யோரிடை தங்கச்சத்து
அடுத்து யெட்டியே தான் முழங்குமிது
அன்பாகப் பாருங்கள் தோழிப் பெண்ணே 984

குருவாய்த் தானே முடிந்துவிடும் நல்ல
கூர்மை யுள்ளதங்கந் தானாகும்
திருவான திந்தக் களங்கத்தா லேமுத்தி
சித்தியு மாமடி ஞானப்பெண்ணே. 985

சித்திக்கு முத்தான வித்துக்களை யிதில்
செய்யும் வரிசைகள் தான்கேளு
சித்தியா கச்செம்பு ஒரு பலமெடு
சேர்க்கவே சொல்கிறேன் கேளுங்கடி 986

சொல்ல வெடியுப்புச் சீனமும் ரெண்டிடை
சோகம தாய்க்கத்த நீரைவிட்டு
நல்லா யரைத்துக் குழப்பியே செம்பையும்
நன்மைய தாய்வெட்டை யாகுமட்டும் 987

எடுத்து மெதுவாய் முக்கால் வெட்டையாக
இன்பம தாக உருக்கிக் கொள்ளு
படுத்து மேநவ லோகம் ஒன்றுசேரு
பாகமாய்ச் செம்பு யிரண்டு தனில் 988

சேர்த்து உருக்கியே நொருக்கு வெள்ளியில்
சேர்க்க இருபதுக் கொன்றீய்ந்து
பார்த்துமே ஊதி யெடுத்திட வேமதி
பாகப் பழம்போல் சிவந்துவிடும். 989

சிவந்து யெட்டரை மாத்தாகும் நல்ல
சிக்கெனத் தங்கம் விளைந்திடுங்காண்
கவந்தக் குந்தனப் பொன்னாகும்பாரடி
காரணமாக இதுலெகுவு 990

தாகம தாக முடிவினில் பார்த்திடு
தப்பாமல் முத்தியும் யோகம் வரும்
பாகம தாகவே செய்தாற் பலனாகும்
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே. 991

அதிக மான வேதைக ளானதோர்
ஆதிக் களங்கையும் சொல்லுகிறேன்
பதி நிலைக்கவே லோகக் களங்கையும்
பாகமாய்க் கேளடி ஞானப்பெண்ணே 992

முதியோர் சொன்னது போலவே நீசெய்து
முன்னிலை யாகவே சத்தெடுங்காண்
சதியில் லாமலே சொல்லிவிட் டேனிது
சாகரந் தன்னிலே செய்துவிடு 993

பத்கிய தாகவே வாதங்கள் செய்திடும்
பாக்கிய மானதோர் வாதிகளே
சித்திய தாகிடும் வாசியோ கம்பாரு
சேர்ந்திடும் ஞானப் பதிவாய்க்கும் 994

பதி நிலைக்கவே லோகத்தைப் பார்த்திடு
பாகம தாகவே செய்தாக்கால்
நித முனக்குமே தங்கமும் வந்திடும்
நிச்சய மான களங்கிதுதான் 995

முன்னே களங்கத்தைச் செய்து முடித்துமே
முத்தியான சித்தி யுண்டாக்கிப்
பின்னே செந்தூரங்கள் பண்ணினால் வேதைகள்
பித்தனைப் போலே யிருந்திடுவீர். 996

இருந்து வகையாகச் செய்து பார்த்தாலிதில்
இன்பம தாகச்செந் தூரம்வரும்
வருந்திட ரச வாதங்கள் வந்திடும்
வாகான நற்பொரு ளாகுமடி 997

ஆகவே சத்துக்கள் தானெடுத்தாற் பலன்
அதிக மாகவே உண்டாகும்
தாகவே மேனியுஞ் சொர்ணம தாமிது
தாக்கினால் வேதைக ளுண்டாகும் 998

உண்டாகச் செந்தூரஞ் செய்துமே சாப்பிடு
உற்ற ரசவாதம் வந்திடுங்காண்
பண்டாகத் திரிந்தா லாவதென்ன பலன்
பாகமு மெப்படித் தான்வருகும் 999

கரும்பொன் னாலேக ளங்கமாச்சு யிதில்
காரண மாகவே செம்பொன் னாச்சு
வரும் வருமென்று சும்மா யிருந்தாக்கால்
வாய்க்குமோ பாரு ரசவாதம் 1000

ஞானம்

துரிய மாவது நாபிக்கமலத்தில்
துப்பர வாகவே சுத்திசெய்து
பரிய தாகவே ஏறிடச் செய்தாக்கால்
பலன் தருகுமே ஞானப்பெண்ணே 1001

துரியா தீதத்தி லுட்செலுத்தி வாசி
துப்பர வாகவே சுத்திசெய்து
பரிய தாகவே செய்து யிசைத்தாக்கால்
பலன் தருகுமே ஞானப்பெண்ணே 1002

துரியா தீதத்தின் மேற்செலுத்தி வாசி
சூட்ச மாகக்கண் டலம்பின பின்
சரிய தாகவே வாசியைக் கட்டிட
சத்தமு முண்டு அமிர்தமுண்டு 1003

ஞாயம் செய்யும் வாதி

உண்டிட அமிர்தஞ் சிந்திடுங்காண் நல்ல
உற்ற ரசவாத யோகத்திலே
கண்டுகொண்டுயிந்தக் காலத்தைப் போக்கினால்
காரண மாகுமே ஞானப்பெண்ணே 1004

வெள்ளியை முன்னே நொறுக்கிக்கொள்ளு மிதில்
வேதையு மாகவே செய்து கொள்ளு
துள்ளித் திரியாமல் செம்பை யுடைத்துக்கொள்
சொர்ண முண்டாகவே சொல்லுகிறேன் 1005

களங்கம் பண்ணி உருக்கிடுநீ தங்கம்
காரண மாய்க்காய்ச்சித் தோய்த்துயெடு
விளங்கவே கட்டிப் பார்த்தாக்கால் நல்ல
வேதையு மாகுமே ஞானப்பெண்ணே 1006

களங்கஞ் செய்யக் கடைத்துரு சாமிதில்
காரச் சுண்ணமுஞ் செய்ய வென்றால்
வளங்க மாகவே நீலனை வைத்து நீ
வடிவ மாகவே சுண்ணம் பண்ணு 1007

செந்தூரஞ் செய்திடில் வேதையுண் டாமனம்
தேறியே செய்துநீ பார்த்துக்கொண்டு
முந்தவே சொல்லியே தான்பார்த்து யிதை
முறையாய்ப் பாரடி ஞானப்பெண்ணே 1008

வாதத்தைப் பார்த்துமே ஞானம்பாரு நல்ல
வடிவ தாகவே யோகம்பாரு
சேதம் வராமலே யிருந்து வாழ்ந்திட
சித்திய தாகச்செந் தூரமுண்ணு 1009

சொன்ன முறையெல்லாம் நிச்சய மாமிது
சோதி;·நால் வாதம் நிலைக்குமது
கன்னலை விட்டாலே வாதமில்லை யென்று
கருணை கூர்ந்தா ரசுவனியும் 1010

இந்தப் படியா யசுவனி தேவரும்
எட்டாம் வனந்தனில் சொல்லிப்பின்பு
சிந்தை மகிழ்ந்து ரசவாத மிது
தீர்க்கமாய்க் கைபாகந் தான்வரிசை 1011

கைபா கங்களும் சொல்லிப்பின்பு நல்ல
காரண மானதோர் காலத்திலே
செய்பாக மாகச் செய்தாக் கால்வேதை
தீரமா யாகுமே ஞானப்பெண்ணே 1012

துருசுச் சுண்ணத்தை வைத்துக் கொண்டு நல்ல
சூதத்தைக் கட்டியே வேதைபாரு
பரிசை வேதைக ளாகுமடி நல்ல
பதி நிலைக்குமே ஞானப்பெண்ணே 1013

பதி நிலைக்குமே ஈசன்சொன் னாரதை
பாகமாய்ப் பார்வதி கேட்டுக்கொண்டாள்
நிதி நிலைக்கவே நந்திகேட் டாரிதை
நிட்சய மாகுமே ஞானப்பெண்ணே 1014

நித்திய மாகவே நந்திகேட்டு அதை
நின்னய மாகத் தன் வந்திரிக்கு
வைத்த பொருள்போலே சொல்லி உபதேசம்
வாகா யசுவனி தான்கேட்டு 1015

கொண்டு உலகத்தில் தானே யறிவித்துக்
கோத்திரங்க ளெல்லாம் தான்விளங்க
சென்று யிருந்துஅண் ணாமலை தன்னிலே
சித்தம்வைத் தெனக்குச் சொல்லினர்காண் 1016

சிவனும் பார்வதி தான்வழி யிதில்
தேவராந் தன்வந்திரி தான்வாழி
அவரும் நந்திய ரும்வாழி வெகு
ஆனந்தம் பாரடி ஞானப்பெண்ணே 1017

தன்வந்திரி சீஷ ரசுவனி யும்வாழி
சாமி யகத்தீச ரும்வாழி
வர்மாம் வாழி புலத்திய ரும்வாழி
வாகான தேரைய ரும்வாழி 1018

தெய்வமாய்ச் சொன்ன கும்மிவாழி நல்ல
தேசிக நானாதி தேவர்வாழி
வையக மெங்குமே வாழிவாழி நல்ல
மாதரசே கும்மி வாழிமுற்றே 1019

யூகிமுனிவர் காவியம்
முற்றிற்று.

உ

குமரன் துணை

ஸ்ரீ கிமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

தத்துவ ஞானம் 105

சத்தாகி நித்தியா னந்தமாகிச்
சகலவுயிர்க் காதார பூதமாகி
வித்தாகி வித்துள்விளை மணியுமாகி
விளங்குகின்ற மதிகதிரு மிரண்டுமாகிப்
பத்தாகி யெட்டாகிப் பலவுமாகிப்
பாழ்வெளிக்கு ளொளியாகி ரூபாரூபச்
சித்தாகி நான்மறைகட் கெட்டாதாகித்
திகழ்கின்ற சோதிதனைப் போற்றிக்காணே. 1

காணாம லலைந்தார்கள் லோகத்தோர்கள்
கருமிகட்குக் கிட்டாது கடினமப்பா
தோணாமற் கெட்டவர்கள் கோடாகோடி
தொல்லையிலே விழுந்தார்கள் அனந்தங்கோடி
வீணாகத் திரிந்தார்கள் லெட்சங்கோடி
மெய்க்குருவைக் காணாமல் விலகினார்கள்
சாணான வயிற்றாலே அலைந்தார்கோடி
சூாப்பட்டு மாண்டார்கள் கோடிதானே. 2

மாளாம லிருப்பதற்கு வயணஞ்சொல்வோம்
மகாரமொடு மங்கென்று மதுவில்வாங்கித்
தாளாமா லமட்டியே தன்னுள்வாங்கிச்
சகாரமொடு மேற்சுழியுஞ் சங்கென் றூணிப்

பாழாகப் போகாமற் புருவம்பாரு
பச்சைநிற மாயிருக்கும் பசுமைகாணும்
வீணாகப் போகாது வித்தையெல்லாம்
மெய்யாகும் பொய்யல்ல வினவினோர்க்கே 3

ஓரான இதழுள்ளே அமுதமப்பா
ஊறிவரும் வழிகண்டா லுடனேசித்தி
ஈரான வாசியை நீ பிடித்தாயானால்
எப்போதும் இப்படியே யிருந்துவாழ்வாய்
தூரான மூன்றெழுத்தைக் கண்டாயானால்
துன்பமற்றுப் பேரின்பந் துலக்கமாகும்
ஏராத வாசியைத்தா னேத்திவைக்கும்
ஏகாந்த வெளிகாணும் இருள்காணாதே. 4

காணவே அட்சரத்தின் கருவைக்கேளு
கனமாந் தம்பனமும்நம சிவயவென்றும்
தோணவே வசியம்யவ சிமநவென்றும்
சொல்லுச்சா டனத்துசிவ யநமவென்றும்
பூணவே அழைத்தல்வசி யநமவென்றும்
புகழாமோ கனமும்நய வசிமவென்றும்
ஆணவித்து வேடம்வய நமசியென்றும்
அமட்டுபே தனமுமந யவசியென்னே. 5

என்னவே மாரணமாம் மசிவயநவென்றால்
எடுத்துரைத்த சாஸ்திரங்கள் சித்தியாகும்
நன்னவே அஷ்டகர்மம் ஆடுதற்கு
நலமாக இப்படியே யெடுத்துவோது
உன்னவே வாலைமூன் றெழுத்தைக்கூட்டி
ஓதிடவே யெட்டெட்டுஞ் சித்தியாகும்
மன்னவே ஒவ்வொரு கருமத்துக்கும்
மாட்டிவிடு லெட்சமுரு மருவியோதே, 6

ஓமென்ற யெழுத்துக்கு வொளிவுகாணும்
உத்தமியாள் பதங்காணும் யோகமாகும்
நாமென்ற யெழுத்துக்கு நடனங்காணும்
நாதாந்தப் பிராணாயஞ் சித்தியாகும்
மாமென்ற யெழுத்துக்கு மதியுங்காணும்
மகத்தான வெட்டவெளி அறிவிற்சேர்க்கும்
சீமென்ற யெழுத்துக்குத் தெளிவுகாணும்
சேர்ந்தாடு மட்சரங்கள் சிங்குவங்கே. 7

வங்கென்ற யெழுத்துக்கு வகாரமாடும்
வரவழைக்கும் வித்தையெல்லாம் வசத்திலாடும்
யங்கென்ற யெழுத்ததுவே ஆயிபீடம்
அம்மையுட பதங்காணும் அறிவுதோணும்
றிங்கென்ற யெழுந்தவிடம் கண்டாயானால்
நிலைக்குமடா உன்தேகம் நிசமாய்ச் சொன்னோம்
உங்கென்று உண்டவர்க்கு யெல்லாஞ்சித்தி
உத்தமியாள் பதமறிய உரைத்திட்டோமே. 8

இட்டபடி இன்னமொன்று சொல்லக்கேளு
இன்பமுடன் சட்டைமுனி கற்பம்பாரு
வீட்டகுறை வந்துவிட்டால் கற்பமுண்ணு
வேதாந்த மூர்த்தியென்றே விருதுவாங்கு
அட்டியொன்றுஞ் செய்யாதே ஆட்பார்க்காதே
ஆங்கார மாயையிலே அழுந்திடாதே
வெட்டவெளி யாகுமடா அறிந்தபேர்க்கு
மெய்ஞ்ஞானங் கண்டவர்க்கு வெளியுமாமே. 9

வெளியான வெளிக்குள்ளே யிருந்தமூலி
வேகாமற் கொண்டுவந்து தயிலம் வாங்கிப்
பழியாதே காசிடைதான் கொண்டாயானால்
பறக்குமடா நரைதிரையும் பயந்தேபோகும்

அழியாது தேகமது அரனைக்காண்பார்
அப்பவல்லோ சித்தரெல்லாம் அழைத்துக்கொள்வார்
விழியான விழிதிறக்க மெய்யைக்காண்பாய்
வேதாந்த சாரமெல்லாம் வெளியாய்ப்போமே. 10

போக்குடனே பூசையைத்தான் சொல்லக்கேளு
புத்தியுள்ள சீஷருக்குப் புகழுண்டாக
நாக்குவிட்டுப் பேசாதே வட்டம்போடு
நாயகியாள் முக்கோணம் நடுவேபோடு
ஆக்கமுடன் சூலமிட்டு அதுக்குள் நீதான்
அப்பாலே ஓமென்று அறிந்து கட்டி
ஊக்கமுடன் வடமுகமா யிருந்துகொண்டு
உத்திதர வேணுமென்று மொழிந்திடாயே. 11

மொழிந்திடவே வலக்கரத்திற் படத்தைவாங்கி
மோகனத்தைச் சாபத்தால் நிவர்த்திசெய்து
தெளிந்திடவே வேணுமென்று தாய்பதத்தில்
திவ்யமுள பத்திரமோ டுறைந்துவைத்துக்
குளிந்திருந்த அன்னமொடு அண்டஞ்சுத்தி
கொத்தோடே அடைக்கிலையுங் கூடவைத்துப்
பளிங்கொளிபோல் நின்றவட்குப் பழமுந்தேங்காய்
பாலோடு தேன் கரும்பு பூசிப்பாயே. 12

பூசிப்பாய் தூபமொடு தீபங்காட்டிப்
போக்கோடெட் டெழுத்தாலர்ச் சனையேசெய்து
நேசிப்பா யுபசாரம் அநேகஞ்செய்து
நிஷ்டையுள்ள தாய்பதத்தை நினைவில்வைத்து
வாசிப்பாய் தோத்திரங்க ளனந்தங்கோடி
மனோமணியின் பதபூசை மகிழ்ந்துசெய்ய
ஆசிப்பா யதன்பிறகு ஆத்தாள் தந்த
ஆனந்த பூரணத்தை நிகழ்த்திட்டேனே. 13

நிகழ்ந்தசீர்ப் பிருதீவு மப்புதானும்
நேரான தேயுவொடு வாய்வுமாகும்
அகழ்ந்தவா காயத்தோ டைந்துபூதம்
அரிதான பிருதீவு மண்ணுமாகும்
தகழ்ந்தவப்பு சலமாகும் நெருப்பும்தேய்வு
தாக்கான வாயுவது காற்றுமாகும்
இகழ்ந்தவா காயமது சத்தமாகும்
ஏற்றபிரு தீவுபொன் னிறமதாமே. 14

ஆமேதா னப்புநிறம் படிகமாகும்
அக்கினியி னிறந்தானே சிவப்பதாகும்
காமேதான் வாய்வுநிறங் கறுப்பதாகும்
கார்மேகப் புகைநிறமா மாகாயந்தான்
தேமேதான் வர்ணமுமிப் படியேயாகும்
சேர்ந்துநின்ற தெய்வத்தின் தலமேகேளாய்
போமேதான் பிருதிவிக்குத் தேவன் பிர்மா
பெரியசுவா திஷ்டான மிருப்பர்தாமே. 15

இருப்பான வீடதுவு மூலாதாரம்
இதழாறு பிருதிவியின் பீசம்நவ்வாம்
மருப்பான மயிர் நரம்பு தசைதோலென்பு
மாசற்ற வப்புவுக்கு விஷ்ணுதெய்வம்
செருப்பான மணிபூர வீடுமாகும்
சிறுபிறைபோற் பத்திதழ்கள் தானே சுற்றி
அருப்பான வப்பினுக்குப் பீசம்மவ்வாம்
அதின் கூறைத் தான் செடபா யுதிரஞ்சீயே. 16

சீயான நீரோடு மூளைமச்சை
தேய்வுக்கு ருத்திரன்றான் றெய்வமாகும்
மூயான முக்கோண மகத்தாம்வீடு
முயற்சியா யீராறா மிதழ்தான் சுற்றில்

தேயான சிவ்வதுவுந் தெய்வபீசம்
சிதையாம லிதழுக்குட் சேர்ந்துநிற்கும்
ஆயான வாகாரந் துஞ்சல்போகம்
அவருடைய கூறதுதான் பயமுஞ்சோம்பே. 17

சோம்பான வாயுவுக்கும் மகேசன் தெய்வம்
சோடசமா மிதழோடே விசுத்திவீடு
ஆம்பான வாயுவுக்கு வவ்வுபீசம்
அவருடைய தன் கூறு உளத்தல் நிற்றல்
வாம்பான வாடலோ டிருத்தலோடல்
வசையான வறுகோணங் குடியிருப்புத்
தேம்பான வானமாக் கினையினுள்ளே
சிதையாம லிரண்டி தழோ டிருக்கும்பாரே. 18

இருக்கின்ற வாக்கினையின் கூறுகேளாய்
ஏற்றகா மக்குரோத லோபமோகம்
மருக்கின்ற மதமுமார்ச் சரியத்தோடு
வானுக்குச் சதாசிவமே தெய்வமாகும்
பிருக்கின்ற வாகாச பீசம்யவ்வாம்
பேரான வைம்பூதப் பிரிவுமாகும்
தெருக்கின்ற தசநாடிச் செயலையெல்லாம்
செப்புகிறேன் தெளிவாகச் சிறந்துகேளே. 19

சிறந்த இடை பிங்கலையுஞ் சுழினையோடு
சிறப்பான காந்தாரி யத்திச்சிங்குவையாம்
பிறந்தஅலம் புருடனொடு குகுதன்றானும்
பேரான சங்கினியும் வயிரவன்றான்
திறந்தவிவை பத்துந்தான் நாடியாகும்
திரிமூன்று நாளையினி லொடுங்கும்பாரு
மறந்தஇடை பிங்கலையுஞ் சுழினைமுன்றும்
வாதத்தி லொடுக்கமெ‌ன வகுக்கலாமே. 20

வகுக்கவிதின் குணங்கன்ம மொடுகுளுத்தி
மலக்கட்டு வாதத்தின் கூறுமாகும்
அகுக்குகாந் தாரியத்தி சிங்குவையாம்
அலம்புருட னிது நாலும் பித்தக்கூறு
உகுக்கவே யிதின்குணங்க ளுஷ்ணந்தாகம்
உயர்மோக முழலைவாய் வும்மேநோக்கும்
நகுக்கவே நாடிபடபடத்துடிக்கும்
நாசமாம் பயமோடு கோபமாமே. 21

ஆம்குகுதன் சங்கினியும் வயிரவன்றான்
அரிதான சிலேட்டுமத்தி லடங்கும்பாரு
மாமேவா யழற்பரியு மிதன்றன் கூறு
மலர்விழியுங் குழிந்துமுகம் வேர்த்திருக்கும்
தேமேதான் நெஞ்சடைக்குந் திசை கலங்கும்
சிறுகாலுந் தண்ணீர்தா னுழற்றிவிக்கும்
பாமேதான் பத்தினிடப் பண்புமாகும்
பரிகாரஞ் செயுமவர்க்குப் பரிசிதாமே. 22

பரிசான விடையின்பிங் கலையுமொக்கப்
பயின்றதோர் குதத்தினடி மூலம்பற்றிக்
கரிசான பாகங்கண் மாறிமாறிச்
சுழிமுனையின் றன்னோடு நெட்டிட்டேறும்
திரிசான திருவணைக்கால் போலேமாறிச்
சிரசளவு தான் முட்டித் திரும்பமீண்டு
விரிசான மூக்கு நடுப் புருவம்நெற்றி
மீண்டுமே திரும்பியந்த மூலம்புக்கும். 23

புக்குகின்ற காந்தாரி நாபிபற்றிப்
பெரும்நரம்போ ரேழினுக்கும் ரூபமாகிச்
சிக்குகின்ற தெசதாய மேலேயோடிச்
சிரசளவு நீங்கியே கண்டம்புக்கி

நக்குகின்ற நாவடியிற் சிறந்திருக்கும்
நலமான வத்திசிங் குவையிரண்டும்
விக்குகின்ற மூலத்தின் மேலேபற்றி
மேலேறி யிரண்டுசெய் தனைத்தொட்டாமே. 24

தொட்டேறி நரம்பெல்லாங் கதந்துவீசித்
துறையான நயனமிரண் டினிலே நிற்கும்
மட்டேறி யலம்புருடன் வயிரவன்றான்
மாசற்ற வடிமூலந் தன்னைப்பற்றிக்
கட்டேறி யிரண்டுகன்னந் தனிலேநிற்கும்
கனிவான சங்கினியுங் குகுதன்றானும்
நட்டேறி நாபித்தா னத்திற்றோன்றி
நலமான குதமளவும் நடிப்பர்பாரே 25

பார்க்கவே சடந்தான் மிக்கும்வாறு
பகர்சுக்லச் சுரோணிதத்தி னோடேகூடி
மூர்க்கமேசிப் பையின்முத் துதிர்ந்தாற்போல
முனையறுகு நுனிபனிப்போற் சுரோணிதத்திற்
றாக்கசுரோ ணிதந்திரண்டு சொருபமாகித்
தமர்வாசற் றனைமூடும் வாயுதானும்
வேர்க்கவே வேலியைப்போல் வளைந்துகாக்கும்
விந்துவுடன் பிராணவாயு விளக்குமாமே 26

விளக்குகின்ற வபானவாயு வெளியில்நிற்கும்
விந்துவுடன் பிராணவாயு வுடல்கலக்கும்
களக்குகின்ற வுதானனது கருவளர்க்கும்
கருவுக்குள் வியானன்மூன் றுங்கலக்கும்
இளக்குகின்ற வைந்தாநாள் கருப்போலாகும்
ஈரைந்தா நாள்தனிலே திரளும்பாரு
முளக்குழு வைந்தாநாள் முட்டைபோலாம்
முதற்றிங்கள் கம்பமாய் முனைபோலாமே 27

ஆமிரண்டாந் திங்கள் தலை முதுகுதோன்றும்
அடுமூன்றாந் திங்களரை விரல்கைகாலாம்
நாமேநா லாந்திங்கள் பதமூக்காகும்
நலவைந்தாந் திங்கள் செவி நாவுகண்ணாம்
வாமேயா றாந்திங்கள் நகங்களாகும்
மருவேழாந் திங்கள்மயிர் நரம்பெலும்பாம்
தாமேதான் சடமோடு சலமலங்கள்
தயங்கியவோர் தாதுளொடு மூச்சுண்டாமே. 28

மூச்சுண்டா மெட்டினிற்றா யுண்டசாரம்
முனையான கதிர்போல அருவிபாய்ந்து
தோச்சுண்ட கபாலத்தின் வழியேசென்று
சுத்தசலம் பிள்ளைக்குத் தொடர்ச்சியாகும்
பேச்சுண்டா மொன்பதிலே யறிவுதோன்றி
பிறப்பித்தோன் றனைநினைத்துத் தவமேசெய்து
கூச்சுண்டாங் கும்பிட்டே யருள்வாயென்றுங்
கொடியபத்தாந் திங்கட்கும் பார்வையாமே 29

பார்வையா மபானன்கீழ் நோக்கிவைக்கும்
பாலகனும் பார்தனிலே பயின்றபின்பு
ஆர்வையாய் முன்னறிவு மசதியாகி
அழுதுகொண்டு வாதமத்திற் கருவிபாசம்
மார்வைமா யாசத்தி கிரியாசத்தி
மயக்கத்தி லறிவழிந்து வினையினாலே
கோர்வையாய் விதியும்வந் துற்பவித்துக்
கொடிபடர்ந்த சுரைபோலச் சென்மமாச்சே 30

சென்மசரீ ரத்தொண்ணூற் றாறதென்னச்
செப்புமங் குலமவர்கள் கையாலேதான்
தன்னரச மிரத்தமாங் கிசமுமேதை
தசைமச்சை யோடுசுக்லந் தாதேழாகி

உன்னமா முருவென்னுஞ் சரீரமாகி
உயர்சட்டை ரசஞ் சேர்த்து ரோகமாகி
வன்னமாம் வாதபித்த சேட்பமாகி
வருகின்ற சடத்தினுட வண்மைகேளே. 31

வண்மையாம் வாதமது முப்பதாண்டு
மட்டுமே வளருகின்ற காலமாகும்
பெண்மையாம் பித்தமது முப்பான்மூன்று
பேணியே வளருகின்ற காலமாகும்
திண்மையாஞ் சேட்பது முப்பத்தேழு
செயலோடு வளருகின்ற காலமாகும்
உண்மையாய்ச் சடமதனுக் கொரு நூறாண்டு
உகாந்தமாங் கருவிகளி னுறுதிகேளே 32

உறுதியாம் பூதாதி யோரைந்தாகும்
உயர்கின்ற பொறியைந்து புலனைந்தாகும்
கறுதியாய் கன்மவிந் திரியமைந்தும்
கடிதான ஞானவிந் திரிய மைந்தும்
திறுதியாந் தீதாய சரணம் நான்கும்
திறமறிவு ஒன்றுதச நாடிபத்தும்
மறுதியாம் வாயுவது பத்துமாகும்
மகத்தான விஷயமஞ்சு கோசமஞ்சே. 33

அஞ்சவே யாதார மாறுமாகும்
அரியமண் டலமூன்று மலமூன்றாகும்
தொஞ்சவே தோஷமு மூன் றீஷணைதான் மூன்று
தோதகமாங் குணமூன்று வினையிரண்டாம்
தஞ்சவே ராகமெட்டு வவத்தையைந்து
தயங்கியதோர் கருவிகடான் றொண்ணூற்றாறு
ஒஞ்சவே யொவ்வொன்றாய் விரித்துச்சொல்வேன்
உறுதியாம் பூதாதி யுரைக்கக்கேளே 34

உரைக்கவே பிருதிவு மப்புதேய்வும்
உரிமையாம் வாய்வோடா காசமாகும்
புரைக்கவே பூதந்தா னஞ்சதாச்சு
பொறியைந்தின் விபரமதைப் புகலக்கேளாய்
திரைக்கவே சுரோத்திரமுந் தொக்குசட்சு
சிங்குவையாக் கிராணமிவை யாகவைந்தும்
துரைக்கவே சுரோந்திரந்தான் செவியுமாகும்
தொக்காவ துடம்பென்றே சொல்லலாமே 35

சொல்லவே சட்சதுதான் கண்ணுமாகும்
தூயசிங் குவைநாக்காக் ராணமூக்காம்
புல்லவே புலனைந்தும் புகலக்கேளு
புகழான சத்தமொடு பரிசம்ரூபம்
நல்லவே ரசகெந்த மாகவைந்தாம்
நலமான சத்தமது கேள்வியாகும்
செல்லவே செவியினிடக் கூறதாகும்
செய்பரிசஞ் சுகதுக்க மறிதல்காணே. 36

காணவே தேகத்தின் கூறதாகுங்
கண்ரூப மாவதுதான் காண்பதாகும்
நாணவே கண்ணினிடக் கூறதாகும்
ரசமாவ தறுசு வையை யறிதலாகும்
பூணவே நாக்கினிடக் கூறதாகும்
புகழும்நற் கந்தந்துர்க் கந்தங்காணல்
தோணவே மூக்கினிடக் கூறலாகும்
சுகமான பொறியைந்தின் சூஷந்தானே. 37

தானான கன்மவிந் திரியமைந்தின்
சார்பதனைச் சாற்றிடவே வாக்குபாதம்
பானான பரவியபா யுருமுபஸ்தம்
பகரைந்தின் பிரிவது தான் வாக்குவாயாம்

கானான பாதமது காலேயாகும்
கனமான பாணியது கையுமாகும்
ஊனான பாயுருதா னபானமாகும்
உபஸ்தமது லிங்கமென வுரைக்கலாமே. 38

ஆமென்ற கன்மவிந் திரியமைந்தின்
அடைவெல்லாஞ் சொன்னதன்பி னப்பாற்கேளாய்
நாமெனுங்கன் மேந்திரிய விஷயமைந்தை
நவின் றிடவே வசனமொடு கமனமாகுந்
தாமென்ற தானமொடு விசர்க்கானந்தம்
தாக்காக வீதைந்துஞ் சாற்றினேனான்
பாமென்ற விதனுடைய விபரமெல்லாம்
பரிவாக வொவ்வொன்றா யுரைக்கின்றேனே. 39

உரைக்கதுவே வாச்சுதுதான் வசனிப்பாகும்
உறுதியாம் பாதமது நடத்திவைக்கும்
பரைக்கவே பாணிகையால் வழங்கிவிக்கும்
பாயுருதான் மலந்தனையே பிரித்துவைக்கும்
துரைக்கவே யுபஸ்தமது சுக்லமூத்ரம்
துரிசாக விடுவிக்குஞ் சுப்ரமாகும்
நரைக்கக்கன் மேந்திரிய விஷயமைந்தின்
நலமதனை நவின்றிடவே நண்பாமென்னே. 40

என்னவே கரணமது நாலதாகும்
ஏற்றமனம் புத்தியாங் காரஞ்சித்தம்
நன்னவே நாலினுட பிரிவைக்கேளாய்
நலத்தமன மாவதொன்றைத் தானினைக்கும்
பொன்னவே புத்திவிசா ரிக்குமத்தைப்
போராமாங் காரங்கொண் டெழுப்பிவைக்கும்
தென்னவே சித்தமதை முடிப்பிவிக்கும்
சிறந்தவந்தக் காரணந்தான் நான்குமாச்சே. 41

ஆச்சுதறி வொன்றின்விசா ரணையைக்கேளாய்
அனைத்தையுமே பார்த்திருந்தங் ககண்டந்தானாய்க்
கோச்சுதே குருவாய்த்தத் துவங்களாகிக்
கொடியதீ வினையாய்நல் வினையுமாகிப்
போச்சுதே பெண்ணாய்ப்பிர பஞ்சமாகிப்
புகலரிய நிர்க்குணநின் மலமுமாகித்
தீர்ச்சுதே சிவமாகிச் சீவனாகிச்
செழுஞ்சுடரின் கதிரொளியாய்ச் சிறந்தவாறே. 42

வாறான தத்துவமுப் பத்துந்தானே
மன்னியதோ ராத்துமதத் துவமேயாகும்
நாறான நாடிபத்தின் விபரங்கேளாய்
நயந்தசுழி முனையிடைபிங் கலைகாந்தாரி
ஆறான அத்தியுஞ்சிங் குவையினோடு
அலம்புருடன் குகுதன்சங் கினியீரைந்து
மூறான விதன்பிரிவை முன்னேசொன்னேன்
மூர்க்கமாம் வாயுபத்தின் முறைமைபாரே. 43

முறமையாம் பிராணனபா னன்வியானன்
மூர்க்கமா முதானனொடு சமானன்நாகன்
திறமையாங் கூர்மனொடு கிருசரன்றான்
தேவதத்த னொடுதனஞ் சயனுமாகும்
பிறமையா மிதின்பிரிவு பிராணவாயு
பெருமூலா தாரத்திற் றோன்றித்தானே
உறமையா மசவையெனும் மந்திரத்தால்
ஓங்கார முதலெழுத்தை யுன்னித்தானே. 44

உன்னிமே லெழுமீரா றங்குலந்தான்
உயர்வாமெட் டங்குலந்தான் பின்வாங்கி
நன்னிநா லங்குலந்தான் பாழிற்பாயும்
நலமான குணமெல்லாம் பிராணவாய்வு

பன்னீல வர்ணந்தே வதைதானிந்து
பலபலவாம் பொசிப்புஞ்சீ ரணமதாக்கும்
சொன்ன முந்நூற் றறுபான்நா ழிகைக்குமூச்சு
சொலநாளொவ் வொன்றுக்குச் சுவாசங்கேளே. 45

நாளொன்றுக் கிருபத்தே ராயிரத்து
நவிலறுநூ றெழுத்திருக்குஞ் சுவாசந்தானே
கோளொன்றிப் பதினாலா யிரநானூறு
குவிமூலா தாரத்துள் ளொடுங்கும்பாரு
பாளொன்றே ழாயிரத்தீர் நூறுமூச்சு
பாழாகப் பாய்ந்திடுமென் றறிகப்பின்னை
ஏளொன்றி யிதனையே யுட்சாதித்தால்
எப்போதும் பாலரா யிருக்கலாமே. 46

இருக்கவே அபானத்தி னியக்கங்கேளாய்
ஏசுவாதிஷ் டானத்துற் பத்தியாகும்
மருக்கக்கீழ் நோக்கிமல சலத்தைத்தள்ளும்
வாகாக நிறந்தானும் பச்சையாகும்
அருக்கவே யாசனத்தைச் சுருக்கிவைக்கும்
அன்னசாரத்தையெலாஞ் சேரவைக்கும்
திருக்கவே தேவதையும் வரதராஜன்
திறமான வியானனுட சிறப்பைக்கேளே. 47

சிறப்பான வியானனது தோளில்நின்று
திகழெழுபத் தீர்சாஸ்த்ர நாடிசென்று
தறுப்பான சரவசரந் தனிலேநின்று
தானீட்டல் முடக்கல்பரி சங்களாயும்
அறப்பான அனசாரந் தன்னைத்தானே
அங்கங்கே நிறைப்பித்தாக் கயைரக்ஷிக்கும்
பறப்பான தருபாவ வர்னமாகும்
பாரினில் தெய்வந்தா னேமனாமே. 48

ஏமனா முதானனுட வேற்றங்கேளாய்
எழிலான வுதரவக் கினியெழுப்பிப்
பூமனா மன்னசா ரந்தனைத்தான்
பொருந்தவே சமீபித்து நிறுத்திவைக்கும்
காமனா யெடுப்பித்துங் கலக்கிவைத்து
கலக்கியே வருந்திவைக்கும் வளப்பமாகும்
வீமனா மின்னினுட வர்ணமாகும்
விளங்கியதோ ரக்கினிதான் தெய்வமாமே. 49

ஆமென்ற சமானனுட வண்மைகேளாய்
அடிநாபி பாதங்கஞ் சமன்கொண்டேகி
வாமென்ற வாய்வுகளை மிஞ்சொட்டாமல்
மடக்கியே சமன் செய்து மருவப்பண்ணும்
தாமென்ற வறுசுவையைத் தண்ணீரன்னம்
சமன்செய்துசரீரமெல்லாஞ் சாரப்பண்ணும்
வாமென்ற வர்ணமது புட்பராகம்
மகத்தான தெய்வமா தித்தனாமே. 50

தெய்வமாம் நாகனுட சிறப்பைக்கேளாய்
செயலான சகலகலை யாக்கிவைத்து
பைவமாய்ப் பாடிவைக்கும் விழிப்பிக்குங்கண்ணை
பாங்காகச் சிமிட்டுமுரோ மம்அசைக்கும்
பெய்வமாம் பொன்னினுட வர்ணமாகும்
பெரிதான தெய்வந்தா னனந்தனாகும்
கொய்வமாங் கூர்மனுட குணத்தைக்கேளாய்
கொடியமனந் தனினின்று நிமைக்கொட்டாமே. 51

நிமைச்சொட்டுங் கொட்டாவி தானுங்கொள்ளும்
நேராக வாய்மூடும் பெலனுண்டாக்கும்
கமைக்கொட்டுங் கண்விழிக்கும் மூடப்பண்ணும்
காக்ஷியெல்லாம் காண்பிக்கும் விழிநீரோடும்

விமைக்கொட்டும் வர்ணமது வெளுப்பதாகும்
மேலான தெய்வந்தான் விஷ்ணுவாகும்
கமைக்கொட்டுங் கிருதகரன் குணத்தைக்கேளாய்
கசிநாவு நாசிதனிற் கசிவுண்டாமே. 52

கசிவுண்டாங் கடும்பசியின் கன்மஞ்செல்லும்
கண்ணியே யிருத்தலொடு போதலாகும்
துசிவுண்டாய் தும்மலோ டிருமலுண்டாம்
சுயமான வர்ணமது கறுப்பதாகும்
தெசிவுண்டாந் தெய்வமது சிவன்றானாகும்
திரோதயையிற் கூறான திறமுமாகும்
குசிவுண்டாந் தேவதத்தன் குணத்தைக்கேளாய்
குடிலமாய்ச் சோம்புமுறித் திடுதலாமே. 53

முறித்திடுதல் முயற்சியாய் விழிக்கும்போது
முகுளிதமாய்க் கண்ணினையே யுலாவவைத்தல்
தரித்திடுதல் சண்டை கொளற் றாக்கல்பேசல்
சண்டாளக் கோபத்தை யுண்டுபண்ணல்
குறித்திடுதல் குதங்குய்யத் தானத்தன்றிக்
கூர்ந்ததெய்வந் தேவேந்திரன் படிகவர்னம்
தறித்திடுதற் றனஞ்சயனைச் சாற்றக்கேளாய்
சாங்கமாய் மூக்கில்நின்று தடிக்குந்தானே. 54

தடித்துமே உடம்பெல்லாம் வீங்கப்பண்ணும்
தந்திரமாய்க் கன்னத்திற் சமுத்ரம்போலத்
திடித்துமே சுந்தரமாய்க் கோஷமாகித்
திரண்டுமே துஞ்சியகா லந்தனிற்றான்
வடித்துமே வாயுவெல்லாம் போனபின்பு
வளமான தலைவெடிக்கு மூன்றாநாளில்
அடித்துமே தலைவெடித்தா லப்பாற்போகும்
அதின்வர்ணம் நீலவர்ண மறிந்துகொள்ளே. 55

அறிந்ததெய்வந் தான்தன்வந் திரியேயாகும்
ஆகவிந்த வீரைந்து மாதிவாய்வு
வெறிந்ததோர் விஷயமைந்தின் விபரங்கேளாய்
மீறியதோ ரமாவாசைப் பருவமாகும்
தறிந்தசல வசையமல வசையத்தோடு
தாக்கான சுக்கிலமாம் வசையமைந்தும்
எறிந்ததோ ரமாவாசை யன்னம்தண்ணீர்
இருக்குமிட மென்றுதா னியம்பிடீரே. 56

இயம்பிடவே பருவசையந் தான்விளம்பில்
இயன்றவன்னந் தண்ணீர்தா னேகமாய்ந்து
புயம்பிடவே பிரியுமிடம் அமவசையும்
புசித்ததெலா மலமாகிப் போக்குவைக்கும்
தயம்பிடவே சலவசைய மருந்தும்நீர்தான்
தங்கியே யிருக்குமிடஞ் சலப்பையாகும்
சுயம்பிடவே சுக்கிலமா மசயஞ்சொல்
சுகமான சுக்கிலப்பை யென்று சொல்லே. 57

சொல்லான விஷயமைந்தின் றொகுப்புச்சொன்னேன்
சூட்சமாங் கொஞ்சமைந்தின் சுருக்குக்கேளாய்
அல்லான வன்னமயங் கோசமயத்தோடும்
அரிதான பிராணமய கோசமாகும்
மல்லான மனோமயவிக் யானமயமாகும்
மகத்தான வானந்த மயமுமைந்து
மெல்லான விதின்பிரிவு விளம்பக்கேளாய்
மெய்வாய்கண் மூக்கோடு செவியுமாமே. 58

ஆமென்ற வைம்பொறியில் மண்ணின் கூறால்
அன்மைய கோசத்தி லப்பணைந்தால்
ஊமென்ற வூணுண்டாம் பிராணமயகோசம்
உத்திவிதிற் றேயுவந்தால் புத்தியுண்டாம்

மாமென்ற மனோமயமாங் கோசமாகும்
வாயுவிதில் வந்தடைந்தால் விகாரமுண்டாம்
நாமென்ற ஞானமய கோசப்பேராம்
நலத்தவா தம்வந்தால் சுகமுண்டாமே. 59

வந்தாலா னந்தமய கோசப்பேராம்
மகத்தான கோசமைந்தி லெடுத்ததேகம்
குந்தான கோசமைந்தின் குணத்தைச் சொன்னேன்
குறிப்பான வாதார மாறுங்கேளாய்
முந்தாமூ லாதாரஞ் சுவாதிஷ்டானம்
முதிர்மணிபூ ரகமனா கதம்விசுத்தி
அந்தாலாக் கினையுமா தாரமாகும்
அடுக்கான வாதாரத் தாண்மைகேளே. 60

கேளேமூ லாதாரங் குதங்குய்யத்தும்
கெடியாக நடுவிருக்கு மபான த்தின்மேல்
வேளைவீ ணாதண்டின் கீழிருக்கும்
மிக்கநடு வேரங்கு லப்ரமாணம்
மூளேமுக் கோணம்நா லிதழ்தானாகி
முனிந்தநா லிதழ்நாலட் சரமுடைத்தாய்
வாளேமுக் கோணநடு மந்த்ரறீங்காரம்
வல்லபையாஞ் சத்திவலப் பக்கமாமே. 61

பக்கமா மந்திரமும் ஸ்ரீங்காரமாகும்
பகரான தெய்வம்விக்கி னேசுரன்றான்
வக்கமா மூலம்வங் கெனநிறுத்தி
வாசியைநீ மறவாமல் மாட்டியூதி
ஒக்கமா மூலங்கீ ழடியிற்றானும்
ஓங்காரக் கம்மதி லடியிற்கட்டி
இக்கமா மிருவரையுந் தெரிசித்தக்கால்
இகபரமும் வெளியாகி யேறல்ாமே. 62

ஏறவே பளிச்சென்று மூலத்தீதான்
இதற்குமே லிரண்டாமங் குலத்தின்மேலே
கூறவே நால்வட்ட மாறிதழ்தான்
குறிசுவாதிஷ் டானமுமின் னொளியேயாகும்
ஆறவே யாறாமட்சர முடைத்தாய்
அதற்குள்ளே பிருதிவிதான் குடியிருப்பாம்
வேறவே வேதந்தா னிருக்கோடெல்லாம்
விளங்கியதோ ரக்ஷரமும் நகாரமாமே. 63

நகாரமா மெழுத்ததுவும் பிரமனாகும்
நவ்வான பீசமது மண்ணுக்காகும்
உகாரமா மந்திரத்தை யுன்னிக்கொண்டு
உயர்வாய்வைக் கும்பிக்கி லறிவுமொன்றும்
சிகாரமா முப்புரி நூற் சிரசு நாலு
சிறந்தசரஸ் வதியுமங்கே தெள்வ ப்க் காணும்
பகாரமாய்த் தெரிசித்துப் பழக்கம்பண் ாப்
பாருலக மயக்கமெல்லாம் பண்பதாமே. 64

பன்மையா மாறாமல் குலத்தின்மேலே
பதிந்தபிறை போலமணி பூரகந்தான்
தொன்மையாஞ் சுற்றிலும்பத் திதழ தாகிச்
சுயம்பான வக்ஷரமும் பத்துந்தானாய்
அன்மையா மப்புதனுக் கிடமதாகி
அதற்குள்ளே தெய்வந்தான் விஷ்ணுவாகித்
தன்மைபக்கச் சத்திலட் சுமியதாகும்
தயங்காத வக்ஷரம்ம காரமாமே. 65

மகாரமா மக்ஷரந்தான் விஷ்ணுவாகும்
மகத்தான மவ்வதுவு மப்புபீசம்
விகாரமாம் வேதமது யசுருவாகும்
மெய்நிறைந்த கவுத்துகபஞ் சாயுதங்கள்

நிகாரமாம் லட்சுமிதான் பாசமாகி
நேர்மையாய் வாசியைமங் கெனநிறுத்தி
உகாரமா யூதினா லுலகவாழ்க்கை
ஒருநொடியில் வெளியாகு மூணிப்பாரே. 66

ஊணியிதன் மேலிருநா லங்குலந்தான்
உத்தமமா மனாகதத்தின் வீடுமாகும்
தோணிதிரி கோணமுமீ ராறிதழ்தான்
சுற்றிலுமே பனிரண்டட் சரமுடைத்தாய்
சேணியே தேயுவுக்கங் கிருப்புமாகிச்
சிகாரமா மெழுத்தாகிச் சிறப்புமாகிப்
பூணியே பூதபீசம் ரவ்வுமாகிப்
புகழான ருத்திரனும் புரிந்தார்பாரே. 67

புரிந்திருந்தார் சிகாரத்தில் ருத்ரன்ருத்ரி
புகழாக வாசிவைத்துச் சிங்கென்றூணு
கரிந்திருந்த காயமுமோ வாலையாகும்
கனிசாம வேதத்தின் கருத்துந்தோன்றும்
பரிந்திதற்கு மேற்பனிரண் டங்குலந்தான்
பார்வையாய் மேலேறி விசுத்திவீடு
அறிந்தாறு கோணசோ டசமிதழ்தான்
அதிலேதா னீரெட்டட் சரமுமாமே. 68

ஆமெனவே வகாரமறு கோணமத்தி
அமருமகே சுரன்மகேஸ் பரியுமாக
வேமெனவே யதர்வணவே தத்தோடொக்க
மிக்கான வாயுவது மிதழுக்குள்ளே
போமெனவே பீசந்தான் யவ்வுமாகும்
புகழாகக்கும்பகஞ்செய் தூதியூதி
வாமெனவே வுங்கெனவு மிறுத்திப்பார்க்க
வயசெல்லா மொருநாளாய் மனதிற்காணே. 69

காணவிதன் மேலீரெட்டங் குலந்தான்
சண்டமா ருதம்புருவ மளவாயாகி
ஊணவே யிரண்டிதழா யோங்கிநிற்கும்
உற்றுநின்ற வட்சரமு மிரண்டுமாகும்
ஆணவே நடுவுக்குள் யகாரம்நிற்கும்
ஆக்கினையின் வீடாகும் விசும்பிருப்பு
பூணவே பூதபீசம் யவ்வுமாகும்
புகழான மாணிக்கப் பிரபையவ்வே. 70

யவ்வுக்குட் சதாசிவமுஞ் சத்திநிற்கும்
யங்கென்று கும்பித்தா லநேகஞ்சித்தி
மவ்வுபர மானந்த மருவிநின்று
மகிழ்ச்சியாங் கருவிகளி னிடமதாகி
அவ்வுடமைம் புலன்றனையு மறியப்பண்ணி
அறிவோடு நினைவுதனின் மயக்கத்தாட்டி
உவ்வுமுள்ள படிநடத்திக் காண்பனகேட்பனவாய்
உகந்துகுரு வெழுந்தருளி வியர்த்திப்பாரே. 71

பார்க்கவே யாதார மாறுமாச்சு
பரிந்திட்ட தத்துவங்கண் முப்பத்தாறும்
சேர்க்கவே சுவதத்வ மாகுங்கண்டீர்
சிறந்திருந்த மண்டலங்கண் மூன்றுங்கேளாய்
ஆர்க்கவே அக்கினிமண் டலத்தினோடு
அலரிமண் டலமிருந்து மண்டலந்தான்
தோர்க்கவே யிதன்சூக்ஷி சொல்லக்கேளாய்
சுருதியா மூலமென்ற தொடர்ச்சிதானே. 72

தொடர்ச்சியாஞ் சுவாதிஷ்டா னத்தின்கீழே
சுகமான மையமணி மண்டலந்தான்
படர்ச்சியாம் முச்சுடராய் மூலமட்டும்
பரவிசுவா திஷ்டான மட்டுநிற்கும்

மடர்ச்சிமணி பூரமனா கதத்தின்மையம்
வளையம்போற் சூரியமண் டலந்தான் நிற்கும்
அடர்ச்சிமணி பூரமனா கதத்திற்றானே
அடர்ந்தேறுஞ் சூரியமண் டலந்தான்பாரே. 73

பாரென்றாற் சும்மாதான் பார்க்கப்போமோ
பறந்தோடும் வாசியைநீ மாட்டிப்பாரு
வேரென்றால் விசுத்திமேலாக் கினையின்கீழே
விளங்கியெழுஞ் சந்திரமண் டலந்தான்பாரு
தூரென்றாற் றுவாதசாந் தத்தின்மட்டும்
சுடரொளியாய்ப் பிரகாச மாகிநிற்கும்
மூரென்றான் மண்டலங்கண் மூன்றுமாச்சு
மூர்க்கமா மலமூன்றின் முடிவுகேளே. 74

முடியான வாணவமு மாயைகாம்யம்
முயற்சியா யிதின்பிரிவான் முடியுமாறு
திடியான செம்பினிற்றான் களிம்புபோலும்
சிறுநெல்லி னுமிபோலு மாத்துமாவை
முடிவான மேலெழவொட் டாமற்காத்து
முடிவித்துத் தன்னுதென்றே காத்திருக்கும்
மடிவான மாய்கையதா ணவத்தைக்கொண்டே
வருகிறது தெரியாமல் மடிக்குந்தானே. 75

மடிக்கின்ற காமியங்கண் டத்துக்கெல்லாம்
மகிழ்ந்திடுதன் மாயைமுற்று விந்துநிற்றல்
துடிக்கின்ற மலமூன்றின் செயலுமாச்சு
தோஷமூன் றாவனவாஞ் சுளுவுகேளாய்
நடிக்கின்ற வாதபித்த சேத்மமூன்று
நலமான விதின்பிரிவு நாட்டக்கேளாய்
வடிக்கின்ற வாயுவது நிலைகலங்கி
வாதமா மக்கினியு மார்க்கமாமே. 76

மார்க்கந்தான் பித்தமங்கி யாதாரத்தை
மசக்கிவைத்து மாயையுடன் வருத்திவைக்கும்
தூக்கந்தான் சேட்டுமநீர் மிகுதியாக்கித்
துவாரங்க டோறுமிடை விடாமல்நிற்கும்
மூர்க்கந்தான் றோஷமிது மூன்றுமாச்சு
மூண்டதோ ரீஷணைகள் மூன்றைக்கேளு
வேக்கந்தா னர்த்தவீ ஷணையும்லோக
வீஷணையுங் காம வீஷணைமூன்றாச்சே. 77

ஆச்சென்ற மூன்றையுந்தா னறையக்கேளு
அதிகமாம் அர்த்தவீ ஷணைகுணந்தான்
வேச்சென்ற வர்த்தமுமே லாசைகொள்ளல்
விளங்கியதோர் லோகவீ ஷணையைக்கேளாய்
காச்சென்ற காணியுட னுறறவுந்தேடிக்
காரியங்க ளதின்மேலே யாசையாகும்
ஆச்சுகாம வீஷணைகா மியத்தைத்தேடி
யாசையது படுதவீ ஷணைமூன்றாமே. 78

மூன்றான பின்புதான் குணந்தான் மூன்று
மொழியவே ராசததா மதசாத்வீகம்
வேன்றான விதின்பிரிவு விளம்பக்கேளாய்
வெகுளிபேசா திருத்தல்வேண் டிக்கொடுத்தல்
தான்றான தன்னைச்சார்ந்த தாரைக்காத்தல்
தகமையுட னுயிர்களைத்தம் முயிர் போலெண்ணல்
பான்றான பகைவரைவென் றிடுதல் நீங்கல்
பலகலைக ளறிதல்பயில் பண்புண்டாமே. 79

உண்டுலகுக் கோருறுதி யென்னவாழ்தல்
உண்மையாய் நலந்தெரிதல் புகழேபூண்டல்
தண்டுதா டாண்மையோடு மேன் பாடான
சாற்றியதோர் குணம்ராச தத்துக்காகும்

மிண்டுதா மதகுணமு மேதோவென்னில்
மிகுதியாய் வஞ்சனையே செய்தலாகும்
வண்டுபா டொழிதல்போ ராடல்வாது
வணக்கமில்லா வெகுளியென விளம்பலாமே. 80

விளம்பலே செய்நன்றி மறுத்தல்விந்தை
மிகப்பேசல் நிந்தையுரைத் திடுக்கம்பேசல்
முளம்பலே முன்னுரைத்தல் பழியைக்கூறல்
மூகமாய்ப் பேசல்பகை யுடனேவாழ்தல்
புளம்பலே பொய்கொலைகள் களவுகாமம்
பொல்லாங்கு யாவையுமே புகன்றுபேசல்
களம்பலே காமத்தின் குரோதமிக்கக்
கடியதா மதகுணத்தின் காட்சியாமே. 81

காட்சியாஞ் சாத்விகந்தா னேதோவென்னிற்
கமழ்சாந்த மும்வாய்மை தயையொடுக்கம்
தாட்சியாந் தண்ணமுத முதவிடுநற்சீலந்
தயவான குணமன்பு பெருமைசீர்த்தி
மாட்சியா மறையினிறை மண்மயக்கம்
வறிஞோரை வாழ்வித்தல் நல்லோர்க்கீதல்
நாட்சியா யிறைவனடி யிணைப்பணித்தல்
நல்லோருக் கீதலறந் தேடல்தானே 82

அறந்தேடல் உறவின்முறை சுற்றத்தாரை
அகதிபர தேசியருக் கன்னமீதல்
திறந்தேடல் தெயவ்மறை யோரைக்காணல்
தேவதைகட் குபசாரச் சிந்தைசெய்தல்
புறந்தேடல் புண்ணியங்கள் தேடலின்பம்
பூசுரருக் காகுதிகள் பலிகொடுத்தல்
தறந்தேடல் சாத்வீகத்தின் குணமீதென்று
சாற்றினோங் குணமூன்றின் றன்மைதானே 83

தன்மையாய் வினையதனைச் சாற்றக்கேளாய்
சார்ந்ததோர் நல்வினைதீ வினையிரண்டாம்
பன்மையாம் வினையிரண்டின் பயனேதென்னில்
பரவியநல் வினையதுதான் புண்யமாகும்
தின்மையாந் தீவினைதான் பாவமாகும்
சேர்ந்தவினை யிரண்டாலே நரகஞ்சொர்க்கம்
புண்ணியஞ்செய் தவர்க்குநல்ல சுவர்க்கமாகும்
பொல்லாத பாவிகட்கு நரகமாமே 84

ஆமேதான் விகாரமெட்டை யறையப்போமோ
அதிகாமக் குரோதமத லோபமோகம்
வாமேதான் மாச்சரிய மிடும்பைவேகம்
வகையாக விதன்குணத்தை வழுத்தக்கேளாய்
காமேதான் காமமென லாசையாகும்
கடிதான குரோதமெனல் பிணக்கதாகும்
போமேதான் லோபமெனல் பிடிப்பாடாகும்
பேர்பெரிய மோகமெனல் பிரியமாமே 85

பிரியமா மதமதுதான் கெருவமாகும்
பெரிதான மாச்சரிய மிடும்பாங்காரம்
உரியமா மிடும்பையுதா சனைகளாகும்
உறவேக மாவதுவே கடூரமாகும்
நரியமாம் விகாரத்தின் நன்மைசொன்னேன்
நாசமா மவத்தையைந்தின் நாட்டங்கேளாய்
அரியதொரு அவத்தையா மிதனின்போக்கு
ஆக்கிரசாக் கிரமுஞ்சொற் பனமுமாமே 86

சொற்பனமாஞ் சுழித்திதுரி துரியாதீதம்
சொல்லுமிவை அவத்தையைந் தாகச்சொல்வர்
நிற்பனமாஞ் சாக்கிரந்தான் நெற்றிநேரே
நிறைந்திருக்கும் கருவியுட நியமமாகக்

கற்பனமாஞ் சொற்பனமுங் கண்டத்தானங்
கடந்திருக்குங் கருவியுடன் காயத்தோட
இற்பனமாஞ் சுழுத்திதா னிதயத்துள்ளே
இயங்கிநிற்குங் கருவியுட னியம்பிடாயே 87

இயங்குதுரி யம்நாபிக் கமலந்தன்னில்
ஏற்றமாங் கருவியுட னிணங்கி நிற்கும்
முயங்குதுரி யாதீத மூலாதாரம்
மூர்க்கமாங் கருவியுட னமர்ந்திருக்கும்
கயங்கிடவே கருவிகடான் றொண்ணூற்றாறும்
காரியமாய்த் தேகத்தைக் காத்துநிற்கும்
வியங்கியிந்த முப்பதுதத் துவமாந்தானே
வேதமாம் வித்தியாதத் துவமாமென்னே 88

தத்துவமாங் கருவிகடான் றொண்ணூற்றாறும்
சடத்தெங்கு மூடாடித் தகமையாகும்
உத்துவமா முடலதனி னுண்மைகேளாய்
உதிரவங்க னெனும்புவியி லுற்பவித்து
அத்துவமா யுள்ளிதழாய் மலர்ந்துதப்போ
அத்திமுகத் துக்கருவிட் டுருத்தரித்து
சத்துவமா வருவாயவ் வவயவத்தின்
தாக்குஅவ் வென்னுமட் சரந்தானாமே 89

அவ்வென்ன மட்சரத்தில் நாடிதோன்றும்
அந்நாடி நின்றுதத் துவந்தான்தோன்றும்
எவ்வென்று மெலு புதசை புடைநரம்பு
ஈரெட்டுப் பழுவோடு கொங்கைரெண்டாம்
முவ்வென்னு முட்டுக்கால் வளையீரெட்டு
மூட்டியமைத் தங்ஙனேயோ ருருவமாக்கி
கவ்வென்னு மிடையொடுபிங் கலையுஞ்சேர்த்துச்
சுழிமுனையென் றொருதுளையும் வழியதாமே. 90

வழியதுவாய் வாசல்வள மெனக்கொண்டங்கே
வளமாக வுடலுண்ட வண்மையெல்லாம்
கழியதுவாய்க் காளவாய்க் காந்தலாகிக்
ககனம்போ லெரிந்துமே மடியப்பாய்ந்து
கழியதுவாய்த் தூராத குழியதாகத்
துர்ப்பாவை நிணமாய்ப்பற் றீரலும்மாய்ப்
பொழியதுவாய்க் காளிதமும் பித்துமாகிப்
பொருமலுமாய்ச் செறுமலுமாய்க் கிருமியாமே 91

கிருமிவகை வாயுவையுந் தானிறுத்திக்
கிரணமுந்நூற் றறுபதுமோங் குடனிரங்கி
அருமியா யமர்ந்தகுட லதுதான்விர்த்தி
அமர்ந்தமுப்பத் திரண்டுமுழங் குடலுமாகும்
ஒருமிமுள மொன்பதுவாய் மடித்துமொப்ப
உற்றசுக் கிலச்சலந்தான் மூன்றுமாகி
வருமியாய் வச்சிரத்தோல் மேலேபோர்த்து
வழிபலவாய் மொழிமொழியாய் சந்துமாச்சே. 92

சந்துமூன் றரைக்கோடி மயிர்த்துவாரம்
தாக்கான நாலெட்டு வுறுப்புமாகி
இந்துவிரு பதுவிரலை நான்குகீரு
எட்டுச்சா ணீளமுமா யேகமாகி
நந்துநாற் சாண்பெறுமெய் வாய்கண்மூக்கு
நலத்தசெவி யுடல்மண்ணு வின்கூறாகிப்
பந்துரெண்டு காலுமா யிரண்டுகையாய்ப்
பதினாறு கவருடைய வீணாதண்டே. 93

தண்டோடே யாறுதெரு கடலேழாகும்
தாக்கான வெட்டுத்தூண் முப்பான்சந்து
எண்டோடே யெழுபதுபே ரெலும்புதானாம்
ஏற்றமா மொழிமுச்சா ணெலும்புமாகும்

முண்டோடே யெலும்புமுச்சாண் சதையுமாகும்
முக்கியமா மெண்பலமீ ரலுமாமென்ப
நண்டோடே நானாழி யுதிரமாகும்
நற்பத்து வாசனையு முடைத்ததாமே. 94

உடைத்துதிர மாங்கிசமும் மேதையத்தி
உயர்ந்தசுக் கிலமச்சைச் சத்ததாது
படைத்தபலம் முப்பத்தி ரண்டுமாகும்
பண்பான பழுவெலும்பு பதினாறென்க
முடைத்தமுது குத்தண்டீ ராறுகோர்வை
முதற்சூழ்ந்த தாளசைவ தைந்துமாகும்
நடைத்தநரம் பெலும்பிலே ழரையுங்கூட்டி
நலம் பெறவே சதைமேவி நாடிற்றன்றே. 95

நாட்டியே பிடரியினிற் கோர்த்தநாடி
நரம்புபின்ன லோரேழா யிரமாமென்க
ஆட்டியே யசைவுடலந் தான்றுலக்கில்
ஆருயிர்தா னாற்பத்தி யாறதாகும்
தூட்டியே தொழுத்தையிரண் டாயிரத்துத்
துடர்ந்துவிண் வளருமெய்யா யிரமாமென்க
சேட்டியே கோணங்கள் பதினாறாகும்
சேட்டுமமுங் குண்டலத்தி னனலதாமே. 96

அனலெழும்பி வாயுதச நாபிருத்தி
அல்லலுறும் வாசலொன்பான் கதவொன்றிட்டு
இனலெழும்பி யீசர்வா சலைத்திறந்து
இடையினொடு பிங்கலைநா தனையேநோக்கி
நினலெழுப்பி யன்பென்னும் நெய்சொரிந்து
நேராக வமிர்தமென்னுந் திரியையிட்டு
வனலெழுப்பி மணிவிளக்கை நிறையவேற்றி
வாசியைநீ வரவழைத்து வைத்துக்கொள்ளே. 97

கொள்ளவே யைம்புலனை நாசமாக்கிக்
கோசமா மட்சரத்தை யளவறிந்து
அள்ளவே யைம்பத்தோ ரட்சரத்தின்
ஆதார நிராதாரஞ் சோதித்தேறி
உள்ளவே மண்டலத்தின் வலமாய்வந்து
உதிரமண் டலமொக்கப் பால்சொரிந்து
கள்ளக்கா மம்வெகுளி மயக்கறுத்துக்
கடும்புரவி குசைதாங்கிக் கருதிப்பாரே. 98

தாங்கியே யிருமூன்று தெருவுஞ்சுற்றித்
தயங்காத அசுவங்கள் தெருவும்ரெண்டு
ஏங்கியேழா யிரத்திரண்டு நூறுவாய்வு
இரவுபக லளவாக விமைப்பில்லாமல்
ஓங்கிவோங் காரமெனு மூலநாடி
உறுதியெழு பத்தீரா யிரமாம்நாடி
நாங்கியே நரம்போடு நாடிக்கெல்லாம்
நலத்தவுறப் படுநாடி யொன்றுண்டாமே. 99

ஒன்றென்று மிதிலாதித் தன்போல் நாடி
ஒருபத்தும் பறித்துத்தான் பறந்தவாறும்
நன்றென்னுங் காலொடுகை நடுக்கஞ்சத்தில்
நாடிநுழைந் துயிராகி மெய்யிலோடிப்
பென்றுநரம் பாலெலும்பைப் பிணைப்பிசைத்து
பெருநாடி புகுமத்தை யறிந்தடங்கி
அன்றெனவே நாடிபத்தும் அடங்கிநிற்கும்
அதிமூல முந்திமுத லுருவுமாமே. 100

உருமுடிக்குக் கீழேமேலும் பதிந்துநிற்கும்
உகமையாந் தலையினிலே யீசுரன்றான்
செருவினைசெய் வினைப்பயனை முனமறிந்து
திகழிந்திர மான்றலைபோ லிமைப்பானுள்ளே

தருவினைசத் தப்பரிச ரூபரசகந்தம்
தானம்வகை தொறுமுத்தி கொடுத்துநல்கி
துருவினைசெய் தகமையறுத் துள்ளேநோக்கித்
தொண்ணூற்றா றாங்கருவி தத்வமாமே. 101

ஆமெநரம் பெழுபத்தீ ராயிரமாம்நாடி
அதிவீறும் நாடிவிஷ்ணு நாடியாகும்
மோமருத்ர நாடியிடை பிங்கலையும்
முதுகெலும்பு பதினாறு பழுவுமாகும்
ஊமெனுமுப் பத்தொருவார்க் குழியுமாகி
உதிர்ந்துநின்ற வையுழக்கா முதிரமாகும்
நாம்நாழி வாதமுமுந் நாழிபித்தம்
நானாழி சேட்டுமமும் நலத்ததாமே. 102

நலத்தமூன் றரைக்கோடி ரோமத்வாரம்
நல்லிருபத் தெண்கோடி மலத்துவாரம்
முலத்தமுப்பத் தெண்கோடி சலத்துவாரம்
முயன்றிரத்த மைம்பலமாங் கிசமும்நூறு
கொலத்தகெந்த மெண்பலம்ரோ மம்நூற்றெட்டு
கோடியாம் மேதைபல மிரு நூறாகும்
பெலத்ததோல் முந்நூறு பலமதாகும்
பேரான தொண்ணூறு நிணந்தானாமே. 103

ஆமென்ற குடன்முந்நூற் றெழுபலந்தான்.
அதிகமாம் வழுக்கைநாற் பலமதாகும்
தேமென்ற சீயுரித்தான் கண்கள்ரெண்டும்
சிறக்கவே நாலுகழஞ் சாகுங்கண்டாய்
நாமென்ற நாக்குநாற் கழஞ்சதாகும்
நற்கந்த மூக்குத்தான் முக்கழஞ்சு
ஏமென்ற கன்னஞ்சேர் நாற்கழஞ்சு
எலும்புநூற் றோர்பத்தெண் பலமுமென்னே. 104

என்னபல மிறைச்சிநூற் றறுபத்தைந்தாம்
ஏற்றமுப் பலந்தானு மூளையாகும்
பன்னுதா மரைமொட்டு மைங்கழஞ்சு
பார்க்கவே சலப்பையோர் முழந்தான் நீளம்
கன்னவே கருவிகள் தொண் ணூற்றாறாகும்
கணக்காக வுடற்குறிப்பு காயமாகும்
தன்னவேதத் துவங்களெல்லாஞ் சொன்னேன்
சார்நாடி யின்றன்மை சாற்றினேனே. 105

முற்றிற்று

தாமரை
நூலகம்